சிங்கப்பூர் மலேசியத் தமிழ் இலக்கியம்

பதிப்பாசிரியர்கள்

ஆ. கார்த்திகேயன்

சா. உதயசூரியன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

சிங்கப்பூர், மலேசியத் தமிழ் இலக்கியம்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

சிங்கப்பூர் மலேசியத் தமிழ் இலக்கியம்

(கருத்தரங்கக் கட்டுரைகள்)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ.கார்த்திகேயன்

முனைவர் சா.உதயசூரியன்

கோ. சாரங்கபாணி அறக்கட்டளை வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு: 375

நூல்	:	*சிங்கப்பூர் மலேசியத் தமிழ் இலக்கியம் (கருத்தரங்கக் கட்டுரைகள்)*
பதிப்பாசிரியர்கள்	:	முனைவர் ஆ.கார்த்திகேயன் முனைவர் சா.உதயசூரியன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	இலக்கியம்
பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2041, ஆனி முதற்பதிப்பு சூன் -2010
பக்கம்	:	228+12
தாள்	:	70 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ
அளவு	:	டெம்மி 1/8
நூற்கட்டுமானம்	:	சாதா அட்டை
விலை	:	ரூ.90/-
படிகள்	:	1200
அச்சு	:	மாசறு 28/8, முத்துக்காளத்தித்தெரு திருவல்லிக்கேணி சென்னை 600 005

முனைவர் ம. இராசேந்திரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613010

நாள் 03-06-2010

அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம்,

இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய பதிப்பாசிரியர்கள் முனைவர் ஆ.கார்த்திகேயன், முனைவர் சா.உதயசூரியன், பதிவாளர் முனைவர் சா.பி.சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு.வை.கண்ணபுரக்கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

பதிப்பாசிரியர் உரை

கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாகச் சிங்கப்பூர் - மலேசியப் படைப்பாளர்கள் தங்களின் கைவண்ணத்தில் பிறந்த தமிழ்ப் படைப்பிலக்கியங்களைத் தமிழக மக்களுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியில் மிகுந்த ஆர்வம்காட்டி வருகின்றனர். தங்களின் நன்முயற்சியாலும் தமிழக அரசின் நேசக்கரத்தின் உதவியினாலும் தமிழகம் முழுவதும் சுற்றுலா மேற்கொண்டு மாவட்டத் தலைநகரங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் கூட்டங்கள் ஏற்பாடு செய்து சிங்கப்பூர் - மலேசியா இலக்கியங்களைத் தங்களின் இனிய பொழிவுகளின் வாயிலாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். தஞ்சை யிலும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலும் இது போன்ற சில கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தாய் வீட்டிற்கு வந்த பெண்ணைப்போல மலேசிய, சிங்கப்பூர் படைப்பாசிரியர்கள் தங்களின் படைப்புக் குழந்தைகளைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களிடம் காட்டி மகிழ்ச்சி அடைந்ததையும் காண முடிந்தது. குழல் தரும் இசையின்பத்தைப் போலவும், யாழோசையைப் போலவும் அவர்தம் இலக்கியங்கள் இன்பம் பயந்தன.

சிங்கப்பூர் பெருவணிகர் தாளாளர் திரு.முகமதுமுஸ்தபா அவர்கள் தாம் நல்வழியில் ஈட்டிய செல்வத்தைத் தாமே துய்ப்பேம் என்றெண்ணாது, பேசும் மொழியும் பிறந்த நாடும் நற்றவ வானினும் நனி சிறந்தன என்றெண்ணித் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிங்கப்பூர்த் தமிழ்த் தலைவர் தமிழவேள் கோ.சாரங்கபாணி அவர்களின் திருப்பெயரில் ஓர் அறக்கட்டளை ஏற்படுத்தியுள்ளார். அவ்வறக் கட்டளையின் சார்பாக 2009 சூன் மாதம், 5, 6ஆம் நாட்களில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிங்கப்பூர் மலேசிய இலக்கியம் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. அக்கருத்தரங்கத்தினைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையினர் ஒருங்கிணைத்துச் செவ்வனே நடத்தினர்.

அவ்வேளையில் சிங்கப்பூர், மலேசியாவில் எழுதப்பட்ட சிறந்த படைப்புகளுக்குக் கரிகாலன் விருதுகள் வழங்கப்பட்டன. இரு நாட்கள் நடைபெற்ற கருத்தரங்குகளில் படைக்கப்பெற்ற கட்டுரைகளின் திருத்த வடிவமே இந்நூல். சிங்கப்பூர் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றை-முத்தமிழ் வரலாற்றை இந்நூல் முத்தாய்ப்பாய் உங்கள் முன் வைக்கிறது.

சிங்கப்பூரும் மலேசியாவும் தென்கிழக்காசிய நிலப் பரப்பில் தமிழின் இருப்பினைப் பறைசாற்றிக் கொண்டுள்ள நாடுகளாகும். சிங்கப்பூரில் தமிழ் மொழி மற்ற மொழிகளுக்கு இணையாக அலுவலக மொழியாக அங்கீகாரம் பெற்று வளர்ந்து வருகிறது. மலேசியாவிலும் தமிழ்க் கல்விக்கு உரிய சிறப்பிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நாடுகளில் தமிழ் இலக்கியம் தோன்றுவது இயற்கையே. இந்நாடுகளில் தமிழ் மக்கள் குடியேறிய காலந்தொட்டு எழுதப்பட்ட புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள், திரைப்படங்கள் ஆகியவை குறித்த வரலாற்றுப் பார்வையுடன் கூடிய கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிங்கப்பூர் மலேயாப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய, பணியாற்றுகிற பேராசிரியர்களும் வானொலி, பத்திரிகைத் துறையில் பணியாற்றும் அறிஞர்களும் இக்கட்டுரைகளைப் படைத்துள்ளனர். சிங்கப்பூர் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிந்துகொள்ள இத்தொகுப்பு மிகவும் பயன்படும்.

ஒருநாட்டின் வளர்ச்சிக்கு இயற்கை வளங்களோடு புது வருவாயும் அவசியமானதொன்றாகும். பலவழியினின்றும் வந்து குவியும் புதிய செல்வங்கள் அந்நாட்டின் வளர்ச்சி வேகத்தை உந்தித் தள்ளும் விசையாக விளங்குகின்றன. புதுவருவாயைக் குறிக்க நம் செந்தமிழ்ச் செவ்விலக்கியத்தில் ஒரு சொல் உண்டு. அதுதான் யாணர் என்பது. யாணர் - புது வருவாய் - நாட்டுக்கு அவசியம். அதுபோலத்தான் மொழி வளர்ச்சிக்கும் புது நூல்கள் அவசியம். அவை மொழிவளர்ச்சியை உந்து சக்தியாக இருந்து மேலெடுத்துச் செல்கின்றன. நீரின் இயக்கம் ஆறாக உருவெடுப்பதைப் போலவும் காற்றின் இயக்கம் தென்றலாகச் சுகம் தருவதைப் போலவும் உழைப்பின் இயக்கம் செல்வமாய்ப் பரிணமிப்பதைப் போலவும்

அறிஞர் சிந்தனையின் இயக்கம் பனுவல்களாக மாறி மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் தூண்டுகோலாகவும் ஊன்றும் வேர்களாகவும் உறுதுணை செய்கின்றன. செம்மொழி இலக்கியங்களை நமது பழைய இயற்கை வளங்களாகக் கொள்வோமானால், இதுபோன்ற புதிய நூல்களை யாணர்களாக - புது வருவாயாகக் கொள்ளலாம். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெறும் இவ்வேளையில் வெளிவரும் இந்நூலை புது வருவாயாகக் கருதிக் கைகளில் ஏந்தி வரவேற்கலாம்.

இந்நூல் வெளிவருவதற்குப் பேருதவி செய்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கும், அறக்கட்டளை நிறுவிய புரவலர் சிங்கப்பூர் திரு.முஸ்தபா அவர்களுக்கும், கட்டுரைகள் படைத்த பேராளர்களுக்கும், அழகாக அச்சிட்டுத் தந்த பதிப்புத்துறை இயக்குநர் திரு வை.கண்ணபுரக்கண்ணன் அவர்களுக்கும் மற்றும் உதவிகள் செய்த அனைவருக்கும் இந்நேரத்தில் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முனைவர் ஆ. கார்த்திகேயன்
முனைவர் சா. உதயசூரியன்

பொருளடக்கம்

1. மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம் - ஒரு கண்ணோட்டம் 1
— டாக்டர் வே. சபாபதி

2. மலேசியப் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் இன்றைய நிலையும் 15
— கோ. புண்ணியவான்

3. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு பார்வை 35
— நா. ஆண்டியப்பன்

4. சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதையின் வரலாறும் வளர்ச்சியும் (1965-2008) 47
— டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன்

5. மலேசியாவில் தமிழ்ப் படங்கள் 71
— மு. அன்புச்செல்வன்

6. சிங்கப்பூர்த் தமிழ் நாவல்கள் வளர்ச்சி - ஒரு கண்ணோட்டம் 89
— மா. இராஜிக்கண்ணு

7. சிங்கப்பூரில் கட்டுரை இலக்கிய வளர்ச்சி 111
— செ.ப. பன்னீர்செல்வம்

8. சிங்கப்பூர்த் தமிழ் நாடக வரலாறு 129
— ச. வரதன் & அப்துல் கமீது

9. சிங்கப்பூரில் சிறுகதை இலக்கியத்தின் வரலாறும் முன்னேற்றமும் 135
— டாக்டர் சீதாலட்சுமி

10. மலேசியாவில் தொடக்கக்கால மேடை நாடகங்கள் 199
— பா. சந்திரகாந்தம்

11. மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு 211
— பெ. இராசேந்திரன்

மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம் - ஒரு கண்ணோட்டம்

டாக்டர் வே. சபாபதி
இணைப்பேராசிரியர்
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம்

நோக்கம்

இக்கட்டுரையானது மலேசியத் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் காணப்படும் முக்கியச் செய்திகளையும் அதன் உள்ளடக்கத்தில் காணப்படும் முக்கியப் போக்குகளையும் மட்டும் விளக்குவதனை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

முன்னுரை

உரைநடையிலும் இலக்கியங்களைப் படைக்கலாம் என்றறிந்த பின்னர் முதலில் தோன்றிய இலக்கியவகை நாவல் ஆகும். இவ்விலக்கிய வகையைத் தமிழில் புதினம் என்றும் அழைப்பர். பதினேழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் உலகில் பரவலாக முடியாட்சிமுறை வீழ்ச்சி கண்ட பின்னர் மக்கள் மத்தியில் மிகுந்த மதிப்பையும் வரவேற்பையும் கண்ட இலக்கியவகை நாவலே. ஏனெனில் மக்கட் சமுதாயத்தை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டியது நாவல் இலக்கியமே. சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் நேர்ந்த அனுபவங்களையும் அவர்கள் உற்ற உணர்வுகளையும் மிகையில்லாமல் உள்ளதை உள்ளபடியே (எதார்த்தபூர்வமாக)படம் பிடித்துக் காட்டியது நாவல் இலக்கிய வகையே. சிறுகதையைக் காட்டினும் வாழ்க்கை அனுபவங்

களுக்கும் மனித உணர்வுகளுக்கும் முதன்மையும் அதிக அழுத்த மும் தருகின்ற இலக்கியவகையாக நாவல் இலக்கியம் திகழ்வதால் வாசகர் மத்தியில் இன்றளவிலும் அதற்கென்று தனி மதிப்பும் மரியாதையும் உண்டு. நல்ல நாவலானது ஒரு காலகட்டத்து வாழ்க்கையின் பதிவாகவே அமைந்து விடுகின்றது. இவ்விலக்கிய வடிவம் மேனாட்டில் தோன்றி வளர்ந்து பின்னர் இந்திய நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் நாவல் இலக்கியம் தமிழில் தோன்றி வளரத் தொடங் கியது. மலேசியாவில் தமிழில் நாவல் இலக்கியம் இருபதாம் நூற் றாண்டின் தொடக்கப் பகுதியில் தமிழக, இலங்கைக் குடியேறி களால் அறிமுகப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது.

தொடக்கக் கால மலேசியத் தமிழ் நாவல்கள்

தமிழக, இலங்கை ஆகிய நாடுகளின் நாவல் இலக்கியத் தாக்கங்களே மலேசியாவில் நாவல் இலக்கியம் தோன்றி வளர் வதற்கு வழிவகுத்துத் தந்தன. மலேசியாவின் முதல் தமிழ் நாவல் 1916இல் வெளிவந்த மீனாட்சி அல்லது மலாய்நாட்டு மங்கை என்னும் தலைப்பில் அமைந்த நாவலாகும். இந்நாவலின் ஆசிரியர் கிள்ளானைச் சேர்ந்த பெருவணிகர் கா. கந்தையா பிள்ளை ஆவார். இவ்வாறு வளரத்தொடங்கிய மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் விடுதலைவரை மிகுதியும் தமிழகம், இலங்கைக் குடியேறி களாலேயே படைக்கப்பட்டு வந்தது. மலேசிய விடுதலைக்குமுன் ஏறத்தாழ இருபத்தைந்து நாவல் வெளிவந்ததற்கான குறிப்புகள் கிடைக்கின்றன. அவற்றுள் கருணாசாகரன் அல்லது காதலின் மாட்சி (1917), பாலசுந்தரம் அல்லது சன்மார்க்க ஜெயம் (1918), தோட்டக்கொலை மர்மம் அல்லது பத்துமலைக் கள்வன் (1932), கண்யசீல கனகபூஷணம் அல்லது தாய்பாஷாபிமான சதிபதி (1933), கோரகாந்தன் அல்லது தென்மலாயாகிரியில் வட இலங்கைத் துப்பாளி (1934), சயம்புநாதனும் சன்னாசியாரும் அல்லது அறிவாளி (1935), நேசமலர் அல்லது கற்றோரின் கனா (1936), அழகானந்த புஷ்பம் (1936) ஆகியன குறிப்பிடத்தக்க நாவல் கள் ஆகும். இந்நாவல்களில் தமிழக, இலங்கை பின்னணியும் சார்பும் மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்நாவல்களின் பெயரைப் பார்த்த மாத்திரத்திலேயே இவை அக்காலப்பகுதியில் தமிழகத்திலும் இலங்கையிலும் நிலவிய நாவல்களின் போக்கு களைக் கொண்டுள்ளதனை அறிந்து கொள்ளலாம். அக்காலப்

பகுதி தமிழக, இலங்கை நாவல்களைக் காணும்போது அவற்றின் கதையமைப்பில் துப்பறியும் போக்கு, மர்மப் பண்பு, எதனையும் மிக நீளமாகக் காட்டிச் செல்லும் முறை, கதைக்குத் தொடர்பற்ற பகுதிகளை இணைத்துக்கொள்ளும் முறை, கதையின் இடையிடையே நாவலாசிரியர் குறுக்கிட்டுப் பேசும் போக்கு, இரட்டைப் பெயரிடும் போக்கு ஆகியன பரவலாகக் காணப்படு கின்றன. அதே போக்குகளும் பண்புகளும் இந்நாவல்களிலும் காணப்படுகின்றன. மிகக் குறைவான மலேசியச் சூழல்களே இந்நாவலாசிரியர்களால் கையாளப்பட்டுள்ளதனைக் காணமுடி கின்றது. தவிர, தொடக்கக் காலத்தில் பத்திரிகைகள் நாவல்களைத் தொடர்களாக வெளியிட்டுள்ளன. அவ்வகையில் அக்காலப்பகுதி யில் தொடர்கதைகள் எழுதி மக்கள் மத்தியில் பிரபலமாக இருந்தவர்களாகக் கோ. பார்த்தசாரதி, பி. வேணுகோபாலன், ஆர். ராமநாதன் போன்றாரைக் குறிப்பிடலாம்.

தமிழக ஜமீன்தார் குடும்பமொன்றில் நிகழ்ந்த ஒரு முக்கோணக் காதலையும் அதனால் நிகழ்ந்துவிட்ட கொலையை யும் துப்பறியும் போக்கில் விவரிக்கும் நாவல் கருணாசாகரன் அல்லது காதலின் மாட்சி. பாலசுந்தரம் அல்லது சன்மார்க்க ஜெயம் எனும் நாவல் வேலைக்காக யாழ்ப்பாணத்திலிருந்து மலாயா வரும் இளைஞன் பாலசுந்தரத்தை மையமாகக் கொண்டு ஒழுக்கம் உயர்வைத்தரும் எனும் கருத்தைப் பிரச்சாரப்பாணியில் வெளிப் படுத்துகிறது. கோலாலும்பூருக்கு அருகில் உள்ள பத்துமலைத் தோட்டத்தில் பொன்னம்பலக் கிராணியார் என்பவர் செய்துவரும் அக்கிரமங்களைத் தமிழகத்திலிருந்து வரும் குணவல்லியும் அவளுக்குத் துணையாகத் துப்பறியும் நிபுணர் பால் நியூட்டனும் துப்புத்துலக்கிக் கண்டுபிடிப்பதனை மையமாகக் கொண்ட நாவல் தோட்டக்கொலை மர்மம் அல்லது பத்துமலைக் கள்வன். மலேசிய இடப்பெயர்களை மட்டுமே கொண்டுள்ள இந்நாவலில் இந்நாட்டு வாழ்க்கையோ பழக்கவழக்கங்களோ காணப்பட வில்லை. இந்நாவல் 1932-இல் தமிழ்நேசன் நாளிதழில் அதனை நிறுவியவரான கி. நரசிம்ம ஐயங்காரின் மைத்துனர் கோ. பார்த்த சாரதியால் எழுதப்பட்டுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. பொழுதுபோக்கையும் விறுவிறுப்பையும் முதன்மையாகக் கொண்டு மலேசியப் பின்னணியில் சமுதாயச் சிந்தனைகளையும் உள்ளடக்கிய நாவல் கோரகாந்தன் அல்லது தென்மலாயா கிரியில்

வட இலங்கைத் துப்பாளி. இலங்கையிலிருந்து மலாயாவிற்குத் தப்பியோடிவரும் பிரபலக் கொள்ளைக்காரன் கோரகாந்தனைக் கண்டுபிடித்து அழிப்பதே இந்நாவலின் முக்கியக் கதையாகும். நாவலில் மலாயாவின் பொருளாதாரநிலை, மலாய்க்காரர்களின் வாழ்க்கைமுறை, இளைஞர்கள் மதுவருந்துதல், சூதாடுதல், விலைமாதரை நாடுதல் ஆகியவற்றால் சீரழிந்து போதல் போன்ற சமுதாய நிலைகளை இந்நாவலாசிரியர் கதையில் காட்டிச் சென்றுள்ளார். ''இது ஆங்கிலத்தில் எழுதப்பெறின் சிறந்த ஒரு சினிமாப்படமாய் நடிக்கத்தக்கதாகும் என்பது நிச்சயம்'' எனத் தமிழ் நேசன் இந்நாவலுக்கு அளித்துள்ள விமர்சனம் குறிப்பிடத் தக்கது. கண்யசீல கனகபூஷணம் அல்லது தாய்பாஷாபிமான சதிபதி எனும் நாவலின் ஆசிரியர் பள்ளி ஆசிரியராதலால் மாணவர் களுக்கு ஆசிரியர் அறிவுரை வழங்கும் பாணியில் நாவலில் கருத்து களைக் காட்டிச் சென்றுள்ளார். ஒரு தம்பதியர்க்கிடையே நடக்கும் உரையாடலே நாவலாக அமைக்கப்பட்டுள்ளது. அவர்களின் உரையாடல்களின் இடையிடையே நீதிக்கதைகள், செய்யுள்கள், தனிப்பாடல்கள் ஆகியன நாவலாசிரியரால் இணைக்கப்பட்டுள்ள தால் நாவலுக்குரிய கட்டுக்கோப்பு சிதைந்து காணப்படுகின்றது. சயம்புநாதனும் சன்னாசியாரும் அல்லது அறிவாளி எனும் நாவல் சன்னாசி என்கிற துறவியாருக்கும் சயம்புநாதன் எனும் இளை ஞனுக்கும் நடக்கும் உரையாடல்களையே முதன்மையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. ஒரு துறவியின் போதனையாக வரும் இந்நாவல் வாழ்க்கைக்குத் தேவைப்படும் நல்லொழுக் கங்கள், சமயப்பற்று, கல்வியின் உயர்வு, அறத்தின் மாண்பு, இல்லற, துறவறச் சிந்தனைகள் போன்றவற்றை இடையிடையே பல கிளைக்கதைகளின் மூலம் பிரச்சார தொனியில் அமைந்து நாவல் இலக்கியத்திற்குரிய கட்டுகோப்பினை இழந்து காணப்படு கின்றது. ஒரு வேலைக்காரனின் மகனான நேசகமலனைப் பணக் காரியான நேசமலர் விரும்பி மணப்பதன்வழி தூய காதல் ஏற்றத் தாழ்வு பார்க்காது என்ற கருத்தினைத் தூக்கிப்பிடிக்கும் நாவல் நேசமலர் அல்லது கற்றோரின் கனா கதைப்போக்கில் கதாசிரியர் இலங்கைத் தமிழரின் பழக்கத்திலுள்ள சீதனமுறை, இளைஞர் களின் மத்தியில் காணப்படும் குடிப்பழக்கம், ஆலயங்களில் உயிர்ப்பலியிடுதல் போன்றவற்றைக் காட்டிச் செல்கின்றார். மேலும், கதாசிரியர் ஆங்கிலேய அரசின் பிரித்தாளுங் கொள்கை யைக் கடுமையாகக் கண்டிக்கும் போக்கும் இந்நாவலில் காணப்

படுகின்றது. பாரம்பரியமும் மரபுகளுமே ஒருவருக்கு உயர்வைத் தரும்; மேனாட்டுப் பழக்கவழக்கங்கள் அழிவைக் கொண்டு வரும் என்பதனைக் கருவாகக் கொண்ட நாவல் அழகானந்த புஷ்பம். இந்நாவலில் வரும் அழகானந்தன் மரபுகளைக் கைக்கொண்டு உயர்வையும் செல்வத்துரை மேனாட்டுப் பழக்கவழக்கங்களில் சிக்கிச் சீரழிவையும்அடைவது காட்டப்படுகின்றது. இந்நாவலிலும் பிரச்சாரப்போக்கில் நல்லொழுக்கங்கள், கல்வி, மேனாட்டு மோகம், பண்பாடு போன்றவை பேசப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத் தவர் பிழைப்புக்காக மலாயா போகக் கூடாது என்று குரல் கொடுப் பதனையும் இந்நாவலில் கேட்க முடிகின்றது.

இவ்வாறு தொடக்கக் காலத்தில் வெளியான நாவல்கள் கருத்துக்கு முதன்மை தந்தும் நாவலின் கலையழகிற்கு முக்கியத் துவம் தராதநிலையும் கொண்டு விளங்குவதால் பல நாவல்களின் கட்டுக்கோப்பு சிதைந்து காணப்படுகின்றது. தொடக்கக் கால நாவலாசிரியர்களுக்கு இந்நாவல்களைப் படைத்துள்ளதின் முதன்மை நோக்கம் அறிவுறுத்தலாய் இருந்துள்ளதே இதற்கான காரணம் ஆகும். அறிவுறுத்தல் நோக்கம் இவர்களிடம் மேலோங் கிக் காணப்பட்டதால் நாவலின் கட்டுக்கோப்பைப் பற்றிக் கவலைப்படாமல் நாவலின் கதைக்குப் பொருத்தமற்ற கருத்துகள், செய்திகள், கிளைக்கதைகள் போன்றவற்றை நாவலின் கதையின் இடையிடையே காட்டிச் சென்றுள்ளனர். தவிர, நாவலின் இடை யிடையே கதையில் நேரடியாகக் குறுக்கிட்டுப் பேசிப் பல்வேறு தகவல்களைத் தந்தும் சென்றுள்ளனர். இக்காரணங்களால் இந் நாவல்கள் நாவல் இலக்கியத்திற்குரிய கலையழகிலிருந்து விலகிக் காணப்படுகின்றன.

தொடக்கக்கால நாவல்களில் மலேசிய மண்ணின் மணம் அதாவது மலேசிய மண்ணிற்குரிய அடையாளங்கள், மலேசிய மக்கள், அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் போன்றவை மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக, அக்காலப்பகுதி யில் தமிழர்கள் அதிகம் வாழ்ந்த தோட்டப்புறங்களின் சூழல், வாழ்க்கைமுறை, சிக்கல்கள் போன்றவை காட்டப்படவில்லை. இந்நாவல்களை எழுதியோர் தமிழகத்திலிருந்தும் இலங்கையி லிருந்தும் வந்தவர்களாதலாலும் இவர்கள் நகர்ப்புறத்திலேயே தங்கிப் பணிபுரிந்ததனாலும் தோட்டப்புறங்களைப் பற்றியோ

அங்குள்ள சூழலைப் பற்றியோ சிக்கல்களைப் பற்றியோ அதிகம் தெரியாமலும் அதுபற்றிய சிந்தனை இல்லாமலும் இருந்துள்ளனர். அதனால், தாங்கள் நன்கறிந்த தமிழக, இலங்கைப் பின்னணியில் அங்குள்ள சிக்கல்களை மையப்படுத்தி நாவல்கள் எழுதியுள்ளனர்.

விடுதலைக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல்கள் (1957-1990)

விடுதலைக்குப்பின் நாவல் இலக்கியம் எண்ணிக்கையிலும் தரத்திலும் உயர்வு கண்டு தொடர்ந்து வளர்ச்சி அடைந்து வருகின்றது. விடுதலைக்குப்பின் நாவல் இலக்கியத்தை வளர்க்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறுபதுகளின் இறுதியில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் குறுநாவல் எழுதும் போட்டியை நடத்தியதன் வழி எம். குமாரன் அவர்களின் *செம்மண்ணும் நீலமலர்களும்* (1969) எனும் தரமான குறுநாவல் கிடைக்கப்பெற்றது. இந்நாவல் அறுபதுகளின் தொடக்கத்தில் பல்லாயிரக்கணக்கான தோட்டப்பாட்டாளிகள் வேலை இழப்பதற்குக் காரணமான தோட்டத்துண்டாடலைக் கருவாகக் கொண்டது. இந்நாவலில் வரும் தோட்டப்புற இளைஞன் கன்னியப்பன் தோட்டத்துண்டாடலை முறியடிக்கக் கொண்டுவந்த கூட்டுறவுத் திட்டம் தோட்டமக்களின் அறியாமையினாலும் ஒற்றுமையின்மையினாலும் தோல்விகாணுவது மிக இயல்பாகக் காட்டப்பட்டுள்ளது. இந்நாவலே பின்னாளில் அகிலனின் *பால்மரக் காட்டினிலே* (1976) நாவல் தோன்றக் காரணமாய் அமைந்தது. எழுபதுகளில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தோடு இணைந்து நடத்திய போட்டியில் ஐ. இளவழகுவின் *இலட்சியப் பயணம்* (1975) எனும் பரிசுக்குரிய நாவல் கிடைக்கப்பெற்றது. இந்நாவல் தோட்டப்புற இளைஞனான மாதவன் தோட்டத்தைவிட்டு நகர்ப்புறத்திற்குக் குடியேறிப் படிப்படியாக முன்னேறுவதைக் காட்டுகின்றது. எழுபதுகளின் இறுதியில் தமிழ்நேசன் நாளிதழ் நடத்திய குறுநாவல் போட்டியில் சீ. முத்துசாமியின் *சிறகுகள் முறியும் மானுடக் கனவுகள்* (1979) எனும் குறுநாவல் கிடைக்கப்பெற்றது. தோட்டப்புறப் பின்னணியில் சீர்கேட்டிற்கும் சிதைவுக்கும் ஆளான குடும்பம் ஒன்றை இயல்பாகக் காட்டிய நாவல் இது. எண்பதுகளின் இறுதியிலும் தமிழ் நேசன் நாளிதழ் குறுநாவல்

போட்டியொன்றை நடத்தி மலேசியத் தமிழ் நாவலுக்கு வளம் சேர்த்துள்ளது.

எண்பதுகளுக்குப்பிறகு நாவல் வளர்ச்சிக்கு உரமிடும் வகையில் மாதம் ஒரு நாவல் திட்டம் (1981) வானம்பாடி இதழின் வழி அமரர் ஆதி குமணன் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் வழி 11 நாவல்கள் வெளிவந்து மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தன. இவற்றுள் சீ. முத்துசாமியின் விதைகள் பாலைவனத்தில் முளைப்பதில்லை. துறவியின் தெருக் கூத்து, ந.மகேசுவரியின் புதிய வாரிசு முதலானவை குறிப்பிடத் தக்கவை. சிவகாமி எனும் ஒரு முதிர்கன்னியின் நோக்கில் முதிர் கன்னிகளின் உணர்வு, ஏக்கம், ஆணாதிக்கப் போக்கு ஆகியவற்றை மிக இயல்பாகப் படம் பிடித்துக்காட்டிய நாவல் விதைகள் பாலை வனத்தில் முளைப்பதில்லை. தமிழகத்திலிருந்து பெண்களை மணமுடித்துவரும் ஆண்களில் ஒரு பிரிவினரின் வக்கிரப் புத்தியைக் காட்டும் படைப்பு தெருக்கூத்து. இந்நாவலில் வரும் வயதான சாத்தப்பன் தமிழகத்திலிருந்து இளம்பெண் காந்தி மதியை மணம் புரிந்து வந்து படுத்தும் கொடுமைகள் நாவல் முழுவதும் காட்டப்பட்டுள்ளன. சோதனைக்குழாய் மூலம் குழந்தைபெறும் நிலை ஏற்பட்டபின் இத்திட்டத்தினால் இப்படி யும் நடக்கலாம் எனும் கற்பனையில் மலர்ந்த நாவல் புதிய வாரிசு. இந்நாவலில் வரும் பிரியாவை அவள் கணவன் வசந்தன் சோதனைக்குழாய் முறையில் குழந்தை பெற்றவுடன் ஆண்மை யின் உறுத்தலால் படுத்தும் கொடுமைகள் காட்டப்பட்டுள்ளது.

விடுதலையான ஆண்டிலிருந்து தொண்ணூறுவரை (1957-2008) ஏறத்தாழ 66 நாவல்கள் நூல் வடிவில் வந்துள்ளன. இவற்றுள் மிகுதியானவை குறுநாவல்கள் ஆகும். விடுதலைக்குப் பின் வெளிவந்த இந்நாவல்களை எழுதியவர்களுள் மிகுதி யானோர் மலேசியர் ஆவர். ஆதலால், இப்படைப்புகள் மிகுதியும் மலேசியப் பின்னணியில் மலேசியச் சூழலில் மலேசியச் சிக்கல் களைக் கொண்டு விளங்குகின்றன. மலேசியத் தமிழ்ச் சமுதாயம் எதிர்நோக்கும் பல்வேறு (அக.புற) போராட்டங்களைக் காட்டும் வகையில் இப்படைப்புகள் அமைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட நாவல்களைத் தவிர்த்து, இக்காலப்பகுதியில் கா. பெருமாளின்

துயரப்பாதை (1979), மா. இராமையாவின் எதிர்வீடு (1976), சா.ஆ. அன்பானந்தனின் மரவள்ளிக்கிழங்கு (1979), எம்.ஏ. இளஞ்செல்வனின் பசித்திருக்கும் இளங்கொசுக்கள் (1978), ரெ. கார்த்திகேசுவின் வானத்து வேலிகள் (1982) போன்ற நாவல்கள் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளன. மலேசிய இந்தியர்களின் ஒரு நூற்றாண்டுகால வாழ்க்கையையும் அதில் தோட்டப் பாட்டாளிகளின் போராட்ட வாழ்க்கையையும் காட்டிய நாவல் துயரப்பாதை. இந்நாவல் தோட்டநிர்வாகத்தினாலும் நிர்வாகத்தின் கையாளான கங்காணி நாகனாலும் முத்துக்கருப்பன் குடும்பம் எத்தகைய பாதிப்புகளுக்கு ஆளாகி வருந்தியது என்பதைக் காட்டுகின்றது. தமிழ்நாட்டு இதழில் (ராணிமுத்து) வெளிவந்த முதல் நாவல் என்ற சிறப்பைப்பெறும் நாவல் எதிர் வீடு. பல்வேறு சிரமங்களுக்கும் தொல்லைகளுக்கும் மத்தியில் படித்து வழக்கறிஞராகும் பெண்ணைக் காட்டும் நாவல் இது. ஜப்பானியர் ஆட்சியின் அவலங்களை முதன்முதலாகப் படம் பிடித்துக் காட்டிய நாவல் மரவல்லிக்கிழங்கு. இந்நாவலின் கதையில்வரும் மாரிமுத்துவை ஜப்பானியர் மரண ரயில்பாதை அமைக்கச் சயாம் கொண்டு சென்றுவிட, அவன் அங்குப் படும் துன்பங்களும் அவன் மனைவி சீனியம்மா தோட்டப்புறத்தில் குழந்தையோடு படும் துன்பங்களும் இந்நாவலில் காட்டப்பட்டுள்ளன. இளைஞர்களின் மத்தியில் காணப்படும் போதைப்பொருள் பழக்கத்தைக் காட்டிய முதல் நாவல் பசித்திருக்கும் இளம் கொசுக்கள். இந்நாவலில் வரும் சங்கரனும் அவன் நண்பர்களும் போதைப்பொருளுக்கு அடிமையாகிப் பல்வேறு சீர்கேடுகளில் ஈடுபடுவதைக் காட்டுகின்றது. தனிமனித சிக்கல்களுக்கும் உணர்வுகளுக்கும் முதன் முதலில் வடிகால் அமைத்துத் தந்த நாவல் வானத்து வேலிகள். தோட்டத்து இளைஞனான குண்டான் நகரத்திற்குப் பெயர்ச்சியாகிப் படிப்படியாக வாழ்வில் மிக உயர்ந்த நிலைக்குச் சென்று டத்தோ குணாவாக உருவெடுப்பதைக் காட்டும் நாவல் இது. கதைகூறும் உத்தியால் சிறப்புப் பெறும் நாவல் இது.

தொண்ணூறுகளுக்குப்பின் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம்

மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் எண்ணிக்கையிலும் தரத்திலும் தொடர்ந்து இந்தத் தொண்ணூறுகளிலும் வளர்ச்சி

கண்டது. தொண்ணூறுகளிலும் பல்வேறு முயற்சிகள் நாவல் இலக்கிய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. முதலாவ தாக, மலாயாப் பல்கலைக்கழக, இந்திய ஆய்வியல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மலேசியத் தமிழ் நாவல்களின் தரம், திறம் (1992) ஆகும். இதுநாள் வரையில் வெளிவந்துள்ள மலேசியத் தமிழ் நாவல்களின் தரம், திறம் ஆகியவற்றினை அறிந்து கொள்வதற்கு இக்கருத்தரங்கு துணைபுரிந்தது. 2007 மே மாதத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய கருத்தரங்கில் தமிழகப் பெண்ணிய எழுத்தாளர் திலகவதி ஐ.பி.எஸ். அவர்கள் கலந்துகொண்டு நாவலைப்பற்றிய பல்வேறு விளக்கங்கள் அளித்தார். இக்கருத்தரங்குகள் எழுத்தாளர்களுக்கு நாவல் இலக் கியத்தில் போதிய தெளிவை ஏற்படுத்தியது. அடுத்ததாக, இதுநாள் வரையில் சிறுகதை மட்டுமே எழுதி வந்தவர்கள் தொண்ணூறுகள் தொடங்கி நாவல் எழுத முனைந்தனர். அவ்வரிசையில் சிறுகதை எழுத்தாளர்களான அ. ரெங்கசாமி, மு. அன்புச்செல்வன், பாவை, சை. பீர்முகம்மது, பூ. அருணாசலம், சரஸ்வதி அரிகிருஷ்ணன் போன்றாரைக் குறிப்பிடலாம். இறுதியாக, இதுநாள்வரையில் நாவல் எழுதிவந்த மூத்த எழுத்தாளர்களின் தரமும் உரமும் கொண்ட நாவல் படைப்புகள் இக்காலப் பகுதியில் வெளிவந்து மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளன. அவ்வகையில் மா. இராமையா, ஆர். சண்முகம், கோல லங்காட் அ. ரெங்கசாமி, ரெ. கார்த்திகேசு, நா.ஆ. செங்குட்டுவன், சி. சொக்கலிங்கம் போன்ற மூத்த எழுத்தாளர்களின் படைப்புகளால் மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் பொலிவு பெற்றது. தவிர, இக்காலப்பகுதியில் பெருமளவில் தொடங்கப்பட்ட வார, மாத, நாள் இதழ்களின் பெருக்கமும் நாவல்கள் பெருக்கத்திற்கு ஒரு காரணமாய் அமைந்திருந்தன.

புதிய ஈராயிரத்தில் நாவல் இலக்கியம் மிகச் சிறப்பாக வளர்வதற்குரிய வகையில் பல போட்டிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 2004/2005 ஆண்டுகளில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அஸ்ட்ரோ வானவில், தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த நாவல் போட்டியில் நாவலாசிரியர்களுக்குக் கணிசமான தொகை பரிசாக அளிக்கப்பட்டது. இப்போட்டியில் அ. ரெங்கசாமியின் லங்காட் நதிக்கரை, சீ. முத்துசாமியின் மண்புழுக்கள் ஆகிய தரமான

நாவல்கள் கிடைக்கப்பெற்றன. கம்யூனிச அவசரகாலத்தின்போது மலேசியத் தமிழர்கள் கம்யூனிஸ்டுகளின் அச்சுறுத்தல்களுக்கும் பிரிட்டிஷ் அறியாமையின் பிடியிலும் சிக்கிச் சீரழிந்து போன சமுதாயப் பதிவு மண்புழுக்கள் எனும் நாவல் ஆகும். இந்நாவலில் பின் நவீனத்துவத்தின் கூறுகளைப் பயன்படுத்திக் கதைகூறியுள்ள முறை காணப்படுகின்றது. 2007/2008 ஆண்டுகளில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், அஸ்ட்ரோ வானவில் ஆகிய இரண்டும் இரண்டாம் முறையாக இணைந்து நடத்திய போட்டியிலும் சிறந்த நாவல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 2007/2008-ஆம் ஆண்டுகளில் மலாயாப் பல்கலைக்கழக, இந்திய ஆய்வியல் துறையும் தேசியத் தோட்டத்தொழிலாளர் சங்கமும் இணைந்து நாவல் போட்டியை ஏற்பாடு செய்துள்ளன. 2007-ஆம் ஆண்டில் தமிழ் நேசன் நாளிதழ் ஏற்பாடு செய்த 50-ஆம் ஆண்டு மெர்தேக்கா நினைவு குறுநாவல் போட்டியை ஏற்பாடு செய்து நடத்தியதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

மலேசியத் தமிழ் நாவல் இலக்கிய உலகில் பெண் எழுத்தாளர்கள் தொடக்கக் காலத்திலிருந்தே மிகக் குறைந்தே காணப்படுகின்றனர். விடுதலைக்குமுன் ஒரே பெண் நாவலாசிரியரையே காணமுடிந்தது. மங்கள நாயகம் தம்பையா எனும் இலங்கைப் பெண் நாவலாசிரியையே அவராவார். அரிய மலர் (1921) எனும் தலைப்பில் அவர் எழுதிய அந்நாவலில் அன்றைய காலப்பகுதியில் பினாங்கில் யாழ்ப்பாண இளைஞர்களின் மத்தியில் காணப்பட்ட பல்வேறு காலப்பகுதியில் பினாங்கில் யாழ்ப்பாண இளைஞர்களின் மத்தியில் காணப்பட்ட பல்வேறு சீர்கேடுகளைக் காட்டிச் சென்றுள்ளார். விடுதலைக்குப்பின் தொண்ணூறுகளுக்கு முன் இரு பெண் நாவலாசிரியர்களான ந. மகேசுவரியின் நாவலான புதிய வாரிசும் கம்பார் எஸ். வேலுமதியின் இதயங்கள் ஆகிய இரண்டு மட்டுமே வானம்பாடியின் மாதமொரு நாவல் திட்டத்தின் கீழ் வெளிவந்ததனைக் காணமுடிந்தது. பெண்கள் மிகுதியும் பத்திரிகைகளிலும் தொடர்கதைகள் எழுதுவதோடு நின்றுவிட்டனர். இதேநிலைதான் தொண்ணூறுகளிலும் அதற்குப்பின்னும் தொடர்வதனைக் காணமுடிகின்றது. உம்முசல்மாவின் ஓடும் நதி (1990), சரஸ்வதி அரிகிருஷ்ணனின் ஐந்தாவது பௌர்ணமி, நானும் ஒரு தமிழ்ப்பெண்தான் (1995), பாவையின் கோடுகள் கோலங்களானால், நொண்டிப்பறவை (1998) ஆகிய மூவர் மட்டுமே எழுதி

யுள்ளதனைக் காணமுடிந்தது. இருப்பினும், புதிய ஈராயிரத்தாம் ஆண்டில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு அதிகரித்தலைக் காணமுடிகின்றது. புதிய ஈராயிரத்தாம் ஆண்டில் முதல் ஒன்பது ஆண்டுகளில் ஆறு பெண் எழுத்தாளர்களின் நாவல்களைக் காணமுடிந்தது. நிர்மலா பெருமாளின் குயில்கூவி துயில் எழுப்ப (2002), வேள்வி (2007), மங்களகௌரியின் மல்லிகைகள் மணம் மாறுவதில்லை (2008), ந.மகேசுவரியின் நினைவின் நிழல் கோடுகள் (2008), பாவையின் இன்னும் மிச்சமிருக்கிறது வாழ்க்கை (2008) ஆகிய நாவல்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. பொது வாகவே, பெண்களின் படைப்புகள் பெண்கள் எதிர்நோக்கிய பல்வேறு சிக்கல்களை மிகுதியாக மையப்படுத்தியுள்ளன.

தொண்ணூறுகளிலிலிருந்து இன்றுவரை (1990-2007) ஏறத்தாழ 75 நாவல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் மிகுதி யானவை குறுநாவல்களாகவே அமைந்துள்ளன. தொண்ணூறு களுக்குப்பின் நாவல் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்களாக ரெ. கார்த்திகேசு, ப. சந்திரகாந்தம், சீ. முத்துசாமி, நா.ஆ. செங்குட்டு வன், அ. ரெங்கசாமி, சை. பீர்முகம்மது போன்றோரைக் குறிப்பிட லாம்.

தொண்ணூறுகளுக்குப்பின் ரெ. கார்த்திகேசு 14 நாவல் களைப் படைத்து மலேசியத் தமிழ் நாவல் உலகில் அதிக நாவல் படைத்தவர் எனும் சிறப்பைப் பெறுகின்றார். அவற்றுள் கொப் புளங்கள், மனசுக்குள் கட்டுகிற கோபுரங்கள், தேடியிருக்கும் தருணங்கள், அந்திம காலம், நாளைக்கு காதலினால் அல்ல, சூதாட்டம் ஆடும் காலம் முதலானவை குறிப்பிடத்தக்க நாவல்கள் ஆகும். இவருடைய படைப்புகளில் நடப்பியல் பாங்கும் மித வாதப் பெண்ணியச் சிந்தனைகளும் மேலோங்கிக் காணப்படு கின்றன. டாக்டர் இரா. தண்டாயுதம் நினைவிலக்கியப் பேரவை 1992-ஆம் ஆண்டின் சிறந்த நாவலாகக் கொப்புளங்களைத் தேர்ந் தெடுத்தது. இக்குறுநாவல் பிள்ளைகள் வளர்ப்பில் காணப்படும் பிற்படுத்தப்பட்ட போக்கும் அதனால் விளைந்துவிட்ட பாதிப்பு களும் காட்டப்பட்டுள்ளன. இன்றையச் சூழலில் கணவன், மனைவி உறவுமுறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் அவற்றின் விளைவுகளையும் கட்டியுள்ள படைப்பு நாளைக்கு. பதவி ஓய்வு பெற்றுவிட்ட முதியவர் ஒருவரின் உணர்வுகளுக்கு

முதன்மை கொடுத்துள்ள படைப்பு அந்திம காலம். தாய்மையின் சிறப்பைக் காட்டும் படைப்பு சூதாட்டம் ஆடும் காலம்.

தொண்ணூறுகளுக்குப்பின் நா.ஆ. செங்குட்டுவன் நெருப்புக் கொடிகள், விடியலுக்காக, துன்பங்கள் உறங்குவதில்லை, விலங்கு, கனவுப்பந்தல், கால்களே நில்லுங்கள் முதலான ஆறு நாவல்களைப் படைத்துள்ளார். இவற்றுள் மாறுபட்ட படைப்பாகத் திகழ்வது கனவுப்பந்தல். இந்நாவல் தமிழகத்தின் கனவுத்தொழிற்சாலையான தமிழகத்திரையுலகில் மலேசியத் தமிழ் இளைஞன் ஒருவனுக்கு ஏற்பட்ட மோசமான அனுபவங்களைக் காட்டுகின்றது.

தொண்ணூறுகளுக்குப்பின் புதிய போக்கைக் கையாண்டுள்ள நாவலாகச் சை. பீர்முகம்மதுவின் பெண்குதிரை எனும் நாவலைக் குறிப்பிடலாம். தீவிரவாதப் பெண்ணியம் பேசியுள்ள முதல் மலேசியத் தமிழ் நாவல் இதுவாகும். ஆணாதிக்கத்துக்கு எதிராகக் கடுமையாக ஒலித்த முதல் கலகக் குரலாக இந்நாவலைக் குறிப்பிடலாம். இந்நாவலின் கதையில்வரும் கதைத்தலைவி லெஸ்பியன் உறவில் ஈடுபடுவதாகக் காட்டப்பட்டுள்ளதானது மலேசியத் தமிழ் நாவல் உலகிற்குப் புதியதும் பண்பாட்டை மீறியதும் ஆகும்.

தொண்ணூறுகளுக்குப்பின் கோல லங்காட் அ. ரெங்கசாமி புதியதோர் உலகம் (1993), நினைவுச் சின்னம் (2005), லங்காட் நதிக்கரை (2006), இமயத்தியாகம் (2007), என்று விடியும்? (2008) முதலான ஐந்து நாவல்களைப் படைத்துள்ளார். இப்படைப்புகள் யாவும் மலேசிய இந்தியர்களின் வரலாற்றோடு தொடர்புடைய உண்மை அனுபவங்களைப் பதிவு செய்துள்ள ஆவணங்கள் ஆகும். இவருடைய இப்படைப்புகள் இரண்டாம் உலகப்போர், ஜப்பானியர் ஆட்சி, போருக்குப் பிந்திய நிலை, கம்யூனிசத் தொல்லைகள், தோட்டப்பாட்டாளிகளின் போராட்ட வாழ்க்கை போன்றவற்றைக் காட்டுகின்றன. புதியதோர் உலகம் எனும் நாவலில் மலாயாவில் நடந்தேறிய ஜப்பானியரின் கொடுங்கோலாட்சியும் நினைவுச் சின்னம் எனும் நாவலில் ஜப்பானியர் ஆட்சியின்போது சயாமில் மரண ரயில் பாதை போடச்சென்ற இந்தியர்களின் கண்ணீர்க் கதையும் காட்டப்பட்டுள்ளன. என்று

விடியும்? எனும் நாவல் தோட்டப்பாட்டாளிகள் அடிப்படை வசதிகளுக்காகப் போராடி குண்டடிபட்டு . இறந்துபோன சோகத்தைக் காட்டுகின்றது.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப்பரிசுத் திட்டத்தின் வழி 2006-ஆம் ஆண்டில் சிறந்த நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாவல் ப. சந்திரகாந்தம் அவர்களின் அமுதசுரபிகள் ஆகும். இந் நாவலின் கதை ஒரு நாடகக் கலைஞனைப் பற்றியதாக இருப் பினும் மலேசிய இந்தியர்களின் குறிப்பாகத் தோட்டப்புறப் பாட்டாளிகளின் ஒரு நூற்றாண்டுகால வரலாற்றோடு நெருங்கியத் தொடர்புடைய நிகழ்வுகளும் செய்திகளும் கதையோடு பொருத்த மாக இணைக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

விடுதலைக்குமுன் நாவல் இலக்கியம் மலேசிய மண் ணில் தோன்றி வளர்வதற்குரிய முன்னோடி முயற்சிகள் தமிழக, இலங்கைக் குடியேறிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அப்படைப்புகளுள் தமிழக, இலங்கையின் மணமே மேலோங்கிக் காணப்படுகின்றது. ஆனால் விடுதலைக்குப் பின்னரே மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத்தில் மண்ணின் மணம் மேலோங்கியும் நாவலுக்கே உரிய கலையழகு சிறந்தும் காணப்படுகின்றது. விடுதலைக்குப்பின் நாவல் எழுதும் போட்டி கள், நாவலுக்கான கருத்தரங்குகள் போன்றவை நாவல் இலக்கியம் இம்மண்ணில் சிறப்பாக வளர்வதற்குரிய சூழலை உருவாக்கித் தந்தன. பரிசுகள் பெற்ற பல படைப்புகளும் பத்திரிகைத் தொடர்களும் இன்னும் நூல் வடிவம் பெறாமலேயே உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. மிகுதியான இப்படைப்புகள் நேர்க் கோட்டுக் கதைகளாக அமைந்துள்ளன. சில படைப்புகள் மட்டும் நேர்க்கோட்டுத் தன்மையில் அமையாமல் சிக்கல்கள் நிறைந்தும் நிரல்படக் காட்டாமலும் மனவுணர்வுகளுக்கு அழுத்தம் தந்தும் படைக்கப்பட்டுள்ளன. பெண்ணியக் கோட்பாடு மட்டும் ஓரள விற்குப் பயன்படுத்தியுள்ளநிலை காணப்படுகின்றது. சுருங்கக் கூறின், மலேசியத் தமிழ் நாவல் இலக்கியம் இன்னும் அடைய வேண்டிய இலக்குகள் நிறைய உள்ளதால் அது கடந்து செல்ல வேண்டிய தூரம் நிறையவே உள்ளது.

மேற்கோள் நூல்கள்

1. *சபாபதி, வே. (1995) விடுதலைக்குப் பிந்திய மலேசியத் தமிழ் நாவல்கள், கோலாலம்பூர்: உமா பதிப்பகம் (முதற்பதிப்பு).*
2. *................. (1996) விடுதலைக்கு முந்திய மலேசியத் தமிழ் நாவல்கள், சிதம்பரம்; மணிவாசகர் பதிப்பகம் (முதற் பதிப்பு)*
3. *................ (1996) மலேசியத் தமிழ் நாவல் வளம், சிதம்பரம்: மணிவாசகர் பதிப்பகம் (முதற்பதிப்பு)*
4. *............ (2004) நாவல், மலேசியத் தமிழ் இலக்கியம்- ஓர் அறிமுகம், கோலாலம்பூர்: மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (முதற்பதிப்பு)*
5. *.................. (2007) நாவல், மலேசியத் தமிழ் இலக்கியம்- ஓர் அறிமுகம், கோலாலம்பூர்*
6. Sababathy V., (1996) Malaysian Tamil Novels After Independence, Kuala Lumpur: University Malaya (First Edition)
7. .... (1996) Malaysian Tamil Novels Before Independence, Kuala Lumpur: University Malaya (First Edition)

மலேசியப் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் இன்றைய நிலையும்

கோ. புண்ணியவான்

மலேசியப் படைப்பிலக்கியத்தின் வரலாறு 1876 லேயே தொடங்கிவிட்டதாக ஆய்வாளர்கள் தக்க சான்றுகளோடு முன்வைக்கிறார்கள். பினாங்கில் 1876இல் தங்கை நேசன் என்ற தலைப்பில் மலேசியாவின் முதல் பத்திரிகை அச்சாகி உள்ளது. மலேசியாவில் புனையப்பட்ட முதல் இலக்கிய வடிவம் மரபுக்கவிதைதான். ஆனால் முதல் புதுக்கவிதை பிறந்தது 1964ஆம் ஆண்டுதான்.

மலேசியாவில் புதுக்கவிதை விதை நடப்பட்டு இன் றைக்கு கிட்டதட்ட அரை நூற்றாண்டை எட்டிப்பிடிக்கவிருக் கிறது. முதல் மரபு மீறிய கவிதை கள்ளப்பார்ட்டுகள் என்ற தலைப்பில் சி. கமலநாதனால் எழுதப்பட்டு தமிழ் முரசு ஞாயிறு பதிப்பில் வெளியானது. இது பிரசுரமான ஆண்டு 1964.

மதியின்றிப் பிதற்றுவதும்
இங்கு
உள்ளதைத்தின்று,
ஊதிப்பெருப்பதல்லால்
உருப்படியாய் செய்வதென்ன?

என்று அடியெடுத்துக் கொடுக்கிறார் சி. கமலநாதன். இவரே மலேசியப் புதுக்கவிதைகளின் முன்னோடி என்று தயங்காமல்

குறிப்பிடலாம். இவரைத் தொடர்ந்து பைரோஜி நாராயணன், எம். துரைராஜ், அக்கினி, ராஜகுமாரன், ஆதிகுமணன், எம்.ஏ. இளஞ் செல்வன் எனப் புதுக்கவிதைக்கான முதல் தலைமுறை எழுத் தாளர்கள் தோன்றுகிறார்கள்.

புதுக்கவிதை அல்லது மரபு மீறிய கவிதையைத் தமிழ் முரசு சுவீகரித்திருந்தாலும் அதனை உச்சி முகர்ந்து உளப்பூர்வமாக அங்கீகாரம் கொடுத்தது அன்றைய தமிழ் மலர் நாளேடு. இருப்பினும் பல்வேறு காரணங்களால் புதுக்கவிதை அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அப்போது மரபுக்கவிதை கள் ஆழமாகக் காலூன்றி, யாப்பறிந்து நிறைய எழுத்தாளர் களையும் அதற்கான விரிந்த வாசக வரவேற்பையும் அது பெற்றி ருந்ததால் யாப்பை முறித்த இந்தப் புதிய வடிவம் வரவேற்பைப் பெறத்தவறியது. இந்த வடிவம் மரபு சார்ந்த மொழியை அழித் தொழித்துவிடும் என்ற அவர்களின் மனோபாவமும், தார்மீகக் கோபமுமே புதுக்கவிதை வளர்ச்சியைக் கொழுந்திலேயே கிள்ளி எறிந்து விடுவதற்கான காரணியாகவும் அமைந்தது. அன்றைக்கு வெளியாகிக் கொண்டிருந்த பத்திரிகைகளும் வார மாத ஏடுகளும், மரபுக்கவிதைக்குக் கிடைத்த மரியாதையைக் காரணமாகக் காட்டி, புதுக்கவிதைக்கான வாசலைத் திறந்துவிட மறுத்தன. யாப்பிலக் கணத்தோடு எழுதப்படுவதே கவிதை, மற்றவையெல்லாம் கவிதைகளாக ஏற்றுக் கொள்ள முடியாது என எதிர்த்தரப்பிலிருந்து (மரபுக்கவிஞர்களும், அதனை ஆதரிப்பவர்களும்) குரல் கொடுத்து ‘கொடி பிடிக்க’ ஆரம்பித்தனர். பின்னர் இதுவே கவிதை ஆர்வலர் களிடையே அச்சு ஊடகம் வழி ஒரு காத்திரமான சர்ச்சையை ஆரம் பித்து வைத்தது.

புதுக்கவிதை ஆழமான தடம் பதிக்க மிக முக்கியமான காலக்கட்டமாக இதனைக் கருதலாம். புதுக்கவிதையை முன் னெடுத்துச் செல்வதற்கும், பல புதுக்கவிஞர்களை உருவாக்கு வதற்கும் இந்தச் சர்ச்சை வழி அமைத்துக் கொடுத்தது. அவர்களின் எதிர்ப்பே இந்த வடிவம் தழைப்பதற்கான பலத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

ஒரு நீண்ட, செறிவான இலக்கண இலக்கிய மரபு சார்ந்த தமிழுக்குப் புதுக்கவிதை என்ற இறக்குமதி வடிவம் தேவை

யில்லை என்று யாப்பில் கரைகண்டவர்கள் மிகுந்த கோபத்தோடு தங்களின் வசவுகளால் புதுக்கவிதையாளர்களைத் திட்டித் தீர்த்தனர்.

தாயுமின்றி தந்தையுமின்றித்
தப்பால் பிறக்கும் ஒரு கவிதை
தாளமுமின்றிக் கோலமுமின்றித்
தவறால் பிறப்பது புதுக்கவிதை
சாலை விதியை சமிக்ஞை விளக்கை
சாராதோடும் புதுக்கவிதை
நாலும் செறிந்த நமக்குள் வழக்கை
நாசமாக்கட்டும் புதுக்கவிதை (தீப்பொறி)

புதுக்கவிதை வடிவத்தை ஏற்றுக்கொள்ளாத வகையில் பற்பல கவிதைகளும் கட்டுரைகளும் அப்போது எழுதப்பட்டன.

அன்றைய வாசகனுக்கும், யாப்பிலக்கணத்தைக் கற்றுத் தேர்ந்த பிறகுதான் கவிதை எழுத வரவேண்டும் என்ற பிடிக்குள் சிக்கிகொண்டு எழுத முடியாமல் தவிப்பவனுக்கும் புதுக்கவிதை புதிய படைப்பிலக்கியத்தளத்தை வழியமைத்துக் கொடுக்கிறது என்று எதிர்வாதம் செய்த விடாகொண்டன்கள் இருக்கத்தான் செய்தார்கள்.

இலக்கியக் காவலர்களாய்
எக்காளமிடும்
ஓ... கிளிப்பிள்ளைகளே
நீங்கள் வேலி போட்டுத்தான்
மஞ்சத்தில் குலவுகின்றீர்கள்
ஆனால்
உணர்ச்சியற்ற சொல்லடுக்குகளில்
மஞ்சங்கள் பாடைகளாக மாறுகின்றன
நீங்கள் பிணத்தைப் பெற்றுத்தள்ளுகிறீர்கள்
உங்கள் சாலைவிதிகள்
எங்கள் புத்துணர்ச்சிகளை
முடமாக்கிப்போட
உண்டாக்கப்பட்ட

சர்வாதிகாரக் கூச்சல்
உங்கள் சமிக்ஞை விளக்குகள்
எங்கள் நவீனக்காரர்களுக்குப்
போடப்பட்டதல்ல
இருளில் சுழலும்
செக்கு மாடுகளுக்காகப் போடப்பட்ட
சிம்னி விளக்குகள் (எம்.ஏ. இளஞ்செல்வன்)

எனப் புதுக்கவிதையின் வளர்ச்சிக்காக எதிர்வாதம் செய்கிறார்.

கவிதையை வாசகனிடம் கொண்டு சேர்ப்பதில் கருவி, கருப்பொருள் இதில் எது மிகப்பெரிய பங்களிப்பு செய்கிறது என்பதற்கான விவாதத்துக்கு இன்றைக்குப் பதில் கிடைத்துவிட்ட நிலையிலும் இன்னும் ஓரிருவர் புதுக்கவிதை. கவிதை இனத்தைச்சாராது என்று தள்ளிவைத்து, மல்லுக்கு நிற்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அதன் பிறகு இந்தப் புதிய வடிவத்துக்குப் பெரிதாய் வாசல் திறந்து வரவேற்பு நல்கியது புதிதாய்ச் சிறகு தரித்து நாடு முழுதும் பாட வந்த வானம்பாடி என்ற வார இதழ். தமிழ் மலரில் ஒரு செய்தி ஆசிரியராகச் சேர்ந்த ஆதி. குமணன் என்ற இளம் பத்திரிகையாளர் பின்னாளில் வானம்பாடி வார இதழைத்தொடங்கி புதுக் கவிதையை வளர்த்தெடுப்பதில் பிரத்தியேகக் கவனத்தைச் செலுத்தினார் என்பதைச் சரித்திரம் பொன்னெழுத்துக்களால் பதிவு செய்து வைத்திருக்கிறது. இதில் மிக முக்கியமான செய்தி என்ன வெனில் தமிழ் மலரில் பணியாற்றும்போதே புதுக்கவிதைக்குப் பதியம் போட்ட ஆதிகுமணன் பிற பத்திரிகைகள் கொடுக்கத் தயங்கிய அங்கீகாரத்தைத் தன் புதுப்பத்திரிகையான வானம்பாடி யில் சிவப்புக் கம்பள வரவேற்போடு நல்கினார். அதன் பின்னர் வானம்பாடி புதுக்கவிதைக்கான இயக்கமாகவே மாறி அதனைத் தீவிரமாக வளர்த்தெடுக்க முயன்றது. புதுக்கவிதை வடிவம் பழைய மரபைக் கட்டுடைத்துத் தந்த சுதந்திரத்தைச் சாதமாகப் பார்த்த பலர் இத்துறையில் தங்கள் எண்ணங்களை எழுத்துக்களாக வடித்தனர். சீ. முத்துசாமி, கோ. முனியாண்டி, கு. கிருஷ்ணன், துரை. முனியாண்டி, பிரசன்னா, இளந்தமிழன், வே. ராஜேஸ்வரி, அருள்தாசன் போன்றோர் ஆரம்பத்தில் அடியெடுத்துக் கொடுத்த

முன்னோடி தலைமுறையினரோடு கைகோக்கத்துவங்கினர். அதன் பின்னர் புதுக்கவிதை மேலும் பரிணமிக்கத் துவங்கியது.

மலேசியாவில் முதல் புதுக்கவிதை நூல் எம்.ஏ. இளஞ் செல்வனின் நெருப்புப் பூக்கள், மே மாதம் 1979 வெளிவந்து மற்ற புதுக்கவிதை நூல்கள் வெளி வருவதற்கான நம்பிக்கையையும், களத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அதே ஆண்டில் டத்தோ சிரி சாமிவேலு பொன்விழா இலக்கியப்போட்டியில் பிற இலக்கிய வடிவத்தோடு சேர்த்து, புதுக்கவிதைக்கும் இடமளித்தது அதற் கான மிகப்பெரிய அங்கீகாரமாகக் கருதப்படுகிறது.

மலேசியாவின் முதல் புதுக்கவிதைக் கருத்தரங்கை 1979இல் சீ. முத்துசாமி, நிலாவண்ணன், எம்.ஏ. இளஞ்செல்வன் ஆகியோர் சுங்கைப்பட்டாணியில் நடத்தினர். எழுத்துத் துறையில் ஏற்கனவே முத்திரை பதித்த டாக்டர் ரெ. கார்த்திகேசு, பைரோஜி நாராயணன் போன்றோரின் பக்க பலம் இதற்கு மிகப்பெரிய ஆதரவாக அமைந்தது.

முதல் தலைமுறையினர் போட்டுத்தந்த பாதையில் துணிச்சலோடு களம் காண்கிறார்கள் இரண்டாவது தலைமுறை எழுத்தாளர்கள். சிரி ரஜினி, கனலன், சு. கமலா, ஏ.எஸ் பிரான்சிஸ், மனஹரன், நாகராஜன், ப.ராமு, கு. கோபாலன், கோ. புண்ணிய வான், த. விஜயநாதன், க. உதயகுமார் போன்றவர்கள் படை யெடுப்பு புதுக்கவிதைக்கான அழுத்தமான அங்கீகாரத்தைப் பதிவு செய்தது.

இவர்கள் காலக்கட்டத்தில் புதுக்கவிதைத் துறையில் புதுவேகமும் புத்தெழுச்சியும் உண்டாயின. சீர்கேடுகளை மிகக்காத்திரமான பார்வையோடும், தார்மீகக் கோபத்தோடும், அங்கத நோக்கோடும், கண்டிக்கும் தோரணையோடும் பல தரமான கவிதைகள் புனையப்பட்டன.

இன்றைக்கு மலேசியா அனுபவிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்குத் தொழில் துறை வளர்ச்சி பெரிதும் உதவியது. இந்தத் தொழில் துறை வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தது ரப்பர் மரங்கள்தான். இந்தச் செழிப்புக்கு மிக முக்கியக் காரணியாக

அமைந்தது சஞ்சிக்கூலிகளாக தர்ம ஆர்டரில் வந்த தமிழர்கள்தாம். நாடு முன்னகர்ந்துவிட்டது. ஆனால் அதற்காக ரத்தம் சிந்தியவர்கள் பின்தள்ளப்பட்ட நிலையைச் சித்திரிக்கும் கவிதையைப் பாருங்கள்.

தமிழன்
இவன் நட்ட மரங்கள்
நிமிர்ந்து விட்டன
இவன் நடும்போது
குனிந்தவன்தான்
இன்னும் நிமிரவே இல்லை *(கோ. புண்ணியவான்)*

சயாமிலும் மலேசியாவிலும் ரயில் தண்டவாளங்களை அமைப்பதற்கு உடல் உழைப்புத் தொழிலுக்கு மிக உகந்தவனாக தமிழன் அடையாளம் காணப்பட்டான். குறிப்பாகச் சயாமில் ரயில் தண்டவாளங்கள் போடப்பட்ட சரித்திரம் தமிழனின் நரக வேதனை அனுபவித்ததைப் பறை சாற்றும் ஒன்று. இந்தக்கவிதை இந்த அல்லலைச் சொல்லால் குத்துகிறது.

இணைகோடுகளாய்
ஓடும் தண்டவாளங்கள்
இரும்புத் துண்டுகளா?
இல்லை
எங்கள் எலும்புத் துண்டுகள்! *(காசிதாசன்)*

மலேசியா பிரிட்டிசாரிடமிருந்து சுதந்திரம் பெற, மலாய் சீன இந்திய சமூகங்களின் ஒற்றுமை தேவைப்பட்டது. சுதந்திரத்திற்குப்பிறகு குறிப்பாக மே 13 இனக்கலவரத்திற்குப்பிறகு மலாய் இனத்தவரை முன்னேற்றுவதற்கான புதிய சட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. ஆனால் இந்த நாட்டின் முழுக் குடிமகனாக அங்கீகரிக்கப்படுவதற்கும், அரசு வேலை வாய்ப்பு பெறுவதற்கும் நீலவண்ண அடையாள அட்டை உடையவராக இருக்க வேண்டும். இந்தியாவில் பிறந்தவருக்கும், அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கும் சிவப்பு அடையாள அட்டை கொடுக்கப்பட்டு வந்தது. சிவப்பு முழுக்குடியுரிமைக்கான அடையாளம் அல்ல. அதனை நீலமாக மாற்றுவதற்கான வழிவகைகள் இடர்பாடுகள்

கொண்டவை. இருப்பினும் தன்னை இந்த நாட்டின் குடிமக னாகவே கருதி நாட்டின் நலனுக்காக உழைந்தவனை இந்தக் கவிதை எள்ளல் செய்கிறது.

> ***'மெர்டேக்கா'***
> ***என்று அடித் தொண்டையில் கத்தி***
> ***குனிந்து***
> ***தேசியக் கொடியைத்***
> ***தூக்கிப் பிடித்தேன்***
> ***ஜோப்பியிலிருந்து***
> ***சிவப்பு அடையாளக்கார்டு***
> ***கீழே விழுந்து***
> ***கெக்கென்று சிரித்தது.*** *(இரா. ஜெகவீர பாண்டியன்)*
>
> *மெர்டேக்கா: விடுதலை*
> *ஜோப்பி: சட்டைப்பை*

கருத்தரங்குகள் வழி புதுக்கவிதை படைப்பிலக்கியத்தை மீட்டெடுத்தல்

முதல் புதுக்கவிதைக் கருத்தரங்குக்குப்பிறகு புதுக் கவிதைப் படைப்பிலக்கியம் ஒரு தேக்க நிலையை அடைந்தது. இதற்குச் சில காரணங்களை முன்வைக்கலாம்

1. மலேசியாவில் தமிழ்க் கல்வி முதல் ஆறு ஆண்டுகள் வரைதான் போதிக்கப்படுகிறது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் சிலவற்றிலும், மலாயாப்பல்கலைக்கழகத்திலும் தமிழ் போதிக் கப்பட்டாலும், அங்கிருந்து இலக்கியப்படைப்பாளிகள் உரு வாவது மிக அரிது.

2. புதுக்கவிதை எழுத வந்தவர்கள் அதன் நுணுக்கங் களைப் புரிந்து கொள்ளாமை.

3. புதுக்கவிதைகளை வளர்ப்பதாக எண்ணி வார மாத ஏடுகள் அவற்றைப் பிரசுரித்தமை.

4. புதிதாக எழுத வருபவர்களின் ஆர்வக்கோளாறு.

5. விரிவான வாசிப்பு அனுபவம் இல்லாமை

எனப் பல காரணங்களை முன்வைக்கலாம்.

புதுக்கவிதை எதிர்நோக்கிய இந்தச் சரிவை நேர் செய்ய முதல் கருத்தரங்கைக் கூட்டியவர்கள் மீண்டும் புத்தெழுச்சி பெற்று எழுந்தனர்.

கோ. முனியாண்டி, எம்.ஏ. இளஞ்செல்வன், கோ. புண் ணியவான், துரை. முனியாண்டி, அருள்தாஸ் ஆகியோர் 1988இல் நவீன இலக்கியச் சிந்தனையை அமைத்து, கூலிமில் மீண்டும் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தனர். அன்றைய கண்ணீர்ப்பூக்களால் இளைஞர்களின் கனவுக்கவிஞராக வலம் வந்த மு. மேத்தா அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டதானது புதுக்கவிதைக்கான மிகப் பெரிய அங்கீகாரமாக அமைந்தது.

ஏழாண்டுகள் கழித்து, அதாவது 1995இல் கோ. முனி யாண்டியின் ஏற்பாட்டில் சித்தியவான் நகரில் மீண்டும் ஒரு கருத் தரங்கைக் கண்டது நவீன இலக்கியச் சிந்தனை அமைப்பு.

அன்றைக்கு மலேசிய எழுத்தாளர் சங்கத்தின் செயலாள ராக இருந்த பெ. ராஜேந்திரன், விட்டு விட்டுத் தொடரும் கருத்தரங்கு தொடர்ந்து நடப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு, எழுத்தாளர் சங்கத்தின் வழி, அதற்கு புது ரத்தம் பாய்ச்சும் வண்ணம் மூன்று மாதத்துக்கு ஒரு முறை நாட்டின் பல்வேறு பகுதிகளில் கருத்தரங்கைக் கூட்டினார். அந்தந்தப் பகுதியில் வாழும் இளைஞர் கள் திரளாகக் கலந்து கொள்ளும் பொருட்டு இந்தக்கருத்தரங்குகள் ஏதுவாக இருந்தன. மூன்று மாதத்தில் எல்லாப்பத்திரிகைகளிலும் வெளியான புதுக்கவிதைகளின் ஆய்வு, அவற்றில் சிறந்தவற்றுக் குப்பரிசு, புதிய கவிஞர்களை அடையாளம் காணுதல், திடீர்க் கவிதைப் போட்டி எனப் புதுக்கவிதையின் வளர்ச்சியை நோக்கிய இலக்காக அதற்குக் களம் அமைத்துக் கொடுத்தது. புதுக்கவிதை வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும், ஆற்றலும் கொண்ட பேராசிரியர் வெ. சபாபதி எல்லாக்கருத்தரங்குகளின் போதும் புதுக்கவிதை படைப்பிலக்கிய நுணுக்கங்களைப் போதித்தது

அதனை மீட்டெடுப்பதற்கான பெரு முயற்சியாகவும் அமைந்தது. தொடர்ந்து பதினைந்து கருத்தரங்கைக் கண்ட புதுக்கவிதை ஆதரவு மட்டுப்பட்டதால் மீண்டும் தொய்வு நிலைக்குத் திரும்பியது. ஆனால் மீண்டும் 2009இல் ஏப்ரல் திங்களில் பினாங்குத் தூங்கு பைனுன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் ஒரு கருத்தரங்கு கூட்டப் பட்டது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் சி. மோகன் இதில் கலந்து கொண்டு பேருரையாற்றினார். ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் கருத்தரங்கு கள் மையமிடும் என இன்றைய தலைவர் பெ. ராஜேந்திரன் சூளுரைத்தார்.

புதுக்கவிதையின் பாடு பொருள்கள்

சாதியம்

கோட்பாடு சார்ந்த இலக்கியப்படைப்புகள் மலேசியா வில் இல்லை என்று சொல்லி விடலாம். ஆனாலும் மார்க்சியம், சாதியம், பெண்ணியம் போன்ற இசம் சார்ந்தவைகளைக் கவிதை களுக்குள், ஊடும் பாவுமாகக் காணமுடியும். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்று சாதி சார்ந்த சிந்தனைச் சொல்லோவியங் கள். காதல் சாதிய வழக்கத்தை வேரறுத்து வருகிறது என்று சொல்ல லாம். ஆங்காங்கே சாதிய அமைப்புகள் தங்கள் சாதியைக் கட்டிக் காத்து வருகின்றன. சாதியின் பெயரை முன்வைத்து ஓட்டு வாங்கும் பழக்கம் மிக ரகசியமாக நடந்தேறுகிறது. குறிப்பாக அரசியல் களங்களில் இந்த நோய்க்கான தடுப்பு மருந்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை! அதன் வியாபகம் இன்றும் புற்றுப்பாம் பென அடங்கி இருப்பது போன்ற பாவனை தெரிகிறதே ஒழிய அது சமயங்களில் புற்றைவிட்டு வெளியேறி படமெடுத்து ஆடவும் செய்கிறது. இதனை ஒரு கவிஞர் இப்படிப் பதிவு செய்கிறார்.

ஜாதி

கிளைத்தேர்தல் நடந்தது
இறுக்கத்துடன் உறுப்பினர்
பரபரப்புடன் ஓட்டுப்போட்டனர்
வெற்றிபெற்றது சாதி
தோல்வியுற்றது நீதி (செ. குணாளன்)

அப்புறப்படுத்தப்பட்டுவரும் தோட்டப்புறம்

காலனியவாதிகளால் கஞ்சிக்கூலிகளாக மலேசியாவுக்குக் கொண்டுவரப்பட்ட தென்னிந்தியர்களின்வரலாறு தோட்டப்புறத்தில்தான் அதிகம் தேங்கிக்கிடக்கிறது. காடுகளாக இருந்த மலேயா மண்ணைச் சீர்படுத்தி ரப்பர், தேயிலை, செம்பனை நடுவதற்கு உகந்த இடமாக மாற்ற அடிமைப்போக்கும் உடல் உழைப்புக்குச் சற்றுந்தயங்காத மனோபாவமும் கொண்ட தென்னிந்தியர்கள் மிகப்பொருத்தமான இனமாக வெள்ளையர்களால் அடையாளம் காணப்பட்டார்கள். பின்னாளில் அவர்களாலேயே உருவாக்கப்பட்ட ரப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். சுரண்டலுக்குப் பேர்போன காலனியவாதிகள் ஐரோப்பிய நாடுகளின் தொழிற்புரட்சிக்குத் தேவைப்பட்ட மிக முக்கிய மூலப் பொருளான ரப்பரைத் தேக்கமில்லாமல் உற்பத்தி செய்வதற்கு இவர்களின் அடிமைத்தனம் பெரிதும் உதவியது. இதனைச்சாதக மாகப் பயன்படுத்திய பிரிட்டிசார்மேலும்மேலும் தோட்டப்புறங்களை நிறுவி தென்னிந்திய குடும்ப சந்ததியினர் தொடர்ந்து தோட்டப்புறத்திலேயே வாழ்வதற்கான அடிப்படை வசதிகளைச் செய்து தந்தனர். அவர்கள் வழிபடும் மாரியம்மன், முனீஸ்வரர்கோயில்கள்தமிழ், தெலுங்கு, மலையாளப்பள்ளிகள், ஆயாக் கொட்டைகள் என்று சொல்லப்படும் குழந்தைக் காப்பகங்கள், சில இடங்களில் சினிமா கொட்டகைகள், கள்ளுக் கடைகள் போன்றவை நிறுவப்பட்டன. தோட்டப்புற மக்களுக்கு வெளி உலகத்தைக் காட்டினால் ரப்பர், தேயிலை, செம்பனை உற்பத்தியில் பாதிப்பு வந்துவிடும் என்று கருதிய பிரிட்டிசார் இவர்கள் தோட்டப்புறத்தை விட்டு வெளியேறாமல் இருப்பதற்கான தந்திரமாகவே இவ்வாறான வாழ்வை அவர்களுக்காகக் கட்டமைத்துக் கொடுத்தனர். வெள்ளையர்களால் ஓட்டிவரப்பட்ட தென்னிந்தியர்களின் மூன்று தலைமுறையினரில் பெரும்பாலோர் தோட்டப்புறங்களிலேயே தங்கள் வாழ்நாளைக் கழித்தனர். ஆனால், இன்றைக்கு அந்த நிலை மாறி வருகிறது. மலேசியா தொழில் துறையில் கவனம் செலுத்திய நாளிலிருந்து தோட்டப்புறங்கள் மலேசிய நிலப்படத்திலிருந்து காணாமற்போய்க் கொண்டிருக்கின்றன. தோட்டப்புற மக்கள் தொழில்துறைக்கு மாற நேர்ந்தது. இதனால் தோட்டப்புறக் கலாச்சாரம் கை நழுவிப்போகும் அபாயத்தை எட்டியது. தோட்டப்புறச் சூழலின் வாழ்வனுபவத்தைக் கவிஞர்கள் பதிவு செய்தும் வைத்துள்ளனர்.

தோட்டத்திலுள்ள பழைய வீட்டுக்குத்
திரும்ப வேண்டும்
பார்வைக்குத் தென்படாதெனினும்
உள் நுழைந்தால் உணரமுடியும்
எரிக்கப்பட்ட கித்தா கொட்டைகளின் தணலை
வீட்டைவிட்டு வெளியே வரமுடியாது
உள்ளேயே அடைந்து வாழ்ந்து
மக்கிப்போன
தாய்தந்தை தமக்கையின்
ஆகக் கடைசி சொற்களைப் பொறுக்குவதற்கு
திரும்பியே ஆகவேண்டும்
அதற்குப் பின்னர்
என்ன வாழ்வு. (ப.அ.சிவம்.)

எரிக்கப்பட்ட கித்தா(ரப்பர்) கொட்டைகளின் தணலை, உள்ளேயே அடைந்து வாழ்ந்த மக்கிப்போன வாழ்வு, என தோட்டப்புற வாழ்வுத்துயரத்தின் குறியீடாகக் கசியும் சொற்களின் சோகத்தை அங்கு வாழ்ந்தவர்கள் மட்டுமின்றி, இதனை வாசிப்பவர்களும் உணர முடிகிறது. இதனைக் கட்டியங்கூறுகிறது இன்னொரு கவிதை.

அந்த மழை பொழுதில் தானே
தோட்டத்தின் முச்சந்தி மரம்
கிளைகளை உதிர்த்திருக்கும்?
மரத்தில் அமர்ந்திருந்த
குருவிகள்
பறந்தோடிய ஓசையை
மழை சிதறலின் ஓசையைவிட
உன்னிப்பாகக் கேட்க முடிந்ததே! (கே.பாலமுருகன்)

தமிழ்க் கல்வியைத் துடைத்தொழிக்கும் கொள்கை

மலேசியா தொழில் துறை நாடாக மாறிக்கொண்டிருப்பதாலும், தொழில் நுட்பம் ஆங்கிலத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாலும் அறிவியல் கணிதம் போன்ற பாடங்கள் ஆங்கிலத்தில் போதிப்பது அவசியமென உணர்ந்த முன்னாள் பிரதமர் மகாதிர், ஆரம்பக்கல்வித் தொடங்கி பல்கலைக்கழகம் வரை அப்பாடங்கள்

ஆங்கிலக் கற்றல் கற்பித்தலுக்கு மாற்றப்பட வேண்டும் என மக்கள் கவனத்தைத் திருப்பினார். நாடு சுதந்திரம் அடைந்ததி லிருந்து ஆரம்பப் பள்ளிகளில் (அடிப்படைக்கல்வி முதல் ஆறு ஆண்டு வரை) மலாய், ஆங்கிலப்பாடங்களைத் தவிர்த்து பிற பாடங்கள் தாய்மொழியிலேயே போதிக்கப்பட்டு வந்தன. தாய்மொழியின் மீது பற்று கொண்டவர்கள் பிரதமரின் இத்திட்டம் தமிழ், சீனம், மலாய் போன்ற மொழிகள் பேசுவதும் எழுதுவதும் குறைந்துவிடும் எனவும் மரபு சார்ந்த அதன் கலாச்சாரத் தொன் மங்களும் அழிந்தொழிந்துவிடும் என்று முடிவெடுத்து, அக்கொள் கைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினர். அப்படி வந்த கவிதை களில் ஒன்று இது.

> தமிழ் மொழிக்கு
> ஊறு விளைவித்துக்
> கூட்டுச்சதி இந்நாள்
> மொழிக்கு முள்கிரீடம்
> அணிவித்த
> பாவிகள் நாம்
> ஒரு வகையில்
> நாமும் யூதாஸ்கள்தாம்
> தமிழ்த்தாய் மகுடத்தை
> மண்ணில் தட்டிவிட்டு
> கொடும்பாவி எரிக்க
> தீப்பந்தம் கொடுத்த
> கருப்பு நாள் இது (கோ.புண்ணியவான்)

தமிழர்களின் எழுச்சி தினம்

மலேசியச் சரித்திரத்தில் 2007 நவம்பர் 25ஆம் நாள் தமிழர்களின் எழுச்சி தினமாகக் கருதப்படுகிறது. மலேசியா விடுதலை அடைந்து ஐம்பது ஆண்டுகளாய் ஒடுக்கப்பட்டுவந்த சமூகம் அன்றைய தினத்தில் தங்கள் உரிமைகளுக்காகப் போராட தலைநகரில் லட்சக்கணக்கில் ஒன்று திரண்டனர். மக்கள் தொகை யில் எட்டு சதவிதமாக இருக்கும் இந்தியர்களின் சொத்துடமை இந்த ஐம்பது ஆண்டுகளில் ஒரு சதவிகிதத்தைக்கூட எட்ட முடியாத அவல நிலையில் இந்தத் தார்மீகக் கோபம் புரட்சியாக வெடித்தது. அரசு வேலை வாய்ப்புகளில், உயர் கல்விக்கூட கல்வி

பயிலும் வாய்ப்புகளில், வணிக லைசன்ஸ் பெறுவதிலும், வணிகத் துக்காக அரசு கடன் பெறுவதிலும் மலாய்க்கார இனத்தோடு ஒப்பிடும்போது பெரிய ஏமாற்றத்தையும் சரிவையும் நம் இனம் அடைந்து வந்தது. ஆளுங்கட்சியோடு இணைந்திருந்த இந்தியர் சார்ந்த கட்சிகளும், அரசு சாராத பொது இயக்கங்களும் இந்தியர் களின் பின்னடைவை முன்வைத்து அதற்கான தேவைகளை முன்மொழிந்தும் செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கான கதை யாகவே ஆனது. ஐம்பது ஆண்டுகளாய் இதுபற்றிய கோரிக்கைகள் எழுப்பியும், மகஜர்கள் அனுப்பியும், பெரிதாய் ஒன்றும் சாதித்து விட முடியவில்லை. இதனால் மற்ற சமூகங்களோடு ஒப்பிடும் போது இந்திய சமூகம் ஒரு பின்தங்கிய சமூகமாகவே கட்டமைக் கப்பட்டு வந்தது. இந்த நிலை நீடித்தால் மலேசியா வளர்ந்த நாடாகிவிட்ட நிலையில் இந்தச் சிறுபான்மை சமூகத்தின் நிலை கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்சம் மேலோங்கிய வண்ணம் இருந்தது. இதனாலேயே பெட்டிப்பாம்பாய் இருந்த சமூகம் நவம்பர் 25ல் உரிமைக்கேட்டு போராட்டத்தில் குதித்தது. இந்திய சமூகத்துக்குச் சோதனை நிறைந்த காலக்கட்டமாகக் கருதிய நம் கவிஞர்களுக்குக் கற்பனை கரை புரண்டது.

அந்த ஈக்குஞ்சு பிழைத்துக் கொண்டது

சுவைபான கோப்பையில்
தெரிந்தே விழுந்திருக்கலாம்
ஈக்குஞ்சு

காப்பாற்ற விரைந்து
பின்பு பின்வாங்கிய விரல்கள்
அதன் மரணத்தில்
மௌனமாய்ச் சிரிக்கின்றன

கோப்பைக்கு வெளியே
ஈக்குஞ்சுக்கு என்ன கிடக்கிறது?

விரட்டலுக்கும் துரத்தலுக்கும்
இன்னும் அடித்தலுக்கும்
இலக்காக்கிக் கொண்டு
சொற்ப வாழ்வின்

இடுக்குகளில்
சிதறுண்டு போவதைத் தவிர.... (ஏ. தேவராஜன்)

சமூக எழுச்சிக்கு வித்திட்ட இந்தப் போராட்டத்துக்கு ஐவர் (அவர்களுள் நால்வர் வழக்கறிஞர்கள்) முன்னின்றனர். இதன் காரணமாக ஒடுக்குமுறைச் சட்டமான, உள்நாட்டுப் பாது காப்புச் சட்டத்தின் கீழ் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். இது மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இவர்கள் சிறை வைக்கப்பட்ட பாதிப்பை ஒன்பதாவது பொதுத்தேர்தலில் அரசே உணரும்படியாக வரலாறு காணாத வகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழந்தது. முதல் முறையாக இந்தி யர்கள் பெரும்பான்மையான வாக்குகளை எதிர்கட்சிக்குச் சேர்ப் பித்தனர். கேள்வி முறையின்றித் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பற்றிய கவிதை இது.

கருப்புக் காகிதத்தில்
வெள்ளை மையிட்டு எழுதுங்கள்
இவர்கள் அஞ்சாத வாசம் கொண்ட
புதிய பஞ்சபாண்டவர் என்று

நீண்டு இருக்கும் வரைதான்
இவை விரல்கள்
இறுக இணைந்திருப்பின்
இவை.....

இவர்கள் ஐம்பொறிகள்
இந்தச் சமூகத்தின் ஜீவன்கள்
இவர்கள் ஐம்பூதங்கள்
எங்களின் மூல இயக்கம்
....
....

எனத் தொடரும் இக்கவிதை சமூகம் எந்த அளவுக்கு இந்த ஐவரை புகழ் கொண்டாடினார்கள் என்பதற்கான சிறிய உதாரணமாகத் திகழ்கிறது.

கோயில் உடைப்பு

உள் நாட்டுப்பாதுகாப்புச் சட்டத்தைத் தன் கைவசம் வைத்திருக்கும் அரசு சிறுபான்மை மக்களுக்கெதிரான தன் சித்து வேலைகளைப் பல காலமாகச் செய்து வருகிறது. மேம்பாட்டுத் திட்டம் என்ற போர்வையில் மக்களின் வழிபாட்டுத்தலங்களை, குறுகிய கால அறிவிப்பைக் கொடுத்தோ முன் அறிவிப்பு இன்றியோ இவை பதிவு பெறாதவை எனக் குற்றஞ்சாட்டி கோயில்களை உடைக்கும் வேலையில் ஈடுபட்டு வந்தது அதில் ஒன்று. இதனால் கொதிப்படைந்த இந்துக்கள் இந்த உடைப்புக்கு எதிராகக் குரல் கொடுக்க ஆரம்பித்தனர். சில சமயங்களில் கோயில் வளாகத்திலே ஆயிரக்கணக்கில் முற்றுகை இட்டு மனிதச் சங்கிலியாக ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்க முனைந்தனர். அதனைப் பிரதிபலிக்கும் கவிதைகள் பல புனையப்பட்டன. அதில் ஒன்று இது.

என்னடா செய்வீங்க

முனீஸ்வர சாமி நெனவு தெரிஞ்ச நாளா
எங்க குடும்பமே கும்பிட்டு வர எங்க குலசாமி
சாம்பிராணி புகையிலே
முண்டாசு, முறுக்கிய மீச, கையில அருவா
கம்பீரமா இருக்கும் எங்கள் காவல் தெய்வம்
துடியான தெய்வம்னு எங்க தாதா சொல்லுவாரு
காய்ச்சல்ல கெடந்த என்ன காப்பாத்தினது இந்த
ஐயனாரு தான்
அப்பத்தா சொல்லும் அடிக்கடி
கடற்பாறயில அவர இடிச்சி
கோயில தர மட்டமாக்கி
லோரியில தூக்கிப்போட்டு
போனான்ங்க அவனுங்க
''எங்க கடவுள காப்பாத்துங்களேன்னு''
கதறுனா எங்க தங்கச்சி
அன்னிக்கி திலஞ்சி போன சாமி
இன்னிக்கி வந்தாரு
தண்ணி அடிச்சாணுங்க சுத்தி பொகையா
கெலம்பிச்சி

எல்லோரும் ஓடுனாங்க
நா ஓடுல
முண்டாசு, முறுக்கிய மீச
கையில அருவா
முனீஸ்வர சாமி இப்ப எனக்குள்ள
''டேய்ய் இப்ப வாங்கடா....
என்னடா செய்வீங்க....? (பத்தாங்கட்டை பத்துமலை)

ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு தென் இந்தியர்கள் மலேசியாவுக்கு ஒப்பந்தக்கூலிகளாகக் கொண்டு வரப்பட்டார்கள் என்பது பழைய செய்தி. இன்றைக்கும் அது நடந்து கொண்டுதான் இருக்கிறது. தொழில்துறையில் துரித மேம்பாடு கண்டு வரும் மலேசியாவுக்கு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். இந்தத் தேவையை நிவர்த்தி செய்ய ஆசியாவிலிருந்து நிறைய பேர் இங்கு வந்தவண்ணம் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்தும் தொழிலாளர்கள் முதலாளிகளால் இங்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அன்றைக்கு காலனித்துவவாதிகள் அதனைச் செய்தார்கள். இன்றைக்கு சொந்த இனமே இவர்களைக் கொண்டு வந்து சுரண்டிக் கொண்டிருக்கிறது.

'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி கிளியே' என்று பாரதி பாடியது போலவே, மலேசியாவிலும் ஒரு கவிஞர் இந்தத் தமிழ் நாட்டுத்தோழர்கள் படும் வேதனையைப் பாடுகிறார்.

கடனுக்கும் லெவிக்கும் கட்டவே
சதா எரியும் அடுப்பு நெருப்பருகில்
உடல் நோக வெந்தும்
உயிர் நோக நொந்தும்
உழைத்ததெல்லாம் போகுமென்பது
எனக்கென்ன தெரியும்.

காய்ச்சலில் கிடந்த ஊர்க்காரரின்
காதில் சொல்லிச் சென்றது (மா. சண்முகசிவா)

அகவப் பயணம்

புதுக்கவிதை எழுதிக் கொண்டிருந்த படைப்பாளர்கள் பலர் இன்றைக்கும் அதிலேயேதேங்கி நின்றுவிட்டார்கள். இன்றைக்குக் கவிதை நவீனக் களத்தில் இயங்கிக் கொண்டிருப் பதை அவர்களால் அவதானிக்க முடியவில்லை. நவீனச் சிந்தனை அகவய வெளிப்பாடாக அமைந்துவிடுவதே அதற்குக் காரணம். படைப்பாளனுக்கே உரிய அகத்தின் தர்க்கமாக, அதன் முரண்பாடு களோடும், கலைநுட்பத்தோடும் புதிய திசையை நோக்கிய பார்வையாகப் பதிவாகிறது நவீனக்கவிதைகள். வாசகனோடான சமரசத்துக்கே இடம் தராத அரசியலோடு கவிதைகள் எழுதப்படுவ தால் புதுக்கவிதை எழுதிக்கொண்டிருக்கும் பலரால் நவீனத் தளத்தில் இயங்க முடிவதில்லை. இருப்பினும் நவீனக் கவிதை களின் பால் ஈர்க்கப்பட்ட சிலர் புதுக்கவிதையைத் துறந்துவிட்டு நவீனத்துக்குப் புலம் பெயர்ந்துவிட்டார்கள். ம. நவீன், மகாத்மன், பா.அ. சிவம், சந்துரு, கே. பாலமுருகன், ஏ. தேவராஜன், மீரா வாணி, வீ. மணிமொழி, தினேசுவரி, ந. பச்சைபாலன், சை. பீர் முகம்மது, பூங்குழலி வீரன், யோகி, தோழி, கருணாகரன், சீ. அருண், கோ. புண்ணியவான் ஆகியோரை நவீனக் களத்துக்கான பங்களிப்பைச் செய்கிறார்கள் எனக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நவீனக் கவிதைகளுக்குப் பிள்ளையார் சுழி போட உதய மான காலாண்டிதழ் காதல். தீவிர இலக்கியத்தை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியாக இது ஆரம்பிக்கப்பட்டது. இளம் எழுத் தாளர்கள் இதனைத்தீவிரப்படுத்தியும் இது ஓராண்டுகாலமே களம் கண்டபின் இயற்கையின் விதிக்கு ஆளானது. இருப்பினும் இதன் நீட்சியாக 'வல்லினம்' இலக்கிய இதழ் வரத்துவங்கியது. காதலில் ஈடுபட்ட அதே இளைஞர் அணியான ம. நவீன், பா. அ. சிவம், சந்துரு ஆகியோர் இந்தக் காலாண்டிதழ் தழைப்பதற்கான உழைப்பை வழங்கி வருகின்றனர். இதன் மிக முக்கியமான நோக்கங்களில் ஒன்று நவீனக் கவிதைக்கான களம் அமைத்துக் கொடுப்பதாகும். அது இதுநாள் வரை செவ்வனே நடந்து வருகிறது. வல்லினம் இதழில், அகவய மொழியில் பதிவான இரு கவிதைகள் இவை.

எதிரெதிர் நின்றாலும்
கடந்தேகிச் சென்றாலும்

யாரோ! யார், யாராகவோவென
மொழியறியாக் காற்றாகி
விலகுகிறோம்
யிருவருக்குள்ளும் யிருவரும்
பதிவாகியிருப்பதை
யறிந்தும்கூட (கோ. முனியாண்டி)

அது கூட இல்லை

இரண்டாவது முறை இறப்பது
அத்தனை எளிதல்ல
இரண்டாவது முறை இறப்பதற்கு முன்
இரண்டாவது முறையாக
பிறர் நம்பும்படி வாழ்ந்தாக வேண்டியுள்ளது
பிறர் நம்பும்படி சிரிக்கவும்
பிறர் நம்பும்படி பேசவும்
பிறர் நம்பும்படி அன்பு செலுத்தவும்
வேண்டியுள்ளது.

இரண்டாவது முறை இறக்கையில்
நம்மைச் சுற்றி உள்ளவர்கள்
அழாமல் போகும் அபாயம் உண்டு
இன்னும் கொடூரமாய்
நாமே இறப்பது பற்றி
கவலைப்படாமல் போகலாம் (ம. நவீன்)

'மௌனம்' பேசிய கவிதை மொழி

2009ஆம் ஆண்டுத் துவக்கத்தில் மௌனம் என்ற முழுக்க முழுக்கக் கவிதைக்கான சிற்றிதழைக் கொண்டு வருகிறார் கவிதைப்பிரியர் ஜாசின் தேவராஜன். இதற்கு முன் சீ. அருண் அருவியையும் கவிதை இதழாகவே அறிமுகப்படுத்தியதைக் குறிப்பிட்டு அதன் நீட்சியாக இதனைத் தொடர்வதாகக் குறிப்பிடு கிறார் தேவராஜன். எல்லாச்சிற்றிதழுக்கும் நேர்ந்த அதே முறிவால் அருவியும் பொருள் மழை பெய்யாது வற்றிவிட்ட நிலையில், மௌனம் நின்று பிடிக்கும் என்ற பிடிவாதத்தோடு இன்றைக்கு ஆறாவது இத்ழ்வரை தன்னுடைய கவிதை யாத்திரையைத்

தொடர்ந்திருப்பதானது, நமக்கு அதன் நீண்ட ஆயுளை நம்பிக்கையோடு எதிர்கொள்ள வைக்கிறது. முழுக்க முழுக்க நவீனக் கவிதைகளுக்கே தாரை வார்க்கப்பட்ட இவ்விதழில் எழுதும் கவிஞர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே வெகுஜனப் பத்திரிக்கைக்கு எழுதி வந்தவர்களெனினும் நம்பிக்கையூட்டும் புதியவர்கள் சிலரையும் இவ்விதழ் அறிமுகப்படுத்தியது. ந. தமிழ்ச்செல்வி, தினேஸ்வரி, மகேந்திரன் நவமணி, ரிவேகா, மீராவாணி, புவனேஸ்வரி, முனீஸ்வரன் என்ற புதிய பட்டியல் நமக்குக் கிடைப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

முடிவுரை

இங்கு நவீனக் கவிதைகளை நிறுவுவதற்கான போராட்டம் நடந்தவண்ணம் இருக்கிறது. மலேசிய எழுத்தாளர் சங்கம் கவிதை வளர்ச்சிக்கு மிகுதியாக உழைக்கிறது. கருத்தரங்கங்களையும் போட்டிகளையும் நடத்துகிறது. தனியார் நிறுவனமான தேசிய நிலநிதிக்கூட்டுறவு சங்கம் ஆண்டு தவறாமல் நடத்தும் இலக்கியப் போட்டிகளில் புதுக்கவிதையையும் சேர்த்துக்கொண்டு பரிசுத் தொகையாக மாலசிய ரிங்கிட் 5000க்கும் கூடதலாகச் செலவு செய்கிறது. மலேசிய ஏடுகள் புதுக்கவிதையை வளர்த்தெடுக்க பிரசுரித்து ஊக்கம் அளித்து வருகின்றன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் புதிய கவிஞர்கள் தோன்றத்தான் செய்கிறார்கள். ஆறு ஆண்டு வரைக்குமே வரையறுக்கப்பட்ட தமிழ்க்கல்வி அறிவை வைத்துக்கொண்டுதான் பெரும்பாலோர் கவிதை எழுத வருகிறார்கள். வாசிக்கும் பழக்கம் இவர்களின் கவிதைகளைப் பட்டைத் தீட்டுகின்றது. ஆனால் தரமான கவிஞர்களின் எண்ணிக்கை மிகச் சிறியது. இருப்பினும் காரம் மாறாத கடுகுகளாகவே இவர்கள் இருப்பதானது, மலேசியாவில் கவிதை வளர்ச்சிக்கான நம்பிக்கையை விதைக்கிறது.

2007க்குப்பிறகு வெளியான கவிதை நூல்கள்

மலேசியாவில் 2006 வரை 58 புதுக்கவிதை நூல்கள் வெளியாகி உள்ளன. 2007 தொடங்கி வெளிவந்த நூல்களின் பட்டியல் இது.

1. சுடர் மின்னல்	பொன். நாவலன்.
2. தமிழே மின்னல்	ரா. அந்தோணிசாமி
3. மக்கள் சக்தி	ஏ.எஸ். பிரான்சிஸ்
4. என் கனவுகளும் கொஞ்சம் கவிதைகளும்	ந. பச்சைபாலன்
5. கடவுள் அலையும் நகரம்	கே. பாலமுருகன்
6. அணுவின் காதல்	அன்வர் டின்
7. இரணங்கள்	ஜமுனா வேலாயுதம்
8. ம. நவீனின் கவிதைகள்	ம. நவீன்

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு பார்வை

நா. ஆண்டியப்பன்
தலைவர்
சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம்

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் 120 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடையது. 1819ஆம் ஆண்டு மலேசியா வின் தென் கோடியில் உள்ள ஜோகூர் மாநிலத்தை ஆட்சி செய்த சுல்தானிடமிருந்து பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்காக சிங்கப்பூரைக் குத்தகைக்கு எடுத்தார் சர் ஸ்டாம்ஃபோர்ட் ராஃபிள்ஸ். அவர் நாராயண பிள்ளை உள்ளிட்ட இந்தியர்களைத் தம்முடன் சிங்கப்பூருக்கு அழைத்து வந்தார். அவர்கள் அனைவரும் அல்லது பெரும்பாலோர் தமிழர்கள்.

சிங்கப்பூரில் 1824இல் எடுக்கப்பட்ட முதல் மக்கள் தொகைக் கணக்குப்படி மொத்த மக்கள் தொகை 10,683. இவர் களில் 3,317 பேர் சீனர்கள். 4,580 பேர் மலாய்க்காரர்கள், 756பேர் இந்தியர்கள், 74பேர் ஐரோப்பியர்கள். 756 இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர்களாக இருந்திருக்க வேண்டும்.

முதலில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் என்ன என்பதை வரையறுப்பது நல்லது. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் மதியுரைஞரும் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக் கழகப் பேராசிரியருமான முனைவர் சுப. திண்ணப்பனும் சிங்கப்பூர் நன்யாங் பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள தேசியக் கல்விக்

கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவரான முனைவர் ஆ. இரா. சிவகுமாரனும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தைப் பின்வருமாறு வரையறுத்துள்ளனர்.

''சிங்கப்பூர் மண்ணின் மணம் கமழும் வகையில்- சிங்கப்பூர்ப் பின்னணியைச் சித்தரிக்கும் வகையில்- சிங்கப்பூரர்களால் அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசிகளால் எழுதப்படுகின்ற இலக்கியம் என்று வரையறுக்கலாம்.

சிங்கப்பூர்ப் பின்னணியைத் தவிர்த்து இங்குள்ள குடிமக்களாலோ நிரந்தரவாசிகளாலோ இயற்கை, மொழி, நாடு, சான்றோர் முதலிய பொதுநிலைப் பொருள்கள் பற்றி எழுதப்பெறும் இலக்கிய வகைகளையும் சிங்கப்பூர் இலக்கியமாகவே கருத வேண்டிய நிலையும் உள்ளது.''

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம், அது எந்த மொழியில் இருந்தாலும் மலாயா இலக்கியத்தில் இருந்து பிரிக்க முடியாதது. 1965இல் சிங்கப்பூர் மலேசியாவில் இருந்து வெளியேற்றப்பட்டு தனிக் குடியரசாக ஆனது வரை சிங்கப்பூர் இலக்கியம் மலாயா இலக்கியத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது.

இந்த ஆய்விற்கான தமிழ் இலக்கியக் காலத்தைப் பின்வருமாறு பிரித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1887-1935	-	தொடக்கக் காலம்
1936- 1941	-	புத்துணர்ச்சிக் காலம்
1942 - 1945	-	ஜப்பானிய ஆக்கிரமிப்புக் காலம்
1946 - 1960	-	சீர்திருத்தக் காலம்
1961-1980	-	குழப்பமும் நிலைத்தன்மையும்
1980-2008	-	புதிய வரவு/புதிய சிந்தனை

வரலாறும் வரலாற்று நிகழ்வுகளும் இலக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. தமிழ் இலக்கியமும் அதற்கு விதிவிலக்கல்ல. தென்கிழக்காசியாவில் வரலாறு படைக்கப்பட்ட வேளையில் அவை இலக்கியத்திலும் பிரதிபலித்தன.

1887-1935 தொடக்கக் காலம்

சில மாதங்களுக்குமுன் சிங்கப்பூரில் காலமான தமிழ் முரசின் முன்னாள் ஆசிரியர் திரு. வை. திருநாவுக்கரசு, ''சிங்கப்பூரில் முதல் அச்சகம் 1870ல் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவரத் தொடங்கின. அவை தமிழ் இலக்கியத்திற்குக் களம் அமைத்துக் கொடுத்தன'' என்று கூறுகிறார்.

ஸ்ரீனோதயா அச்சகத்தின் உரிமையாளரான திரு. சி.கே. மகுதும் சாயுபு ''சிங்கை நேசன்'' எனும் வார இதழை 1887 முதல் 1990 வரை வெளியிட்டார். 1887இல் அவர் ஒரு தமிழ் நூலையும் வெளியிட்டார்.

உண்மையில் அது நான்கு நூல்கள் அடங்கிய ஒரு நூல். சிங்கை நகர் அந்தாதி, சித்திரக்கவிகள், வண்ணை அந்தாதி, வண்ணை நகர் ஊஞ்சல் ஆகியவையே அவை. அந்த நான்கு நூல்களையும் எழுதியவர் திரு. சி.என். சதாசிவப் பண்டிதர் எனும் இலங்கைத் தமிழர்.

அந்த நூல்தான் சிங்கப்பூரில் வெளியிடப்பட்ட முதல் நூல் என்று இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனால் அதற்கு முன்னதாகவே சில நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன என்று இப்போது தெரியவந்துள்ளது.

1872-ல் ''முனாஜாத்துத் திரட்டு'' எனும் நூலைக் கவிஞர் முகமது அப்துல் காதர் என்பவர் வெளியிட்டுள்ளார். அது J. Paton Government Printers, Singapore எனும் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இந்தத் தொடக்கக் கால வெளியீடுகளைத் தொடர்ந்து சிறிது காலம் தொய்வு நிலை காணப்படுகிறது. இதற்குக் காரணம் 1900ஆம் ஆண்டில் சிங்கை நேசன் வெளியீடு நிறுத்தப்பட்டது தான்.

''மக்கள் மித்ரன்'' எனும் பெயரில் ஒரு பத்திரிகை 1923ல் 9 கதைகள் அடங்கிய ''நவரச கதை மஞ்சரி'' எனும் சிறுகதைத்

தொகுப்பை வெளியிட்டுள்ளதாக ஆய்வாளர் அமரர் நா. கோவிந்த சாமி கூறியுள்ளார்.

தந்தை பெரியார் 1928ல் சிங்கப்பூரை உள்ளடக்கிய மலாயா வுக்கு வருகையளித்தது பலருக்கு எழுத்தின் மீதான ஆர்வத்தை மீண்டும் தூண்டிவிட்டது. அதனைத் தொடர்ந்து புத்துணர்ச்சிக் காலம் தொடங்கியது.

அவர் குறிப்பாக சாதிக் கொடுமை, தீண்டாமை ஆகிய வற்றை எதிர்த்தும் நாத்திகத்தை ஆதரித்தும் ஆற்றிய உரைகள் எழுத்தாளர்கள் இடத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி சமூக விழிப்புணர்வுக்கு வித்திட்டன.

முப்பதுகளில் தொடக்கத்தில் இந்திய விடுதலைப் போராட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியிருந்தது. மகாகவி பாரதியின் விடுதலைப் பாடல்கள் தமிழ்நாட்டு மக்களின் விடுதலை தாகத்தை மேலும் கிளறிவிட்டன.

1936-1941 புத்துணர்ச்சிக் காலம்

பெரியாரின் வருகையைத் தொடர்ந்து சிங்கப்பூரில் தமிழர் சீர்திருத்தச் சங்கம் உருவானது. பிற்காலத்தில் தமிழவேள் எனும் சிறப்புப் பட்டம் பெற்ற கோ. சாரங்கபாணி அதன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரின் பெயரில்தான் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்விருக்கையை அமைத்துள்ளது.

அவர் ''முன்னேற்றம்'' எனும் வார இதழையும் ''சீர்திருத் தம்'' எனும் மாத இதழையும் தொடங்கினார். கோ. சாரங்கபாணி, 1935ல் ''தமிழ் முரசு'' இதழை வாரம் மூன்று முறை வெளி யாகும் பத்திரிகையாகத் தொடங்கினார். சீர்திருத்தச் சங்கத்தின் பத்திரிகை யாகத் தொடங்கப்பட்ட தமிழ் முரசு பின்னர் சாரங்கபாணியிடம் விற்கப்பட்டது. அவர் கைக்கு வந்தவுடன் அதனை நாளிதழாக மாற்றினார்.

இந்திய விடுதலைப் போராட்டம் முழு வேகத்துடன் நடைபெற்ற காலம் அது. அதே வேளையில் சீர்திருத்த இயக்கங்கள்

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்திச் சமுதாயத்தைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்தன.

பாரதியாருக்குப் பிறகு தோன்றிய மிகப் பெரிய கவிஞரான பாவேந்தர் பாரதிதாசன் சீர்திருத்தக் கருத்துக்களைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடிய சிங்கப்பூர் மலாயா இளைஞர்கள் ''பாரதிதாசன் பரம்பரை'' எனும் இயக்கத்தைக் கண்டனர்.

சமயக் கருத்துக்களை வலியுறுத்திக் கவிதைகள் எழுதி வந்த கவிஞர்கள் அவற்றை கைவிட்டு சீர்திருத்தக் கருத்துக்களை வலியுறுத்திக் கவிதைகள் புனையத் தொடங்கினர். சிறுகதை, நாடகம், கட்டுரை எழுத்தாளர்களும் அவ்வாறே செய்தனர். சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, கலப்புத் திருமணம், கடவுள் மறுப்பு, பொருந்தாத் திருமணம் ஆகியவற்றை எதிர்த்துப் படைப்புகள் பெருமளவில் வெளிவந்தன.

இந்தக் காலக் கட்டத்தில் படைப்புகளில் இடம்பெறும் மற்றொரு முக்கிய கரு, தோட்டப்பாட்டாளிகளின் துயரங்கள். தோட்டத்தின் தலைமை அலுவலர் (கிரானி என்று மலாயிலும் கிளர்க் என்று ஆங்கிலத்திலும் அழைக்கப்படுவார்) தோட்டத் தொழிலாளர்களைப் படுத்தும் பாட்டை எடுத்துரைக்க இயலாது.

நிர்வாகி எனும் சக்கரவர்த்தியின் கீழ் செயல்படும் குறுநில மன்னர்களைப்போல் அவர்கள் நடந்துகொண்டனர். அவர்களை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது. அந்தக் கொடுமைகளைச் சித்தரித்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள், நாடகங்கள் என அனைத்துக் கூறுகளிலும் படைப்புகள் வெளிவந்தன.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் இந்தக் குறுநில மன்னர்கள் அனைவரும் ஒன்று மலையாளிகளாக இருந் தார்கள் அல்லது யாழ்ப்பாணத் தமிழர்களாக இருந்தார்கள். தோட்டப் பாட்டாளிகள் அனைவரும் தென்னிந்தியாவைச் சேர்ந் தவர்கள். அவர்களில் பெரும்பான்மையோர் தமிழ்நாட்டிலிருந்து சென்ற தமிழர்கள்.

1942-1945 ஜப்பானியர் காலம்

மலாயாவையும் சிங்கப்பூரையும் ஜப்பானியர் ஆக்கிரமித்த மூவாண்டுக் காலம் தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு மற்றொரு தேக்க காலம். பல பத்திரிகைகள் வெளியீட்டை நிறுத்திக் கொண்டன. சில புதிய பத்திரிகைகள் வெளிவந்தன. ஆனால் அவை ஜப்பானியருக்கு ஆதரவாகவே செயல்பட்டன.

அதற்குக் காரணம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். வெள்ளையர்களை இந்தியாவிலிருந்து விரட்ட இந்திய தேசிய ராணுவத்தை அமைத்த அவர் பிரிட்டனின் எதிரியான ஜப்பானுக்கு நட்புக் கரம் நீட்டினார். இந்தக் காலக் கட்டத்தில் வெளியான படைப்புகள் பிரிட்டனை எதிர்த்தும் இந்திய விடுதலையை ஆதரித்தும் எழுதப்பட்டன.

1946-1960 சீர்திருத்தக் காலம்

மலாயாவிலும் சிங்கப்பூரிலும் ஜப்பானியர் சரணடைந்து மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகு முன்பு எழுதுவதை நிறுத்தியவர்கள் மீண்டும் எழுதத் தொடங்கினர். ஜப்பானியர்களின் கொடுங்கோல் ஆட்சி பற்றியும் அவர்களால் மக்கள் பட்ட துயரங்கள் குறித்தும் எழுதினர். குறிப்பாக சயாமின் (தற்போதைய தாய்லாந்து) மரண ரயில் பாதை என அழைக்கப்பட்ட ரயில் பாதை அமைப்பதற்குப் பலர் கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டதைப் பற்றி நிறைய படைப்புகள் வெளிவந்தன.

தந்தை பெரியார் 1954இல் மீண்டும் ஒருமுறை சிங்கப்பூர், மலாயா சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து சீர்திருத்தக் கருத்துக்கள் மீண்டும் படைப்புகளில் இடம்பிடித்தன.

இந்தக் காலக் கட்டத்தில் சிங்கப்பூர்த் தமிழர்கள் பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கினர்.

சிங்கப்பூர், மலாயாத் த்மிழர்களைக் கிரங்கடித்து, கிறுகிறுக்க வைத்து பைத்தியமாக அலைய வைத்து மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் இருவர். ஒருவர் பேரறிஞர்

அண்ணா. மற்றொருவர் அவருடைய இளவலும் தற்போதைய முதல்வருமான கலைஞர் மு. கருணாநிதி. அவர்களின் பேச்சிலும் எழுத்திலும் மயங்காதவர்கள் அப்போது இருந்திருக்க முடியாது.

பராசக்தி, மனோகரா, திரும்பிப்பார் போன்ற படங்களில் கலைஞரின் சாட்டையடி வசனங்களாலும் அண்ணாவின் ஓர் இரவு, வேலைக்காரி போன்ற படங்களில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்ற வசனங்களாலும் ஈர்க்கப்பட்ட இளைஞர் பட்டாளம், அவர்கள் பெயரில் எந்த நூல் வெளியிடப்பட்டாலும் வாங்குவதற்குத் தயாராய் இருந்தார்கள். தமிழை எப்படியெல்லாம் பயன்படுத்த முடியும் என்பதை அந்த இரு தலைவர்களும் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

இவர்களுக்கு அடுத்து ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியவர் என்று பேராசிரியர் மு.வ.வைச் சொல்லலாம். இந்த மூவரின் தாக்கத்தால் தங்கள் பெயர்களைத் தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டார்கள். தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர்களையே சூட்டினார்கள்.

இவர்களின் தாக்கமின்றி அன்றைய எழுத்தாளர்கள் எழுத முடியாத நிலை இருந்தது. திரைப்படத்தையும் நாடகத்தையும் திராவிட இயக்கக் கருத்துக்களைப் பரப்ப அண்ணாவும் கலைஞரும் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஐம்பதுகளும் அறுபதுகளும் சிங்கப்பூர் மலாயாவில் தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் பொற்காலம் என்று கூறலாம். தமிழவேள் கோ. சாரங்கபாணி 1952-ல் தமிழர் திருநாளைத் தோற்றுவித்துத் தமிழர்களின் ஒற்றுமைக்கு வழிகோலினார். சமயம் எதுவாக இருந்தாலும் தமிழர்கள் அனைவரையும் மொழியின் பெயரால் ஒன்றுபட வேண்டும் என்று அவர் விரும்பினார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்.

தமிழர் திருநாளின் தொடர்பில் ஆண்டுதோறும் பல இலக்கியப் போட்டிகளை அவர் நடத்தினார். தமிழ் முரசில் ''எழுத்தாளர் பேரவையை'' அவர் தொடங்கினார். அதில் உறுப்பினர்களாகச் சேருவோர் மாதம் ஒரு படைப்பாவது எழுத

வேண்டும். தமிழ் முரசில் வெளியிடப்படும் அந்தப் படைப்புகளின் பலமும் பலவீனமும் அலசி ஆராயப்படும்.

கோலாலம்பூரில் இருந்து வெளிவரும் தமிழ் நேசனில் பைரோஜி நாராயணனும் சுப. நாராயணனும் ''கதை வகுப்புகளை'' நடத்தினர்.

1952 முதல் 57 வரை தமிழ் நேசன் ஆசிரியராக இருந்த சிறந்த சிறுகதை எழுத்தாளர் கு. அழகிரிசாமி சிறுகதைக் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை மாதந்தோறும் நடத்தினார். அப்போது கோலாலம்பூரில் இருந்தும் வெளிவந்த தமிழ் முரசில், பின்னர் சுப. நாராயணன் ''ரசனை வகுப்புகளை'' நடத்தி சிறுகதை வளர்ச்சிக்கு உதவினார்.

சிங்கப்பூரில் வை. திருநாவுக்கரசு, முருகையன் ஆகியோர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பல முயற்சிகளை எடுத்தனர்.

தமிழ் முரசின் ஆசிரியர் தமிழவேள் கோ. சாரங்கபாணி, ''மாணவர் மணிமன்றம்'' எனும் சிறுவர் பகுதியைத் தொடங்கி மாணவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவித்தார்.

கவிவாணர் ஐ. உலகநாதன் ''மாதவி'' மாத இதழின் மூலம் பல இளம் கவிஞர்களை வளர்த்துவிட்டார். தற்போதைய முன்னணிக் கவிஞர்களில் பலர் அவருடைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1961-1980 குழப்பத்தைத் தொடர்ந்து நிலைத்தன்மை

மலேசியா உருவாவதற்கு முன் சிங்கப்பூரில் குழப்பம் நிலவியது. சிங்கப்பூர் மலேசியாவில் இணைய வேண்டுமா, வேண்டாமா என்பதே அந்தக் குழப்பம். இறுதியில் பொது வாக்கெடுப்பு நடத்தி சபா, சரவா ஆகியவற்றுடன் சிங்கப்பூரும் மலேசியாவில் இணைவது என்று முடிவு செய்யப்பட்டது.

அதன் பிறகு வெளிவந்த கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம் என அனைத்துப் படைப்புகளும் மலேசியச் சூழ்நிலையை எதிரொலிப்பவையாக இருந்தன.

ஆனால் 1965 ஆகஸ்ட் மாதம் 9ஆம் நாள் சிங்கப்பூர் மலேசியாவில் இருந்து வெளியேற்றப்பட்டபோது பெரும் பாலான எழுத்தாளர்கள் அதை நம்ப மறுத்தனர். பிரிவினை தற்காலிகம் என்றே அவர்கள் கருதினர். அந்தக் காலக் கட்டத்தில் இந்தக் குழப்பமான சூழ்நிலையை எதிரொலித்தன படைப்புகள்.

1970களில் தொடக்கத்தில்தான் பிரிவினை உண்மை யானது. நிரந்தரமானது என்று எழுத்தாளர்கள் நம்பினர். அதன் பிறகு குழப்பம் நீங்கி நிலைத்தன்மை ஏற்பட்டது. சிங்கப்பூரைப் போற்றி பல படைப்புகள் வெளிவந்தன. குறிப்பாகக் கவிதைகள் சிங்கப்பூர்ப் புகழ் பாடின. ''ஒரே மக்கள், ஒரே நாடு, ஒரே சிங்கப் பூர்'' எனும் அடிப்படையில் படைப்புகள் உருவாக்கப்பட்டன.

சிங்கப்பூரின் ஊழலற்ற, நேர்மையான அரசாங்கம், இனப் பாகுபாடின்றி திறமைக்கு முதலிடம் அளிக்கும் அரசாங்கத்தின் கொள்கை, தேசிய சேவை போன்ற கருக்கள் கையாளப்பட்டன. நாடு, சமூக உணர்வு, மனித நேயம், இயற்கை, மொழி ஆகிய வற்றைப் போற்றி எழுத்தாளர்களும் கவிஞர்களும் எழுதினர்.

எழுபதுகளின் பிற்பகுதியில் கவிதை இலக்கணத்தைக் கற்றுக்கொள்ள விரும்பாத அல்லது கற்றுக்கொள்ள முடியாத இளையர்கள் புதுக் கவிதைப் பக்கம் தங்கள் பார்வையைச் செலுத்தினர். ஆனால் அது மரபுக் கவிஞர்களிடம் இருந்து கடுமை யான எதிர்ப்பைச் சந்தித்தது. இன்றுகூட சில மரபுக் கவிஞர்கள் புதுக் கவிதையை ஏற்றுக் கொள்வதில்லை. அதனை எந்தப் பெயரில் வேண்டுமானாலும் அழைத்துக் கொள்ளுங்கள், ஆனால் கவிதை என்று சொல்லாதீர்கள் என்பது அவர்களின் வாதம். ஆனால் எதிர்ப்பை மீறி புதுக்கவிதை இன்று நிலைப்பெற்றுள்ளது.

1981-2008 புதிய வரவுகள் - புதிய சிந்தனைகள்

சிங்கப்பூர் அரசாங்கத்தின் கொள்கையில் 1980களுக்குப் பிறகு மாற்றம் ஏற்பட்டது. வெளிநாட்டுத் திறனாளர்கள் இல்லா மல் சிங்கப்பூர் வெற்றிபெற முடியாது என்று அரசாங்கம் நினைத் தது. அதனால் இந்தியர்கள் பெருமளவில் சிங்கப்பூருக்கு வேலை செய்ய வந்தனர்.

கடந்த காலத்தில் சிங்கப்பூருக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் படிப்பறிவு இல்லாத உடலுழைப்புத் தொழிலாளர்கள். ஆனால் இப்போது வந்தவர்கள் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், பொறியாளர்கள்.

அவ்வாறு வந்தவர்களில் படைப்பிலக்கியத்தில் ஆர்வம் கொண்ட தமிழர்கள் தங்கள் எழுத்துப் பணியைத் தொடர்ந்தனர். அவர்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்தாலும் சிங்கப்பூர்ப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட கருக்களை வைத்தே படைப்புகளை உருவாக்கினர்.

ஒவ்வொரு முக்கிய நிகழ்வும் கவிதை, கதை, கட்டுரை அல்லது நாடகத்தில் பதிவு செய்யப்பட்டது. பெருவிரைவுப் போக்குவரத்து (MRT), வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பிரச்சினைகள், அவர்கள் உள்ளூர்ப் பெண்கள் மீது கொண்ட காதல், சார்ஸ் நோய் எதிர்ப்புப் போராட்டம், 2003ஆம் ஆண்டின் நிதி நெருக்கடி, ஆட்குறைப்பு, மறுபயிற்சி இவற்றுடன் இயற்கை போன்றவை படைப்புகளில் இடம்பெற்றன.

களம்

சிங்கப்பூரில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் களமாக இருந்த ஊடகங்கள் குறித்துச் சொல்லாவிட்டால் நான் என் கடமையில் தவறியவனாகி விடுவேன். தமிழ் முரசு, தமிழ் மலர், தமிழ் நேசன், மலாயா நண்பன், சிங்கை நேசன், மாதவி, இந்தியன் மூவி நியூஸ், திரை ஒளி, மனோகரன் உள்ளிட்ட மாத, வார, நாளிதழ்களும் சிங்கப்பூர் வானொலி, தொலைக்காட்சியின் தமிழ்ப் பிரிவுகளும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி இருக்கின்றன. இன்று அனைத்து ஊடகங்களிலும் அந்த நிலை உள்ளதா என்பது கேள்விக் குறி!

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம்

1976ல் தொடங்கப்பட்ட சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தில் தற்போது சுமார் 80 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

ஆண்டுதோறும் இரண்டு பெரிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. ஒன்று முத்தமிழ் விழா. மற்றொன்று கவியரசு கண்ண தாசன் விழா.

முத்தமிழ் விழா

முத்தமிழ் விழாவை ஒட்டி, மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையிலான மாணவர்களுக்கு

மாறுவேடப் போட்டி,
கதை சொல்லும் போட்டி,
பேச்சுப் போட்டி,
இலக்கியப் புதிர்ப் போட்டி,
சிறுகதைப் போட்டி

ஆகியவை நடத்தப்பட்டுப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப் படுகின்றன. மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் மீது பற்றையும் ஈடுபாட்டையும் வளர்க்க இந்தப் போட்டிகள் உதவுகின்றன.

ஆண்டுதோறும் சுமார் 300 மாணவர்களுக்கு மேல் இந்தப் போட்டிகளில் பங்கேற்கின்றனர். பொது மக்களுக்கு சிறுகதை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறப்புரை ஆற்ற இந்தியாவிலிருந்து ஒரு தமிழறிஞர் ஆண்டுதோறும் வரவழைக்கப்படுகிறார்.

தமிழவேள் விருது

முத்தமிழ் விழாவின் முத்திரை நிகழ்வாக, உள்ளூர் எழுத்தாளர் ஒருவருக்கு ''தமிழவேள் விருது'' வழங்கப்படுகிறது. தமிழவேள் கோ. சாரங்கபாணி பெயரில் வழங்கப்படும் அவ் விருது நான்கு முதல் ஐந்து பவுன் எடையிலான தங்க விருதாகும். அதற்கான செலவை தற்போது ஆண்டுதோறும் எழுத்தாளர் கழகத்தின் புலவலரும் முஸ்தபா அவர்கள் வழங்கி வருகிறார்.

எழுத்தாளர் கழகத்தின் மதியுரைஞரும் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான முனைவர் சுப.

திண்ணப்பன் தலைமையிலான ஐவர் கொண்ட குழு ஒவ்வோர் ஆண்டும் கூடி விருதுக்கான எழுத்தாளரைத் தெரிவு செய்யும்.

கவியரசு கண்ணதாசன் விழா

ஆண்டுதோறும் நடத்தப்படும் கவியரசு கண்ணதாசன் விழா மற்றொரு முக்கிய நிகழ்ச்சியாகும். இதன் தொடர்பில் கண்ணதாசன் பாட்டுத் திறன் போட்டி இரு பிரிவுகளாக நடத்தப் படும். குடும்பத்துடன் அமர்ந்து கேட்க முடியாத பாடல்கள் புற்றீ சல்கள் போல் வெளிவந்து கொண்டுள்ள இன்றைய நிலையில் சாகா வரம் பெற்ற கண்ணதாசன் பாடல்களை இளையர்களுக்கு அறிமுகப்படுத்துவது நிகழ்ச்சியின் நோக்கம்.

கவிச்சோலை

எழுத்தாளர் கழகத்தின் மாதாந்திர நிகழ்ச்சியாகக் கவிச் சோலை நடத்தப்படுகிறது. பெக்கியோ சமூக மன்றத்தில் அதன் இந்திய நற்பணிக் குழுவுடன் இணைந்து இளம் கவிஞர்களை வளர்க்கும் நோக்கில் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் கொடுக்கப்படும் தலைப்புக்கு எழுதப்படும் சிறந்த மூன்று கவிதைகள் ஒவ்வொன்றுக்கும் 30 வெள்ளி ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிகளுடன் அவ்வப்போது மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் பயிலரங்குகள், பட்டி மன்றம், கவியரங்கம், நூல் வெளியீடு, கலந்துரையாடல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளையும் எழுத்தாளர் கழகம் ஏற்பாடு செய்கிறது.

நிறைவாக, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தின் வரலாறு சுமார் 120 ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்ற போதிலும் அது முறையாகவும் முழுமையாகவும் தொகுக்கப்படவோ பதிவு செய்யப்படவோ இல்லை. அந்த முயற்சியைச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் தொடங்க இருக்கிறது. இவ்வாண்டு தொடங்கி அடுத்த ஆண்டுகள் அந்தத் தொகுப்பை வெளியிடத் திட்டமிட்டுள் ளோம். அத்துடன் அனைத்துலகத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டை அடுத்த ஆண்டு அல்லது 2011ல் சிங்கப்பூரில் நடத்தவும் எழுத்தாளர் கழகம் திட்டமிட்டுள்ளது.

சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதையின் வரலாறும் வளர்ச்சியும் (1965-2008)

டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன்

தலைவர்
தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு
தேசியக் கல்விக்கழகம்
நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்.

உலக அரங்கில் தமிழ்மொழியை அதிகாரப்பூர்வமாகக் கொண்டுநிறுத்தும் நாடு சிங்கப்பூர். இது தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு சிறு தீவு. சிங்கப்பூரின் மக்கள் தொகை 4,01773 (தமிழ் முரசு 1.9.2000) ஆகும். இதில் 76.8% சீனர். 13.9% மலாய்க்காரர். 7.9% இந்தியர். 1.4% பிற இனத்தவர். (இந்தியருள் தமிழரே (65%) பெரும்பான்மையினர்) இந்தியருள் மலையாளிகள், தெலுங்கர் கள், குஜராத்திகள், பஞ்சாபியர், வங்காளிகள் முதலியோரும் அடங்குவர். இங்கு வாழ்வோர் பௌத்தம், தௌவிசம், கிறித் துவம், இஸ்லாம், இந்து, சீக்கியம் முதலிய சமயங்களைப் பின்பற்றுகின்றனர். சிங்கப்பூரின் தேசிய மொழி (National Language) *மலாய்மொழி. நாட்டின் அதிகாரத்துவ மொழிகளாகச்* (Official Languages) *சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகியவை விளங்குகின்றன. இருப்பினும் ஆங்கிலமே அலுவலக மொழி யாகக் கோலோச்சுகிறது; கல்வி நிலையங்களில் பயிற்று மொழி யாகவும் விளங்குகிறது.*

சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை 1887லிருந்து தனது வரலாற்றைக் கொண்டிருக்கிறது. இதனைச் சிங்கப்பூர்க் குடியரசாவதற்கு முன் உள்ள வரலாறு என்றும் குடியரசான பின் உள்ள வரலாறு என்றும் இருவகையாகக் கொள்ளலாம்.

இக்கட்டுரை குடியரசான பின்னுள்ள வரலாற்றைக் காண இருக்கிறது. சிங்கப்பூர் 9-8-1965இல் மலேயாவிலிருந்து பிரிந்து தனி குடியரசு நாடாயிற்று. அதற்குப் பின்னுள்ள வரலாற்றைக் இக்கட்டுரையில் காணலாம்.

1965-க்குப்பின் உள்ள வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்குமுன் தொடர்பு கருதி அதற்குக் கொஞ்ச காலத்திற்கு முன்னுள்ள வரலாற்றைச் சற்றே கண்ணோட்டம் இடுவது நல்லது.

தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்கள் 13-1-1952இல் தமிழர் திருநாளைத் தோற்றுவித்தார். அதையொட்டிப் பல போட்டிகள் நடத்திக் கவிதை, உள்ளிட்ட அனைத்து இலக்கிய வகைகளும் வளரக் களம் அமைத்துக் கொடுத்தார். தொடர்ந்து 19-4-1952இல் கந்தசாமி வாத்தியார் என்னும் சுப. நாராயணன் ரசனை வகுப்பை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து 5-7-1952இல் எழுத்தாளர் பேரவை தோன்றிற்று. இவை சிங்கையில் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் எழுத்தார்வம் பெறுவதற்கும் திறன் பெறுவதற்கும் பெரிதும் துணை புரிந்தன. இக்காலக்கட்டத்தில் (1953க்குப்பிறகு) சிங்கையில் ஐ. உலகநாதனால் தொடங்கப்பெற்ற 'மாதவி' என்னும் இலக்கிய ஏடு பல புது எழுத்தாளர்களின் படைப்புகள் உருவாவதற்கு வழி வகுத்தது. மாதவி இலக்கிய ஏடு தொடங்கக் காரணமாக இருந்த ஐ. உலகநாதன் சிங்கப்பூரில் தமிழ்மொழிபால் ஆர்வம்கொண்ட பலருக்கும் கவிதையின் அடிப்படைக் கூறுகளைச் சொல்லிக்கொடுத்து அவர்களைக் கவிதை எழுதத் தூண்டினார். இதன்வழி இவர் சிங்கையில் பலர் கவிதை எழுதக் காரணமாக விளங்கினார்.

1953இல் நீலகண்ட சாஸ்திரியார் வருகையும் சிங்கப்பூரில் இருந்த மலாயாப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத் துறை ஏற்படுத்த அவர் செய்த பரிந்துரையும் தமிழரிடையே கோபத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தின. அதனால் கோ. சாரங்கபாணி

தலைமையில் தமிழ் எங்கள் உயிர் என்னும் இயக்கத்தின் விளைவாக எழுத்தாளர்கள் கா. பெருமாள், முகிலன் முதலியோர் சிங்கப்பூர்க் கவிதை உலகிற்கு அறிமுகமானார்.

1959இல் சிங்கப்பூர் தன்னாட்சி பெற்றது. 1963க்கு முன்பு மலேசிய இணைப்புக்கான போராட்டமும் இணைப்புக்கான எண்ணமும் உச்சக் கட்டத்தில் இருந்தன. இதன் விளைவாக மலேசியப் பாடல்கள் பல எழுந்தன. 1963இல் மலாயாவுடன் சிங்கப்பூர் இணைந்தது; மலேசியா என்ற அமைப்பு பிறந்தது. பிறகு கம்யூனிச மிரட்டல் நிகழ்ச்சிகள் இன ஒருமைக்குப் பங்கம் விளைவித்தன. இக்காலக்கட்டத்தில் மலேசியா நாட்டுப்பற்றுப் பாடல்களை எழுத்தாளர்கள் எழுதினர். கவிஞர்கள் ஐ உலகநாதன், முத்தமிழன், முல்லைவாணன், க து மு இக்பால், கா. பெருமாள், ந. பழனிவேலு, முகிலன், அமலதாசன் முதலிய கவிஞர்கள் இத்தகைய பாடல்களை எழுதினர். இக்காலக்கட்டத்தில் தமிழ் முரசில் தொடங்கப்பெற்ற வெண்பாப் போட்டியும் தமிழர் திருநாள் போட்டியும் கவிஞர்களுக்கு ஊக்கம் ஊட்டிக் கவிதை எழுதத் தூண்டின. இதன் விளைவாக குமரி அ. பார்வதி, பெரிய சாமி, கா. கு இளந்தமிழன், பொய்கை வேங்கடாசலம், டி.கே. சீனிவாசன் முதலியோர் கவிதை எழுதத் தொடங்கினர்.

1963ஆம் ஆண்டு மே மாதம் சிங்கை வானொலியில் பணியாற்ற வந்த கா. பெருமாள் நூற்றுக்கணக்கான மலேசியப் பாடல்களை எழுதி ஒலிபரப்பினார். இது அன்றைய அரசியல் சூழலில் மக்களிடையே நாட்டுப்பற்றை ஊட்டியது. 1-3-64அன்று தி. செல்வகணபதியை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட 'தமிழ் மலர்' நாளேடு இந்தோனீசிய எதிர்ப்புணர்வுப் பாடல்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. ஐ. உலகநாதனைத் தலைவராகக் கொண்ட புதுப் போர்ப்பரணி பாடும் ஒரு குழு உருவாகிப் பல பாடல்களைப் பாடியது. இவ்வாறு சிங்கையில் குடியரசுக்கு முந்திய காலப்பகுதியில் தமிழ் இலக்கியப் படைப்புகள் தோன்றுவதற்குப் பல்வேறு அமைப்புகளும் பத்திரிகைகளும் படைப்பாளர்களும் காரணமாக இருந்தன எனலாம்.

1965இல் படைப்பாளர்கள் யாரும் எதிர்பாரா வண்ணம் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து 9-8-1965இல் குடியரசு

நாடாகியது. அதன் பின் படைப்பிலக்கியங்கள் பல்வேறு நிலைகளில் வளரத் தொடங்கின. அவற்றை இனிக் காணலாம்.

கவிதை இலக்கியம்

சிங்கப்பூர் குடியரசான பின்பு தோன்றிய கவிதை இலக்கியங்களை மரபுக் கவிதைகள், குழந்தைப் பாடல்கள், புதுக் கவிதைகள் எனப் பகுக்கலாம்.

மரபுக் கவிதைகள்

மரபுக் கவிதைகள் என்பது யாப்பு இலக்கணத்திற்கு உட்பட்டு நடக்கக் கூடிய கவிதைகளே ஆகும். சிங்கப்பூர் குடியரசான பின்பு கவிஞர்கள் தங்கள் படைப்புகளைத் தமிழ்முரசு, வானொலி வழியாகத் தந்தனர். தற்பொழுதும் அவ்வப்போது தந்து வருகின்றனர். இச்சாதனங்களின் வழி வந்த தம் படைப்புகளோடு புதிய படைப்புகளையும் சேர்த்துப் பல கவிஞர்கள் நூல்களாக வெளியிட்டனர். 1966ஆம் ஆண்டிலிருந்து 2008 வரை 83 மரபுக் கவிதை நூல்கள் சிங்கைக் கவிஞர்களாலும் பதிப்பாசிரியர்களாலும் வெளியிடப்பட்டுள்ளன. எண்பதுகளிலிருந்தே சிங்கப்பூரில் கவிதை நூல்கள் மிகுதியாக வெளி வந்துள்ளன. இதற்கு எண்பதுகளிலிருந்து சிங்கப்பூர் மிகச்சிறப்பான வளர்ச்சி அடைந்து பொருளாதாரத்தில் முன்னேறி வருவதும், இவ்வளர்ச்சியின் விளைவாகக் கவிஞர்கள் தங்கள் புத்தகங்களைத் தாங்களே பதிப்பிக்க முன்வந்ததும் காரணங்களாக உள்ளன. மேலும் சிங்கப்பூரின் 25வது ஆண்டுக் கொண்டாட்டத்தை ஒட்டி ஒரே நேரத்தில் 25 புத்தகங்களை வெளியிட்டதும் ஒரு காரணமாகும்.

இந்நூல்களுள் வானொலியில் முழுமையாக ஒலி பரப்பப்பட்ட பாடல்களின் தொகுப்பாக இரண்டு நூல்கள் உள்ளன. ஒன்று ''சிங்கப்பூர்ப் பாடல்கள்'' என்னும் தனிப் பாடல்களின் தொகுப்பு நூல். மற்றொன்று ''கண்ணம்மா'' என்னும் கதைப் பாடல் நூல். இவை முறையே சிங்கப்பூர் வானொலியிலும் மலேசிய வானொலியிலும் ஒலி பரப்பப் பட்டவை. ஏனைய நூல்களிலும் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இங்ஙனம் வானொலியிலும் செய்தித் தாளிலும் புத்தகங்

களிலும் வெளிவந்த மரபுக் கவிதைகள் பல; இக்கவிதைகளை இயற்றிய கவிஞர்களும் பலர். இனி இக்கவிஞர்களை வானொலி, செய்தித்தாள் இரண்டிலும் எழுதிய மூத்த கவிஞர்கள் என்றும் செய்தித்தாட்களில் மட்டும் எழுதிவரும் அண்மைக் காலக் கவிஞர்கள் என்றும் இரண்டு வகையாக பிரித்துக் காணலாம்.

மூத்த கவிஞர் வரிசையில் முதலில் இடம்பிடிப்பவர் ந. பழநிவேலு. இவர் சிங்கப்பூரின் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றியவர். சிங்கையின் தொடக்ககால இலக்கியவாதி யான இவர் சிங்கை மலேசிய, இந்திய செய்தித்தாள்களில் தம் கவிதைகளை வெளியிட்டவர். இன்றைய சிங்கப்பூர்க் கவிஞர் களுக்கு முன்னோடியாக விளங்குபவர். கவிதை மலர்கள் என்னும் நூலை (1947) தமிழ் முரசு வெளியீடாக வெளியிட்டவர். சமுதாயச் சிந்தனையும் சீர்திருத்தக் கருத்துகளும் கொண்டவர். கலியின் நலிவு என்னும் கவிதை நாடகத்தை 1981இல் இவர் வெளியிட்டார். சிங்கப்பூர் அரசாங்கம் இவருக்குக் கலாசார விருது வழங்கிச் சிறப்பித்தது.

சிங்கைக் கவிதை இலக்கிய முன்னோடிகளுள் ஒருவரான சிங்கை முகிலன் மனிதச்சுவடு (1975), நல்லமுடிவு (1989) முதலிய கவிதை நூல்களைப் படைத்துள்ளார். சமுதாயச் சிந்தனையும், மனிதநேயமும் இவரது கவிதைகளில் வெளிப்படும். சிங்கப்பூரின் அரசாங்கத்தால் வழங்கப்படும் கலாசார விருதை இவர் பெற்றுள்ளார்.

முல்லைவாணன் தனித்தமிழில் கவிதைகள் படைப்பதில் நாட்டம் உடையவர். பாவாணர் மீது பற்றுக்கொண்ட இவர் தமிழ ருவி என்னும் நூலை யாத்தவர். நடைமுறையில் பயன்படுத்தும் ஆங்கிலச் சொற்களைக் கூடத் தமது கவிதைகளில் பயன்படுத்தா மல் தனித்தமிழ்ச் சொற்களைக் கையாண்டவர்.

க.து.மு. இக்பால் இயற்கையைப் பாடுவதில் ஈடுபாடு கொண்ட கவிஞர். மரபுக் கவிதைகளின் வழி அறிமுகமாகிய இவர் இன்று புதுக்கவிதைகளையும் படைத்து வருகிறார். இதயமலர்கள் (1975), வானவர்கள் மண்ணில் இருக்கிறார்கள் (2005) முதலிய ஏழு

நூல்களைத் தமிழ் உலகிற்கு அளித்துள்ளார். முகவரிகள் இவரது நூல் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் உள்ளடக்கியது. சிங்கப்பூர்த் தேசியப் புத்தக மேம்பாட்டுக் கழக விருதையும், Mont Blanc விருதையும் தமிழவேள் விருதையும் பெற்ற பெருமை இவருக்குரியது. குடியரசில் இவரது கவிதை பெருவிரைவுப் போக்குவரத்துத் தொடர்வண்டியில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் பயணிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டது. சிங்கைக் குடியரசின் சிறந்த கவிஞர்களுள் இவர் ஒருவர்.

வே. பழநி என்னும் இயற்பெயர் கொண்ட முருகடியான் (முருகதாசன்) திருமுருகன் காவடிச்சிந்து (1975), சங்கமம் (2008) முதலிய 14 நூல்களை யாத்தவர். பக்தி உணர்வு விஞ்சி நிற்க இறையுணர்வுப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர். எளிமையும் சொல்லாட்சியும் இவரது கவிதைகளில் நாம் காணும் இயல்புகள். Mont Blanc விருது பெற்ற சிறப்பு இவருக்கு உண்டு.

சிங்கையின் தொடக்கக் காலத்திலிருந்தே கவிதை எழுதி வரும் ஜமீலா என்னும் ஷம்சுத்தீன் பிறமொழி இலக்கியங்களில் உள்ள கருத்துகளைத் தழுவிக் கவிதைகள் படைக்கக் கூடியவர். கவிதை, உரைநடை இரண்டும் ஒன்றையொன்று அடுத்தடுத்து வருவதை இவரது நூல்களில் காண முடியும். ஜமீலாவன் கவிதைகள் (1975), புரட்சிப்பெண் (1984), ஆசை (1984) முதலிய நூல்களை எழுதியுள்ளார்.

மலேசியாவில் இருந்த கா. பெருமாள் பணியின் நிமித்தமாகச் சிங்கை வந்து சிங்கை வானொலி நிலையத்தில் பணி புரிந்தார். இவர் சிங்கப்பூர் உணர்வை ஊட்டக்கூடிய தேசபக்திப் பாடல்களை நிரம்ப எழுதி வானொலியில் ஒலிபரப்பினார். இப்பாடல்களில் பல சிங்கப்பூர்ப் பாடல்கள் என்னும் பெயரில் வாரந்தோறும் கலாசார அமைச்சின் கண்ணோட்டம் இதழில் வெளிவந்தன. பிறகு 1979இல் நூல் வடிவம் கண்டன. இந்து சமயத்தைச் சார்ந்த இவர் இஸ்லாம் சமயக் கருத்துகளை உள்ளடக்கிய அன்பு என்னும் தத்துவம் (1978) என்னும் நூலை எழுதிச் சமய நல்லிணக்கத்தைப் பேணியுள்ளார். கட்டைவிரல் என்னும் கவிதை நாடகத்தையும் (1979) படைத்துள்ளார்.

மெ. இளமாறனின் கவிதைகளில் சமுதாயப் பார்வை வெளிப்படுவதைக் காணலாம். இறையுணர்வுப் பாடல்களையும் இவர் பாடி வருகிறார். 'பாத்தேறல்' என்னும் பட்டப்பெயரோடு அழைக்கப்படும் இவர் பாத்தேறல் (1981), முருகன் காவடிப் பாடல்கள் (1982), குமுறல் (2002) முதலிய ஏழு நூல்களை இயற்றி யுள்ளார்.

தமிழாசிரியராகப் பணியாற்றும் மு. தங்கராசன் ஒரு தலைப்பை ஒட்டி விளக்கமாகக் கவிதை எழுதுவதில் சிறந்து நிற் பவர். மாணவர்களுக்குக் கருத்துகளை விளக்கமாகச் சொல்லுவது போன்று இவரது கவிதைகள் அமையும். விருத்த யாப்பில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அணிகலன் (1985), வாகைப் பூக்கள் (2003) முதலிய ஒன்பது கவிதை நூல்களைப் படைத்துள்ளார். மேலும் இவர் சிறுகதை, நாடகம், மாணவர்களுக்கான கட்டுரை நூல்கள் என 11 நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூரில் மதிப்பு மிக்க விருதாகக் கருதப்படும் தென்கிழக்காசிய இலக்கிய விருது பெற்ற கவிஞர் பரணன் எதிரொலி (1982), தென்றல் (1985), தோணி (1985) முதலிய நான்கு நூல்களை யாத்துள்ளார். ஓசைநயத்துடன் கவித்துவம் விளங்கக் கவிதை படைக்கும் ஆற்றல் மிக்கவர். சமுதாயச் சிந்தனை, மொழி உணர்வு முதலியவற்றை இவரது கவிதைகளில் பரக்கக் காணலாம். தேசியப் புத்தக மேம்பாட்டுக் கழகம் வழங்கும் விருதைப் பெற்ற பெருமையும் இவருக்கு உண்டு.

இசையில் ஆர்வம் உடைய முத்துமாணிக்கம் தமது பாடல்கள் பலவற்றை இசைப்பாடல்களாக அமைத்துள்ளார். 'பாத்தூரல்' என்னும் பட்டம் பெற்றவர். தெய்வ பக்தி உடைய இவர், இந்து, இஸ்லாம், கிருஸ்துவம் ஆகிய இறை உணர்வுப் பாடல்களைப் படைத்துள்ளவர். சிங்கப்பூர்த் தெய்வங்களின் பக்திப் பாடல்கள் (1986), வணக்கம் சிங்கப்பூர் (2006) முதலிய 10 நூல்களை வெளியிட்டுள்ளார்.

இளந்தலைமுறைக் கவிஞர் மணிவண்ணன் முத்திரை (1984), என்னும் நூல் வெளியீட்டு வழித் தம்மைக் கவிதை

உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டவர். சிங்கைக் குடியரசின் தொடக்கக் காலத்திலிருந்து கவிதைகள் எழுதி வரும் சித பழனிச் சாமியும் செந்தமிழ்க் கவியமுது (1985) என்னும் நூலினைப் படைத் தவர்.

வெண்பாச் சிற்பி என்று புகழப்படும் வி. இக்குவனம் புலவர் இலக்கியமாக விளங்கும் சித்திர கவிதைகளைத் தற்போது சிங்கையில் படைத்து வரும் ஒரே கவிஞராவார். சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய அந்தாதி இலக்கியம் படைப்பதிலும் வல்லவர். இறையுணர்வுப் பாடல்களை மிகுதியும் படைப்பவர். கவிதைக் கதம்பம் (1990), கவிதைக் கனிகள் (1990), ஐங்கரன் போற்றி ஆயிரம் முதலிய 25 நூல்களை வெளியிட்டுள்ளார். வேங்கடவன் பள்ளி எழும் பா என்னும் ஒலி நாடாவையும் வெளியிட்டுள்ளார். இது சுப்ரபாதத்தின் மொழிபெயர்ப்பு ஆகும்.

அமரர் பெரி நீல பழநிவேலன் சிங்கையில் தொடர்ந்து கவிதை எழுதிவந்த கவிஞர்களுள் ஒருவர்; இருபத்தைந்து (1990), நெருங்கினால் சுடும் நெருப்பு (1995) முதலிய மூன்று நூல்களைத் தந்தவர்; பாலியல் உணர்வையும் பக்குவமாகப் பாடுபொருளாக்கு பவர். தமிழின் உணர்வு ஊட்டும் கவிதைகளும் இயற்றியுள்ளார்.

சமுதாயச் சிந்தனையோடும் துடிப்புடனும் கவிதைகள் யாக்கும் பெ. திருவேங்கடம் துளசிப்பூக்கள் (1990), சிறகுகள் (1998) முதலிய மூன்று நூல்களைத் தந்துள்ளார். தத்துவப் போக்கில் இவரது கவிதைகள் அமையும்.

தமிழாசிரியராகப் பணி புரிந்த அமரர் ஆ. பழனி திருமுரு கன் வெண்பா மாலை (1992), கவிதைப் பூக்கள் (1999) முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

ஏ.பி. சண்முகம் தாம் எழுதிய கவிதைகளைத் தொகுத்து 1993இல் கவிதைப்பாதை என்று நூல் வடிவம் காணச் செய்தார். சமுதாயச் சிந்தனை ஆங்காங்கு வெளிப்படுவதை இவர் கவிதை களில் காணலாம்.

தமிழாசிரியர் மு.அ. மசூது உணர்வுகளின் ஊர்வலம் (1995) என்னும் நூல் வெளியீட்டின் வழித் தம்மைக் கவிதை உலகத்திற்கு அறிமுகப்படுத்திக் கொண்டவர். புதிய மின்னல்கள் (1999), பிறைத் தோணி (1999) முதலிய நூல்களையும் இவர் படைத்துள்ளார்.

பெண் படைப்பாளரான பார்வதி பூபாலன் ஒரு தமிழாசிரியர். இவர் கவிதை இலக்கணம் கற்றவர். இளவேனிற் பூக்கள் (1997) என்னும் நூலின் வழித் தம் படைப்பாற்றலைக் கவிதை உலகிற்கு வெளிப்படுத்தியவர். பழந்தமிழ் இலக்கியச் செல்வாக்கு இவர் கவிதைகளில் மிகுதியாக உள்ளது.

மூத்த கவிஞர் வரிசையில் நெடுங்காலமாகப் பத்திரிக்கைகளில் எழுதி வருபவர் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் முன்னாள் தலைவர் கவிஞரேறு அமலதாசன் ஆவர். இவர் தமது கவிதைகளைத் தொகுத்தும் பகுத்தும் தமிழர் தலைவர் தமிழவேள் என்றும் புல்லாங்குழல் என்றும் இரு நூல்களாக 2004ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இவரது கவிதை பெருவிரைவுப் போக்குவரத்துத் தொடர்வண்டியில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் பயணிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

சிங்கைக் கவிஞர்களுள் தம் மரபுக் கவிதைகளை நூலாகப் பதிப்பித்தவர்களுள் நாரண புதுமைப்பித்தன், சுகுமாறன் ஆகியோரும் அடங்குவர். நூல்களாகப் பதிப்பிக்காமல் அவ்வப்போது செய்தித் தாட்களிலும் மேடைகளிலும் தம் கவிதைகளை வெளிப்படுத்துபவர்களுள் முதன்மையானவர் அமரர் மலர் மாணிக்கம் ஆவார். இவரைப் போன்று நூல்களாகத் தமது கவிதைகளை வெளியிடாமல் செய்தித்தாட்களிலோ மேடைகளிலோ கவிதை படைப்பவர்களுள் திரு சாந்தி, முத்தமிழன், அ. பெரியராமு, முதலியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிங்கப்பூர்க் குடியரசான பின்பு சிங்கப்பூருக்குப் பணி நிமித்தமாக வந்து சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகில் கலந்து தம் கவிதைப் படைப்புகளை வழங்கிச் சிங்கப்பூர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றிக் கொண்டிருப்பவர்கள் பலர். இவர்களுள் பலர் புதுக்கவிதை எழுதுபவர்கள்; சிலர் மரபுக்கவிதையும்

புதுக்கவிதையும் எழுதுபவர்களாக இருக்கின்றனர். இவர்களுள் சிலர் சிங்கப்பூர் இலக்கியக் குடும்பத்தில் தம் முத்திரையைப் பதித்துவிட்டுத் தம் தாயகத்திற்கே திரும்பியும் இருக்கிறார்கள்.

சிங்கப்பூர் மரபுக் கவிதைகளில் உள்ளடக்கம்

சிங்கப்பூர்க் கவிஞர்கள் தங்கள் பாடல்களுக்குத் தாங்களே விரும்பித் தேர்ந்தெடுத்த தலைப்புகளும் உண்டு. கவியரங்கம் முதலிய பொது நிகழ்ச்சிகளில் பாடுவதற்காக நிகழ்ச்சியை ஒட்டிக் கொடுக்கப்பட்ட தலைப்புகளும் உண்டு. வானொலி நிலையத்தார் தங்கள் நிகழ்ச்சிகளுக்காக வழங்கிய தலைப்புகளும் உண்டு. பொதுவாகக் கவிஞர்கள் தாங்களே விரும்பித் தேர்ந்தெடுத்த தலைப்புகளைவிட பிறவகைத் தலைப்புகளில் அமைந்த பாடல்களே மிகுதி. இந்தப் பாடல்களின் பாடுபொருள்களைச் சிங்கப்பூர், வரலாறு, தலைவர்கள்- தனிமனிதர்கள்-அமைப்புகள், குடும்பம், சமுதாயம், காதல், தமிழ்மொழி-தமிழர்-தமிழ்ப்பண்பு, இறையுணர்வு, விழாக்கள், தத்துவம், இயற்கை, அறிவுரை-அறவுரை, மனிதநேயம், தன்வாழ்க்கை, சிங்கப்பூர் அல்லாத பிறநாடுகள், பொது ஆகிய தலைப்புகளில் அடக்கலாம். இது அல்லாமல் கொடுக்கப்படும் தலைப்புக்கு ஏற்பத் தலைப்பு விளக்கப் பாடல்களும் உண்டு. சிங்கப்பூர்க் கவிஞர்களின் பாடுபொருள்களில் மிகுதியான இடத்தைப்பெற்றிருப்பது இறையுணர்வுப் பாடல்களும் காதல் பாடல்களுமே. இது கவிஞர்கள் இறையன்பிற்கும் மனித அன்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடியவர்கள் என்பதை உணர்த்துகிறது.

பொதுவாகச் சிங்கை மரபுக் கவிதைகள் இறையுணர்வு, காதல், சமூகம் முதலியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் படைக்கப்பட்டுள்ளன.

குழந்தை இலக்கியம்

சிங்கையில் முதல் தமிழ் இலக்கியம் தோன்றிச் சுமார் 50 ஆண்டுகள் கழித்தே குழந்தை இலக்கியத்தின் தோற்றம் உருவாயிற்று. சிங்கப்பூரில் குழந்தை இலக்கியமும் 'செய்தித்தாட்கள்', 'வானொலி' இவற்றின் மூலம்தான் வளர்ந்தது. சிங்கப்பூரில் குழந்தை இலக்கியங்கள் வெளிவரத் தமிழ் முரசு நாளிதழ்

முக்கியக் களமாய் அமைந்தது. இதனை ந. பழனிவேலுவின் கவிதை மலர்கள் என்னும் நூலிலிருந்து அறியலாம். இந்நூலில் இடம்பெற்றுள்ள 'தாய்' 'தந்தை' என்னும் குழந்தைப் பாடல்கள் 1937இல் செய்தித்தாளில் வெளியானவை என்னும் குறிப்பு உள்ளது. இதிலிருந்து சிங்கையில் 1937லிருந்து குழந்தைப் பாடல் கள் செய்தித்தாள்களின் வழித் தோன்றியதையும் அதற்கு வித் திட்டவர் ந. பழநிவேலு என்பதையும் அறியலாம்.

1952இல் தமிழ் முரசில் மாணவர் மணிமன்றம் என்ற தனிப்பகுதி வெளிவரத் தொடங்கியபின் அது நான்கு பக்கப் பகுதியாக 1953, ஜூலை 6ம் தேதி விரிவடைந்தது. வாரம் ஒரு முறை மாணவர்களுக்காக மலரும் இம்மலரில், பாலர் பள்ளி மாணவர் முதல் அனைத்து நிலை மாணவர்களும் பங்கு கொண்டு கதை, கவிதை, கட்டுரை எனப் பல வடிவங்களில் எழுதினர். இவை சிறுவர்களால் சிறுவர்களுக்காகவும் பெரியவர்களால் சிறு வர்களுக்காகவும் படைக்கப்பட்டவை. தமிழ் முரசு நாளேட்டைப் பின்பற்றி அக்காலத்தில் 'தமிழ் நேசன்', 'தமிழ் மலர்' ஆகிய செய்தித் தாட்களும் தமிழ் பயிலும் பள்ளி மாணவ மாணவி களுக்காக வாரந்தோறும் சிறுவர் பகுதியை வெளியிட்டு வந்தன. இதிலிருந்து சிங்கப்பூரின் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு மலேசியா சிங்கப்பூரில் தோன்றிய தமிழ் நாளேடுகளின் பங்கு அதிகம் என்பதை அறியலாம். ஓர் எழுத்தாளர் பரம்பரையையே மாணவர் மணிமன்ற மலர் தோற்றுவித்தது.

சிங்கப்பூர் வானொலி நிலையமும் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவு அளித்து எழுத்தாளர்களை ஊக்குவித்தது; அவர்களுக்குச் சன்மானமும் அளித்தது; ''பாடிப் பழகுவோம்'' என்னும் நிகழ்ச்சிவழிப் பல கவிதைகளைப் பொது மக்களுக்கு வழங்கியது. பல கவிதைகள் பிறப்பதற்கும், கவிஞர்கள் உருவாவதற்கும் வழிவகுத்தது. பல கவிதைகள் வானொலியில் ஒலி பரப்பப்பட்ட பின்னரே புத்தக வடிவம் பெற்றன.

சிங்கப்பூரில் மாணவர்களுக்காக 'மாணவன்' என்னும் இதழ் முதன்முதலில் தோன்றியதாக அ.மு. மெய்தீன் என்பார் குறிப்பிடுகிறார். அது தவிர அவ்விதழைப் பற்றி வேறு எந்தச் செய்தியையும் தெரிந்துகொள்ள முடியவில்லை. 'மாணவர் பூங்கா'

என்னும் இதழ் ஆர். துரைமாணிக்கம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஏப்ரல் 1972இல் சிங்கையில் வெளியானது. இதன் முதல் பிரதி தட்டச்சு செய்து வெளியிட்ட போதிலும் பின்னர் வந்த இதழ்கள் அச்சில் வந்தன. ஏப்ரல் 1972 முதல் நவம்பர் 1973வரை மொத்தம் எட்டு இதழ்கள் வெளியாயின. இவ்விதழ்களில் கட்டுரைகள், செய்திகள், பள்ளிப் பாடங்கள்-பயிற்சிகள், போட்டிகள், கேள்வி பதில் அங்கங்கள், கவிதைகள், புதிர்கள், துணுக்குகள் முதலியன இடம்பெற்றன. மாணவர்களின் தேவை அறிந்து, விருப்பம் அறிந்து வெளியிடப்பட்ட இதழ் இதுவாகும்.

சிங்கப்பூரில் ''தேன்கூடு'' என்னும் மாணாக்கர் திங்கள் இதழ் மாணவர் பூங்காவை அடுத்து ஏப்ரல் 1973இல் வெளியாயிற்று. இதன் சிறப்பாசிரியராக 'இராசையா கணபதியும்', ஆசிரியராக ''ச. சந்திரனும்'' இருந்தனர். மாணவர் பூங்காவைப் போல் இவ்விதழும் மாணவர்களுக்கு மிகவும் பயனளிக்கும் செய்திகளைத் தந்து உதவியது. மாணவர்களின் உள்ளம் கவரும் வண்ணம் ஒரு தரம் வாய்ந்த சிறுவர் இதழாக இது விளங்கியது. இத்தகு சிறப்புக்குரிய இவ்விதழ் ஆறு இதழ்களுக்குப் பின் வெளிவரவில்லை.

சிங்கப்பூரில் குழந்தைகளுக்கெனக் கவிதைகள் எழுதியவர்களே மிகுதியாக இருக்கிறார்களேயொழிய உரைநடையில் கதைகள் எழுதி நூல்களாக வெளியிட்டவர் யாரும் இல்லை. சிங்கப்பூர் எழுத்தாளர்களில் ஒருவரைத் தவிர (இரா. கிருட்டிணன்) ஏனைய எழுத்தாளர்கள் அனைவரும் கவிதைகளையே படைத்துள்ளனர். எனவே சிங்கப்பூர்க் குழந்தை இலக்கிய வளர்ச்சியைக் கவிதைகளை மையமாக வைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

குழந்தை இலக்கியப் பாடல்களாக வானொலியிலும் செய்தித் தாட்களிலும் வெளிவரச் செய்தவர்கள் பலராக இருந்தாலும் புத்தக வடிவில் அவற்றைக் கொண்டு வந்தவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் முல்லைவாணன் 1981-ஆம் ஆண்டு ஊஞ்சல், வீணை, கரும்பு என்னும் மூன்று நூல்களை ஒரே நேரத்தில் வெளியிட்டார். இருப்பினும் இப்பாடல்கள் சிறுவர்களின் நிலைக்கு ஏற்றதாக அமையவில்லை. கடினத்தன்மையோடும் தனித்தமிழ்

பற்றிய பிரச்சார நோக்கோடும் பாடல்கள் அமைந்துள்ளதால் சிறுவர்களைக் கவர்ந்திழுக்கவில்லை.

வானொலியில் 'பாடிப்பழகுவோம்' என்னும் நிகழ்ச்சியில் வெளியாகிய பாடல்களின் தொகுப்பை அன்னை என்னும் நூல்வடிவில் கதுமு இக்பால் 1984ஆம் ஆண்டு வெளியிட்டார். முருகதாசன் சிறுவர்களுக்கான பாடல்களைத் ''தேன்மலர்கள் சிறுவர் பாடல்கள்'' (1989) என்னும் பெயரில் வெளியிட்டார். தமிழில் இடம்பெற்ற பாடல்களுக்குப் பக்கத்திலேயே ஆங்கில மொழி பெயர்ப்பையும் கொடுத்திருந்தார். 'மழலை மருந்து' (1990) என்னும் பெயரில் மழலையருக்காக இவர் வெளியிட்ட பாடல் மழலையர் நிலைக்கு ஏற்றாற் போல் அமையவில்லை.

சிங்கையின் முன்னோடிக் கவிஞரான ந. பழநிவேலு பல காலக்கட்டத்திலும் எழுதிய பாடல்களின் தொகுப்பைப் ''பாப்பா பாடல்கள்'' (1990) என வெளியிட்டார். இவரின் பெரும்பான்மையான பாடல்கள் அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளதே தவிரக் குழந்தையின் மகிழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை. மெ. இளமாறன் குழந்தைகளின் மகிழ்ச்சியை முன்னிறுத்தித் ''திங்கள்-மாணவர் பாத் தொகுப்பு'' பனிக்கூழ் (1988) என்னும் இரு நூல்களைப் படங்களுடன் வெளியிட்டுள்ளார். இவரது பனிக்கூழ் நூலில் இடம் பெற்ற,

> **''பனிக்கூழ் பனிக்கூழ் பார் பார் பலவகைப்**
> **பழம்பால் கொக்கோ சேர்ந்தது சுவை சுவை!**
> **ஆங்கில மொழியில் ஐசுக்ரீம் என்பார்**
> **அதைநாம் தமிழில் பனிக்கூழ் என்போம்''**

என்னும் பாடலே நூலின் தலைப்பாகவும் அமைந்துள்ளது. இவர் தமது பாடல்களுக்கு இசை அமைத்து ஒலி நாடாக்களிலும் இசை வட்டுகளிலும் வெளியிட்டுள்ளார்.

பரணன் குழந்தைகளுக்காக இயற்றிய கவிதைத் தொகுதி ''மழை'' (1984) என்பதாகும். முத்துமாணிக்கம் ''பொன்வண்டு''

(1983), ''தேன்சிட்டு'' (1987), என்னும் நூல்களை வெளியிட்டுள்ளார். கதைப்பாடல்கள் ''பொன்வண்டு'' என்னும் நூலில் ஓரளவு இடம்பெற்றுள்ளன. பெரி நீல பழநிவேலன் செவ்வானம் சிறுவர் பாத்தொகுப்பு என்னும் நூலினைச் சிறுவர்களுக்காக யாத்துள்ளார். ஆ. பழனி ''முல்லைப் பூக்கள்'' சிறுவர் பாடல்கள் என்னும் நூலினை வெளியிட்டதுடன் இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடல்களை இசையமைத்து ஒலி நாடாவாகவும் தந்துள்ளார். பொதுவாகச் சிறுவர் பாடல்களில் அறிவுரைக் கூறுகளே மிகுதியாக உள்ளன. மன மகிழ்ச்சிக்கு அதிக இடமில்லை.

சிங்கப்பூர்க் குழந்தைப் பாடல்களின் உள்ளடக்கம்

சிங்கப்பூர்க் குழந்தைப் பாடல் தலைப்புகளில் பாடுபொருள்களைக் கீழ்வரும் பிரிவுகளாக அடக்கலாம். சிங்கப்பூர், உறவுகள், விளையாட்டு, சுற்றுப்புறம்-பொழுதுபோக்கு இடங்கள், உணவு, ஆடை அணிகலன்கள், உடல் உறுப்புகள், இறையுணர்வு-விழாக்கள், இயற்கை, உயிரினங்கள், அறிவுரை, மொழி, தலைவர்கள், அறிவியல், போக்குவரவுச் சாதனங்கள், பொது ஆகியவையாகும். பாடுபொருள்களில் பெரும்பான்மையான இடத்தைப் பெற்றிருப்பது குழந்தைகளுக்கு அறிவுரை கூறும் நோக்கில் அமைந்த அறிவுரை பாடல்களாகும். இது கவிஞர்கள் குழந்தைகளுக்கு அறிவுரை கூறுவதில் கூடுதல் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுகிறது. கதைப்பாடல்கள் சிலவும் கவிஞர்களால் எழுதப்பட்டுள்ளன.

புதுக்கவிதைகள்

தமிழகத்தில் பாரதியாரால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் புதுக்கவிதை வடிவங்கள் சிங்கப்பூரில் 1970களின் இறுதியில் முகிழ்த்தன. சிங்கப்பூர்த் தமிழ்க் கவிஞர்கள் புதுக்கவிதையில் நாட்டம் செலுத்தாததோடு புதுக்கவிதை முயற்சியை எதிர்த்தனர். தொடக்க நிலையில் மரபுக் கவிதைகளே செல்வாக்குப் பெற்றிருந்தன. பிற்காலத்தில் சிங்கையிலேயே பிறந்து வளர்ந்த இளையவர்கள் புதுக்கவிதை முயற்சிக்கு வித்திட்டனர்.

சிங்கப்பூரில் புதுக்கவிதையின் முன்னோடியாகத் திகழ்பவர் க. இளங்கோவன். 'விழிச்சன்னல்களின் பின்னாலிருந்து'

என்னும் இவரின் நூல் 1979ஆம் ஆண்டு வெளியாகியது. மௌனவதம் (1984), TRANS CREATIONS (1988) முதலிய நூல்களையும் இவர் படைத்துள்ளார். TRANS CREATIONS என்னும் இவரது நூலில் இவரே ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொடுத்துள்ளார். இவர் படிமக் கவிதைகளையும் இருண்மை மிக்க கவிதைகளையும் படைப்பதில் வல்லவர். நையாண்டி, எள்ளல் முதலிய சுவைகளைத் தம் கவிதை வழி தருபவர். சிங்கை அரசியல் பற்றியும் சமூகத்தைப் பற்றியும் துணிவாகச் சாடி இருப்பதை இவர் கவிதைகளில் காணலாம். ஆங்கில இலக்கியப் புலமையின் வெளிப்பாடும் பிறமொழிக் கலப்பும் இவரது கவிதைகளில் இடம்பெற்றுள்ளன.

புதுக்கவிதை ஆசிரியர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மற்றொருவர் க.து.மு. இக்பால். இவர் மரபுக் கவிதைகளோடு புதுக்கவிதைகளையும் படைத்து வருகிறார். தமது முகவரி என்னும் நூலில் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் இடம்பெறச் செய்துள்ளார். இவரைப் பின்பற்றிப் பிச்சினிக்காடு இளங்கோ புதுக்கவிதைகளைப் பாடி வருகிறார். இளந்தலை முறையைச் சார்ந்து இன்று புதுக்கவிதைகளைப் பலர் படைத்து வருகின்றனர். அமீருத்தீன், தாஜுதீன், முகமது அலி, அழகிய பாண்டியன், ராஜசேகர், ரவி, ஞானப் பிரகாசம் மோனிக்கா, சி. மீனாட்சி முதலியோரும் தங்கள் புதுக்கவிதைகளை நூல் வடிவம் பெறச் செய்துள்ளனர். லதா, ஷாகுல், ஹமீது, மலர்தமிழ், முதலியோரும் புதுக்கவிதைகள் படைத்து வருகின்றனர். 21ஆம் நூற்றாண்டில் புதுக்கவிதைகள் நூல்கள் வெளியிட்டு சிங்கப்பூர் இலக்கியத்திற்கு அணி செய்து இருப்பவர்கள் பலர். அவர்கள் லதா (தீவெளி 2003), பிச்சினிக்காடு இளங்கோ (இரவின் நரை 2004, பூமகள் 2005, உயிர்க்குடை 2005, காதல் தீ 2008, அரிநெல் 2008), பாலு மணிமாறன் (அவையில் பார்த்த முகம் 2005), வேதநாயகி செல்வம் (திரவிய தேசம்- தொகுப்பு நூல் 2006), ந.வீ. சத்தியமூர்த்தி (தூரத்து மின்னல் 2008), மலர்விழி இளங்கோவன் (கருவறைப் பூக்கள் 2008), ரஜீத் (பன்னீர்ப் பூக்கள் 2008), சி.த. அருணாசலம் (அகக்கண் திறப்போம் 2008), மாதங்கி (நாளை பிறந்து இன்று வந்தவள் 2008), ஆகியோர் ஆவர். ஞாயிறு தோறும் தமிழ்முரசில் பலரும் புதுக் கவிதைகள் எழுதி வருகின்றனர். வெளிநாட்டுத் தொழிலாளர்கள்

தங்கள் உணர்வு களைப் பிரதிபலிக்கும் பல செய்திகள் இவற்றில் இடம்பெறு கின்றன.

சிங்கப்பூர்ப் புதுக்கவிதைகளில் உள்ளடக்கம்

இன்றைய நிலையில் புதுக்கவிதையில் இடம்பெறாத பாடுபொருள்களே இல்லை என்னும் அளவில் பாடுபொருள்கள் அமைந்துள்ளன. மேலும் புதுக்கவிதை இடக்கரடக்கல் முதலிய இலக்கண வகைகளைக் கைக்கொள்ளாததால் கவிஞன் தான் விரும்பியவற்றை விரும்பியபடி பாடுகிறான். சிங்கப்பூர்ப் புதுக் கவிதைகளின் பாடுபொருளைச் சிங்கப்பூர், அரசியல், சமுதாயம், குடும்பம், தமிழ்மொழி, நட்பு, காதல், மன உளைச்சல், பிணியும் இறப்பும், இயற்கை, பிறநாடுகள் முதலிய பலவகையாகக் கவிஞர்கள் எடுத்துச் செல்கின்றனர்.

இதுவரை சிங்கப்பூர்க் கவிஞர்களைப் பற்றிப் பார்த்தோம் இனி அரசாங்க ஆதரவோடும் தனித்தும் வெளிவந்துள்ள தொகுப்பு நூல்களைக் காணலாம்.

தொகுப்பு நூல்கள்

தமிழர் அல்லாத ஏனைய இனத்தவர்கள் தமிழ் இலக் கியத்தை அறியும் வகையில் தமிழ் இலக்கியத் தொகுப்பு நூல்கள் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் அரசு ஆதரவுடன் வெளிவந் துள்ளன.

1985இல் வை திருநாவுக்கரசைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்பெற்ற The Poetry of Singapore என்னும் நூலும், 1995இல் நா. கோவிந்தசாமியைக் கொண்டு வெளியிடப் பெற்ற Journeys என்னும் நூலும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத் திற்குப் பெருமை சேர்க்கக் கூடிய நூல்கள் ஆகும். சிங்கப்பூர் பற்றிய பாடல்களைத் தொகுத்து The Centre for Arts ''நினைவுகளும் ஆசைகளும்'' (The Poetic Histroy of Singapore, Memories and Desires) என்னும் தலைப்பில் 1998இல் வெளியிடப்பட்டுள்ளது. இதே போன்ற ''சிங்கப்பூர்க் கவிதைகள் ஆயிரத்தாண்டுத் தொகுப்பு''

(Rhythms, A Singaporean Millennial Anthology Poetry) என்னும் நூலைத் தேசிய கலைகள் மன்றம் 2000 ஆம் வெளியிட்டுள்ளது. இந்நூல்கள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களால் தொகுத்து வெளியிடப்பெற்ற பெருமைக்குரியன. சிங்கப்பூரின் நான்கு அதிகாரத்துவ மொழிகளின் கவிதைகளும் இந்நூல்களில் இடம் பெற்றுள்ளன. இந்நூல்களில் இடம் பெற்ற அனைத்துக் கவிதை களும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் விளங்குவன.

தமிழவேள் சாரங்கபாணியைப் பற்றிப் பாராட்டி எழுதிய பல கவிதைகளை ஒன்று திரட்டிக் ''கவிக்குலம் போற்றும் தமிழ வேள்'' என்னும் தலைப்பில் மு. தங்கராசன் ஒரு நூலாக 1982இல் வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகக் கலைகள் மையத் தின் சார்பில் இப்பொழுது வெளிவரும் சிங்கா என்னும் இலக்கிய இதழ் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வகைகளான கவிதைகள், புதுக்கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள் ஆகியவற்றை ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டு வருகின்றது. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெறும். இவ்வாறு மேற்கண்ட தொகுப்பு நூல்களும் சிங்கா இதழும் தமிழர் அல்லாத மற்ற இனத்தவர் சிங்கப்பூரில் தமிழ் இலக்கியத்தைப் பற்றி அறிய வழி செய்கின்றன. இம்முயற்சிக்குப் பின்னணியாகவும் உறுதுணையாகவும் இருப்பவர் சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் ''எட்வின் தம்பு'' என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். இவரின் ஆதரவோடு முதன்முதலில் இம்மன்றத்தின் ஏற்பாட்டில் 2002ஆம் ஆண்டில் ஜனவரி 5, 6 தேதிகளில் மிகப்பெரிய அளவில் ''அனைத்துலக அரங்கில் தமிழ்'' என்னும் மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சிங்கப்பூர்க் கவிஞர்களின் கவிதைகள் சில ஆங்கிலமொழி பெயர்ப்புடன் பெருவிரைவுப் போக்குவரத்துக் கழகத் தொடர் வண்டியில் பலரின் பார்வையில் படும் வண்ணம் அவ்வப்போது வைக்கப்பட்டு வருகின்றன. இவற்றை மற்ற இனத்தவர்கள் படித்து வருகின்றனர்.

தமிழ்ப் படைப்புகளும் விருதுகளும்

தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையே வழங்கப்படும் ஒரு மதிப்புமிக்க விருது ''தென்கிழக்காசிய இலக்கிய விருந்து'' இது 1979லிருந்து தாய்லாந்து மன்னரால் வழங்கப்படுகிறது. தென் கிழக்காசியாவில் ஆசியான் கூட்டமைப்பில் உள்ள இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, புருணை, மியன்மார், கம்போடியா, லாவோஸ் முதலிய நாடுகளில் அதிகாரத்துவ மொழிகளில் படைக்கப்படும் தலைச்சிறந்த இலக்கியங்களுக்கு இவ்விருந்து வழங்கப்படுகிறது. தென்கிழக்காசியாவில் தமிழ்ப் படைப்பாளிகள் இவ்விருதைப் பெறுவதற்குச் சிங்கப்பூர் மட்டுமே வழிவகுக்கும் தகுதியுடையது. காரணம் சிங்கப்பூரே தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தமிழ் இலக்கியப் படைப்பாளர்களுக்கு இவ்விருது கிடைக்கிறது. இதுவரை இவ்விருதைப் பெற்றவர்கள் எழுவர். சிங்கை மா. இளங்கண்ணன் (1982), கவிஞர் பரணன் (1986), இராம. கண்ணபிரான் (1990), நா. கோவிந்தசாமி (1994), க. இளங்கோவன் (1997), கவிஞர் க.து.மு. இக்பால் (1994), திரு. பி. கிருஷ்ணன் (2005).

சிங்கப்பூர்க் கவிதை வளர்ச்சிக்கு வழிவிடும் அமைப்புகள்

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அரசாங்கம் தூண்டுகோலாக இருப்பதோடு, தனியார் அமைப்புகளும் நிறுவனங்களும் துணை நிற்கின்றன. அவ்வகையில் சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத்தின் கலை மையமும் (Centre for Arts) ஒரு பேனா தயாரிப்பு நிறுவனமும் (Mont Blanc) இணைந்து "Mont Blanc" விருது என்னும் விருதினை வழங்கி வருகின்றன.

'சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தால்' வழங்கப்படும் விருது 'தமிழவேள் விருது' சிங்கப்பூரில் பல ஆண்டுகளாக இலக்கியத் தொண்டாற்றிவரும் படைப்பாளர்களையும் ஆர்வலர்களையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு வழங்கப்படும் விருது ''தமிழவேள் விருது''. இவ்விருது 1988ஆம் ஆண்டு முதன் முதலில் தமிழ் முரசில் பணியாற்றி வந்த தமிழறிஞர் திரு. மெ.சிதம்பரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதோடு ''செந்தமிழ்க் கடல்'' என்னும் பட்டமும் வழங்கப்பட்டது. இவ்விருதை கவிதைக்காகச்

சிங்கை முகிலன், ஐ. உலகநாதன், ந. பழநிவேலு, க.து., மு. இக்பால், பாத்தூரல் முத்துமாணிக்கம், பாத்தேறல் இளமாறன், கவிஞரேறு அமலதாசன், பாத்தென்றல் முருகடியான் (முருகதாசன்), வெண்பாச்சிற்பி இக்குவனம் ஆகியோர் பெற்றுள்ளனர்.

விருதுகள் வழங்கவதோடு பல இலக்கிய நிகழ்ச்சிகளையும் சிறப்பாகச் சிங்கப்பூர் எழுத்தாளர் கழகம் நடத்தி வருகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, 1996ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் முத்தமிழ் விழா. 2002 மே மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாவது சனிக்கிழமையில் நடைபெறும் கவிச்சோலை, 2002 மே மாதம் முதல் 2004ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமைகளில் நடைபெற்ற இன்பத் தமிழ் நிகழ்ச்சிகள், 2007ஆம் ஆண்டு முதல் கவிச்சோலை நிகழ்ச்சியில் நடைபெற்று வரும் கவிதை இலக்கண வகுப்புகள், அதோடு கடந்த ஐந்து ஆண்டுகளாகக் கொடுக்கப்படும் தலைப்புக்கு எழுதிவரும் கவிதைகளில் தேர்வுசெய்யப்படும் முதல் மூன்று கவிதைகளுக்கு வழங்கப்படும் 30 வெள்ளி ரொக்கப் பரிசுகள். இது மட்டும் அல்லாமல் இந்திய நற்பணிக் குழுக்களுடன் இணைந்து பல பட்டிமன்றங்களையும் அவ்வப்போது கழகம் நடத்தி வருகின்றது. இலக்கிய ஆர்வத்தை வளர்க்கவும் தூண்டவும் பல போட்டிகளையும் நிகழ்ச்சிகளையும் ஒல்லும் வகையில் எல்லாம் கழகம் நடத்தி கவிதை இலக்கிய ஆர்வத்தைச் சிங்கப்பூரர்களிடையே வளர்த்து வருகிறது.

கவியரசு கண்ணதாசனுக்காக 1994, 1995, 1996 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் மிகப்பெரிய இலக்கிய நிகழ்ச்சியை எழுத்தாளர் கழகம் நடத்தி மக்களுக்குத் தமிழ்க்கவிதை ஆர்வத்தை நன்கு ஊட்டியது. இந்நிகழ்ச்சிக்கு மக்கள் கட்டணம் செலுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 2003ஆம் ஆண்டு முதல் கண்ணதாசன் விழா இலவசமாக நடத்தப்படுகிறது. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தை நினைவுகூர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளாக மக்கள் கவிஞர் மன்ற அமைப்பு விழா ஏற்பாடு செய்து வருகிறது.

தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொண்டு ஆற்றியவர்களைக் கௌரவிக்கும் பொருட்டு வழங்கப்படும் மற்றொரு

விருது ''தமிழர் திருநாள் விருது'' தமிழர் திருநாள் விழாக் குழுவின ரால் இவ்விருது வழங்கப்படுகிறது.

'கம்போங் கிளாம்' சமூக நிலையத்தைச் சார்ந்த 'இந்திய நற்பணிக்குழு' ''கடற்கரைச் சாலையில் கவிமாலை' என்னும் நிகழ்ச்சியை 24-6-2000ஆம் நாளிலிருந்து மாதம் ஒருமுறை நடத்தி வருகிறது. இதில் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொள்வதோடு அவ்வப்போது கொடுக்கப்படும் தலைப்புக்கு உடனுக்குடன் கவிதையும் எழுதி வருகின்றனர்.

ஊடக வளர்ச்சி

சிங்கப்பூரில் வானொலி, செய்தித்தாள் ஆகிய மக்கள் தொடர்பு தகவல் சாதனங்கள் 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

வானொலி

சிங்கப்பூரில் 1-6-1936லிருந்து வானொலி செயல்படத் தொடங்கியது. வானொலியில் பொதுமக்களுக்குப் பழைய இலக்கியங்களை எளிய முறையில் அறிமுகப்படுத்துவதும் புதிய இலக்கியப் படைப்புகளுக்கு ஊக்கம் ஊட்டுவதும் முதன்மைப் பணிகளாக அமைந்தன. சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப ராமாயணம், சீவகசிந்தமாமணி, பெருங்கதை, மனோன்மணீயம், நளவெண்பா முதலிய கவிதை இலக்கியங்கள் நாடக வடிவில் ஒலிபரப்பப் பெற்றன. இவ்வகையில் மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்கள் பல வாரங்கள் தொடர் நாடகமாக ஒலி பரப்பப்பட்டுப் பொதுமக்களின் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டின. ''நாளும் ஒரு குறள்'' திருக்குறளைப் பொதுமக்கள் சுவைக்க வழி வகுத்தது. கவிதைப் படைப்புகளை உருவாக்கும் பணியில் கவியரங்கம், பாடிப்பழகுவோம், சிறுகதைகள், நாடகங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் பெரும்பங்கு வகித்தன. வானொலியில் படைத்த கவிதைகள், கதைகள் பிற்காலத்தில் நூல் வடிவம் பெற்றன. இவற்றில் குறிப்பிடத் தக்கவை கவிஞர் பெருமாள் எழுதிய ''சிங்கப்பூர்ப் பாடல்கள்'', கவிஞர் க.து.மு. இக்பால் எழுதிய ''அன்னை'', கவிஞர் பரணின் ''மழை'' முதலிய கவிதை

நூல்கள் ஆகும். திரைப்பாடல் விமர்சனம் என்னும் ஒரு நிகழ்ச்சி திரைப்பாடல்களில் உள்ள இலக்கியச் சுவைகளை நன்கு நுகர உதவியது.

செய்தித்தாள்

செய்தித்தாள்களில் தமிழ்முரசு, தமிழ்மலர், தமிழ்நேசன், மலாயா நண்பன் முதலியவை கவிதை, சிறுகதை, நாவல், இலக்கியக் கட்டுரை முதலிய இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி உள்ளன. செய்தித்தாள் இல்லையேல் சிங்கப்பூரில் இலக்கிய வளர்ச்சி இல்லையென்று கூடக் கூறலாம். கவிஞர்கள் தம் கவிதைகளை வெளியிடுவதற்கு இவையே ஊடகமாக அமைந் தன. வெண்பாப் போட்டி, சிறுகதைப்போட்டி நடத்தியும், எழுத் தாளர் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தியும், சிறுகதை வகுப்பு நடத்தியும், திறனாய்வுக் கட்டுரைகள் எழுத ஊக்குவித்தும் செய்தித்தாள்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவின. சிறுவர்கள் இளையவர்கள் ஆகியோரிடம் இலக்கியப் படைப்பாற்றலை உருவாக்குவதற்காகத் தமிழ்முரசு மாணவர் மணிமன்றம் என்னும் பகுதியைத் தொடங்கி நடத்தி வருகிறது. இதன்வழி உருவாகிய எழுத்தாளர்கள் பலர். அவ்வப்போது வெளியிடப்பட்ட ஆண்டு மலர்கள் எழுத்தாளர்களின் கவிதை ஆர்வத்தைத் தூண்டிப் பல படைப்புகள் பிறக்கக் காரணமாயின.

சில கவிஞர்கள் தங்கள் பாடல்களைக் குறிப்பாகக் குழந்தைப் பாடல்களை இசைவட்டு மூலமாக வெளியிட்டுள்ள னர். சிறுவர்களுக்கு ஏற்ற கவிதைகளும் கணினி வட்டு மூலம் வெளிவந்துள்ளன.

வாய்மொழி இலக்கியம்

சிங்கப்பூர் படிப்படியாக நகர்மய வளர்ச்சி கண்டு வருவ தால் நாட்டுப்புறச் சூழல் மறைந்தும் மறக்கப்பட்டும் வரும் நிலையையே காண முடிகிறது. தொடக்கக் காலத்தில் குடியேறிய மக்கள் ஆங்காங்கே தெருக்கூத்துகள் நடத்தியும் சிந்து போன்ற நாட்டுப்புறப் பாடல்களைப் பாடியும் வந்திருக்க வாய்ப்புண்டு. குதிரைப் பந்தய லாவணி, புத்தர் ரேசுகோர்ஸ் றோட்டு வழிநடைச் சிந்து முதலிய நூல்கள் இவற்றை வலியுறுத்துகின்றன. மாரியம்

மன் கோவில் தீமிதித் திருவிழாவின் போது ஆண்டுதோறும் பெரிய எழுத்து மகாபாரதம் படிக்கப்பட்டு வருவது ஒரு வழக்கமாகப் பல்லாண்டுகளாக இருந்து வருகின்றது. மன்மதன் எரிந்த கட்சி எரியாத கட்சி லாவணிப்பாடல்களும் ஒரு காலத்தில் படப்பட்ட தாக அறிகிறோம்.

ஆய்வியல்

சிங்கப்பூரில் தமிழர் பேரவை, சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மன்றம், சிங்கப்பூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை முதலிய அமைப்புகள் ஆய்வரங்கம், கருத்தரங்கம் முதலியவற்றை நடத்திக்கொண்டு வருகின்றன. சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மன்றம் ஆண்டுதோறும் ஆய்வரங்குகளை நடத்தி வருகின்றது. இதன் வழிச் சிங்கப்பூர்க் கவிதைகள் ஆய்வுக்கு உள்ளாகின. தங்கள் கவிதை இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளைப் புத்தகங்களாக வெளியிட்டோர் டாக்டர் சுப. திண்ணப்பன், டாக்டர் அ. வீரமணி, டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், மீனாட்சி சபாபதி முதலியோர் ஆவர்.

ஆய்வாளர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் ஆய்வரங்கம் என்னும் பெயரில் ஒரு நூலாக வெளியிட்டுள்ளது. சிங்கப்பூரைச் சேராத வேற்று நாட்டவராகிய செவ்வியன் சிங்கப்பூரில் தமிழர் களும் தமிழும் என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூர் இலக்கியங்கள் குறித்து ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன் சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பிலக்கியம் ஒரு திறனாய்வு (1965-1990) என்னும் தலைப்பில் ஆய்வுசெய்து நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

சிங்கப்பூர் மலேசிய தமிழகப் புதுக்கவிதைகளை ஒப்பீட்டு நோக்கில் தியாகராஜன் ஓர் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

சிங்கப்பூரில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு என்னும் தலைப்பில்

திருமதி சீதாலட்சுமி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

சிங்கப்பூர் தேசிய நூலக வாரியம் பொதுவாகச் சிங்கப்பூர் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றிவருகிறது. சிங்கப்பூர்ப் படைப்பாளர்களின் நூல்களின் வெளியீட்டு விழாவிற்கு உதவி செய்தும் நூல்கள் வெளியிட ஊக்கம் கொடுத்தும் செய்தும் தம் பங்கை நூலகம் ஆற்றி வருகிறது. மேலும் அண்மையில் (2009) சிங்கப்பூர் கவிதை, சிறுகதை ஆகியவற்றின் அடைவை வெளியிட்டு ஆய்வு செய்வார்க்குப் பெரிதும் உதவி செய்துள்ளது.

முடிவுரை

சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதை சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றையும் வளர்ச்சியையும் கொண்டு விளங்கு கிறது. அது தான் கடந்துவந்த பாதையில் பல மைல்கற்களைத் தாண்டி வந்திருந்தாலும் இன்னும் அது கடக்கவேண்டிய தூரம் நீண்டு, பரந்து, விரிந்துள்ளது. அப்படி கடக்கின்றபோது கீழ்வரு வனவற்றை அது கவனத்தில் கொள்வது நல்லது.

சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகளில் பல, தற்காலத் தமிழகத் தமிழ்க்கவிதைகளின் சாயலிலேயே அமைந்துள்ளன. அவ்வாறல் லாமல் சமூகத்தைத் கூர்ந்து நோக்கிச் சிங்கப்பூருக்கே உரிய பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு இலக்கியம் படைப்பது நல்லது. தமிழ்ச் சமூகத்தின் பொதுத் தன்மைகளை மட்டும் சொல்லாது சிங்கப்பூர்த் தமிழ்ச்சமூகத்தின் தனித் தன்மைகளையும் குறிப்பிடுவதாக அமைவது மேலும் சிறப்பைச் சேர்க்கும்.

பணம் ஈட்டுவதையே முதன்மை நோக்கமாகக் கொண்ட சிங்கப்பூர்ச் சமுதாயத்தினரிடையே பரிவு உணர்வும், பகிர்வுப் பண்பும் மேலோங்கச் செய்வது இலக்கியப் படைப்பாளர்களின் கடமையாக இருத்தல் நலம் பயக்கும். எனவே, படைப்பாளர்கள் தமது கலைப்படைப்பின் மூலம் தனி மனிதனின் மன மாற்றத் திற்கும் அதன் மூலம் சமூக மாற்றத்திற்கும் துணை நிற்றல் நன்மை தருவதாக அமையும். இந்நிலை, சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப் பாளர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

வளப்பமும் மகிழ்ச்சியும் இருந்தும் போதிய முன்னேற்றம் அடையக் காத்திருக்கும் சமுதாயத்திற்காக ஆழ்ந்த பொறுப் புணர்வுடன் நான் எழுதுகிறேன் என்ற இலட்சிய உணர்வு சிங்கப் பூர்த் தமிழ் எழுத்தாளர்களிடம் நிலைகொள்ள வேண்டும். தனி மனித வாழ்க்கை மேம்பாட்டுக்கும் சமுதாய விழிப்புணர்வுக்கும் தேவையான உயரிய சிந்தனைகளைச் சிங்கைத் தமிழ் எழுத் தாளர்கள் தமது படைப்புகளின் மையமாகக் கொள்ளுதல் தமிழ்ச் சமுதாய மேம்பாட்டிற்கு வழிவிடும்.

துணைநூற் பட்டியல்

1. டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், சிங்கப்பூர் மரபுக் கவிதைகள் ஒரு திறனாய்வு, பாரதி புத்தகாலயம், இந்தியா (2001)

2. டாக்டர்சுப திண்ணப்பன்& டாக்டர்ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு ஒரு கண்ணோட்டம், கலைகள் மன்றம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம், சிங்கப்பூர். (2002)

3. டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், சிங்கப்பூர்த் தமிழ்க் குழந்தை இலக்கியம் திறனாய்வு, தமிழ்க்கலை அச்சகம், சிங்கப்பூர் (2006)

4. The arts (Journal), The Centre for the Arts, National University of Singapore (Apr/May 2003).

மலேசியாவில் தமிழ்ப் படங்கள்

மு. அன்புச்செல்வன்

திரைப்படங்களின் தாக்கம், உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் தமிழர்களுக்கு நிறையவே உண்டு. நடிகர்களுக்கு 'கட் அவுட்' வைத்து பாதபூஜை செய்வது, புதுப்படங்கள் திரையிடப்படும் முதல் நாளன்று பட்டாசுகள் கொளுத்தி விழா கொண்டாடுவது போன்ற தமிழ்நாட்டு ரசிகர்களின் வெறித்தன மான ரசிப்புத் தன்மை இல்லாமல், ஓரளவு கட்டுப்பாடான, அறிவுலகம் ஒத்துக் கொள்ளும்படியான நல்ல ரசனை உள்ளம் படைத்தவர்கள் மலேசியத் தமிழர்கள்.

அப்படியும் மலேசியத் தமிழ்த் திரைப்பட ரசிகர்களை ஒட்டுமொத்தமாகப் பாராட்டி விட முடியாது என்பது போல், 'ஆதிபராசக்தி' போன்ற பக்திப் படங்களின் வெளியீட்டின் போது பெண் ரசிகைகள் 'அருள்' வந்து ஆட்டம் போட்டிருக்கிறார்கள் என்பது கூட படத்தை இன்னும் கொஞ்ச நாள் வெற்றிகரமாய் ஓட்டுவதற்கு தியேட்டர்காரர்கள் செய்த வணிக உத்தி என்பதைப் பின்னால் தெரிந்து கொள்ள முடிகிறது. திரையில் நடிகை பத்மினி தீச்சட்டி ஏந்துவதைப் பார்த்து, பக்தியுடன் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் அப்பாவி ரசிகைகள் மலேசியாவில் கிடையாது. எது படம்? எது வாழ்க்கை? என்பது அவர்களுக்குத் தெரியும்.

இப்படி வாழ்க்கையையும், திரைப்படங்களையும் பகுத்துப் பார்க்கத் தெரிந்த மலேசியத் தமிழர்களின் திரைப்பட நுழைவு பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன், அவர்களை அந்தத் துறையில் ஈடுபடத் தூண்டிய சில செய்திகளை முன்னோட்டமாகக் கொஞ்சம் பார்க்கலாம்.

முதல் முயற்சி

தமிழகம் பிறப்பிடமாக இருந்தாலும், மலேசியாவை வாழ்விடமாகக் கொண்டு வானொலியில் குரல் கொடுப்பதற் கென்றே பிறப்பெடுத்த எம்.எஸ். சுவாமிநாதன், பாவேந்தர் பாரதி தாசனோடு சேர்ந்து தயாரித்த 'கவிகாளமேகம்' ஒரு மலேசியத் தமிழரின் முதல் திரைப்பட நுழைவுக்கு வழிகோலியது என்று கொள்ளலாம்.

கலைஞரின் திரைப்பட வசனங்கள், சக்தி கிருஷ்ண சாமியின் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' வசனங்களை ஐம்பது அறுபதுகளில் மேடைதோறும் பேசி மகிழ்ந்தார்கள் மலேசியக் கலைஞர்கள்.

தோற்றம், உச்சரிப்பு, நடிப்பு போன்றவற்றால் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் போன்றே இருந்த மலேசியக் கலைஞர் இரா.வெ. ஜெயராமன், 'சாக்ரடீஸ்' நாடகத்தை மேடைகளில் நடித்து ரசிகர்களிடம் பாராட்டைப் பெற்றார். கலைத்தாகம் மிகுதியும் கொண்ட அவர், அரசாங்க வேலை, குடும்பம் எல்லா வற்றையும் மறந்து - மறுத்து தமிழகம் போனார். பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடித்த 'பெரிய இடத்துப் பெண்' படத்தில் ஒரு முடிவெட்டும் தொழிலாளியாக வந்து, எம்ஜியாரின் குடுமியை வெட்டப் போவார். அந்தத் தகுதியைக் கூட ஒரு மலேசிய நடிகனுக்குக் கொடுக்க மறுத்த தமிழ்த் திரைப்பட உலகம், எம்ஜியாரின் குடுமியைக் கத்தரிக்கும் உரிமையை நாகேஸுக்குக் கொடுத்தது. அந்தக் கொஞ்சநேரக் காட்சியோடு, மலேசியாவின் ஒரு மகத்தான நடிப்புக் கலைஞரும் காணாமல் போனான்.

மலேசிய ரவிச்சந்திரன் / மலேசிய வாசுதேவன்

பின்னர் வந்த ஆண்டுகளில் மலேசியாவின் இரண்டு அற்புதமான கலைஞர்களைத் தமிழகம் தத்தெடுத்துக் கொண்டது. ஒருவர் படிக்கப் போனவர், மற்றவர் நடிக்கவே போனவர்.

படிக்கப் போன ரவிச்சந்திரனை, தமிழ்த் திரையுலகம் புதுமை இயக்குநர் ஸ்ரீதர் மூலம் இரு கரங்களையும் இறுக

அணைத்து, உச்சி முகர்ந்து, ஆசி கூறி வாய்ப்புக் கதவைத் திறந்து விட்டது. 'காதலிக்க நேரமில்லை'யில் அறிமுகமாகி, 'அநேகர் கள்', 'இதயக் கமலம்' என்று வெள்ளி விழாப் படங்கள், வெற்றிப் படங்களைக் கொடுத்து ரவிச்சந்திரன் புகழின் உச்சிக்குப் போனார். ஸ்ரீதர் தொடங்கி ஒ.சி. திருலோகசந்தர், எல்.வி. பிரசாத் என்று தமிழ்த் திரையுலகின் புகழ் பெற்ற பிரம்மாக்கள் ரவிச்சந்திரனை இயக்கினார்கள்.

முதல் மலேசியத் தயாரிப்பு 'இரத்தப்பேய்'

மலேசிய மேடை அரங்குகளில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு நாடகம் 'இரத்தப்பேய்'. பள்ளி ஆசிரியர், எழுத் தாளர், திரைநிலா என்கிற சினிமா பத்திரிகையின் ஆசிரியர் மு. பக்ருதீன், எழுதி இயக்கி 1967ஆம் ஆண்டு மேடையேற்றிய நாடகம் 'இரத்தப் பேய்'. தமிழகத்திலும் அதனை மேடையேற்றி, பின்னர் அதனைத் திரைப்படமாக்கினார் மு. பக்ருதீன். அந்த நாடகத்தில் நடிக்கப் போனவர் பின்னணிப் பாடகர் மலேசியா வாசுதேவன்.

நடிக்கப் போன வாசு வாய்ப்புத் தேடி அலைந்தார். 1968ஆம் ஆண்டு தொடங்கி 1978ஆம் ஆண்டு வரை நல்ல வாய்ப்பு அமையும் வரை படாத பாடுபட்டார். நடிக்கப் போன வாசுவுக்கு பின்னணி பாட வாய்ப்புக் கொடுத்தவர் எம்.எஸ். விஸ்வநாதன். டி.எம். சௌந்திரராஜன் தொடங்கி எஸ்.பி. பாலசுப்பிரமணியம் வரை தனித்துவமான கம்பீரக் குரலைக் கொண்ட மலேசியா வாசுதேவனை, சினிமா ரசிகனுக்கு நல்ல முறையில் அடையாளம் காட்டியவர் இசைஞானி இளையராஜா.

1978ஆம் ஆண்டு 'கிழக்கே போகும் ரயிலில்' 'கோயில் மணி ஓசை'யைப் பாடி, தமிழ்த் திரையுலகின் தவிர்க்க முடியாத சக்தியானார் மலேசிய வாசு.

நடிப்புக்கு ஒருவர், பின்னணி பாடுவதற்கு ஒருவர் என்று, இரண்டு மலேசிய மண்ணின் மைந்தர்களை அரவணைத்துக் கொண்டது கோடம்பாக்கம்.

இதே 'இரத்தப் பேய்' படத்தில் நாயகனாக நடித்த கலைக்குமாரின் நடிப்பை அங்கீகரித்த இயக்குநர் கே. பாலசந்தர், தம்முடைய 'அனுபவி ராஜா அனுபவி' படத்தில் நல்லதோர் பாத்திரத்தில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தார். காதல் மன்னன் ஜெமினி கணேசனைப் போன்ற தோற்றம், நல்ல உச்சரிப்பு, சிறந்த நடிப்பாற்றல் கொண்ட கலைக்குமாருக்கு வாய்ப்புகள் தேடி வந்தன.

மனைவி, இரண்டு பிள்ளைகள், குடும்பம், அரசாங்க வேலை போன்றவை கட்டிப் போட, நாடி வந்த நடிப்பு வாய்ப்பு களை உதறிவிட்டு, மலேசியா திரும்பி விட்டார் கலைக்குமார். ஒரு நல்ல நடிகனைத் தமிழ் சினிமா இழந்து விட்டது.

சோ. பரஞ்சோதி

இதே காலக்கட்டத்தில் நடிப்புப் பசி கொண்டு தமிழகம் போன இன்னொரு கலைஞர் சோ. பரஞ்சோதி. சுமார் ஐந்து ஆண்டுகள் அங்கே தங்கியிருந்த பரஞ்சோதி, இன்ன காட்சி இந்தப் பாத்திரம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத சுமார் பதினைந்து படங்களில் நடித்தார்.

'எச்சில் இரவுகள்', மல்லியம் ராஜகோபால் இயக்கத்தில் ஊர்வசி ஷோபா நடித்திருந்த 'ஊஞ்சலாடும் நெஞ்சங்கள்' படங் களில் ஓரளவு நல்ல நடிப்பு வாய்ப்புக் கிடைத்தது பரஞ்சோதிக்கு.

தேவைகள்

தமிழ்நாட்டின் எந்தத் தலைசிறந்த நடிகர்களுக்கும் இணை யாகச் சொல்லப்பட வேண்டிய திறமையான கலைஞர் மனு ராமலிங்கம், நடிப்பதற்காகவே தமிழகம் போனவர். தமக்கேயுரிய துணிச்சலுடன் தேவைகள் படம் தயாரித்தார். இசை ஷியாம், ஒளிப்பதிவு ஏ. வின்செண்ட், வசனம் இயக்கம் என்.எஸ். ரவிசங்கர் என்று எல்லாருமே தமிழ்நாட்டுக்காரர்கள். ஜெய்கணேஷ் -சுமித்ரா நாயகப் பாத்திரங்களில் நடித்திருந்தனர். நடிகவேள் எம்.ஆர்.ராதா, கே.ஏ. தங்கவேல் என்று பிரபலங்களெல்லாம் நடித்திருந்தனர். தயாரிப்பாளர் மனு ராமலிங்கம் இரண்டாவது நாயகன்.

கோடம்பாக்கத்தில் பிரபலங்களே சேர்ந்து நடிக்க யோசிக்கும் நடிகவேளின் தோளில் தாராளமாக கைபோட்டு நடித்திருந்தார். மனு ராமலிங்கம் நல்லதொரு கருத்தைச் சொன்னதற்காக 'தேவைகள்' படத்துக்குக் கிடைத்த லட்ச ரூபாயில் ஏற்பட்ட வருத்தத்தில் ராமலிங்கம் நாடு திரும்பி விட்டார். இன்னொரு நல்ல நடிகனையும் தமிழ்த் திரையுலகம் இழந்து போனது. 1978ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு தரமான படம் 'தேவைகள்'.

வெற்றி பெறா முயற்சிகள்

ஏராளமான மேடை நாடகங்கள், முப்பதுக்கும் மேற்பட்ட நாவல்கள் எழுதிய புகழ்பெற்ற நாவலாசிரியர் நா.ஆ. செங்குட்டுவன், மலேசிய தமிழக கூட்டுத் தயாரிப்பாக 'எனக்கோர் இடம் வேண்டும்' படம் எடுத்தார். இசையமைத்த யுவராஜனும், படத் தொகுப்பு, இயக்கத்தை மேற்கொண்டிருந்த கே. செல்வராஜும் தமிழ்நாட்டுக்காரர்கள். கதை வசனம், பாடல்கள் நா.ஆ. செங்குட்டுவன், ஒளிப்பதிவு மலேசியரான பெருமாள் ராமசாமி, பி. சுசீலா, சின்னக்குயில் சித்ரா பாட பாடல்களெல்லாம் பதிவாகின. என்ன காரணத்தினாலோ படம் வெளிவரவில்லை.

நா.ஒ. செங்குட்டுவன், 'தமிழ் முரசு' ஞாயிறு இதழில் தொடர்கதையாக எழுதிய 'துன்பங்கள் உறங்குவதில்லை' நாவலை அந்தத் தலைப்பிலேயே படமாகத் தயாரித்தார். கதை, வசனம், பாடல்கள் நா.ஒ. செங்குட்டுவன். ஒரு மாநிலத்தின் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த பிலிக்ஸ் அந்தோணி அரிதாரம் பூசி நாயகனாக நடித்தார். என்ன காரணத்தினாலோ படம் முழுமை பெறாமல் நின்று போனது.

விதவையின் காதலைச் சொன்ன ஒரு கதைக்கு ஸ்ரீதர், 'வெண்ணிறஆடை' என்று தலைப்பிட்டார். கதை முழுக்க சோகமே மேலோங்கியிருந்தாலும், தலைப்பு அமர்க்களமாய் இருக்கக் கூடாது என்று தேசிய நிலநிதி கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை நிர்வாகியாய் இருந்த பொருளாதார நிபுணர் திரு. முருகப்பன் சொன்னதை இனிமேல் படத் தயாரிப்பில் ஈடுபடப் போகும் கலைஞர்கள் கவனத்தில் கொள்ளலாம்.

மலேசியாவிலும் தமிழகத்திலும் படத் தயாரிப்புகளில் முயற்சி செய்து தோல்வி கண்ட மலேசியக் கலைஞர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்.

படத் தயாரிப்பில் மிகவும் நாட்டம் கொண்ட இன்னொரு நாவலாசிரியர் ப. சந்திரகாந்தம். அறுநூறுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்கள், நூற்றுக்கும் குறையாத தொடர்கதைகள் எழுதி அனுபவப்பட்ட ப. சந்திரகாந்தம், கதை, வசனம் எழுதி இயக்கித் தயாரித்த படம் 'அன்பே என் அன்பே'.

வானொலிக் கலைஞர் பி. சுப்பையா, தனலட்சுமி நாயகப் பாத்திரங்களில் நடித்திருந்த 'அன்பே என் அன்பே' பாதியிலேயே நின்று போனது.

மலேசியாவிலிருந்து தமிழகம் போய், ஒரு கூட்டு முயற்சியில் படம் தயாரித்து, அந்தப் படம் முழுமையடைந்த பின்னரும் வெளியீடுகாண முடியாத சோகத்தையும் நம் கலைஞர்கள் சுமந்திருந்தார்கள்.

இயக்குநர் கே. விஜயலிங்கம்

பிரபல தொலைக்காட்சி நாடகத்தயாரிப்பாளர், இயக்குநர் கே. விஜயசிங்கம், தமிழகம் போய் ஒரு படத்தை இயக்கினார். தமிழ்நாட்டுக்குள் தயாரித்த இப்படத்திற்கு கதை, வசனம் எழுதியவர் எஸ். வைரக்கண்ணு. ஒளிப்பதிவு செய்தவர் கே. கருணாநிதி. கதை, வசனம், ஒளிப்பதிவு, இயக்கம் நான்கையும் செய்தவர்கள் மலேசியத் தமிழர்கள்.

பதினைந்து லட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட இப்படத்தின் நாயகன் ராஜீவ். இன்றைய அம்மா நடிகை, 'தளபதி'யில் மம்முட்டிக்கு ஜோடியாக நடித்த கீதா நாயகி. மனோரமா, வெண்ணிறஆடை மூர்த்தி, செந்தில், சுபா என்று அன்றைய, பின்னாளைய புகழ்பெற்ற நட்சத்திரங்களெல்லாம் நடித்திருந்த 'நினைவுகள் மறைவதில்லை' என்கிற அந்தப் படம் தயாரிப்பாளரின் வெளியில் சொல்ல முடியாத சில நடவடிக்கைகளால் முழுமையடைந்தும் தியேட்டர்களுக்கு வர முடியாமல்

போயிற்று. இயக்குநர் சிகரம் கே. பாலசந்தர் பட பூஜையில் கலந்து கொண்டு, 1982-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'நினைவுகள் மறைவ தில்லை' நடிகை ஊர்வசிக்கு முதல் படம்.

இயக்குநர் கே. விஜயசிங்கம், அந்த நினைவுகள் இன்ன மும் மறையவில்லை என்கிறார். கவிஞர் வாலி, கவிப்பேரரசு வைரமுத்து, கவிஞர் முத்துலிங்கம் போன்ற திரையுலகப் பிரபலங் கள் பாடல்களை எழுதி, எம்.எஸ்.வி. ராஜா இசையமைத்து, இசைத்தட்டுகள் வெற்றிகரமாய் வெளியீடு கண்டன.

பிள்ளையார் சுழி போட்ட இயக்குநர் எம்.வி. ராமன்

இப்படி மலேசியாவிலும், தமிழகத்திலும் சுயமாகவும், கூட்டுத் தயாரிப்பாகவும் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்ட மலேசியத் தமிழர்களுக்கு தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டு இங்கே வெளிவரும் படங்களைப் பார்ப்பது மட்டுமே நம்முடைய கலைப்பணி. வாய்ப்புக் கிடைத்தால் அவர்களின் தயாரிப்பில் ஏதாவது சில்லறை வேடங்களில் நடிக்கலாம் என்றிருந்த கலைஞர் களுக்கு, மலேசியாவிலும் தமிழ்ப் படங்களை நாமே சுயமாகத் தயாரிக்கலாம் என்று வழிகாட்டியவர் தமிழக இயக்குநர் எம்.வி. ராமன்.

இவர் 'கொஞ்சும் சலங்கை'யை வண்ணத்தில் கொடுத்த பிரமாண்ட நாயகன்; 'அதிசயப்பெண்'ணைத் தமிழருக்குக் காட்டிய அற்புதமான மந்திரவாதி.

1964ஆம் ஆண்டு இயக்குநர் எம்.வி. ராமனின் உறவினர் நாதன் என்பவரின் பெயரில் பத்திரிகைகளில் ஓர் அறிவிப்பு வந்தது.

கோலாலம்பூரில் தமிழ்ப்படம் தயாரிப்பு நடிக்க .... கலைஞர்கள் தொடர்பு கொள்ளலாம் என்ற அந்த அறிவிப்பைப் பார்த்து விட்டு, வடக்கே பெர்லிசிலிருந்து தெற்கே ஜொகூர் வரை யிலுமான கலைஞர்கள் கோலாலம்பூரில் கூட்டம் கூட்டமாகக் கூடினர்.

மலேசியாவில் தமிழ்ப்படத் தயாரிப்பு என்கிற புதிய முயற்சி, படத்தை இயக்கப் போகிறார் அகில இந்தியாவிலும் புகழ் பெற்ற பிரபல இயக்குநர். பல இயற்றிப் படங்களை வழங்கிய ராமன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு நிறுவனம் என்பதில் மலேசியக் கலைஞர்கள் உற்சாகமடைந்தனர்.

இப்போது 'சோகோ' பேரங்காடி இருக்கும் பகுதியில் முன்பு இருந்த சீன இன்சூரன்ஸ் நிறுவனக் கட்டடத்தின் ஏழாவது மாடியில் படத் தயாரிப்புக்கான ஆலோசனைக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. மேஜர் வி.ஐ. ஜோசப், மனு ராமலிங்கம் போன்ற பிரபல கலைஞர்களெல்லாம் அதில் ஆர்வம் காட்டினர்.

அன்றைய 'மலைநாடு' ஞாயிறு இதழில் 'கட்டிலுக்கு வாயிருந்தால்' தொடர்கதையை எழுதி, வாசகர்களிடம் பிரபல மாகப் பேசப்பட்ட எழுத்தாளர் இரா. தமிழ்ச்செல்வன் கதை, வசனம் என்கிற அளவில் மலேசியாவில் தமிழ்ப்படத் தயாரிப்பு என்பது உறுதிப்பட்டது.

கூட்டங்கள், பேசாத வார்த்தைகள், நடிகர்கள் தேர்வு என்று மூன்று ஆண்டுக் காலம் தொடர்ந்த இந்த முயற்சி, படத்தில் நடிக்க வரும் நடிகர்கள் தயாரிப்புச் செலவுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு பிரச்சனை எழுந்த போது, மலேசியாவில் முதல் தமிழ்ப் படத் தயாரிப்பு என்பது பிசுபிசுத்துப் போயிற்று.

ஒரு திரைப்படம் தயாரிக்க வந்து, அது நிறைவேறாமல் வெறுங்கையுடன் சும்மா போகக் கூடாதென்று நினைத்த இயக்கு நர் எம்.வி. ராமன், ஒரு குறும்படம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அதில் வெற்றியும் பெற்றார்.

முதல் குறும்படம் 'சிவசக்தி'

மலேசியாவில் பிரபல நடனக் கலைஞர்களான சிவதாஸ்-வத்சலா தம்பதி நடிக்க 'சிவசக்தி' என்கிற நாட்டிய குறும்படம் தயாரானது. மலேசியாவில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்க் குறும் படம் என்று அதனைக் குறிப்பிடலாம்.

கோலாலம்பூர் செந்தால் பகுதியில் இருக்கும் ஆதி ஈஸ்வரன் (சிவன் கோயில்) கோயிலில் படப்பிடிப்பு நடந்தது. எம்.வி.ராமன் இயக்கினார். மலேசியாவின் புகழ்பெற்ற தொலைக்காட்சி நாடக இயக்குநர் கே. விஜயசிங்கம், பிரபல நகைச்சுவைக் கலைஞர் வி.ஐ. ஸ்டான்லி துணை இயக்குநர்களாகப் பணியாற்றினர். 'சிவசக்தி' படப்பிடிப்புக்கு அரசாங்க நிறுவனமான பிலிம் ஜெகராவின் சாதனங்கள் பயன்படுத்தப் பட்டன.

மலேசியாவில் நாமும் தமிழ்ப் படங்கள் தயாரிக்கலாம் என்கிற நம்பிக்கையைத் தோற்றுவித்தது 'சிவசக்தி'.

'திசைமாறிய பறவைகள்'

'சிவசக்தியைத் தொடர்ந்து தென் மாநிலமான ஜொகூர்யிகுவில் கிருஷ்ணன் என்பவர் 'திசை மாறிய பறவைகள்' என்கிற படத்தை எட்டு எம்.எம். திரையில் திரையிடும் வகையில் தயாரித்தார். ஜொகூர்யிரு டைமண்ட் ஜுபினி மண்டபத்தில் அந்தப் படம் திரையீடு கண்டது.

வரலாறு வடைத்த 'இரத்தப்பேய்'

இந்த நிலையில், மலேசிய மேடைகளில் வெற்றிகரமாய் நடத்தப்பட்ட தம்முடைய 'ரத்தப் பேய்' நாடகத்தைத் தமிழகத்தில் அரங்கேற்றப் போன முதல் புரொடக்ஷன்ஸ் மு. பக்ருதீன், அதனைப் படமாகத் தயாரித்தார். 'இரத்தப்பேய்' படத்தின் படப்பிடிப்பு தமிழகத்தில் நடைபெற்றாலும், கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு மு. பக்ருதீன், நடிப்புக் கலைஞர்கள் எல்லோரும் மலேசியர்கள்.

ஆக, ஒருமலேசிய முழு தமிழ்த் திரைப்படம் என்கிற முதல் மரியாதையை 'இரத்தப்பேய்'க்கு தாராளமாகக் கொடுக்கலாம்.

1968ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 'இரத்தப்பேய்', பெரும்பாலும் ஆங்கிலப் படங்களே திரையிடப்பட்டு வந்த கோலாலம்பூரின் மிகப் பெரிய திரையரங்கான பெடரல் தியேட்டரில் ஒரு

சிறப்புக் காட்சியாகவும், பின்னர் கோலாலம்பூர் கொலசியம் தியேட்டரில் ஒருவாரமும், தொடர்ந்து கோலாலம்பூர் சென்ட்ரல் தியேட்டரில் பத்து நாடகங்களுமாய் திரையிடப்பட்டு வரலாறு படைத்தது.

மலேசியாவுக்கு அண்டை நாடான சிங்கப்பூரில் முதல் பாகம் இரண்டாம் பாகம் என்று இரண்டு நாட்களுக்கு 'இரத்தப் பேய்' திரையிடப்பட்டது என்பது வரலாறு சொல்லும் செய்தி.

மலேசிய மண்வாசனையில் 'நான் ஒரு மலேசியன்'

'இரத்தப்பேய்' படத்துக்குப் பிறகு, மலேசிய மண் வாசனையுடன் வெளிவந்த படம் 'நான் ஒரு மலேசியன்'

ஏராளமான மலாய்ப் படங்களையும், தொலைக்காட்சித் தொடர்களையும் தயாரித்து இயக்கிய சுகன் பஞ்சாட்சரத்தின் பெர்ஜெயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் வெளிவந்த 'நான் ஒரு மலேசியன்' படத்தை முழு முதல் மலேசியத் தமிழ்ப்படம் என்று கொள்ளலாம்.

ஆற்றல்மிக்க வானொலி நாடக எழுத்தாளர் எஸ். வைரக் கண்ணு கதை, வசனம் எழுதி, துணை இயக்குநராகவும் பணி யாற்றினார்.

நல்ல கதை, சுகமான வசனம், திறமையான படப்பிடிப்பு, வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த நகைச்சுவை என்று தரமாக அமைந்த 'நான் ஒரு மலேசியன்' படத்தைத் தயாரித்து, இயக்கிய தோடு தம் பணியை முடித்துக் கொண்டு சுகன் நாயகப் பாத்திரத் திலும் நடிக்காமல் இருந்திருந்தால் இன்னும் வெற்றி பெற்றி ருக்கலாம்.

தம்முடைய பெரிய உடலை வைத்துக் கொண்டு வில்லன் களுடன் நாயகன் சுகன் சண்டை போட்டதையும், நாயகியுடன் டூயட் பாடியதையும் ரசிகர்களால் ஜீரணிக்க முடியவில்லை. நாயகத் தோற்றம் கொண்ட இளைஞர் க. குணசேகரன், பயங்கர மீசை, முரட்டுக் கிருதாவுடன் வில்லனாக நடித்ததையும் ஏற்றுக்

கொள்ள ரசிகர்கள் ரொம்பவும் சிரமப்பட்டார்கள். தவிரவும் 'நான் ஒரு மலேசியன்' என்பதைக் கதையின் உள்ளீடாகச் சொல்லி, படத்திற்கு வேறு ஒரு தலைப்பை வைத்திருக்கலாம்.

மலாய் ரசிகர்களிடம் அபாரமான செல்வாக்கைப் பெற்றிருக்கும் சுகன் தயாரித்து, இயக்கியிருந்த 'பெரம்புவான்... ஸ்திரீ... டான்' (பெண் மனைவி மற்றும்) என்கிற மலாய்ப்படம் மலேசியத் திரையரங்குகளில் அதிக நாட்கள் ஓடி வரலாறு படைத்த படம் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

தொடரும் முயற்சிகள்

இந்த ஈராயிரம் ஆண்டில் இளைஞர்கள் தமிழ்ப்படத் தயாரிப்புகளில் தீவிரமாக ஈடுபாடு காட்டத் தொடங்கிவிட்டார்கள். கதை, வசனம், இயக்கம், நடிப்பு என்று அவர்கள் ஒரு புதிய முயற்சியில் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டார்கள்.

'பென்சில்'

2006ஆம் ஆண்டு சுபாஷ் என்கிற இளைஞர் கதை, வசனம் எழுதி இயக்கி நாயகனாகவும் நடித்திருந்த 'பென்சில்' மலேசியத் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிய படமாகும்.

புதுமையான கதையமைப்பு, யதார்த்தமான நடிப்பு என்ற வகையில் 'பென்சில்' நல்ல வரவேற்பைப் பெற்றது.

'திவ்யா ஐ லவ் யூ'

'இரத்தப் பேய்' படத்தில் நடிக்க தமிழகம் போய், அங்கே பிரபலமாகி விட்ட மலேசிய வாசுதேவன் எழுதி, இயக்கி, இசையமைத்த படம் 'திவ்யா ஐ லவ் யூ' பிரபல தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளரான யூனிசன் புரொடக்ஷன்ஸ் ராஜசேகரன் சுந்தரம் தயாரித்து, நல்லதொரு பாத்திரத்தில் நடித்தும் இருந்தார்.

பூவேந்திரன்- சாந்தினி நாயகப் பாத்திரங்கள் ஏந்திநின்ற இப்படத்தில் அன்புள்ள மாறன், ப. மகேஸ்வரன், சாந்தி சின்னையா, மலர்விழி சண்முகம், சுருளி நடராஜன், சிவாஜிராஜா

போன்ற மலேசியத் தமிழ் ரசிகர்களுக்கு நன்கு அறிமுகமான கலைஞர்கள் நடித்திருந்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த கண்மணி ராஜா முகமட் வசனம் எழுதியிருந்தார். தமிழகத்தில் நீண்ட காலம் வாழ்ந்து விட்டதால், அந்த மக்களின் ஆங்கில மோகம் மலேசியா வாசுவையும் தாக்கியதன் விளைவு 'திவ்யா, ஐ லவ் யூ' என்கிற ஆங்கிலத் தலைப்பைப் படத் தலைப்பாகச் சூட்டுவதற்கு அவரைத் தூண்டியிருக்கலாம். இருந்தாலும் 'திவ்யா நான் உன்னை விரும்புகிறேன்' என்றோ, 'திவ்யா நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்றோ படத்திற்கு நல்ல தமிழில் தலைப்பிட்டிருந்தால், 'திவ்யா ஐ லவ் யூ' போல் அத்தனை கவர்ச்சியாய் இருந்திருக்காது.

இன்னொரு படமும் தயாரிக்கலாம் போல இருக்கிறதே என்று தயாரிப்பாளருக்கு ஊக்குவிப்பையும், தெம்பையும் கொடுத்த படம் 'திவ்யா, ஐ லவ் யூ'

'ஆத்மா'

2007ஆம் ஆண்டு வெளிவந்த படம் 'ஆத்மா' வித்தியாசமான கதையமைப்பில் தயாரிக்கப்பட்டு, தியேட்டரில் படம் பார்க்கப் போன ரசிகர்களைப் பயமுறுத்திய நல்லதொரு திகில் படம்.

மலாய் ரசிகர்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்ற நாகா என்கிற நாகராஜ் இயக்கியிருந்தார். அனுபவமிக்க இயக்குநர். சசிதரன் ஜாஸ்மின் நாயகப் பாத்திரங்களில் நடித்திருந்த 'ஆத்மா'வில் ஜெயஸ்ரீ நல்லதொரு பாத்திரத்தில் வந்து ரசிகர்களைக் கவர்ந்தார். பிரகாஷ் கதை, வசனம் எழுதியிருந்த படம் 'ஆத்மா'.

'செம்மண் சாலை'

மலேசியாவின் தோட்டப்புற வாழ்க்கையைச் சொன்ன அருமையான படம் 'செம்மண் சாலை'. ஏதோ ஒரு தமிழ்நாட்டுப் படம் போல், தியேட்டர்களில் வெற்றிகரமாய் ஓடி, பிற தயாரிப்பாளர்களுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டிய படம் 'செம்மண் சாலை'.

‘சலங்கை’

தீபக் மேனன் இயக்கி, சரண் நாயகனாக நடித்திருந்த படம் ‘சலங்கை’.

விக்ரன்

ஒரு நாயகனுக்குரிய நல்ல தோற்றமும், நடிப்புத் திறமையும் கொண்ட ஸ்ரீகுமார் நாயகனாகவும், தொடர்ந்து படங்களில் நாயகியாகவும் நடித்து வரும் அழகிய முகவெட்டு கொண்ட சாந்தினி நாயகியாகவும் நடித்த படம் ‘விக்ரன்’ ஸ்ரீகுமாரே கதை, வசனமும் எழுதியிருந்தார். ரமேஷ் இயக்கியிருந்தார். ஒளிப்பதிவு எம்.ஜி. குமார்.

‘விக்ர’னும் ஒரு வித்யாசமான படம்தான்.

‘எதிர்காலம்’

‘எதிர்காலம்’ நல்ல முறையில் பேசப்பட்ட ஒரு அருமை யான படம். இந்தப் படத்திற்கும் கதை, வசனம் எழுதி நாயகப் பாத்திரத்தில் நடித்திருந்தார் ஸ்ரீகுமார். நாயகி ஷீலா. ஒளிப்பதிவு செய்து படத்தை இயக்கியிருந்தவர் குமரேசன். ‘எதிர்காலம்’ பெரிதும் பேசப்பட்ட ஒரு மலேசியத் தயாரிப்பு.

நாகா என்கிற நாகராஜ்

நாகா என்கிற நாகராஜ் இயக்கியிருந்த மற்றொரு வெற்றிப் படம் ‘உருவம்’ மலேசியக் கலைஞர்கள் தங்களுடைய படைப் புக்களுக்குத் தலைப்பிடுவதில் மிகவும் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டார்கள். ‘உருவம்’ படத்தின் நாயகன் அரிதாஸ். துடிப்புமிக்க, அனுபவம் வாய்ந்த நடிகை ஜாஸ்மின் இதன் நாயகி. குமரேசனும் நடித்திருந்தார்.

‘யாந்த்ரா

கொஞ்சம் குழப்பமான தலைப்பைக் கொண்ட படம் யாந்த்ரா. கதை, வசனம் எழுதி, தயாரித்து இயக்கியவர் ஆனந்த். இதிலும் அரிதாஸ், ஜாஸ்மின் நாயகப் பாத்திரங்களில் நடித்திருந் தனர்.

தமிழ்நாட்டிலும் பேசப்படும் பெண்ஜி என்கிற காண்டீபன், சிவபாலன், சசிகுமார் நடித்திருந்தனர். 'யாந்த்ரா' கோலாலம்பூர் பெடரல் தியேட்டரில் அதிக நாட்கள் ஓடிய படம்.

நகைச்சுவைப்படம் 'நீயா? நானா?'

மலேசிய நாடக உலகில் பல ஊர்களில், பல நாட்கள் வெற்றிகரமாய் அரங்கேறிய நாடகம் 'நீயா? நானா?' செவ்விசைச் சித்தர் ரை. சண்முகம் எழுதி இயக்கிய இந்த நாடகத்தைப் பார்த்து ரசிகர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். நாடகத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்தார்கள்.

மேடையில் வெற்றி பெற்ற 'நீயா நானா?' நாடகத்தை ரெ. சண்முகத்தின் மகன் தர்மாவதி பின்னர் திரைப்படமாக இயக்கியிருந்தார்.

குழல் கேசவன். மலர்விழி சண்முகம், நீ சண்முகநாதன், ஜெயசுதா போன்றோர் நடித்திருந்த நல்லதொரு நகைச்சுவைப் படம் 'நீயா நானா?'

'மஞ்சரி'

திரைப்படங்களில் நுணுக்கங்கள் தெரிந்த என்.எஸ். கிருஷ்ணா தயாரித்து இயக்கியிருந்த படம் 'மஞ்சரி' முருகன், சசிதரன், குமரேசன், ஜாஸ்மின் போன்றோர் நடித்திருந்தனர். கற்பகவல்லியின் கதைக்கு, காஞ்சி காசிநாதன் வசனம் எழுதியிருந்தார்.

மலேசியத் தமிழ்ப்படத் தயாரிப்புக்களுக்கு உயிர் கொடுத்த ஒரு படம் என்று 'உயிர்' படத்தைச் சொல்லலாம்.

நல்ல நடனக்கலைஞரான மணிமாறன் இயக்கத்தில் ஒரு படம் வெளிவந்திருக்கிறது. வானொலிக் கலைஞர் அன்புள்ள மாறன் இப்போது 'செந்தில் வேல் காக்க' படத்தைப் பெரிய நம்பிக்கையுடன் தயாரித்துக் கொண்டிருக்கிறார். ஆறுகோடி தமிழ் பேசும் மக்கள் வாழும் தமிழ்நாட்டில் 1931ஆம் ஆண்டு தொடங்கி, இந்த 2009ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்ட தமிழ்ப் படங்களின்

எண்ணிக்கை ஏறத்தாழ ஏழாயிரமாக இருக்கும் என்று பிலிம்நியூஸ் ஆனந்தன் ஒரு குறிப்புக் காட்டுகிறார்.

இருபது லட்சத்திற்கும் குறைவான தமிழர்கள் 1964ஆம் ஆண்டு பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கிய திரைப்படங் களின் தயாரிப்பு முயற்சிகளில் இன்றுவரை உருவானவை இருபதுக்கும் குறைவுதான் என்பதில் யாருக்கும் வருத்தம் இருக்க முடியாது.

தங்களின் வாழ்க்கையின் ஆதாரமாக எல்லாத் துறை களிலும் தமிழ்நாட்டிற்கு முன்னுரிமை கொடுத்து விட்டதால், தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மண்ணைப் பிரதிபலிக்கும் திரைப்படத் தயாரிப்புத் துறையிலும் அவர்கள் தங்களின் சுகத்தை இழந்து நிற்கிறார்கள்.

'தன் குஞ்சு பொன் குஞ்சு' என்ற நினைப்பு அவர்களுக்கு இன்னமும் வராமல் 'தூரம் தான் எப்போதுமே பச்சையாய் இருக்கும்' என்ற மாயை திரைப்படத் தயாரிப்புத் துறையிலும் அவர்களின் முயற்சிக்குத் தடுப்புச் சுவராய் நின்று கொண்டி ருக்கிறது.

கோலிவுட் படங்களை எதிர்த்து நின்று சமாளிக்க முடியும் என்ற பலமும் கோலாலம்பூர்த் தமிழ்ப் படங்களுக்கு இருக்க முடியாது.

பார்த்த முகங்கள், பழகிய மனிதர்கள் என்றால், அவர் களிடம் எப்படிப்பட்ட திறமைகள் இருந்தாலும், மலேசியத் தமிழர்கள் புறந்தள்ளி விடுவார்கள்.

ஆயினும், மக்கள் திலகம் எம்.ஜியாரின் 'உலகம் சுற்றும் வாலிபன்' நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 'வசந்தத்தில் ஓர் நாள்', சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 'பிரியா', சரத்குமாரின் '1977', அல்டிமேட் ஸ்டார் அஜித் குமாரின் 'பில்லா', இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் 'பொம்மலாட்டம்' போன்ற படங்களின் மலேசியப் படப்பிடிப்புகளைத் தூரத்தில் நின்று வேடிக்கை

பார்த்து, பிரமிப்பில் ஆழ்ந்து போயிருந்த மலேசியத் தமிழர்கள் இன்றைக்கு சுயமாகத் திரைப்படம் தயாரிக்கும் முயற்சியில் இறங்கி விட்டார்கள்.

இதுவே ஒரு மாற்றம் தான், முன்னேற்றம்தான்.

படப்பிடிப்பை நடத்த சுவிட்சர்லாந்துக்கும் நியூசிலாந் துக்கும் கேமராவைத் தூக்கிக் கொண்டு போன கோடம்பாக்கத்துக் காரர்கள், இப்போது அடுத்தடுத்தும், அடிக்கடியும் பித்ரா ஜெயா வுக்கும், கெந்திங் மலைக்கும் வந்து போய்க் கொண்டிருக் கிறார்கள்.

மலேசியாவின் மொகிரேலின், மோனோரயில், எல்ஆர்டி போன்றவற்றைத் தமிழ்நாட்டுத் தயாரிப்புகளில் பார்த்து மகிழ முடிகிறது. 'ஜாலன் துன் சம்பந்தன் டீஸ்டிரீட்' என்று ஜாலனுக்கும் ஸ்டிரீட்டுக்கும் பொருள் விளக்காமல் வசனம் பேசினாலும், தமிழ்நாட்டுத் தயாரிப்பாளர்கள் நம்மோடு நெருங்கி வருகிறார்கள் என்பதில் மலேசியத் தமிழர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

'போனதும் தெரிவிக்கிறோம், எங்களை வந்து பாருங்கள்' என்று முன்பு போல் தாராளமாய் பொய் சொல்லாமல், மலேசியத் தமிழ்க் கலைஞர்களுக்கும் தமிழ்த் தயாரிப்பாளர்கள் தங்களின் படங்களில் நடிப்பு வாய்ப்புக் கொடுப்பது நல்லதொரு தொடக்கம்.

சரத்குமாரின் '1977'ல் சார்லி சிங்கமும், ஏவிஎம்மின் 'அயன்'னில் இயக்குநர் பிரான்சிஸ் சில்லனும் மனதில் பதியும் படியான கௌரவமான பாத்திரங்களில் நடிக்க வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

பழம்பெரும் நடிகர் கே.எஸ். மணியம், ராதிகாவின், 'அரசி' தொடரில் நாலைந்து வாரங்கள் கனமான பாத்திரமேற்று நடித்திருந்தார்.

இவையெல்லாம் மலேசியத்தமிழ்க் கலைஞர்கள் ஊக்கம் பெறவும் திரைப்படத் துறையின் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவும் அவர்களுக்கு உதவியாய் இருக்கும்.

இந்த சந்தர்ப்பத்தில் மலாய்ப்படத் துறையில் மலேசியத் தமிழ்க்கலைஞர்களின் பங்களிப்பைப் கொஞ்சம் அசைபோட்டுப் பார்க்கலாம்.

ஆண்டுதோறும் அனாதைப் பிள்ளைகளுக்கு இனிப்பு வழங்கி, அவர்களுடன் ஒருநாள் பொழுதைக் கழிப்பதைத் தம்முடைய தீபாவளிக் கொண்டாட்டமாகக் கருதும் டத்தோ எல். கிருஷ்ணன், மலாய்ப் படவுலகின் தந்தை என்று மலாய்க்காரர்களால் போற்றப்படுகிறார்.

அவருடைய கவனம் தமிழ்த் திரைப்படத் தயாரிப்புக்களின் மீது திரும்புமானால், மலேசியாவில் தமிழ்ப் படங்களுக்கு நல்லதொரு திருப்புமுனை ஏற்படலாம். அதற்கு அவருடைய வயதும், உடலும் ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை.

ஏ.ஆர். அய்யப்பன், லி.வெ. ஸ்டான்லி, எம். செந்திலாதிபன், அச்சப்பன், சந்தியா, சிவாஜிராஜா, டி. ஸ்ரீரேகா, ஏகவள்ளி போன்றோர் மலாய்ப் படங்களில் நடித்த தமிழ்க் கலைஞர்கள்.

உலகத் தரத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டிய உன்னதக் கலைஞன் பி. ரம்லி. அந்த மாபெரும் நடிகரோடு நாயகியாக 'சிரிமிஸ்' மலாய்ப் படத்தில் நடித்த மலேசியத் தமிழ்ப் பெண் சந்தியா சண்முகம்.

இப்படி வாய்ப்புக் கிடைத்தால் நல்ல இசைகூட்டும் புல்லாங்குழல்களாய் மாறக்கூடிய மூங்கில்கள் மலேசிய மண்ணில் நன்றாகவே விளைந்திருக்கின்றன.

மலேசியாவிலும் நல்ல தமிழ்ப்படங்கள் உருவாகும் காலம் தூரத்தில் இல்லை.

சிங்கப்பூர்த் தமிழ் நாவல்கள் வளர்ச்சி– ஒரு கண்ணோட்டம்

மா. இராஜிக்கண்ணு

விரிவுரையாளர்/ஒருங்கிணைப்பாளர்,
சிறப்புப் பயிற்சித் திட்டம்(தாய்மொழி)
தேசியக் கல்விக் கழகம்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்.

முன்னுரை

சிங்கப்பூர்த் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன. அவற்றுள் சிறுகதைகளே முதன்மை பெறுகின்றன. நாவல்களை விடச் சிறுகதைகளையே எழுத்தாளர்கள் மிகுதியாகப் படைக்கின்றனர் எனலாம். சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள் இலக்கியப் படைப்புகளைப் படைத்து வருகின்றனர் என்பது வெள்ளிடைமலை. எனினும் அவையனைத்தும் சிங்கப்பூர்ச் சூழலில் எழுதப்படவில்லை. பெரும்பாலானவை சிங்கப்பூர்ச் சூழலில் எழுதப்பட்டுள்ளன என்பதே உண்மை. இதனைத் திறனாய்வாளர்கள் ஒப்புக் கொள்வர்.

இக்கட்டுரை சிங்கப்பூர்த் தமிழ் நாவல்களின் வளர்ச்சி என்பதையே கருவாகக் கொண்டது: எந்த நாவலையும் திறனாய்வு செய்யும் நோக்கைக் கொண்டதல்ல. ஒவ்வொரு நாவலையும் தனித்தனியே செய்யின் அரிய உண்மைகள் புலப்படும். இத்தகைய திறனாய்வுகள் நாவல் இலக்கியம் வளர்ச்சியடைய உறுதுணை புரியவல்லன என்பது கட்டுரையாளர் கருத்து.

நாவல்: பெயர்க் காரணம்

நாவல் இலக்கியம் என்பது தமிழுக்குப் புதிய வரவே. சங்க காலத்திலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை நாவல் தமிழில் என்பதே தோன்றவில்லை. தமிழ்நாட்டில் ஆங்கிலேயரின் வருகையால் நாவல் என்னும் இலக்கியம் தமிழில் தோன்றிற்று என்பதனை மறுப்பார் இலர்.

'நாவல் என்ற சொல் நாவல்லஸ் என்னும் இலத்தீன் மொழிப் பெயர் உரிச்சொல்லிலிருந்து வந்தது. புதிய, புதுமை என்னும் பொருளுடைய நௌஸ் என்னும் அடிச் சொல்லிலிருந்து கிளைத்தது நாவல்லஸ். எனவே, புனைகதையுடன் இணைத்துப் பேசுகையில் 'புதிய கதை அல்லது கதை என்றும் அச்சொல் (நாவல்) பொருள்படும் நாவல் என்று ஆங்கில மொழியில் பயன் படுத்தப்படும் சொல் நாவல்லா என்னும் இத்தாலியச் சொல்லி லிருந்து பிறந்ததாகும்.' (தண்டாயுதம் இரா. டாக்டர் பக்கம்21)

மேற்காணும் கூற்று நோக்கற்பாலது. அறிஞர் சிலர் புதினம் எனவும் அழைக்கத் தலைப்படுகின்றனர். தமிழ்நாட்டில் முதல் தமிழ் நாவல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை என்பார் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்று அறிஞர் குறிப்பர். ஆய்வாளர்கள் சிலர் அன்னவரைத் தமிழ் உரைநடையின் தந்தை எனப் போற்றுகின்றனர். இக்கூற்றுக்கு அணிசெய்வதாகப் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் நாவலின் முன்னுரை அமைகிறது.

'தமிழில் உரைநடை நூல்கள் இல்லை என்னும் குறையைப் போக்குவதற்காகவே, இப்புனைகதையினை உரை நடையில் எழுதினேன். உடைநடை நூல்கள் தமிழில் இல்லை யென்னும் குறைபாட்டை அனைவரும் ஏற்கிறார்கள். இல்லை யென்று வருந்துகிறார்கள்.'

எனினும் மாயூரம் வேதநாயகருக்கு முன்பே சில உரை நடை நூல்கள் இருந்தன என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. வீரமா முனிவரின் 'பரமார்த்த குரு' கதை, தாண்டவராயரின் 'பஞ்சதந்திரக் கதைகள்' வீராசாமிச் செட்டியாரின் 'விக்கிரமாதித்தன் கதைகள்' போன்றவை உரைநடை நூல்களே. ஏனைய உரைநடை ஆசிரிய

முன்னோடிகளிலிருந்து வீரமாமுனிவரின் உரைநடையினை இனம் பிரித்துக் காட்டும் நோக்கில் அவரைத் 'தற்கால உரை நடையின் தந்தை' எனவும் அறிஞர் பாராட்டுவர்.

வேதநாயகம் பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலக் கட்டத்தில் இராஜம் ஐயர், அ. மாதவையா, நடராஜ ஐயர், பரிதிமாற்கலைஞர் போன்றோரின் நாவல்கள் எழுந்தன. 'கல்கி' என்னும் புனை பெயரில் புகழ்பெற்ற இரா. கிருஷ்ணமூர்த்தி என்பாரின் வருகை தமிழ் நாவல் உலகிற்குப் புத்துணர்ச்சியை ஊட்டியது என்பதனை யாரும் மறுப்பாரிலர். அவருக்குப் பின்னர் டாக்டர் மு.வ., அகிலன், நா. பார்த்தசாரதி, தி. ஜானகிராமன், திருமதி இராஜம் கிருஷ்ணன், லட்சுமி, ஜெயகாந்தன் போன்றோர் தமிழ் நாவல் இலக்கியம் படைத்து அழியாப் புகழ் பெற்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியே தமிழ் நாவலின் பிறந்த காலமாக அமைகிறது. தமிழ் மொழியில் நல்ல உரைநடை நூல்கள் இல்லை என்ற குறையைப் போக்க இப் படைப்பு தோன்றிற்று என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

நாவலின் கூறுகள்

நாவல் எழுதுவதில் நாவலாசிரியர்கள் பல கூறுகளைக் கவனிக்க வேண்டுவது முக்கியம். அக்கூறுகளுள் முக்கியமான சிலவற்றைக் கட்டாயம் கடைப்பிடித்தே ஆகவேண்டும். டாக்டர் இரா மோகன் அவர்கள் கீழ்க்காண்பவற்றை அடிப்படைக் கூறு களாகக் கருதுகிறார்.

'கதைப்பின்னல் (Plot), கதைக்கரு அல்லது உரிப்பொருள் (Theme), பாத்திரப்படைப்பு (Characterisation), பின்னணி (Back round), மொழிநடை (Style), நோக்குநிலை (Point of view) ஆகியவை நாவல் கூறுகள் ஆகும்' (மோகன், இரா. டாக்டர், ப. 11)

டாக்டர் மோகன் அவர்களது கூற்றினை நாவலாசிரியர் அனைவரும் ஒப்புக்கொள்வர். இக்கூறுகளைத் தம் நாவலில் கையாண்டு சமுதாயத்திற்கு விழுமிய கருத்துகளை வழங்குவோர் சிறந்த நாவலாசிரியர்கள் எனப் போற்றப்படுவர்.

'கதைப்பின்னல், கரு, நோக்குநிலை ஆகிய கூறுகள் சரியான அளவிலும் ஏற்கும் முறையிலும் பொருத்தமுற ஒரு கதையில் இணைக்கின்ற போது நாவல் உருவாகின்றது' (தண்டாயுதம் இரா. டாக்டர் பக்கம் 33) என்னும் மதிப்பிற்குரிய முனைவர் இரா. தண்டாயுதம் அவர்களின் கூற்று நோக்கற்பாலது.

பார்த்த அல்லது பட்டறிவால் உணர்ந்த ஒரு சிறு நிகழ்ச்சி நாவலுக்குக் கருவாக அமைந்துவிடும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. மேலும் வாசகர்களுக்கு மகிழ்வூட்டுவதும் அறிவூட்டுவதுமே நாவல் படைப்பதன் நோக்கமாக இருக்க வேண்டும் என்பர் திறனாய்வாளர்கள். இவ்வகையில் தமிழுலகு போற்றும் டாக்டர் மு.வ. அவர்களின் நாவல்கள் அறிவுறுத்தும் நோக்கிலே அமைந்துள்ளன என்பதை மறுப்பார் இலர். கட்டுரையாளர் அவரது பதின்மூன்று நாவல்களையும் படித்து இன்புற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். டாக்டர் மு.வ. அவர்களின் நாவல்களின் பெருமையினை டாக்டர் தா.வே. வீராசாமி அவர்கள் கூறுவது நோக்கற்பாலது.

'வள்ளுவர் கொள்கையை விரிந்த அளவில் அறவாழி போன்ற கதை மாந்தர்களைப் படைத்துத் தொடர்ந்து பல நாவல்களில் பண்டைய தமிழகத்தைப் பரப்பியதில் ஊன்றிய உணர்வுடையவர் மு.வ. அவருடைய நாவல்கள் அறிவியல் நாவல்களாக அமைந்து நல்வாழ்வு பெறவும், வாழ்க்கை விளக்கம் உறவும், வள்ளுவம் ஒளிரவும் இடைவிடாது முயல்கின்றன. இக்கொள்கை தனித்து நிற்கிறது.' (வீராசாமி, தா.வே. டாக்டர், நாவல், தமிழ் இலக்கியக் கொள்கை 9, பக். 96-97)

பொதுவாக நாவல் என்பது கற்பனை இலக்கியம். ஆயினும் கற்பனை உண்மைபோலக் காட்டுவதில்தான் அதன் தோற்றம் அமைகிறது. கற்பனையின் மிகுதி வெள்ளம்போல் பெருக்கெடுப்பதன் விளைவாகச் சிலர் ஏற்றுக்கொள்ளத் தயங்குவர். எது எவ்வாறு அமையினும் ஓரளவு கற்பனை கலந்த எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நாவலாக அமைய வேண்டும் என்பதில் அனைவருக்கும் உடன்பாடு உண்டு. அத்தகைய நாவல்கள் கால வெள்ளத்தை நீந்திச் செல்லும் தன்மையன. சிறுமை, பாலுணர்வு, தீமை போன்றவற்றை மக்களின் அன்றாட

வாழ்வில் நாம் காணும் பற்பல இடங்களைக் களமாக அமைத்து வெளிக்காட்டும்போது, நாவல் படைப்பை இழிந்த இலக்கிய மாகக் கருத வாய்ப்புண்டு என்பதனை மறத்தல் கூடாது.

பேராசிரியர் இரா மோகன் அவர்கள் எடுத்துக்காட்டிய கூறுகள் நாவலில் அமைவது முக்கியமே. மேலும் நாவலாசிரியர் கையாளும் உத்திகள் நாவலுக்கு மெருகூட்டுகின்றன என்பது கட்டுரையாளர் கருத்து. நோக்குநிலை உத்தி, பின்விளைவைக் காட்டும் உத்தி, திருப்புக் காட்சி உத்தி, மடல்வழி உத்தி, கதை முடிப்பு உத்தி, கதை மாந்தர் பண்பு காட்டும் உத்தி என உத்தி களைப் பகுப்பர்.

எளிய எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் நாவல் நடை அமைவது இன்றியமையாதது. தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் வட்டார வழக்குச் சொற்களைப் புகுத்தி எழுதுவதைக் கொண்டுள் ளனர். இச்சொற்கள் சிங்கப்பூர், மலேசிய வாசகர்களுக்குக் குறிப்பாக இளைஞர்களுக்குப் புரிவதில்லை. எனினும் இது ஒரு பெருங்குறை அல்ல. கடின நடையில் எழுதுவதையும் தவிர்த்து விடலாம். இது வாசகர்களை நாவல் படிப்பதில் உள்ள ஆர்வத்தைக் குன்றச் செய்யும் எனலாம். சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பரிதிமாற்கலைஞர் தம் நாவல்களைக் கடினமான பண்டைய தமிழிலேயே எழுதினார் என்பர் திறனாய்வாளர்கள்.

அடுத்து நாவல் கூறும் முறையிலும் ஓர் ஒழுங்கு இருக்க வேண்டும். டாக்டர் மு. வ அவர்கள் 'செந்தாமரை' என்னும் நாவலில் பல மாந்தர்கள் கதை கூறிச் செல்வதைக் காணலாம். 'கள்ளோ, காவியமோ?' என்னும் நாவலில் இருவரும் 'மலர்விழி' என்னும் நாவலில் ஒருவரும் கதை கூறிச் செல்லும் பாங்கினைக் காணலாம். எனினும் நாவல் கூறும் முறையில் படர்க்கைக் கூற்று முறையே பெரும்பாலான நாவலாசிரியர்களின் நெறியாக விளங்குவதைக் காணலாம்.

சிங்கப்பூர்த் தமிழ் நாவல் பின்னணி

திரைகடலோடியும் திரவியம் தேடத் தமிழர்கள் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். குறிப்பாக மலேயா, சிங்கப்பூர்

போன்ற நாடுகளுக்குத் தமிழர்கள் குடியேறினர். அத்தமிழர்களுள் பெரும்பாலோர் கூலித் தமிழர்களே மிகுதி. மலேயாவில் புலம் பெயர்ந்த தமிழர்களில் பெரும்பான்மையோர் ரப்பர்த் தோட்டங் களில் தொழிலாளர்களாகப் பணிபுரியத் தொடங்கினர். அவர்கள் கொத்தடிமைகள் எனப்பட்டனர். ஆனால் சிங்கப்பூரில் அத்தகைய நிலை இல்லாவிட்டாலும், அதிகம் கல்வி கற்காத தமிழர்கள் கூலித் தொழிலாளர்களாகவே பணியில் அமர்த்தப்பட்டனர். நன்கு கற்றவர்கள் அரசாங்கப் பணிகளை மேற்கொண்டனர்.

பொதுவாகத் தமிழர்கள் சிங்கப்பூர், மலேயாவில் காலூன்றி வாழத் தலைப்பட்டபோது சிலர் தமிழ் இலக்கியத் தாகம் கொண்டனர். படைப்பிலக்கியம் படைக்க வேண்டும் என்ற வேட்கை அவர்கள் உள்ளத்தே எழுந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து சிங்கப்பூருக்குப் புலம்பெயர்ந்த சதாசிவப் பண்டிதர் என்பார் சிங்கை நகர் அந்தாதி, சித்திரக் கவிகள் ஆகிய இரண்டு கவிதை நூல்களை 1887ஆம் ஆண்டில் வெளியிட்டார். அக்காலக் கட்டத் தில் சிங்கப்பூரில் வாழ்ந்த மகுதூம் சாயபு அவர்கள் 1887ஆம் ஆண்டு ஜூன் மாதம் இருபத்தேழாம் தேதி 'சிங்கை நேசன்' என்னும் வார இதழைத் தொடங்கினார். அவரின் அரிய இலக்கியப் படைப்பு போற்றுதற்குரியது. சிங்கைத் தமிழ் எழுத்தாளர் ஜே.எம். சாலி அவர்கள்,

'தொடக்கமாக சிங்கப்பூர் புனைகதை, புதின இலக்கிய வளர்ச்சியின் சில கட்டங்களை எண்ணிப் பார்க்கலாம். நாவல் என்னும் சொல்லைச் சிங்கப்பூரில் வெகுவாகப் பயன்படுத்தி விளக்கம் கூறி, புனைகதைகளையும் படைத்து முன்னோடியாகத் திகழ்ந்தவர் பத்திரிகையாளர் மகுதூம் சாயபு'. (சாலி ஜே.எம். பக்கம்.121) எனக் குறிப்பிடுவது நோக்கற்பாலது.

சிங்கப்பூர்த் தமிழ் நாவலாசிரியர்களால் எழுதப்படும் நாவல்கள் எத்தகைய பின்னணியைக் கொண்டிலங்குவன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம். நாவல் திறனாய்வு செய்வது கட்டுரையாளரின் பணியல்ல. சிங்கப்பூர்த் தமிழ் நாவல்கள் அனைத்தையும் திறனாய்வு செய்து கட்டுரை படைப்பது பெருந்திட்ட வேலை எனக் கொள்ளலாம்.

பின்னணி என்பது கதை நிகழுமிடம், காலம், சமுதாயம் போன்றவற்றைக் குறிக்கும். இப்பின்னணிவழி கதைக்கு ஆக்கமும் கதைப்போக்கில் தெளிவும் ஏற்படுவதுண்டு. அந்நிலையில் சிங்கப்பூர்த் தமிழ் நாவல்கள் அனைத்தையும் திறனாய்வு செய்து குறிப்பது நோக்கமல்லவெனினும், சில நாவல்களின் பின்னணியை ஆய்வு செய்து இக்கட்டுரையைப் படைப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

சிங்கப்பூர்த் தமிழ் நாவல்கள்

சிங்கப்பூரில் நாவல்களைவிடத் தமிழ்ச் சிறுகதைகளே அதிக வளர்ச்சி கண்டுள்ளன. அதற்குச் சில காரணங்களைக் கூறலாம். சான்றாக அறுபதுகளில் சிங்கப்பூர்த் தமிழ் நாளேடுகள் தமிழகத் தொடர் கதைகளையே நம்பி இருந்ததைக் கூறலாம். எனினும் முப்பதுகளை முன்னோக்கிப் பார்க்கும்போது தமிழ் முரசு நாளேட்டில் சில தொடர்கதைகள் வெளிவந்துள்ளன. சிங்கப்பூரின் பழம்பெரும் கவிஞர் ந. பழனிவேலு அவர்கள் 'காதற்கிளியும் தியாகக் குயிலும்' (1936), விஷமுள் (1937), சுபத்திராதேவி (1938) ஆகிய தொடர்கதைகளைத் தமிழ் முரசில் எழுதி வந்துள்ளார்.

அமரர் சே வெ சண்முகம் அவர்கள் ரமணி என்பவரால் நடத்தப்பட்ட மனோகரன் என்னும் திங்கள் இதழில் 'இவள் தமிழச்சியா? (1959) என்னும் தொடர்கதையை எழுதியுள்ளார். வள்ளிமணவாளன் என்னும் புனைபெயரில் எழுதியுள்ளார், அவரது 'வைராக்கியம்' என்னும் தொடர்கதை தமிழ் மலரிலும் 'மண்டோர் மகள்' என்னும் தொடர்கதை தமிழ் நேசனிலும், 'நம்ம ஊர் பொண்ணு' என்னும் தொடர்கதை தமிழ் முரசிலும் வெளிவந்துள்ளன. ஆனால் இவை நூல்களாக வெளியிடப்பட்டனவா என்பது தெரியவில்லை.

மனோகரன் மாத இதழ் ஆசிரியர் ரமணி அவர்கள் தம் இதழில் 'தொடாதே' (1965), பங்காரு பாப்பா, விஞ்ஞானி வீரப்பன் ஆகிய தொடர்கதைகளை எழுதியுள்ளார். இவை நூல் வடிவம் பெறவில்லை என்றே தோன்றுகிறது.

மலேசியா, சிங்கப்பூருக்கு நன்கு அறிமுகமான கவிஞர் கா. பெருமாள் அவர்கள் மலேசியாவின் 'சங்கமணி' என்னும் இதழுக்குத் 'துயரப்பாதை' என்னும் தொடர்கதையை 1958ஆம் ஆண்டு வாக்கில் எழுதினார். அத்தொடர்கதை 1978ஆம் ஆண்டில் சென்னைத் தமிழ்ப் புத்தகாலயத்தால் நூலாக வெளியிடப்பட்டது. மறைந்த கவிஞர் கா. பெருமாள் அவர்கள் முதலில் மலேசிய வானொலியில் பணியாற்றியவர். பின்னர் சிங்கப்பூர் வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேனாள் இந்தியன் மூவி நியூஸ் என்னும் திங்கள் இதழ் ஆசிரியர் எஸ்.எஸ் சர்மா அவர்கள் வள்ளி, கபுகா, என்னை விட்டுவிடு, உஷ் பேசாதே, என் அன்பே, இனியவளே போன்ற தொடர்களை எழுதியுள்ளார். இவையனைத்தும் இந்தியன் மூவி நியூஸ் திங்கள் இதழிலே வெளிவந்தன. 'இனியவளே' என்னும் தொடர்கதை 1990இல் நூலாக வெளியிடப்பட்டது.

சிங்கப்பூர்த் தமிழ் நாவல் எழுத்தாளர்களில் நம் நெஞ்சைக் கவர்பவர் அமரர் மு. சு குருசாமி அவர்கள். அன்னவர் செய்தித் தாள்களையோ மாத இதழ்களையோ அதிகம் நம்பியிருக்க வில்லை. தம் சொந்த செலவிலேயே நாவல்களைப் பதிப்பித்தவர் என்ற பெருமை அவருக்குண்டு. மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தம் நாவல்களைப் பரப்பிய அவர், அண்மையில் காலமானார். வாடாத மலர் (1966), காகிதப்பூ (1970), சுமைதாங்கி (1971), ஓர் இரவு (1972), வானவில் பூச்சரம், வாழ்வு எங்கே? நெப்போலியன் மனைவி, இரத்தத் திலகம், புதுமைப்பெண், அபலைப்பெண், அந்திவானம், மணிக்கூண்டு, மலர்ந்த வாழ்வு, உயிரோவியம் ஆகிய நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார். வாடாத மலர் என்னும் நாவல் நான்கு பதிப்புகளைக் கொண்டது என்னும் பெருமைக்குரியது.

எழுத்துச் செம்மல் என்னும் விருதுக்குரிய அமரர் ஏ.பி சண்முகம் அவர்கள் செல்வி (1970), நல்ல கதி (1975), கலா (1979) ஆகிய நாவல்களை எழுதி நூல்களாக வெளியிட்டுள்ளார்.

அமரர் பெரி நீல பழனிவேலன் அவர்கள் மின்னற்கீற்று (1978) என்னும் பெயரில் நான்கு குறுநாவல் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். அன்னவர் 'அந்தரத்தில் தொங்கும் உறவு (1987), செம்பருத்தி ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார். சிங்கப்பூர்த் தேசியக் கல்விக்கழகச் சிறப்புப் பயிற்சித் திட்டத் துறையைச் சார்ந்த பயிற்சி ஆசிரியையான செல்வி வே கீதா என்பார் அவரின் செம்பருத்தி நாவலைத் திறனாய்வு (1999) செய்து கட்டுரை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர்த் தமிழ்க் கணினித் துறைத் தந்தை எனப் போற்றப்படும் அமரர் நா. கோவிந்தசாமி அவர்கள் பல சிறுகதை களையும், வானொலி நாடகங்களையும் எழுதித் தமிழ் இலக்கிய வளர்ச்சி அருந்தொண்டு ஆற்றினார். அன்னவரது 'வேள்வி' என்னும் நாவல் 1980 இல் எழுதி முடிக்கப்பெற்றதாயினும் சில பிரச்சினைகளால் நூல் வடிவம் பெறவில்லை. எனினும் 1991ஆம் ஆண்டில் நூலாகத் 'தேடி' என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. இது 2004 ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாக அன்னவர் துணைவியார் திருமதி உஷா கோவிந்தசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.

இலக்கியத் தொண்டிற்காக 1982ஆம் ஆண்டில் ஆசியான் விருதைப் பெற்ற பெருமைக்குரியவர் மா. இளங்கண்ணன் அவர்கள். அலைகள் (1976), வைகறைப் பூக்கள் (1990), நினைவு களின் கோலங்கள் (1993) ஆகிய நாவல்களையும், பொருத்தம், கன்னிகாதானம், எங்கே போய்விடும் காலம்? ஆகிய குறுநாவல் களையும் எழுதி நூல்களாக வெளியிட்டுள்ளார். மதுரை காமராசர் பல்கலைக் கழக இளங்கலைப் பட்டப் படிப்பிற்காக 1991ஆம் ஆண்டில் அலைகள் என்னும் நாவல் பாட நூலாக அமைந்தது. இதனை எண்ணி அனைவரும் பெருமையுறல் வேண்டும்.

கடந்த அரை நூற்றாண்டாகச் சிங்கப்பூர்த் தமிழிலக்கியத் திற்கு அருந்தொண்டு ஆற்றிவரும் பெருமைக்குரியவர் ஜே.எம். சாலி அவர்கள். அன்னவர் அலைகள் பேசுகின்றன (1975), மஞ்சள்

ரோஜா (1982), கைபடாத ரோஜா, மூன்றாவது கணை, கவிதை நாவல்களை எழுதியுள்ளார்.

இலக்கியத்திற்காக ஆசியான் விருதினைப் பெற்ற இராம. கண்ணபிரான் அவர்கள் பீடு, வாழ்வு ஆகிய குறுநாவல்களைப் படைத்துள்ளார். இவை இரண்டும் ஒரே தொகுப்பாக 1992ஆம் ஆண்டில் நூல் வடிவம் கண்டன.

சில சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ள தமிழ்ச் செல்வம் அவர்கள் வாழப் பிறந்தவன் (1998) என்னும் நாவலை நூல் வடிவில் வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூர் மெடியாகார்ப் வானொலி ஒலி 96,8 இன் தலைவராக விளங்கியவரும் மர்மமேடை போன்ற வானொலி நாடகத் தொடர்களை எழுதித் தயாரித்தவருமான எம்.கே. நாராயணன் அவர்கள் ஆற்றோரத்தில் ஒரு மாளிகை (2000) என்னும் நாவலை எழுதி வெளியிட்டுள்ளார்.

விறுவிறுப்பான கதைப் பின்னலைக் கொண்டிலங்கும் 'மேற்கே உதிக்கும் சூரியன் (1989) என்னும் நாவலை எழுதியவர் திருமதி இரத்தினாவதி சுப்பிரமணியன் அவர்கள்.

சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த திருமதி நூல்ஹான் சுலைமான் அவர்கள் 'பொழுது புலருமா? (2007) என்னும் நாவலை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூருக்குப் புலம்பெயர்ந்துள்ள திருமதி ஜெயந்தி சங்கர் அவர்கள் 'வாழ்ந்து பார்க்கலாம் வா (2006), நெய்தல் (2007), மனப்பிரிகை (2008) ஆகிய நாவல்களை எழுதியுள்ளார்.

பல சிறுகதைகளை எழுதி வானொலியிலும் நாளேடு களிலும் படைத்து வரும், மெடியாகார்ப் வானொலி ஒலி 96.8 இன் மூத்த செய்தியாசிரியர் செ.ப. பன்னீர்செல்வம் அவர்கள் 'மாரி காலத்து மலர்கள்' என்னும் நாவலை எழுதியுள்ளார். அஃது அச்சில் உள்ளது.

சிங்கப்பூரைக் கதைக்களமாகக் கொண்ட தமிழ் நாவல்கள் சில

அலைகள் (மா. இளங்கண்ணன்)

இந்நாவலின் முக்கிய கதா மாந்தர்கள் மதியரசு என்னும் தமிழ் இளைஞனும் லேய் குவா என்னும் சீன நங்கையும் ஆவர். இருவரும் ஒரே கம்பத்தில் (கிராமத்தில்) வாழ்கின்றனர். காதலர்களான அவ்விருவரும் பெற்றோரின் உடன்பாடின்றித் திருமணம் செய்துகொண்டு தனியே வாழ முற்படுகின்றனர். மதியரசு, லேய் குவா இருவருக்கும் ஆண் குழந்தை பிறந்ததும், மதியரசுவின் பெற்றோர் மனம்மாறி அவர்களை ஏற்றுக் கொள்கின்றனர்.

நாவலின் உச்சகட்டமாக லேய் குவாவின் அன்னை கடும் விபத்துக்குள்ளாகி மருத்துவ மனையில் சேர்க்கப்படும் நிகழ்ச்சி அமைகிறது. அவர்க்குத் தேவைப்படும் ஒரே இனத்தைச் சேர்ந்த இரத்தத்தை மதியரசுவின் தங்கை தானம் செய்கிறாள். லேய் குவாவின் அன்னை குணமடைந்து உயிர் பிழைத்துக் கொள்கிறாள். இறுதியில் இரு குடும்பங்களும் ஒன்றுசேர்கின்றன.

நாவல் சிங்கப்பூர்ச் சூழலில் எழுதப்பட்டுள்ளது. கலப்புத் திருமணத்தின் முக்கியத்துவம் இந்நாவலில் புலப்படுகிறது. கதைக்களமாகச் சிங்கப்பூர் அமைவது பாராட்டிற்குரியது. இக்கதை நிகழ்ந்த காலம் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இருப்பினும் சிங்கப்பூரின் இன்றைய சூழலில் சீன இந்தியக் கலப்புத் திருமணங்கள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. தற்காலத்தில் நாவலாசிரியர் இளங்கண்ணன் சுட்டுவது போன்ற இனப்பிரச்சினை ஏற்படுவதாகத் தெரியவில்லை. இளங்காதலர்கள் நன்கு கல்வி கற்றவர்களாகவும் இனங்களின் பண்பாட்டினைப் புரிந்தவர்களாகவும் இருக்கிறார்கள் என்றால் மிகையாகாது. சிங்கப்பூர் இந்திய ஆடவர்கள் குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் சீனப் பெண்களை மணந்துகொள்வதே மிகுதியாகக் காணப்படுகிறது. ஆனால் சீன ஆடவர்கள் தமிழ்ப் பெண்களை மணந்துகொள்வது குறைந்தே காணப்படுகிறது எனலாம்.

வாழ்வு (இராம கண்ணபிரான்)

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளர் அமரர் நா. பார்த்தசாரதியை ஆசிரியராகக் கொண்டு இலங்கிய **'தீபம்'** என்னும் இதழில் வாழ்வு எனும் இந்நெடுங்கதை வெளியிடப்பட்டது. நெடுங்கதையின் தலைமை மாந்தராக ஞானப்பூங்கோதை என்னும் தமிழாசிரியர் சித்திரிக்கப்படுகிறார். அவர் கல்விக் கழகத்தில் பயிற்சியை முடித்துக் கொண்டு கென்சிங்கடன் தொடக்கப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார். அப்பள்ளியில் பெரும்பாலான தமிழ் மாணவர்கள் தமிழில் சரளமாகப் பேசச் சிரமப்படுவதை உணர்ந்த அவள், மாணவர்களின் பெற்றோரைச் சந்தித்துப் பேச முற்படுகிறாள்.

தமிழ்ப் பிள்ளைகளின் தமிழ் பேசும், எழுதும் தரத்தை உயர்த்தப் பள்ளி முதல்வரின் ஒப்புதலுடன் தமிழ் மன்றம் ஒன்றினைத் தொடங்குகிறார் ஞானப்பூங்கோதை. வாரத்திற்கு ஒருமுறை தமிழ் மன்றம் கூடுகிறது. தமிழ் மாணவர்கள் அவ்வேளையில் தமிழ்மொழி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். நாளடைவில் அவர்கள் நல்ல தமிழில் பேசும் திறனைப் பெறுகின்றனர்.

ஒருநாள் முரளி என்ற மாணவன் இல்லத்திற்கு அழைப்பின்பேரில் ஞானப்பூங்கோதை செல்கிறாள். மருத்துவரான முரளியின் தந்தைக்குத் தமிழ் பேசவோ எழுதவோ தெரியாது. தாய்க்கு நன்றாகப் பேசத் தெரியும் என்றாலும் ஆங்கில மோகத்திற்கு அடிமைப்பட்டுவிடுகின்றான். தாத்தா மட்டும் அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து வந்தவர்தான். அவருக்குத் தமிழில் உரையாடுவதில் எவ்விதத் தடங்கலும் இல்லை. இச்சூழ்நிலையை உணர்ந்த ஞானப்பூங்கோதை தமிழர்கள் தமிழில் நன்றாகப் பேசவும் எழுதவும் மேற்கொள்ளும் திட்டத்துடன் அவ்வீட்டை விட்டு வெளியேறுகிறாள். குறுநாவல் தமிழை வளர்க்க வேண்டும் என்ற பிரச்சார நோக்கம் கொண்டதாக அமைகிறது.

வேள்வி (நா. கோவிந்தசாமி)

இக்குறுநாவல் 1991, 2004 ஆகிய ஆண்டுகளில் இருமுறை பதிப்பீடு கண்டது. அப்பர் புக்கிட் தீமா பகுதியிலுள்ள ஒரு

கம்பத்தில் சில தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. கருப்பண்ண மண்டோர் என்பவர் அப்பகுதியிலுள்ள நிலப்பகுதி ஒன்றினை அக்காலப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து விலைக்கு வாங்கி, அவ்விடத்தில் முனியாண்டி கோவில் ஒன்றைக் கட்டுகிறார். அது தகரத்தால் கூரை வேயப்பட்ட கோவிலாகும். சில ஆண்டுகளுக்குப் பின் அப்பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் அழிக்கப்பட்டு அடுக்குமாடி வீடுகள் கட்டப்படுகின்றன. தமிழர் சிலர் அவ்வீடுகளில் குடியேறுகின்றனர். அவர்கள் இக்கோவில் மீது அக்கறை கொண்டு, அதனை மேம்படுத்த முயற்சி மேற்கொள்கின்றனர். ஆனால் அக்கோவிலில் குடிகொண்டுள்ள முனியாண்டி சிலையை அற்புறப்படுத்திப் பக்கத்திலுள்ள வேப்பமரத்தடியில் அமைக்கின்றனர். இதனால் ஆத்திரமடைந்த கருப்பண்ண மண்டோர் புதிதாகக் கட்டப்பட்ட கோவிலுக்குப் பல ஆண்டுகளாகச் செல்லவில்லை. இந்நிலையில் சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகத்தில் முதுகலை பயிலும் குமரன் என்பவன் தன் ஆராய்ச்சிக்காக அவரைப் பேட்டி காண்கிறான். அவர் நடந்த கதையினைக் கூறுகிறார். பின்னர் அவன் தற்போது உள்ள கோவில் மேலாண்மையினரிடம் பேட்டி காண்கிறான். இந்நிலையில் சிங்கப்பூர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்து சமய மாநாட்டில் பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுகிறான். அவன் உரையில் தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய பல சீர்திருத்தக் கருத்துகள் வெளிப்படுத்தப்படுகின்றன. மாநாட்டுக்கு வந்த பெரும்பாலோர் அவன் கருத்துகளுக்கு உடன்படவில்லை. வேதனை அடைந்த அவன் தன் ஆய்விற்குச் சேகரிக்கப்பட்ட கருத்துகளை ஆய்வு மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்காது இருந்துவிடுகிறான். இறுதியில் கருப்பண்ண மண்டோரைக் காண்கின்றான். அவர் அவனது ஆய்வினைப் பற்றிக் கேட்கிறார். ஆனால் அதற்கு அவன் தக்க பதில் கூறாமல் இருந்துவிடுகிறான்.

கருப்பண்ண மண்டோர் சுயநலமில்லாதவராகத் தன் வேள்வியைத் தொடர விரும்புகிறார். ஆனால் சுயநலக்காரர்களும், விளம்பரம் பெற விரும்பும் சிலரும் அவரது வேள்வியைத் தொடர விடாமல் தடுக்கின்றனர். அதுபோல் குமரன் தன் முதுகலை ஆராய்ச்சியை ஒரு வேள்வியாகவே கருதுகிறான். தமிழர்களுக்கு நன்மை ஆற்றவிழையும் அவனது வேள்வியும் நிறைவேறவில்லை. தமிழ்ச் சமுதாயத்தினர் அவனைச் சமூகத் துரோகி என

இழிவாகப் பேசுகின்றனர். இக்குறுநாவல் இங்ஙனம் அன்றைய தமிழ்ச் சமூகத்தின் பின்புலத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகிறது. இந்நாவலில் பின்னப்படும் கதை உண்மையான நிகழ்வே என அமரர் நா கோவிந்தசாமி கட்டுரையாளரிடம் தெரிவித்திருந்தார் என்பது பலருக்குத் தெரிய வாய்ப்பில்லை.

அலைகள் பேசுகின்றன (ஜே.எம். சாலி)

தமிழகத்தின் ஓர் ஊரிலுள்ள குமாரசாமிக்கும் மதுரம் என்னும் பெண்ணுக்கும் திருமணம் நடந்தேறுகிறது. ஆனால் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை. இதனை உணர்ந்த அவ்வூரில் வசிக்கும் அப்துல் மஜீது என்பார் அவனைச் சிங்கப்பூருக்கு அனுப்பி கடையேதும் வைத்து நடத்தும்படி சொல்கிறார். அவன் சிங்கப்பூரில் நேவல் பேஸ் பகுதியில் ஒரு நல்ல வேலையில் அமர்கிறான்.

ஒரு நாள் இளம் சீனப்பெண்ணை யாரோ துரத்திக் கொண்டு வருவதைப் பார்த்த அவன் அவளுக்குத் தன் வீட்டில் அடைக்கலம் கொடுக்கிறான். நாளடைவில் அவர்கள் இருவருக்கும் காதல் ஏற்பட்டுத் திருமணத்தில் முடிகிறது. அப்பெண்ணைத் துரத்திக்கொண்டு வந்த அச்சீனன் வீட்டிற்கு வந்து இருவரையும் வாழ்த்திச் செல்கிறான். தான் அவர்கள் மீது கொண்ட பகைமையையும் மறந்து திருந்தியவனாக ஆகிறான். அவர்கள் இருவருக்கும் ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாகக் குழந்தைகள் பிறக்கின்றன.

குமாரசாமியின் மக்கள் இருவரும் பெரியவராகிறார்கள். ஒரு நாள் அவன் மனைவி சாந்தம்மா (ஜான்) அவனை ஊருக்குப் போய் முதல் மனைவியான மதுரத்துடன் மகிழ்ச்சியாக வாழும்படி வற்புறுத்துகிறாள். அவன் ஒருவாறு இணங்கித் தமிழகம் செல்கிறான். அங்கு மதுரத்தைக் கண்டு வருத்தமடைகிறான். எனினும் மதுரம் அவனை மீண்டும் சிங்கப்பூர் சென்று சாந்தம்மாவுடனும் பிள்ளைகளுடனும் வாழும்படி வற்புறுத்துகிறாள். எனவே குமாரசாமி சிங்கப்பூருக்குக் கப்பலில் புறப்படுகின்றான். அவன் மனம் ‘உள்ளத்தை அர்ப்பணிக்கவும் இரண்டு பெண்கள் சாந்தம்மா ஒரு சுடர்விளக்கு. மதுரம் ஒரு மங்கலவிளக்கு’ என்று சொல்கிறது. இங்ஙனம் நாவல் முற்றுப்பெறுகிறது. இந்நாவலிலும் கல்புத்

திருமணம் பேசப்படுகிறது. எனினும் எவ்விதப் பிரச்சினையும் எழவில்லை என்பது நோக்கற்பாலது.

பொழுது புலருமா? (திருமதி நூர்ஜஹான் சுலைமான்)

பாரதி என்னும் இளைஞன் தஞ்சோங் பகார் பகுதியிலுள்ள ஒரு கம்போங்கில் குடியேறுகிறான். அவன் தந்தை ஊருக்குச் சென்றுவிடுகிறார். அங்கு தன் வீட்டிற்கு எதிர்புறத்தில் வசிக்கும் நளினி என்பவளுடன் காதல் கொள்கிறான். அவனுடன் குடியிருக்கும் பெரியவரும் வேறு சிலரும் நளினியின் வீட்டிற்குச் சென்று பெண் கேட்கின்றனர். ஆனால் நளினி அப்பா அவர்களை மரியாதை குறைவாக நடத்தி அனுப்பிவிடுகிறார். எனினும் பாரதி ஒருநாள் அவரிடம் நேரிடையாகக் கேட்க, அவனையும் அவர் இழிவாகப் பேசி அனுப்பிவிடுகிறார்.

அன்றிரவே பாரதி யாருக்கும் தெரியாமல் கம்பத்தை விட்டு வெளியேறுகிறான். அவன் கேபிள் போடும் நிறுவனத்தைத் தொடங்கி சிலரை வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றான். நாளடைவில் பணக்காரனாகி ஊரிலுள்ள தன் அம்மாவையும் தங்கைகள் இருவரையும் சிங்கப்பூருக்கு அழைத்துக் கொள்கிறான். தங்கைகளுக்குச் சிங்கப்பூர் மாப்பிள்ளைகளுக்கு மணம் முடித்து வைக்கிறான்.

ஒருநாள் எதிர்பாராதவிதமாக மெக்பர்சன் ரோட்டில் அமைந்துள்ள சினக்கோப்பிக் கடையில் நளினியைச் சந்திக்கிறான். அவள் அக்கடையில் அமைந்துள்ள தமிழர் உணவுக் கடையில் சமையல்காரியாக வேலை செய்கிறாள். நளினி பின்னர் தனக்கு மணம் முடிந்து மண விலக்கு பெற்ற கதையைக் கூறுகிறாள். கணவருடன் எவ்விதத் தாம்பத்திய உறவும் கொள்ளாத நிலையையும் கூறுகிறாள். அவள்மீது இரக்கப்பட்ட அவன் அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறான். அவர்கள் திருமணம் மிகவும் எளிதான முறையில் நடைபெறுகிறது. காலையில் பதிவுத் திருமணம். மாலையில் மாரியம்மன் கோவிலில் தாலி கட்டும் திருமணம். திருமணத்திற்குப் பின் அன்றிரவு பாரதி நெஞ்சு வலி காரணமாக அவள் மடியிலே உயிர் விடுகிறான்.

திருமண ஏற்பாடு நடைபெறுவதற்குச் சில நாள்களுக்கு முன்னரே பாரதி தனக்கு அவ்வப்போது நெஞ்சு வலி ஏற்படுவதை நளினியிடம் சொல்லியிருக்கிறான். ஆனால் தன் சொத்து முழு வதையும் அவள் பெயருக்கே எழுதி வைத்ததை மட்டும் அவன் சொல்லவே இல்லை.

இந்நாவலில் பாரதி சிங்கப்பூரில் இருந்த கண்டோமென்ட் தொடக்கப் பள்ளி, கான் எங் செங் உயர்நிலைப்பள்ளி ஆகியன குறிக்கப்படுகின்றன. கொண்டோமென்ட் தொடக்கப்பள்ளி கெண்டோமென்ட் ரோட்டில் இருந்தது. ஆனால் தற்போது இல்லை. கான் எங் செங் உயர்நிலைப்பள்ளி ஆன்சன் ரோட்டில் இருந்தது. ஆனால் தற்போது அது அலக்சாண்டிரா ரோட்டில் அமைந்துள்ளது.

நெய்தல் (திருமதி ஜெயந்தி சங்கர்)

இந்நாவல் சிங்கப்பூர், தமிழ்நாட்டுச் சூழலில் அமைந் துள்ளது. தமிழ்நாட்டிலிருந்து சிங்கப்பூருக்கு வந்து வேலை பார்க்கும் குமார் என்பவன், இங்கு பிறந்து வளர்ந்த மணிமாலா என்ற பெண்ணைக் காதலிக்கிறான். எனினும் மணிமாலா அவன் காதலை இறுதி வரை ஏற்றுக்கொள்ளவில்லை. இருவரும் ஈஸ்ட் கோஸ்ட் பூங்காவில் சில தடவைகள் சந்தித்துப் பேசிக் கொள் கிறார்கள். ஆனால் காதல் நெருக்கத்தால் அல்ல. குமார் இதற் கிடையில் தமிழ்நாட்டுக்குச் செல்கிறான். அங்கு அவனுக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆனால் அவன் நாட்டமின்றி மீண்டும் சிங்கப்பூருக்கு வந்துவிடுகிறான். ஒருநாள் மணிமாலாவைப் பார்த்து 'எனக்கு உங்களைக் கல்யாணம் பண்ணிக்க விருப்பம்' என்கிறான். அவள் அதற்கு எவ்வித பதிலும் தரவில்லை. இறுதியில் ஒரு நாள் 'நா இங்கேயே பொறந்து வளர்ந்தவ. இந்த நாட்டைவிட்டு வேற நாட்டுல வாழ்க்கைப் படறதைப் பத்தி நானோ எங்க வீட்டுக்காரங்களோ நெனச்சும் பார்க்க மாட்டோம்' என்று கூறிவிடுகிறாள். மணிமாலா ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல விமானம் ஏறுகிறாள். இதனுடன் நாவல் முற்றுப்பெறுகிறது.

நாவலின் இன்னொரு பகுதியாக இங்கு சீனர் வீட்டில் பணிப்பெண்ணாக வேலைபார்க்கும் பவானி என்பவளைப் பற்றி

கதையும் சொல்லப்படுகிறது. அப்பெண்ணுக்குத் தமிழ்நாட்டில் பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் அவளது கணவன் வேறொரு பெண்ணுடன் சேர்ந்து வாழ்கிறான். இச்செய்தியைக் கேட்டு பவானி அதிர்ச்சியடைகிறாள்.

இந்நாவலில் சிங்கப்பூர்ச் சூழல்கள் அங்கங்கே காட்டப் படுகின்றன. பணிப்பெண்கள் வேலை பார்க்கும் இன்றைய சமுதாய நிலை பேசப்படுகிறது. இங்ஙனம் சிங்கப்பூர்ச் சமுதாயப் பின்புலம் இந்நாவலில் பின்னப்படுகிறது எனலாம்.

மாரி காலத்து மலர்கள் (செ.ப. பன்னீர்செல்வம்)

பிரிட்டிஷ் படைகள் சிங்கப்பூரிலிருந்து அறுபதுகளின் பிற்பகுதியில் மீட்டுக்கொள்ளப்பட்டபோது, 38 ஆயிரம் பேர் வேலைகளை இழந்தனர். அவர்களுக்கு இழப்பீடு வ்ழங்கப் பட்டாலும், உடனடியாக வேலை கிடைக்கவில்லை. இலண்டன் வழங்கிய நிரந்தரவாசி உரிமையைப் பலர் ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு இலண்டன் செல்லும் சிங்கப்பூரர் பரந்தாமன் தன் மனைவி, மகன், மகளுடன் பிரிட்டன் சென்றுவிடுகிறார். புக்கிட் பாஞ்சாங் பகுதியில் குடியிருந்த அவர்களின் பக்கத்து வீட்டில் வசித்து வந்தவர்தான் அவரின் உறவினர் சாம்பசிவம். அவருக்கு ஒரு மகன், ஒரு மகள். எல்லோரும் புக்கிட் பாஞ்சாங் உயர்நிலைப் பள்ளியில் படித்து வந்தவர்கள்.

சிங்கப்பூர் அரசாங்கம் துரித தொழிற்பயிற்சியில் சேர்ந்து, சாம்பசிவம் வேலையில் சேர்ந்துகொள்கிறார். ஆனால் இலண்டன் செல்லும் பரந்தாமன் இவர்களின் தொடர்பை நீக்கிவிடுகிறார். அயல்நாட்டு வாழ்வே ஆனந்த வாழ்வு என வாழ்கிறார். குடிப்பழக்கம் ஏற்பட்டுக் குடும்பத்தைக் கவனிக்கத் தவறுகிறார். இவ்வேளையில் தேசிய சேவையில் சாம்பசிவனின் மகன் செம்பியன் மிகச்சிறந்த அதிகாரியாக முன்னேறுகிறான். இராணுவ உபகாரச் சம்பளம் பெற்று, பிரிட்டனில் மருத்துவப் படிப்பு படிக்கும் வாய்ப்பைப் பெறுகிறான்.

இலண்டன் செல்லும் அவன் அங்கே பரந்தாமன் மகள் காஞ்சனாவை ஒரு தனியார்ப் பள்ளி ஆசிரியராகப் பார்க்கிறான். அவளின் தந்தையின் உடல்நிலை பற்றியும் அறிகிறான். அவள் தன்

தம்பியைப் படிக்க வைக்கும் முயற்சியைப் பரந்தாமன் பாராட்டு கிறான்.

படிப்பை முடித்து சிங்கப்பூர் திரும்பி வரும்போது, காஞ்சனா, அவள் தந்தை, தம்பி, அன்னை ஆகிய அனைவரையும் அழைத்துக்கொண்டு வருகிறான். சிங்கப்பூர் மீது உள்ள பற்றையும் அன்பையும் விளக்கும் நாவல் இது எனில் மிகையாகாது.

நிறைவுரை

சிங்கப்பூர்த் தமிழ் நாவலாசிரியர்கள் அனைவரும் சிங்கப் பூரில் வாழ்ந்த காலத்தில் நாவல்களை எழுதி வெளியிட்டனர். பெரும்பாலானவை தமிழ்நாட்டில் அச்சிடப்பட்டாலும் குடியர சில் வெளியீடு கண்டன. 1963ஆம் ஆண்டுவரை மலாயாவின் ஒரு பகுதியாகவே சிங்கப்பூர் கருதப்பட்டது. அஃதாவது 1959ஆம் ஆண்டு சிங்கப்பூர் தன்னாட்சிப் பெற்ற நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. அக்காலக் கட்டத்தில் தமிழ் எழுத்தாளர்கள் மலாயா, சிங்கப்பூர்ப் பின்னணியில் சிறுகதை, நாவல் போன்ற வற்றை வடித்தனர். 1963ஆம் ஆண்டில் மலேசியா என்னும் கூட்டமைப்பில் இணைந்தது. ஆனால் 1965ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 9ஆம் நாளன்று சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து குடியரசு நாடானது. எழுத்தாளர்கள் பலர் மனப் போராட்டத்திற்கு ஆளாயினர். சிங்கப்பூரர் என்ற உணர்வில் உந்தப்பட்டு இந்நாட்டுச் சூழலில் நாவலைப் படைக்க ஆரம்பித்தனர். தமிழ் நாவல்கள் சிலவற்றில் பல இனச் சமுதாயப் பின்புலம் சுட்டிக்காட்டப்படு கிறது. சான்றாக திரு மா. இளங்கண்ணன் எழுதிய 'அலைகள்' என்னும் நாவலில் சீன, தமிழ் வழித்தோன்றல்களை அடிப் படையாகக் கொண்ட கருப்பொருள் வலியுறுத்தப்படுகிறது. இந்நாவலில் இரு இனத்தாரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி னாலும் இன நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கிறது என்பது கட்டுரை யாளர் கருத்து. கடந்த பல ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் சமய, இன நல்லிணக்க நாள்கள் கொண்டாடப்பட்டு வருவதைக் கருத்தில் கொள்வது வேண்டற்பாலது.

அமரர் பெரி நீல பழனிவேலன் அவர்கள் படைத்த 'உணர்வின் அலைகள்' என்னும் நாவல் இந்து, இஸ்லாமியச் சமயங்களிடையே நிகழும் சிக்கல்களைத் தெளிவுப்படுத்துகிறது. பொதுவாக அலைகள், உணர்வின் அலைகள் ஆகிய நாவல்களில் இடம்பெறும் வேற்றினப் பெண்கள் தமிழர்களாகவே மாறிவிடும் போக்கினை உணரலாம். அதுபோலவே திரு ஜே எம் சாலி அவர்களது 'அலைகள் பேசுகின்றன' என்னும் நாவலில் சீன நங்கை தமிழ்ப்பெயர் புனைந்து தமிழ்ப் பெண்ணாகவே மாறி விடுகிறாள். ஆனால் இந்நாவலில் இனப்பிரச்சினைக்கு இடமே இல்லை. நாவலில் வரும் தமிழ்ப்பெண்ணும் சீனப்பெண்ணும் தியாகிகளாகவே சித்திரிக்கப்படுகின்றனர்.

அண்மையில் வெளியிடப்பட்ட தமிழ் நாவல்கள் சிலவற்றில் இனப் பிரச்சினை காட்டப்படவில்லை. தமிழ்நாட்டி லிருந்து சிங்கப்பூருக்கு வந்து வேலை பார்க்கும் பணிப்பெண்கள், ஊழியர்கள் போன்றோரின் பிரச்சினைகள் காட்டப்படுகின்றன. இக்காலச் சூழலில் இத்தகைய பாத்திரப்படைப்பு தேவை. சிங்கப்பூரர் என்னும் உயர்வுக்கு இது வழி வகுக்கிறது எனலாம்.

பரிந்துரைகள்

1. நாவல் எழுதுவது குறித்த பயிலரங்குகளை அவ்வப் போது நடத்த வேண்டும்.

2. சிங்கப்பூர்த் தமிழ் நாவல்களைப் பற்றிய கருத்தாய்வைத் தமிழ்ப் பல்கலைக் கழகமோ ஏனைய பல்கலைக் கழகங்களோ நடத்த வேண்டும்.

3. சிங்கப்பூர்த் தமிழ் நாவல்களைத் தனித்தனியே வெவ் வேறு திறனாய்வாளர்கள் ஆய்வு செய்து, நூல் வடிவில் வெளிக் கொணர ஆவன செய்தல் வேண்டும்.

துணையன்கள்

1. வீரமணி அ. டாக்டர் (தொகுப்பாசிரியர்)
சிங்கப்பூரில் தமிழ்மொழி தமிழிலக்கிய வளர்ச்சி 1965-1990
முதல் பதிப்பு 1994
பதிப்பகம் The Journal. Newton Po Box 152. Singapore 0922.

2. வீரமணி அ டாக்டர்
சிங்கைத் தமிழ் நாவல்களில் பல இன சமுதாயச் சிந்தனைகள்
சிங்கப்பூரில் தமிழும் தமிழிலக்கியமும்
ஏழாவது ஆய்வரங்க மாநாட்டு மலர் (பக்கம்1-3)
பதிப்பாண்டு 1990
பதிப்பாளர் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரவை

3. சாலி ஜே. எம்
சிங்கப்பூரில் தமிழ் நாவல் வளர்ச்சி
சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் ஆய்வரங்கம் 1996
(பக்கம் 120-140)
பதிப்பாண்டு 1996
பதிப்பகம் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம்

4. வீராசாமி தா வே டாக்டர்
நாவல் தமிழ் இலக்கியக் கொள்கை 9 (பக்கம். 92-119)
பதிப்பாண்டு 3.9.1984
பதிப்பகம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை

5. தண்டாயுதம் இரா டாக்டர்
சமூக நாவல்கள்
பதிப்பாண்டு ஜூன் 1979
பதிப்பகம் தமிழ்ப் புத்தகாலயம், டி.பி. கோயில் தெரு திருவல்லிக்கேணி சென்னை, 600 005

6. மோகன் இரா டாக்டர்
நாவல் வளர்ச்சி
பதிப்பாண்டு நவம்பர் 1989
பதிப்பகம் மணிவாசகர் பதிப்பகம் 55 லிங்கிச் செட்டித் தெரு சென்னை, 600 001,

7. முதல் பதிப்பு 1991
இரண்டாம் பதிப்பு 2004
பதிப்பகம் Tamilnetwork Publishing House Pte Ltd, Singapore

8. அலைகள் பேசுகின்றன
முதல் பதிப்பு 1975
மூன்றாம் பதிப்பு 2005
பதிப்பகம் சேது அலமி பிரசுரம், 8 முத்துகிருஷ்ணன் தெரு, பாண்டி பஜார், தி நகர், சென்னை 600 017.

9. அலைகள்
பதிப்பாண்டு 2007 (மறுபதிப்பு)
பதிப்பகம் சுவடி பதிப்பகம், சென்னை

10. பீடம்
பதிப்பாண்டு 1992
பதிப்பகம் தமிழ்ப் புத்தகாலயம் டி.பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

11. பொழுது புலருமா?
பதிப்பாண்டு 2007
பதிப்பகம் சுலைமான் பதிப்பகம், சிங்கப்பூர்

12. நெய்தல்
பதிப்பாண்டு 2007
பதிப்பகம் சந்தியா பதிப்பகம், பிளாட் ஏ நியூடெக் வைபவ், 57-53ஆவது தெரு, அசோக் நகர், சென்னை 600 083

13. மாரி காலத்து மலர்கள் (அச்சில்) ஆசிரியர் அனுமதியுடன்

சிங்கப்பூரில் கட்டுரை இலக்கிய வளர்ச்சி

செ.ப. பன்னீர்செல்வம்

சிங்கப்பூர்

சிங்கப்பூரில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் 19ஆம் நூற்றாண்டு முதல் நல்ல வளர்ச்சியைக் கண்டு வந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் நிறைய உள்ளன. அவற்றுள் இயற்றமிழ் வளர்ச்சிக்குரிய கட்டுரை, சிறுகதை, புதினம் உள்ளிட்ட துறை களில் நூல்களும் ஆய்வு ஏடுகளும் பெரிய அளவில் வந்திருப்ப தால், சிங்கப்பூரில் கட்டுரைத் துறை அறிஞர் போற்றும் வளர்ச்சி யைக் கண்டுள்ளது வெள்ளிடைமலை.

சிங்கப்பூர்க் குடியரசில், சிங்கை நேசன், தங்கை நேசன், தமிழ் முரசு, நவநீதம், பேனா முனை, தேசத்தூதன், தமிழ்மலர், ஆகிய இதழ்களும் அவற்றின் பல்வேறு காலக்கட்ட ஆண்டு மலர்களும், சிறப்புநாள் வெளியீடுகளும் அதற்குக் கட்டியங்கூறும் வண்ணம் அமைந்திருக்கின்றன என்று துணிந்து கூறலாம்.

நோக்கம்

சிங்கப்பூர்த் தமிழர்களால், குறிப்பாக இந்நாட்டில், குடியுரிமை பெற்றவர்களால் இந்நாட்டின் வாழ்வியல், பண்பாடு, சாதனைகள் ஆகியவற்றைக் குறித்து எழுதப்பட்ட நூல்களுக்கும் இயற்றப்பட்டுள்ள படைப்புகளுக்குமே முதன்மை தரவேண்டி யதே நியாயம் எனக் கொண்டு ஆய்வுரையைத் தொடங்கு கின்றேன். 1960ஆம் ஆண்டு தமிழ் நூல்கள் கண்காட்சிக்குழு என்னும் ஓர் அமைப்பு, க. பஞ்சாட்சரம் அவர்களால் கிண்டா சாலை முகவரியில் தொடங்கப்பட்டு நாடளாவிய வகையில்

கட்டுரைப் போட்டி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் இந்த ஆய்வாளர் எழுதிய கட்டுரைக்கு ஆறுதல் முதல் பரிசு கிடைத்தது. தலைப்பு: திருக்குறளை நான் விரும்ப மூன்று காரணங்கள். பஞ்சாட்சரம் வெளியிட்ட அறுபதுகளின் கட்டுரைத் தொகுப்பு இன்று யாரிடமும் இல்லாமல் போனது நம் தவக் குறைவே என்றுதான் சொல்ல வேண்டும். ஆதிநாளில் செய்தியாளர்களில் மிகப் பெரும்பாலோர் நல்ல கட்டுரைகளை உள்ளூர் ஏடுகளில் எழுதிவந்தனர். ஆர்.பி. கிருஷ்ணா என்பவர் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட மலேசிய இந்தியர்கள் என்னும் ஆங்கில நூல் மிகச் சிறந்த ஒன்று என்று வழக்குரைஞர் ஜ'ம்மா பாய் ஆங்கிலத்தில் தாம் எழுதிய பல இன சிங்கப்பூர் என்னும் பொருளிலான நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்த ஆர்.பி. கிருஷ்ணனின் கட்டுரைகளைத் தமிழில் முதல்தரக் கட்டுரையாக மொழி பெயர்த்து வெளியிட்டவர் இராஜரத்தினம் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இது இவ்வாறிருக்க, சிங்கப்பூரில் வானொலி செய்திருக்கும் சாதனை தமிழ் உள்ளவரை மறக்க முடியாத ஒன்று என்று துணிந்து கூறலாம். காரணம், இலக்கியம் சார்ந்த, தமிழ்ப்பற்றுமிக்க பல்வேறு ஈடுபாடுகளுக்கு வானொலி வழிகாட்டியாக இருந்து வந்திருக்கின்றது. வானொலி வளர்த்த கட்டுரைத் தமிழ் குறித்து ஒரு சில சுருக்கமாகச் சொல்ல இந்த ஆய்வு விரும்புகிறது. தி.சு. மோகனம் என்பார், ஒரு சொல் கேளீர் என்னும் கட்டுரைத் தொடரின் வழி பல தமிழ்ச்சொற்கள் எவ்வாறு மாறி வந்துள்ளன, என்பது பற்றி பல்லாண்டுகாலத் தொடரை வழங்கினார். ஆனால் அதை அவர் நூலாக வெளியிடவில்லை. ஆங்கிலத் தமிழ் என்னும் அவரின் ஆய்வுரை நூல், நம் மக்களில் பலர் ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழில் எழுதும்போது நேரும் இடர்பாடுகளை அலசி ஆராய்கிறது. தமிழ்முரசு ஏட்டிலும் அவர் வாரம் ஒரு முறை தமிழ்ச்சொற்கள், தமிழ்ப்பயனீடு ஆகியவற்றைப் பற்றி கட்டுரை எழுதி வந்தார். அவர் பல ஆய்வரங்க மாநாடுகளில், நல்ல பல ஆய்வுக் கட்டுரைகளை எளிய தமிழ் நடையில் வழங்கியுள்ளார். சிங்கப்பூரில் புலவர் அ. முருகையன் செய்திருக்கும் இலக்கியத் தொண்டு மகத்தானது. அவர், ஞானியார் சுவாமிகளின் மாணாக்கர். 1962ஆம் ஆண்டு நடைபெற்ற சிங்கப்பூர் மலேசிய எழுத்தாளர் மாநாட்டில் அவர் வழங்கிய கட்டுரை, எழுத்துலகில் சிறந்து விளங்க விழை வோருக்கு ஓர் அருமருந்து என்று வருணிக்கப்படுகின்றது. அவர், தமிழ் முரசில் துணை

ஆசிரியராக இருந்துவிட்டு அதன்பின், வானொலித்துறையின் தலைவர் ஆனார். இந்த வட்டாரத்தில் நல்ல தமிழ் வளர அவர் போட்ட திட்டங்கள் தொலைநோக்கு மிக்கவை. இசைத்துறையில் தமிழ்ப்பாடல்கள் ஒலிக்க வேண்டும் என்னும் நோக்கிற்காகச் சிங்கை வானொலியில் தலைவராகப் பணியாற்றிய அவரும் துணைத் தலைவராகப் பணியாற்றிய ராமநாதன் ரமணியும், அறுபதுகளில் தமிழ்ப்பாடல்களைத் தொகுத்து, ராகம், தாளம் உள்ளிட்ட சுர விவரங்களோடு இந்திய நுண்கலைக் கழகத்திடம் ஒப்படைத்து மாணவர்களுக்கு அந்தப் பாடல்களில் பயிற்சி தருமாறு கேட்டுக் கொண்டதை யாராலும் மறக்கமுடியாது.

இது தவிர, அவரின் காலத்தில்தான் கூடுதலான கட்டுரை இலக்கிய வகைகள் வானொலியில் வளர்க்கப்பட்டன. அறுபது களில் செ.ப. பன்னீர்செல்வம் வழங்கிய இந்த வார சிந்தனைக்கு என்னும் நிகழ்ச்சி, ஒரு தலைப்பில் தொகுக்கப்பட்டு அரிய தமிழ்க் கட்டுரையாக 68ஆம் ஆண்டுமுதல் 70ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்றது. காமன்வெல்த் நாடுகள் பற்றிய அவரின் கட்டுரை களும் ஒலி வானில் உலா வந்தன. அவரின் நாளும் ஒரு குறள் பலரின் மனங்களைக் கவர்ந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நூல் நயம், இந்த வாரப் புத்தகம், உங்கள் தமிழ், பாட நேரம், சரசாள் இராஜாவின் சொற்சுவை, அ. முருகையன், பி. கிருஷ்ணன், கே. இராமையா, எம் கே நாராயணன், த. தட்சிணாமூர்த்தி ஆகி யோர் சேர்ந்து படைத்த எழுத்தாளர் பட்டறை, செப பன்னீர் செல்வம், எஸ் பீட்டர், ரெ சோமசுந்தரம் ஆகியோர் இணைந்து படைத்த தமிழில் பேசுவோம் ஆகியவை வானொலி வளர்த்த கட்டுரை இலக்கிய இன்பங்கள் எனலாம். எளிய தமிழ், எளிய இலக்கணம், இலக்கிய மலர், இலக்கிய மஞ்சரி, முத்தமிழ் மன்றம் ஆகியவற்றை நம்மால் மறக்க முடியாது. வானொலி வழங்கிய கட்டுரை இலக்கியங்கள், பெருவாரியான ஆய்வுகளில் பதியப் படாததால் மிக முக்கியமாகக் கருதப்படும் சில கட்டுரை வகை நிகழ்ச்சிகள் பற்றி இக்கட்டுரை குறிப்பிட விரும்புகிறது.

சொல்லுக்குப்பொருள், சொல்லும் பொருளும் என்பது பத்து நிமிட நிகழ்ச்சியாக வாரமொரு முறை ஒலிபரப்பப்பட்டது. அது இரு சொற்களின் பயனீட்டை விளக்கும் அதே வேளையில் சமூகத்தில் நடக்கும் சில முக்கிய சம்பவங்களையும் அந்தச்

சொல்லின் பயனீட்டோடு இணைத்து, வரலாற்றுச் சம்பவங்களையும் சேர்த்துச் சுவைபட இலக்கிய நயத்தோடு சொல்லிய நிகழ்ச்சியாகும். செ.ப. பன்னீர்செல்வம் எழுதிப்படைத்த அந்த நிகழ்ச்சி 1981ஆம் ஆண்டு தொடங்கி ஏழு ஆண்டுக்கும் மேலாக ஒலிபரப்பில் இருந்தது. நினைவில் வரலாறு என்னும் கட்டுரை நிகழ்ச்சி நேர்காணலுடன், சிங்கப்பூர் தொடர்பான வரலாற்றுச் செய்திகளையும் எளிய தமிழில் வாரமொரு முறை ஒலிபரப்பியது. அதுவும் ஏழாண்டுக்கு மேல் இடம்பெற்றது. அமரர், செந்தமிழ்ச் செல்வர் வை. திருநாவுக்கரசு அனைத்துலக விவகாரங்கள் என்னும் செய்தி மலரைக் கட்டுரை வடிவில் வழங்கினார்.

விஞ்ஞான உலகம் என்னும் நிகழ்ச்சிக்கு ஆசிரியர் திரு மு சங்கரலிங்கம் ஆக அண்மை அறிவியல் உண்மைகளைத் தமிழில் எல்லாருக்கும் புரியும் வகையில் எழுதி வழங்கினார்.

மருத்துவக் கேள்வி பதில் நிகழ்ச்சியில் விடைகளை வழங்கியவர் மறைந்தும் மறையாத டாக்டர் இராமசாமி. அவர் இறந்ததும் அவரின் நல்லுடலை எவ்வித சடங்கும் செய்ய அனுமதிக்காமல் மருத்துவ ஆய்வுக்கு என்று ஒப்படைத்தவர் அவர். தமிழ்மலர் என்னும் ஏட்டின் புரவலராகவும் சில காலம் இருந்தார். முன்னர், பள்ளிக்கூட ஒலிபரப்பில் பணியாற்றிப் பின்னர் கலாச்சார அமைச்சின் மொழிபெயர்ப்புப் பிரிவுக்குச் சென்ற மெ.திரு அரசு, (பேராசிரியர் மெ.சி. சுந்தரத்தின் சகோதரர்) வானொலிக்கென இலக்கிய விளக்கம் என்னும் நிகழ்ச்சியை எழுதினார். அந்தக் கட்டுரை இலக்கியத்தை வானொலியாளர்கள் படைத்தனர்.

நாளும் ஒரு குறள் முதன் முதலில் செ ப பன்னீர்செல்வத்தால் 81ஆம் ஆண்டு முழுமையாகப் படைக்கப்பட்டது என்றாலும் ஒரே நிமிட நிகழ்ச்சியாக நாள்தோறும் வழங்கப்பட்டு, நேயர் பலரின் நல்ல வரவேற்பைப் பெற்றது.

திருக்குறள் நூலின் குறட்பாக்கள் அனைத்தும் சிங்கப்பூர் வானொலியில் எவ்விதத் தடையுமின்றி தொடர்ச்சியாக வழங்கப்பட்டது. தொலைக்காட்சிச் செய்திப் பிரிவில் பணியாற்றிய சொக்கலிங்கம், மகாபாரதத்தில் தனி ஆர்வலராகவும் வல்லுநராக

வும் திகழ்ந்தார். அவர், பல்வேறு கோவில் ஆண்டு மலர்களுக்கும் உள்ளூர் ஏடுகளுக்கும் பாரதக் காவியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள தமிழ்ச் சொற்கள் குறித்தும் கற்பனை குறித்தும் கூட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். முருகப்பெருமான் என்னும் கட்டுரை இலக்கிய நூலை எம் கே நாராயணன் வெளியிட்டார். அதில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம் நாடகத்தின் வானொலி வடிவும் அவர் தயாரித்த வண்ணம் வெளியிடப்பட்டுள்ளது. அரசகேசரி சிவன் கோவிலில் உள்ள இறைநெறித் தத்துவ ஓவியங்களுக்கான விளக்க நூலையும் அவர் எழுதியுள்ளார் பி. கிருஷ்ணன், 50 களிலிருந்து அனைத்து ஆய்வு களிலும் படைப்பிலக்கியத் துறைகளிலும் ஆர்வம் காட்டிய ஆர்வலர். புதுமைப்பித்தன் சர்ச்சையின்போதும், அண்ணா அறிஞரா என்னும் விவகாரம் எழுந்தபோதும் கட்டுரைகளால் உள்ளூர் ஏடுகளில் கருத்துக்களைப் பொழிந்தவர் அவர்.

ஆனால் அவற்றை எல்லாம் அவர் நூல் வடிவாக்க வில்லை. ஆக்கியிருந்தால் மிகச் சிறந்த கட்டுரை நூல்கள் உள்ளூரில் கிடைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அரசியல் கட்டுரைகளை ஆணித்தரமான சான்றாதாரங்களுடன் எழுதியுள்ள வர் நா ஆண்டியப்பன். தமிழ் மலரில் எழுதி வந்துள்ள செய்தி யாசிரியர் ஆண்டியப்பன், திரைகடலோடி என்னும் சிறந்த முறை யிலான ''தன் வரலாற்று நூலையும் படைத்துள்ளார். அதில் சிங்கப்பூர்த் தமிழ் மலர் ஏட்டிற்கு அவர் ஆற்றிய பணிகள் விளக்கப் பட்டுள்ளன. பாஞ்சாலி சபதம், வெற்றித் திருமகன் ஆகியவற்றை யும் இலக்கிய அறிஞர்கள் வரலாற்றையும் தந்த அவர் இந்தக் கடலோடியில் பினாங்கு வள்ளல் அருள்மாமணி என்டியெஸ் ஆறுமுகம் பிள்ளை பற்றியும் எழுதியுள்ளார். மலேசியாவின் முதல் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானின் இனிய நண்பர் அவர் என்பதை இந்த நூல் வழி தெரிந்துகொள்ளமுடிகிறது. தாம் பணியாற்றும் தொலைக்காட்சித் தமிழ்ச் செய்திப்பிரிவு வர லாற்றையும் மிகச் சுருக்கமாக அந்த நூலில் அவர் அழகாக வரைந்துள்ளார்.

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் ஆண்டியப்பன், தமிழ் வளர்த்த சான்றோர் என்னும் நூலையும் தொகுத்து கட்டுரை இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளார்

என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரில் தமிழ்க் கவிதை என்னும் உள்ளூர்த் திறனாய்வு நூலை வி.ஆர்.பி. மாணிக்கமும் அவரின் மகளார் மா லோசினியும் 1997ஆம் ஆண்டு வெளியிட்டனர்.

கவிஞர் பரணன், முருகடியான், முல்லைவாணன், மு. தங்கராசன், ந. பழநிவேலு, க.து.மு. இக்பால், பெரி நீல பழநி வேலன், முத்துமாணிக்கம், வி. இக்குவனம், பாத்தேறல் இளமாறன், கவிஞர் சுகுமாறன், ஞானப்பிரகாசம் மோனிக்கா முதலியோரின் கவிதை நயம் பற்றி அந்த நூல் ஆராய்கிறது. தோப்புத்துறை என்னும் அரிய ஆய்வு நூலை ஆசிரியர் பி.மு முஹம்மது முஹயத்தீன் 2005 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். அதில் 1951ஆம் ஆண்டு வரையிலான ஒரு வரலாற்றுப் பார்வையை அவர் விரித்துள்ளார். சமய நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய, விளங்கும் தோப்புத்துறை தந்த மகான்களின் வர லாற்றைக் கூறும் நூலாக அது அமைந்திருந்தாலும், சிங்கப்பூருக்கு தமிழ்நாட்டுக்கும் இடையே இருந்த தொடர்புகளை அது தொகுத்துத் தருகின்றது. மரக்கல ஆயர்கள் பற்றியும் சயாம் இரயில்வேய்க்கு திருமணமாகாதவர்களே தேவை என்னும் அறிவிப்பு வந்தபோது, திருமணம் செய்துகொண்டு தப்பித்த கதையும் அதில் கட்டுரையாக வடிவெடுத்துள்ளது. ஆசிரியர் வி.ஆர் பி மாணிக்கம், புனிதப் பயணம், இறையருள் தரும் கிரிவலம் முதலிய பயண நூல்களைத் தந்துள்ளார்.

இறைநலம், அழகான வீடு அவனிபுகழ் நாடு முதலிய கட்டுரை நூல்களை ஆன்மீகத்துறை ஆர்வலர் ச. ஜெயராமன் தொகுத்துள்ளார்.

சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மாநாடுகளில் தொகுத்து வெளியிடப்பட்ட நூல்கள், இந்நாட்டு வாழ்க்கை முறை, வரலாறு, முதலியவற்றோடு, மொழி, இலக்கிய வளர்ச்சிகளையும் பதிவு செய்யும் ஆவணங்களாகத் திகழ்கின்றன. முதல் மாநாட்டின் தலைப்பு, நாம் எதிர்நோக்கும் சவால்கள், இரண்டாம் மாநாடு கடந்த 25 ஆண்டுகள், மூன்றாம் மாநாடு, தமிழர் வரலாறு, நான்காம் மாநாடு, அடுத்த பத்து ஆண்டுகள், ஐந்தாம் மாநாடு மொழியும் சமுதாயமும், ஆறாம் மாநாடு, ஏழாம் மாநாடு சிங்கப்பூர்ச்சமுதாயத்தில் இளையர் என்பது பற்றி ஆய்வு செய்தது.

எட்டாம் மாநாடு, சமதாயத்தில் தமிழ் இளையரின் நிலை. ஒன்பதாவது மாநாடு, துரித மாற்றம் காணும் சமுதாயங்களில் இளம் பெண்கள்.

பத்தாவது மாநாட்டில் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய முன்னோடி சி.ந சதாசிவ பண்டிதர் குறித்து டாக்டர் சுப திண்ணப் பன் ஆய்வு செய்தார். இளையர் மன்றம் ஓர் சமுதாய இயக்கம் என்பது குறித்து டாக்டர் அ வீரமணியும், சிங்கப்பூர் வரலாற்றில் திருமக்கோட்டை பெறும் இடம் என்பது பற்றி டாக்டர் கா இராமையா, வள்ளல் அமரர் பாலகுரு கோவிந்தசாமி செட்டியார் என்பது பற்றி நாடகக் கலைஞரும் ஆய்வாளருமான ச. வரதன், சிங்கப்பூர்ப் பொருளியல் துறையில் தமிழர்கள் என்பது பற்றி அ. இளங்கோவன் ஆகியோரும் ஆய்வுக் கட்டுரைகளை வழங் கினர்.

பொதுவாக டாக்டர் அ வீரமணி மதியுரைஞராக இருந்து நடத்திய தமிழ் இளையர் மாநாட்டுக் கருத்தரங்குகளின் ஆய்வடங் கல்களில் மிக அற்புதமான கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. பத்தாம் மாநாட்டில் வானொலி வளர்த்த தமிழ் பற்றி கட்டுரை யாசிரியருக்கு ஆய்வு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது.

டாக்டர் ஆ வீரமணி ஆற்றிய பணிகள் சிங்கப்பூர் இலக்கிய சமுதாயத் துறைகளில் யாராலும் என்றும் மறக்க இயலாதவையாக உள்ளன. அவர் ஜப்பானுக்குச் சென்றுவிட்டதால் அவரின் வேகத் துக்கு ஆய்வுகளை ஏற்று நடத்தும் இளையர் இல்லை என்பது வேதனையாகவே உள்ளது. சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக்கழகத் தில் தமிழ்த்துறை வேண்டும் என்பதற்காக அவர் பற்பல முயற்சி களை மேற்கொண்டவர் என்பதை மாணவர் சமூகம் அறியும். டாக்டர் அ வீரமணியின் முயற்சியால் வளர்க்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இலக்கியத்தைப் போலவே, தமிழ் ஆசிரியர் பலரும் கட்டுரை இலக்கியத்துக்கு முக்கியத்துவம் தந்து ஆவன செய்தார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கான மாதிரிக் கட்டுரைகள், ஆசிரியர் ஆர் கே வேணியால் வெளியிடப்பட்டன. ஜி.ஜி. எஸ் புத்தகசாலை உரிமையாளரும் ஆசிரியருமான வெ. இராமசாமி அவர்கள், மாணவர்களின் பயன்பாட்டுக்கென்று பல கட்டுரை நூல்களை எளிய நடையில் வெளியிட்டுள்ளார். ஆசிரியர்கள்

தம்பிநாதன், ஜெயதேவன் ஆகியோர் இவ்வகையில் முன்னோடிகளாகவும் திகழ்ந்துள்ளனர். ஆசிரியர் மு. தங்கராசன், அமுதத் தமிழ், தமிழ் எங்கள் உயிர், இன்பத் தமிழ் ஆகிய கட்டுரைப் பெட்டகங்களை வெளியிட்டுள்ளார். கட்டுரை வரைய விரும்பும் மாணவர் சமூகத்துக்கும் கற்பிக்க விழையும் ஆசிரியர்களுக்கும் அவை பேருதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

சிங்கப்பூரில் பலதுறை சார்ந்த கட்டுரைகள் வெளிவந்துள்ளன என்பது ஆழ்ந்து ஆராய்வோருக்குப் புரியும். ஆசியாவின் கண்கள் என்னும் ஒப்பீட்டுக் கட்டுரை நூலை இலக்கிய ஆர்வலர், ந. இராமகிருஷ்ணன் வழங்கியுள்ளார். தமிழ் மட்டுமன்றி, ஆங்கிலம், மலாய், சீனம் ஆகிய உள்ளூர் மொழிகளிலும் அவற்றின் மொழிபெயர்ப்பை வெளியிட்டு வள்ளுவர்க்கும் கன்பூசியசுக்கும் உள்ள அறிவுசார்ந்த தொடர்பை அவர் நிலைநாட்டியுள்ளார். விளையாட்டுத்துறை ஈடுபாடுகளில் சிங்கப்பூர்த் தமிழர்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தின் பதிவாக, மூன்று சிறந்த நூல்களைச் சிங்கப்பூர் விளையாட்டு மன்றம் வெளியிட்டுள்ளது. தமிழ்முரசின் துணை ஆசிரியர் வீ. பழநிசாமி அந்த மூன்றுக்கும் பொறுப்பாசிரியராக இருந்து நல்ல தமிழில் அவை வெளிவர உழைத்துள்ளார். வெற்றி மேடையில், சிங்கப்பூர்த் தமிழர்கள் கொண்டிருக்கும் ஆர்வத்தின் பதிவாக, மூன்று சிறந்த நூல்களைச் சிங்கப்பூர் விளையாட்டு நட்சத்திரங்களின் கதைகள், மின்னியல் சாதனைகள் - சிங்கப்பூரின் முன்னாள் விளையாட்டு நட்சத்திரங்களின் கதைகள், சாதிக்கும் உணர்வுகள்- சிங்கப்பூரின் இளைய விளையாட்டு வீரர்களின் கதைகள் ஆகிய தலைப்புகளில், விளையாட்டுத்துறை சார்ந்த கட்டுரை நூல்கள் சிங்கப்பூரில் வெளியிடப்பட்டுள்ளன. அறிவோமா நாம் என்னும் சிறந்த ஆய்வு நூலைத் தந்திருக்கும் வானொலிப்புகழ் மீனாட்சி சபாபதி, தம் கணவருடன் இணைந்து எளிய பாரம்பரிய வைத்தியங்கள் என்னும் நூலை 2006ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

அவரின் தந்தையார் சே.வே சண்முகம் சிறந்த சிறுகதை, நாடக ஆசிரியராக இருந்தாலும், இரணியூர் நாகரெத்தினம் தேவர் என்னும் அரிய வாழ்க்கை வரலாற்று நூலை எல்லோருக்கும்

புரியும் வகையில் எழுதியுள்ளார் என்பது வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை இலக்கியத்துக்கு நல்ல பங்களிப்பாகத் திகழ்கிறது.

பல்லாண்டு வானொலி தொலைக்காட்சி நாடகங்களில் பங்கேற்றுள்ள மூத்த கலைஞர் ச. வரதன், சிங்கப்பூரில் தமிழ் நாடக வரலாற்றை, சா ஹமீதுடன் இணைந்து வெளியிட்டுள்ளார். நடிப்புக் கலைஞர் ரே சோமசுந்தரம், சிங்கப்பூர்த் தமிழ் மேடை நாடகங்களை ஆய்வு செய்துள்ளார். சிங்கப்பூர்க் கலைத்துறை ஈடுபாட்டாளர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை ச. வரதனும், சா. ஹமீதும் வெளியிட்டுள்ளனர்.

கருமுதல் தாய்மை வரை என்னும் மருத்துவ ஆலோசனை நூலை, பிரபல வைத்தியர் டாக்டர் ஊர்மிளா பாபு 1998ஆம் ஆண்டு வெளியிட்டார். அது தாய்மைப்பேற்றின் பெருமைகளையும் தாய்மை அடைந்துள்ளோரார் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளையும் விவரித்துள்ள விதம், பயனுள்ள வகையில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. அக்யூபஞ்சரும் உங்கள் உடல் நலமும் என்னும் நூலை, கே முகம்மது இக்பால் எழுதி யுள்ளார். சிறந்த கட்டுரை நூலாக அது வெளியிடப்பட்டுள்ளது. மறைந்த பெரியவர் சா சோமையா, எனது பொதுப்பணி நினைவு கள் என்னும் நூல் வழி அரிய பதிவைச் செய்துள்ளார். தமிழ் மறை யான் தமிழர் திருநாள் பெருமைகளைப் பட்டியலிட்டுள்ளார். நெஞ்சில் பதிந்த சுவடுகளை, அ நா மெய்தீன் தந்துள்ளார். வரலாற்று நினைவுகளைக் கட்டுரைப் பொழிவாக வீ சுதர்மன் தந்துள்ளார். அது தமிழக அரசின் பாராட்டைப் பெற்ற நூல்.

கவிஞர் கடையநல்லூர் ஜமீலா கவிதை எழுதுவதோடு நின்றுவிடவில்லை. அவர், காதல் மலர்கள், ஆசை நெஞ்சங்கள், வரலாற்றுத் துளிகள் முதலிய கட்டுரைகளையும் நூலாக வெளி யிட்டுள்ளார். ஒப்பீடு செய்யவும் சிந்தனையை ஊக்குவிக்கவும் அவை உதவிக்கரம் நீட்டியுள்ளன என்பது வாசிப்பாளர்களுக்குத் தெரியும். அவரின் கண்களும் கட்டுரைப் பொழிவுதான். தமிழக வானிலே ஓர் ஆதவன் என்னும் அரசியல் பார்வை நூல் கலைஞர் கருணாநிதியைப் போற்றி சிங்கப்பூர் எழுத்தாளரும் அரசியல் வாதியாக இருந்தவருமான ஆர். வெற்றிவேல் எழுதிய நூல்.

சித. பழநிச்சாமியின் முத்துக்குவியல் இளையருக்கும் இதயம் உள்ள முதிய வருக்கும் ஏற்ற கட்டுரைத் தொகுப்பு நூலாக எழுதப்பட்டது. ஏ பி சண்முகம் பேசாத பேச்சைக் கட்டுரை நூலாக வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூர் இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவரும் தேசிய நூலக வாரியம், கடிதம் எழுதும் கலையை ஊக்குவிக்கும் நோக்கில், த்தாத்தா-பாட்டி எழுதிய கடிதங்கள் என்னும் வெளியிட்டுள்ளது. பழங்காலத்தை அறிந்துகொள்ள, தேர்ந்தெடுக்கப்பட்ட தாத்தாபாட்டிகள், தங்கள் பேரப் பிள்ளைகளுக்காக கடித முறையில் வழங்கும் சரித்திரச் செய்திகள், வாழ்வியல் ஆலோசனைகள் முதலியவை நூலுக்குப் பெருமை சேர்த்து, கட்டுரை இலக்கியத்துக்கு மாண்பு தந்துள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

சிங்கப்பூர் ஆ.சு. இராமலிங்கம், லண்டனில் குடியேறினாலும் இங்கிருந்தபோது செய்துவந்த பொதுத்தொண்டைத் தொடர்கிறார். நீரிழிவை வெல்வோம் என்னும் நூலை, எழுதியிருக்கும் அவர், அதை ஆங்கிலத்திலும் வெளியீடு செய்துள்ளார்.

டாக்டர் திருமதி வசந்தகுமாரி, எமதார்? எமன்தானார் என்னும் நூலின் வழி ஆன்மீகத்தை ஊக்குவித்துள்ளார். குடியரசின் ஆன்மீகக் கட்டுரையாளர் செம்பவாங் சி கிருஷ்ணன், அருளாட்சி அழைக்கிறது என்னும் நூலைத் தந்தது போல கண்டேன் கயிலையை, வழங்கியதோடு, சிங்கப்பூர் ஆலயங்கள் என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். அதில் வரலாறும் தகவலும் உள்ளவகையில் அவர் எழுதியுள்ளார். அதிகாலை டாட் காம் என்னும் இணைய இதழில் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகளைப் படைத்து வரும் திரு கிருஷ்ணன், சமயத்தமிழ்த் துறையிலும் ஈடுபாடு காட்டிவருவது கட்டுரை இலக்கியத்துக்குத் தனிப் பெருமை எனலாம்.

சமுதாய மாற்றத்திற்குரிய சிந்தனைகளை தேன்மொழி சோமசுந்தரம் பல்லாண்டுக்கு முன் தம் கட்டுரை நூலாக வெளியிட்டுள்ளார். ஒன்றாவது வடக்கு வட்டார இளையர் ஆய்வரங்க நூல் பலருக்கு கிடைக்காமல் போயிருக்கலாம். ஆனால் அது பயனுள்ள வகையில் பல கருத்துக்களை வடித்துத் தந்துள்ளது.

அதன் தொகுப்பு ஆசிரியர் சு. சரஸ்வதி. சிங்கப்பூர்க் கட்டுரை இலக்கிய வளர்ச்சிக்கு மற்றொரு வரவு, சு தே மூர்த்தியும் சிங்கப்பூர்த் திராவிடர் கழகமும் என்னும் நூல். அதில் இங்கு திராவிடர் கழக நிர்வாகத்தில் நடைபெற்று வந்த பல தமிழ்ப் பள்ளிகள் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. திருக்குறளை எளிதாகக் கற்பிக்கும் முறைகளை நூல் வடிவில் தந்து பெருமை சேர்த்து வரும் டாக்டர் ஈ.வி. சிங்கன், தமிழ்ச்சைவம் முதலிய கிடைத்தற்கரிய நூல்களைத் தம்முடைய சொந்த பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டு, சிங்கப்பூர்த் தமிழ் நூல் வெளியீட்டில் தனிப்பெயர் பெற்றுள்ளார்.

அவருடைய காரைக்குடிப் பயணங்கள் என்னும் நூல், மிகச்சிறந்த பயண நூல்களில் ஒன்றாகத் திகழ்கிறது. அதில் டாக்டர் சுப. திண்ணப்பன், செ.ப. பன்னீர்செல்வம் முதலியவர்களும் தமிழகத்தின் தலைசிறந்த விமர்சகர்களும் கட்டுரைகளை எழுதியுள்ளனர். அந்நூலில் சிங்கப்பூரிலிருந்து காரைக்குடி செல்லும் அனுபவங்கள் முறையாக வரையப்பட்டுள்ளன. இவ்வகையாக, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் கண்டுள்ள வரலாற்றுப் பெருமையைப் பல ஆய்வு நூல்களில் கண்டறியலாம்.

டாக்டர் சுப. திண்ணப்பன், டாக்டர் ஏ.ஆர்.ஏ. சிவகுமரன் ஆகியோரின் கூட்டு வெளியீடாகிய சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய வரலாறு, ஒரு கண்ணோட்டம், நாட்டின் இலக்கிய வளர்ச்சியைப் பார்வையிட உதவும் காலக் கண்ணாடி எனலாம். சிங்கப்பூர்த் தேசிய பல்கலைக் கழகத்தின் கலை மன்றம் அந்நூலை வெளியிட்டுள்ளது.

சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் நிதி நல்கை பெற்று, தமிழாசிரியர் தம் பணியிடைப் பயிற்சிக்காக, 1997ஆம் ஆண்டில் தமிழ்ப்பண்பாடு என்னும் நூல் வெளியிடப்பட்டது. அந்த ஒப்பாய்வு நூலை முனைவர் மேஜர் கதிர். மகாதேவன் படைத்துள்ளார். இங்கு தமிழாசிரியர்களுக்காக வழங்கப்பட்ட ஆய்வுகள் அதில் இடம்பெற்றுள்ளன. அதே ஆண்டில், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்க நிதியுதவியுடன், வெளியீடு கண்ட மற்றொரு நூல், டாக்டர் இரா. மோகனின் இலக்கியச் சால்பு. பண்பாட்டுப் பணியிடைப் பயிற்சி வகுப்பில், நடத்தப்பட்ட விரிவுரைகளின் திரட்டாக அது வெளியிடப்பட்டுள்ளது. 60களின் பிற்பகுதியில்

கொழும்புத் திட்ட வருகையாளர்களாகிய பேராசிரியர் தி பட்சி ராஜன், கோவிந்தசாமி ஆகியோரும் பல் இலக்கிய கட்டுரைகளை உள்ளூருக்காக எழுதி வழங்கியதோடு பல ஆய்வுகளையும் ஊக்கு வித்தனர். இடைக்கால, தற்காலத் தமிழிலக்கியங்கள் என்னும் தலைப்பில் அவர்கள் தொடர் சொற்பொழிவுகளை ஆசிரியர்களுக் காகச் செய்தனர்.

அவற்றில் ஒரு முத்தான முத்து, வயலில் விளைந்த தமிழ் என்னும் மரகத முத்து. அது ஓர் அரிய களஞ்சியம். திரு. தி. பட்சி ராஜன் மிக அழகான நடையில் அதை எழுதியுள்ளார். அது மட்டுமா? அந்தக் கட்டுரைத் தொகுப்பைத் தம் சிங்கப்பூர் நண்பர் களுக்காக காணிக்கையாகவும் ஆக்கியிருக்கிறார். அவ்வளவு தானா? இல்லையில்லை? பல இன மக்களின் பண்பாட்டுச் சங்கமக் குறியீடுகள் எனச் சிங்கப்பூர்க் காட்சிகளைப் பேராசிரியர் பட்சிராஜன் விவரிக்கிறார். சிங்கப்பூரர்களை நேசிக்க மட்டுமே தெரிந்த நண்பர்கள் என்றும் போற்றுகிறார்.

சிங்கப்பூர்ப் பல்கலைக் கழகம், கலை நிலைய ஏற்பாட் டில், 2004ஆம் ஆண்டு, செப்டம்பர் 11, 12 ஆகிய தேதிகளில் நடை பெற்றது, உலக அரங்கில் தமிழ் என்னும் மாநாடு, அதில் குடியர சின் இலக்கண ஆசான், பா. கேசவன் (சித்தார்த்தன்) சிங்கப்பூரில் தமிழ் மொழிக்கல்வி ஒரு கண்ணோட்டம் என்னும் அரிய கட்டுரையை வழங்கியிருக்கிறார். தமிழ் இலக்கணத்தை எளிதில் கற்றுக்கொள்ள அவர் எழுதிய இலகு தமிழில் இனிக்கும் தமிழ் இலக்கணம் என்னும் அந்நூல் பல பரிசுகளைப் பெற்றுள்ளதோடு இலக்கண ஆர்வலர்களுக்குரிய நல்ல வழிகாட்டி நூலாகவும் திகழ்கிறது.

12 கட்டுரைகள் அடங்கிய சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் ஆழமும் அகலமும் என்னும் கட்டுரை நூல், 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. நூலாசிரியர் டாக்டர் எம்.எஸ். சிறீலட்சுமி பல்வேறு கோணங்களில் நாட்டின் ஆதி இலக்கியங்கள் பற்றியும் தாம் திரட்டிய தகவல்கள் பற்றியும் அதில் விவரித்துள்ளார். அதற்கு முன் சிறந்த முறையில், இலக்கியப் பாலம்-பங்கும் பணியும் என்னும் நூலை அவர் 1993ஆம் ஆண்டு வெளியிட்டார். டாக்டர்

எம்.எஸ். சிறீலட்சுமியின் புதுமைப்பித்தன் இலக்கியச் சர்ச்சை (1951-52) நல்ல ஒரு பதிவேடு. சிறந்த ஆவணம். சிங்கப்பூரர்களின் தமிழ் ஆர்வம், தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் குறித்த அவர்களின் பார்வை ஆகியவற்றை அறிய அது உறுதுணையாக விளங்குகிறது. திரு. வை. திருநாவுக்கரசு, முதலிய பலரின் நேர் காணலை அதில் இடம்பெறச் செய்தது போற்றுதற்குரியது எனலாம்.

பயணத் தமிழர்கள், தங்களைச் சிங்கப்பூரர் ஆக்கிக் கொண்டபோது ஏற்பட்ட அனுபவங்களின் தொகுப்பு நூல், பெரியவர் பெ. வடிவேலுவின் நெஞ்சின் நினைவுகள். அது சிறந்த சுயசரிதமாக அமைந்துள்ளது.

1937ஆம் ஆண்டு சிங்கப்பூர் வந்த அவர், தம் வாழ்வில் நேர்ந்தவற்றை, நாட்டில் தாம் கண்டவற்றைப் பதிவு செய்துள்ளார். எனது ஒளி விளக்குத் திருக்குறள் என்னும் நூலை தந்துள்ளவர் மற்றொரு மூத்தவர், சி. குமாரசாமி. அது சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மன்றத்தால் வெளியிடப்பட்டது.

சிங்கப்பூர்ப் பாசீர் பாஞ்சாங் பகுதியில் பல்லாண்டுகள் வசித்து வரும் அவர், தம் வாழ்க்கை அனுபவத்தை அதில் விளக்கி யுள்ளார். குமாரசாமியின் தமிழ்நாட்டுக் கவிஞர் செவ்வியன் செப்பமாகத் திரட்டியுள்ளார். மற்றொரு வாழ்க்கைப் பயண நூல், கவிஞர் ஆ. பழநியால் வெளியிடப்பட்ட என் வாழ்க்கைப் பயணம் என்னும் சிறிய நூல். அதில் பல சிந்தனைகளை அவர் வெளியிட் டுள்ளார். சப்பானியர் கால அவலங்கள் முதல் 1981ஆம் ஆண்டு ஹெண்டர்சன் சமூக மன்றத் தலைவர் ஆனது வரை அவர் விவரித் துள்ளார். பாவலர் நெஞ்சத்தை ஆய்ந்து பார்த்தவர் அ. வீரமணி. தமிழா என விளித்து சிந்தித்துப் பார்த்திருப்பவர் ஆசிரியர் சிவசாமி. இப்படிக்கு நான் எனப் படச்சுருள்வழி பார்வையைச் செலுத்தி யிருப்பவர் கவிஞர் மா. அன்பழகன். வானொலி தொலைக்காட்சி கலைஞராகத் திகழ்ந்த பெ. கோவிந்தராசுவின் என் வாழ்க்கைப் பேரேட்டில் சில ஏடுகள் என்றும் உயிரோட்டமுள்ள ஒரு கட்டுரை நூலாகத் திகழும் என்பதை யாராலும் மறுக்க இயலாது.

சிங்கப்பூரில் மிக அதிகமான பயண நூல்களைத் தந்திருப் பவர்களில் திரு. எஸ்.எஸ். சர்மா முக்கிய இடம் வகிப்பவர் என்பது

வெள்ளிடைமலை. அவர் பயணக் கட்டுரை எழுதும்போது, செல்லும் இடத்தைப் பற்றி மட்டுமன்றி, அங்குள்ள பண்பாட்டுச் சூழல் குறித்தும் வினா எழுப்பி சிந்திக்க வைக்கும் பாணியில் கட்டுரைகளை வடிவமைக்கும் திறன் பெற்றவர்.

மற்றொரு மூத்த எழுத்தாளர் வை. சுதர்மன். அவர், தாம் சென்ற நாடுகளைப் பற்றியும் அங்குள்ள பண்பாடு பற்றியும் பல கோணங்களில் படம் பிடித்துக்காட்டுவதில் வல்லவர். பெ.த. இராஜனின் சிங்கப்பூர் வரலாற்றில் வாழுகின்ற தமிழர் என்னும் வரலாற்றுக்குறிப்பு நூலும் பல தகவல்களைத் தொகுத்து தந்துள்ளது. 1959ஆம் ஆண்டில், மலாயா நண்பன் வெளியிட்டு வந்த சிப்பந்திகளின் சிந்தனை நல்ல கட்டுரை வளத்தைக் கொண்டது. அதை எழுத்தாளர் நோட்டன் மிஸ்கீன் படைத்திருந்தார். அப்போது மருத்துவக் கட்டுரைகளைப் படைத்துப் புகழ் பெற்றிருந்த பிஸிஷியன் இப்ராகிம் பற்றியும் அறியமுடிகின்றது. நாகூர் எம்.எம். புகாரியும் சிறந்த கட்டுரைகளை நவநீதம் இதழில் எழுதிவந்தார். 2004ஆம் ஆண்டில், தமிழ்க் கலை அச்சகத்தின் வெளியீடாக நா. கோவிந்தசாமியின் கல்வியியல் ஆய்வுகளைக் கல்விக் கழகத்தின் டாக்டர் சீதாலட்சுமி வெளியிட்டு அமரர் நா. கோவிந்தசாமியின் ஆறுவிதமான கல்வித் துறைப் பணிகளைப் பதிவு செய்துள்ளார்.

புதிய நிலா பத்தாமாண்டு சிறப்பு மலர் போற்றுதற்குரிய பல அரிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. அதன் ஆசிரியர் மு. ஜஹாங்கீர், அதைச் சிற்றிதழாகத் தொடங்கியிருந்தாலும், புலம் பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும், தமிழ் நெஞ்சங்களை யெல்லாம், கவரும் பல்சுவை இதழாக அமைத்து, தமிழுக்கும் தமிழ்ச்சமுதாயத்துக்கும் அளித்துள்ள அமைதியான பங்களிப்பைப் பதிவு செய்வதே நூலின் நோக்கம் என்று தெரிவித்துள்ளார்.

புதிய நிலா சிறப்பு மலரில், சிங்கப்பூரில் பல்லாண்டு வாழ்ந்து சில ஆண்டுகளுக்கு முன் நாகூரில் இறைவனடி சேர்ந்த சொல்லரசு ஜாபர் முகைதீனின் அரிய கட்டுரை ஒன்றும் இடம்பெற்றுள்ளது. தமிழ் முஸ்லிம்களின் இலக்கியப் பணி என்னும் அந்த அரிய கட்டுரையின் அடிப்படையிலே விரிவான நூல் எழுதலாம். சிங்கப்பூரில் தமிழ் முரசு ஏட்டின் ஆசிரியராக

இருந்து, மொழியால் தமிழர்களை ஒன்றுதிரட்டி, தமிழர் திருநாளை ஏற்படுத்தி வழிநடத்திய தமிழவேள், கோ சாரங்கபாணி பற்றி பல நூல்கள் வந்துள்ளன என்றாலும், சீர்திருத்தம், முன்னேற்றம் ஆகிய ஏடுகளுக்கும் முக்கிய பங்களிப்பைச் செய்துள்ள கோ சா அவர்களைப் பற்றி நண்பர் இலியாஸ் எழுதியுள்ள தமிழவேள் சாரங்கபாணி என்னும் அரிய நூல் பல ஆய்வுகளில் மேற்கோள் காட்டப்படும் வண்ணம் சிறப்புப் பெற்றுள்ளது. சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகச் சிறப்பு மலர்கள், தமிழ் மொழிப் பண்பாட்டுக் கழகத்தின் தமிழ்மணி, இங்குள்ள சங்கங்களில் சிறப்பு மலர்கள், டன்லப் ஸ்திரீட்டிலுள்ள பள்ளிவாசல் திறப்பு விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர் என்று பலவற்றைப் புரட்டிப் பார்த்துப் படித்து ஆராயும்போது, சிங்கப்பூரில் கட்டுரை இலக்கியம் கண்டிருக்கும் வளர்ச்சியை நன்றாக உணர முடியும்.

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகச் சிறப்பு மலர்கள், கட்டுரைத் தமிழுக்குச் சங்கப் பலகையாகத் திகழ்கின்றன என்பது திண்ணம். குறிப்பாக, 2001ஆம் ஆண்டு வெளியீடு கண்ட அந்தக் கழகத்தின் எழுத்தாளர்களின் அறிமுக நூல், 59 எழுத்தாளர்களைப் பற்றி விவரிக்கின்றது. அவை சிறு கட்டுரைக் குறிப்புகளாக இருந்தாலும் 1931ஆம் ஆண்டு எழுதத் தொடங்கிய ந. பழநிவேலு தொடங்கி, 1994ஆம் ஆண்டில் புதுமைப்பெண் என்னும் தலைப்பில் கவிதை எழுதிய வீர. விஜயபாரதி வரை தொகுத்து நிற்கின்றது. இந்த ஆய்வுக் கட்டுரைக்குக் கிடைக்காத பல தகவல்களும் இருக்கக் கூடும். அவை கிடைத்தால், இது நூல் வடிவம் பெறும்போது அவற்றைக் கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்ள ஆய்வாளர் விரும்புவார்.

முடிவுரைக்கு முன் சில கூறுகள்

ஆதி நாளில் தமிழர் திருநாள், பொங்கல் விழாக்கள் கொண்டாடப்படும்போது, கட்டுரைப்போட்டியும் கண்டிப்பாக நடத்தப்பட்டதால், பல கட்டுரையாளர்கள் உருவாக அது வழி விட்டது. ஆனால் இன்று கவிதை, சிறுகதை, நாடகம் என்று நிறுத்திவிடுவது தெரிகிறது. அதிலும் குறைவான நாடகப்போட்டிகள் கட்டுரை அறவே இல்லை. ஊடகத்துறை, குறிப்பாக இணையத்தில் நிறைய ஏடுகள், கட்டுரையை ஊக்குவிக்கின்றன.

ஆய்வாளர் கீற்று டாட் காமில் சமூகம் சார்ந்த சில கட்டுரைகளை எழுதியிருப்பதுபோல இன்னும்பல வரவேண்டும் என்று விரும்புகிறார்.

சிங்கப்பூர்க் கட்டுரை வளர்ச்சிக்குச் சில பரிந்துரைகள்

சிங்கப்பூரர்கள், கட்டுரைத்துறையில் ஆர்வம் கொள்ள ஊக்குவிக்கும் வகையில் பல நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

தேசிய நூலகத்தின் ஆதரவுடன் இயங்கிவரும் வாசகர் வட்டம் அண்மையில் பல வட்டாரங்களைப் பற்றி அந்தந்த வட்டாரங்களில் வசித்தோர் உரையாடலையும் அதன் தொடர்பிலான கேள்வி பதில் அங்கத்தையும் நடத்தி வருகின்றது. அது நூல் வடிவம் பெற்றால், கட்டுரைக் களஞ்சியங்களும் தகவல் பெட்டகங்களும் அடுத்த தலைமுறையினருக்கும் பயன்தர முடியும்.

பள்ளிகளில், கல்லூரிகளில் விழாக்களில் சிறுகதை, கவிதை, போட்டிகளை அறிவிப்போர், கட்டுரைப் போட்டிகளையும் அறிவிக்க வேண்டும். கட்டுரை நூல்களை எழுதியிருப்போரும் கிடைத்தற்கரிய நூல்களை வைத்திருப்போரும் அவற்றின் ஒரு பிரதியைத் தேசிய நூலக வாரியத்தின் ஆய்வுப் பகுதியிடம் ஒப்படைத்தால், அதைக்கொண்டு பலரும் பயனடைய முடியும்.

இன்று நம்மிடையே வாழும் மூத்த எழுத்தாளர்களும் சமூக ஆர்வம் கொண்டவர்களும் தங்கள் வாழ்க்கைப்பாதையில் சந்தித்த பல அனுபவங்களைக் கட்டுரைகளாக வடித்துத்தர வேண்டும். சிறந்த கட்டுரை நூல்களும் பாடங்களில் வைக்கப்பட வேண்டும்.

விமர்சனங்கள், கருத்துரைகள் எனத் தொடங்கப்பட்டால் நூல் வாசிப்புக்கூட, சிறந்த கட்டுரைகளை உருவாக்கத் தூண்டும்.

எதிர்காலம்

கட்டுரை இலக்கியத்துக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. கட்டுரை கட்டுக்கதையாகிவிடக் கூடாது. அப்போதுதான் அது வரலாற்றுக் கட்டுரையாக, வாழ்வியல் கட்டுரையாக, எதிர்கால சந்ததிகளுக்கான கட்டுரையாக வழிகாட்ட முடியும். சிங்கப்பூரில் கட்டுரை வளர்வதற்கு மூத்த தலைமுறையினர் தங்கள் வாழ்வியல் அனுபவங்களை எழுத்தில் வடிக்கத் தொடங்கினால், அது இளையரிடையே நல்ல ஊக்கத்தை உருவாக்கும் என்பது உறுதி. சமயம், மொழி, இலக்கியம், வாழ்வியல் எனப் பல துறைகள் இருப்பதால், கட்டுரை என்பது பல துறை சார்ந்ததாக அமைய முடியும்.

சிங்கப்பூர்த் தமிழ் நாடக வரலாறு

- ச. வரதன் &
அப்துல் கமீது

சிங்கப்பூரில் தமிழ் மேடை நாடகக் கலை 1925ஆம் ஆண்டில் அறிமுகம் கண்டது. அதுவும் தமிழ்நாட்டிலிருந்து பொருளீட்டும் நோக்கத்தில் சிங்கப்பூருக்கு வருகை மேற்கொண்ட நம் மூதாதையர்களால் இந்தக் கலை அறிமுகப்படுத்தப்பட்டது.

உழைப்பே முதன்மையாகக் கொண்டிருந்த நம் முன்னோர் களுக்குப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மிகத் தேவையான ஒன்றாக இருந்தது.

இவ்வகையில்தான், 1925ஆம் ஆண்டிலேயே காதர் பாட்சா மற்றும் மெய்தீன் சாகிப் ஆகியோர்களைக் கொண்டு நாடகங்கள் நடத்தப்பட்டுள்ளன. அடுத்து ஜகந்நாதன் நாயுடு பாய்ஸ் கம்பெனி, புளியம்பட்டி பாய்ஸ் கம்பெனி போன்ற நாடகக் குழுக்களும் நாடகங்களைப் படைத்துள்ளனர். இவர்களின் நாடகங்களில் இசை வருணனைப் பாடல்கள் மிகுந்து காணப்பட்டன.

இந்தக் காலக்கட்டத்தில் வந்த மேடைச் சக்கரவர்த்தி என அறியப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களும் நடைபெற் றுள்ளன. இவரை அடுத்த வந்த நாடகக் குழுவான மனமோகன அரங்கசாமி நாயுடு நாடகக் குழு சிறந்த காட்சி ஜோடனைகள், தந்திரக் காட்சிகள் கொண்டு நாடகங்களைப் படைத்தனர். 1930ஆம் ஆண்டு முதல் 1941ஆம் ஆண்டுவரை சிங்கப்பூரில் நீண்டகாலம் நாடகங்களைப் படைத்தளித்த நாடகக் குழு என்பது மட்டுமன்றி

உள்ளூரிலும் நாடகங்கள் தயாரித்து மேடையேற்ற வேண்டு மென்ற ஆர்வத்தை வளர்ப்பதில் பெரும் பங்காற்றியுள்ளது.

இதனால் ''சுகுணசுந்தரம் அல்லது ஜாதி பேதக் கொடுமை'' கௌரி சங்கர் அல்லது கிழமணக் கொடுமை' 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' 'ஜானி ஆலம்' 'இஸ்தாகியர்' என்ற ஐந்து நாடகங்கள் தமிழர் சீர்திருத்தச் சங்கத்தினரால் மேடையேற்றப்பட்டது. இந்நாடகங்களுக்கான வசனம், பாடல் களைக் கவிஞர் ந. பழனிவேலு எழுதியிருந்தார்.

அக்காலக்கட்டத்தில் தமிழ் மக்களிடையே பற்றியிருந்த மூடநம்பிக்கைகளையும் சமுதாயச் சீர்கேடுகளையும் களைய பாடுபடும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம், சமுதாய அலங்கோலங்களை நாடகம் வழி எடுத்துக் காட்டி தமிழ் பேசும் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் இந்நாட கங்களை எழுதி அரங்கேற்றம் செய்தது.

ஜப்பானியர் ஆட்சிக்காலமான 1942-1943 ஆகிய ஆண்டு களில் கூட, ''சந்திரகாந்தா'' ''தேசிங்கு ராஜன்'' என்ற தலைப்பில் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. ஆனால், ஜப்பானியர் ஆட்சிக்குப் பின்னர் சுமார் பத்து ஆண்டுகளுக்கு நாடகக் கலையின் பால் மக்கள் ஆர்வங்காட்டவில்லை. அவர்களின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக் கொள்ளும் முயற்சியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

பின்னர் 1950களிலிருந்து 1968ஆம் ஆண்டுவரை தமிழ் நாடகத் துறை நல்ல வளர்ச்சியைக் கண்டது. இருபத்து ஐந்துக்கும் குறையாத நாடக மன்றங்கள் சிங்கையின் பல பகுதிகளில் தோன்றி, போட்டிப் போட்டுக் கொண்டு நாடகங்களைப் படைத் தனர். தனிநபர்களான எஸ்.எஸ். சர்மா, எம்.கே. நாராயணன், ஆருர் சபாபதி, எஸ்.வி நாதன் ஏ.பி. சண்முகம் போன்றவர்களும் நாடகக் கலையின் மேம்பாட்டுக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இருப்பினும், நாடகக் கலைக்கு உயிரோட்டமளித்தது 1955இல் தொடங்கப்பட்ட பகுத்தறிவு நாடக மன்றம் எனக் கூறலாம். வசனங்களே நாடகத்தின் உயிர் நாடியாகக் கொண்டு,

மறுமலர்ச்சிக் கருத்துக்கள் நிரம்பிய பத்துக்கும் மேற்பட்ட நாடகங்களை இம்மன்றம் அரங்கேற்றி மக்களின் அபிமானத்தைப் பெற்றது.

இதே வேளையில், தமிழகத்திலிருந்து கே.ஆர். ராமசாமி, டி.கே.எஸ். சகோதரர்கள், எம்.எஸ் திரௌபதி, டி.கே. ராமச் சந்திரன் ஆகியோரின் நாடகக் குழுக்களும் நாடகம் நடத்திச் சென்றனர்.

1965ஆம் ஆண்டிலிருந்து சுமார் நான்கு ஆண்டுகளுக்கு சிங்கை நாடகத் துறையில் தொய்வு ஏற்பட்டது. 1965ஆம் ஆண்டு ஆகஸ்டு 9ஆம் தேதியன்று சிங்கப்பூருக்கு முழுச் சுதந்திரம் கிடைத்த பிறகு ஏற்பட்ட துரித வளர்ச்சியினால் ஒரு வட்டார மக்கள் இடம் பெயர்ந்து பல வட்டாரங்களில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். போதிய பொருள் வசதியைக் கொண்டிராத இந்த மன்றங்கள் உறுப்பினர்களையும் இழந்து, இறுதியில் நாடகம் நடத்தும் சாத்தியமும் இல்லாது போயிற்று.

பிறகு, 1971ஆம் ஆண்டிலிருந்து நாடகக் கலைக்குப் புத்துயிர் கொடுத்தது சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கம். சிங்கை கலைத் துறையில் தனித் தனியாகப் பிரிந்து நின்ற கலைஞர்களை ஒருங்கிணைத்து ஒரு குடையின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என உணர்ந்து உருவாக்கப்பட்டது. இச்சங்கம் ஆண்டுக்கு ஒரு நாடகத்தை நிச்சயம் அரங்கேற்ற வேண்டுமென்ற கொள்கையுடன் செயல்படுகிறது.

சிங்கப்பூர் சூழ்நிலையில் சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கைப் பின்னணிகளைப் பிரதிபலிக்கும் நாடகங்களை அரங்கேற்றி வரும் இச்சங்கம், முழுநீள நகைச்சுவை, சோகம், சரித்திரம் போன்ற சுவைகளைக் கொண்ட நாடகங்களுடன் சரித்திரம், மனோதத்துவ அறிவியல் நாடகங்களையும் மேடையேற்றியுள்ளது.

இச்சங்கத்திற்கு அடுத்து, இந்தியக் கலை மன்றமும் இளையர்களால் தொடங்கப்பட்ட ரவிந்திரன் நாடகக் குழுவும் சிங்கை நாடகக் கலை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன.

இதுபோல் சிங்கப்பூர் வானொலியும் ''சிலப்பதிகாரம்'', ''நளதமயந்தி'', ''மனோன்மணீயம்'' போன்ற மேடை நாடகங்களை அரங்கேற்றி, நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

இதற்கிடையில், திரைப்படக் கலைஞர்களான சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், மனோகர், எஸ்.வி. சேகர், கிரேஸி மோகன் ஆகியோரும் அவ்வப்பொழுது சிங்கப்பூருக்கு வருகை தந்து நாடகங்களை நடத்திச் சென்றுள்ளனர். அவர்களுள் மனோகரின் நேஷனல் தியேட்டர்ஸ் சுமார் 60 பேர் கொண்ட குழுவுடன் 10 பிரமாண்டமான நாடகங்களை மேடையேற்றி இருக்கிறது.

இதுகாறும் நாடகக் கலையின் வளர்ச்சிக்கு நாடக மன்றங்கள் ஆற்றிய பணிகளை சுருக்கமாகப் பார்த்தோம். இனி சிங்கப்பூர் அரசாங்கம் இக்கலையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் எவ்வாறு உதவுகிறது என்று பார்ப்போம்.

நாடக விழா, கலை விழா, இளையர் நாடக விழா, பாரம்பரிய நாடக விழா, நடத்துவதோடு இதில் பங்கு பெறும் குழுக்களுக்குப் பொருளுதவியும் செய்கிறது. தரமான நாடகங்களைத் தெரிவு செய்து ''சிறந்த நாடகப் பரிசு'' வழங்குகிறது.

நடிப்புத் தரத்தை உயர்த்தும் வகையில் ''சிறந்த நடிகர்'', ''சிறந்த நடிகை'' பரிசுகளையும் நாடக எழுத்தாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன் ''நாடகம் எழுதும் போட்டி'' நடத்தி தரமான எழுத்துக்கு வெகுமதியும் வழங்குகிறது.

மிகக் குறைந்த மாத வாடகையில் நாடகம் வளர்க்கும் அமைப்புகளுக்கு இடவசதி கொடுத்ததுடன் நாடக அமைப்புகள் நடத்தும் நாடகம் தொடர்பான நிகழ்ச்சிகளுக்குப் பண உதவி செய்கிறது.

கலைஞர்களின் கலைத்திறன், ஆக்கத்திறன் மற்றும் பாராட்டுக்குரிய சாதனைகள் இவற்றினை அங்கீகரிக்கும் விதமாக ''கலாசாரப் பதக்கம்'' என்ற உயர் விருதை வழங்கி கௌரவப் படுத்துகிறது.

அரசாங்கத்தின் கலை வளர்ப்புத் திட்டங்கள் இவ்வாறு அமைந்திருக்க, உயர் கல்விக் கூடங்களும் அவ்வப்போது பள்ளிகளுக்கு இடையேயான நாடகப் போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்கி வருகின்றன. இத்தகைய முயற்சி நாடகக் கலையின்பால் மாணாக்கர்களை ஈர்த்து, இக்கலையின் வாழ்வுக்கு உதவுவதே இதன் முக்கிய நோக்கமாகக் கருதலாம். எனவே இக்கலை வாழ, வளர இந்த இளையவர்கள் எவ்வாறு தொடர்ந்து ஈடுபடுவார்கள் என்பதை காலம்தான் பதில் கூறும்.

சிங்கப்பூரில் சிறுகதை இலக்கியத்தின் வரலாறும் முன்னேற்றமும்

டாக்டர் சீதாலட்சுமி
ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள்
தேசியக் கல்விக் கழகம்,
சிங்கப்பூர்

தமிழில் கவிதை என்பது தனக்கென ஓரிடம் பெற்றுத் திகழ்ந்த மொழிவகை. அதிலும் தமிழில் மரபுவழிக் கவிதை எழுதுவது மதிப்புமிக்கதாகக் கருதப்பட்ட காலமும் கவிதை இலக்கியங்களே பல நூற்றாண்டுகளை ஆட்சி செய்த காலமும் இருந்தன. இன்றும் கவிதையின் இடம் தனித்துவமானதுதான் என்றாலும் அதற்கும் ஓர் ஆரோக்கியமான போட்டி வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. தமிழ் மொழியில் கவிதை என்பது முற்காலத்தில் செய்யுளாகவும் அறிவுலகில் பெருமை மிக்கதாகவும் மதிக்கப் பட்டது. கூத்து போன்ற படைப்புகளிலும் பாடல்மொழி முக்கிய இடம் பெற்றிருந்தது. செய்யுளின் கருத்தை எடுத்துக்கூற வசனம் உதவியது. எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் பேசவும் எழுதவும் வசனத்தைப் பயன்படுத்தினர். தபால் எழுத வசனம் உதவியது. கணக்குவழக்கு, சொத்து சுகம் பற்றிய தகவல்கள், திருமணத் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றுக்கு வசனம் உதவியது என்று கூறும் பிரபஞ்சன் (2005), இலக்கியத்திற்கு வசனம் உதவும் என்ற சிந்தனையை வீரமாமுனிவர் ஏற்படுத்தியதை எடுத்துக்கூறுகிறார் (1680-1746). பரமார்த்த குரு கதைக்குப் பயன்படுத்தப்பட்ட வசனம், தற்போது சிறுகதை, நாவல், நாடகம் என்று பல நிலைகளில் வீறுநடைபோட்டு வந்திருக்கிறது. பேச்சுத்தமிழைக்

கற்பவர்க்கு அறிமுகப்படுத்துதல், சின்னசின்ன வாக்கியங்களுக்கு முக்கியத்துவம் தந்து தமிழ்ப் பயிற்சியில் இருந்த கடுமையைக் குறைத்தல் என்பது முதல் நோக்கமாகவும் பிழை இல்லாமல் தமிழ் எழுதும் முறையை மாணவர்களுக்குச் சொல்லுதல் இரண்டாம் நோக்கமாகவும் அமைந்திருப்பதைப் பிரபஞ்சன் எடுத்துக்கூறு கிறார். ஒருநாட்டில் பேசப்பட்ட கதைக்கு இலக்கிய வடிவம் தரும் வகையில் வீரமாமுனிவர் வசனத்தை முதலில் கையாண்டுள்ளார். மேலை நாட்டிலிருந்து இறக்குமதியான இந்தச் சிறுகதை, தொழில் புரட்சியின் பின்னணியில் தோன்றிய தற்கால இலக்கிய வடிவ மாகவும் வீறுகொண்ட வடிவமாகவும் விளங்குகிறது. மகிழ் வித்தல், அறிவூட்டல் என்ற அடிப்படையில் சமூகத்துக்குத் தேவை யான செய்திகளைச் சொல்ல சிறுகதை என்ற வடிவம் பயனுடைய தாகவும் வசதியானதாகவும் இருந்தது.

சிங்கப்பூரில் தமிழ்ச்சிறுகதை, தோற்றமும் முன்னேற்ற மும் குறித்த இக்கட்டுரை, இதுவரை சிறுகதை குறித்துப் பேசப்பட்டுள்ள முக்கியக் கருத்துக்களையும் ஆய்வுகளையும் எடுத்துக்காட்டும் படைப்பாக அமைகிறது. ஆய்வின் அளவு, படைப்பிற்கான நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் பரந்த பல செய்திகளின் தொகுப்பாக இக்கட்டுரை அமைகிறது. அதற்குமுன், தமிழ்ச்சிறுகதை எனும்போது அது தமிழகம், இலங்கை என்ற பல களங்களில் தன் வாழ்வுச்சோதனைகளைச் சந்தித்துத் தன்னை மேம்படுத்தி வந்துள்ளதைச் சுருக்கமாகப் பார்த்துவிட்டுப் பின் சிங்கப்பூருக்குச் செல்வோம்.

தமிழகத்தில் சிறுகதை: ஒரு மேலோட்டபார்வை

தமிழகத்தில் 1800களில் வெளிவந்த கதைகள், மொழி பெயர்ப்புக்கதைகள், கட்டுக்கதைகள், நீதிநெறிக் கதைகள், பழங்காலக் கருத்துக்கள் குறித்த கதைகள், ராஜாராணிக் கதைகள் யாவும் கா சிவத்தம்பி கருதிய மாதிரி வசன இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு உதவியதாகவும் இருபதாம் நூற்றாண்டின் சிறுகதை தோன்றுவதற்கேற்ற சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்த தாகவும் சிவத்தம்பியை மேற்கோள் காட்டி ராஜ் கௌதமன் (2005) தெரிவிக்கிறார். 1900களில் யதார்த்த நோக்கில் கதைகள் படைக்கப் பட்டன. சமூகத்திற்கும் நாட்டுக்கும் அவசியமாகத் தேவையான

சீர்திருத்தக் கருத்துகள் படைப்பில் இடம்பெற்றன. கலை கலைக்காகவே என்று இல்லாமல் கலை வாழ்க்கைக்காக என்ற நிலையில் அங்கிருந்த தொடர்புச் சாதனங்கள் கதைகளைப் பிரசுரித்தன. மக்களிடையே மாற்றங்கள் உருவாக அதிலும் குறிப்பாக, சமூக, நாட்டு விடுதலை, மூடநம்பிக்கைகளைப் போக்குதல் ஆகியவற்றுக்காகக் கதைகள் எழுதப்பட்டன. கற்பனை என்பது கதையில் தேவை என்றாலும், மனித வாழ்க்கைக்கு அவசியம் என்ற நிலையில், பெண் கல்வி, கல்வியின்பெருமை, சேவைப் பண்பு மிக்க பட்டத்தொழிலர் வேலைகள், விதவை மறுமணம் ஆகியவை கருப்பொருள்களாக அமைந்தன.

படைப்பாளர்கள் தம்மைச் சமூகச் சீர்திருத்தவாதிகளாக, சமூகத்தைப் புரட்டும் நெம்புகோல்களாகக் கருதினர். நாட்டுப் பற்று, காந்தியக்கருத்துக்களை விதைத்தல், பரப்புதல், வாழ்க்கையை நன்கு நடத்தல் ஆகியவற்றைக் கொண்ட படைப்புகளுடன் பத்திரிகை வர்த்தகத்திற்காகப் பல பத்திரிகைகள் மக்களுக்கு விருப்பமான கருக்களிலும் கதைகளைப் பிரசுரித்தன. காதல், கலப்புமணம், மதுவிலக்கு, தீண்டாமையின் தீய விளைவுகள், தனிமனித உளவியல் சிக்கல், குடும்பச்சிக்கல்களும் அவை சார்ந்த தீர்வுகளும் போன்றன படைப்புகளில் இடம் பெற்றன. மக்களிடையே சிறுகதை நெருக்கமான இலக்கியமாக ஆனது. பெண்கள் சார்ந்த புழுக்கங்களும் மன அவதிகளும் பெண்களை உயர்த்தும் நோக்குகளும் கதைகளில் இடம்பெற்றன. பால்ய மணம், விதவை மணம் ஆகியன முக்கிய இடம் பெற்றன.

அடுத்து வந்த 1950களிலும் தொடர்ந்து வந்த படைப்புகளிலும் கோபம், வேதனை என்ற இரண்டு உணர்ச்சிகளின் ஆழத்தின் மனிதன் படும்பாடு, பண்பாட்டைக் கட்டிக்காப்பது, அடுத்த தலைமுறைக்கு அதனைக் கொண்டுசெல்வது, நடுத்தர வர்க்கத்தின் வாழ்வியல் மதிப்பீடுகள் பற்றிக் கூறுவது, வாழ்க்கையை எப்படி மேம்படுத்தலாம், அதிகமாக மக்களால் அறியப் படாத ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்க்கைச் சிக்கல்கள், அவர்களுக்குள்ள திறன்கள் ஆகிய பல அம்சங்கள் பற்றியும் படைப்புகள் இடம்பெற்றன. பொருந்தாக்காதல், ஒருதலைக்காதல், கிராமப்புறத்திலிருந்து நகருக்குக் குடிபெயர்தல், வெகுசனப்

பண்பாட்டின் தாக்கம், கூட்டுக் குடும்ப அமைப்பு மெல்லத் தனிக்குடும்ப நிலைக்கு மாறுதல், பெண்கள் பணிக்குச் செல்லுதல், பெண்களுக்குச் சமத்துவம், புறவாழ்வு குறித்தும் பிறருக்கு அதிகம் தெரியாத அகவாழ்வு குறித்தும் அமைந்த வாழ்வு குறித்துப் படைப்புகள், மையத்திலிருப்பவர்கள் மட்டுமின்றி ஓரத்தில் அதாவது விளிம்பில் இருக்கும் மக்களின் விலக்கப்பட்ட மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை எடுத்துக்காட்டும் படைப்புகள், பின்தங்கியவர்களின் பிரச்சினைகளையும் அவர்களை வசதிமிக்கோர் அபகரித்து வாழும் போக்குகளையும் காட்டும் படைப்புகள், பெண்கள் பார்வையில் பெண்கள் காட்டும் படைப்புகள், அறிவியல் ஊடோடும் வகையில் புனைகதைகள், யதார்த்தம் நம் மனத்தில் நாற்காலிபோட்டு உட்காரும்வகையிலான படைப்புகள் என்று பலவகைகளில் படைக்கப்பட்ட சிறுகதைகள் இடம் பெற்றன. 1990கள் மற்றும் 2000-இல் கணினிமயம், கல்வியின் பரவல், எங்கும் பட்டத்தொழிலர்கள், உள்நாட்டில் வேலை இல்லாது அவதியும் அவமானமும் அடைந்த இளையர்கள் அயல்நாட்டுக்குச் சென்று உயரும் நிலை, பின் குடும்பவாழ்வு கொகுசுவாழ்வாக உயரும் நிலை, அனாவசியம் எனப்பட்டவை அத்தியாவசியமாக மாறிய நிலை, வெளிநாடுகளில் வேலை செய்தோர் அங்கேயே குடியேறும் போக்கு, இதற்கிடையில் வேலை, மன அழுத்தங்கள் காரணமாக ஓரளவு பணம் சேர்ந்ததும் சுதந்திரமாக இச்சைப்படி வாழவேண்டும் என்ற நோக்கில் பெரிய வீடு, பல வேலைக்காரர்கள், பெரிய வாகனம், அடக்கமான பிள்ளை வளர்ப்பு என்பது தேடி மீண்டும் இந்தியாவுக்கு இறக்குமதியாகும் வெளிநாடுவாழ் இந்தியர்கள், அயல்நாட்டு நேரத்துக்கு ஏற்ப இரவிலும் அறிவுசார் வேலை செய்யும் உயர்கல்வி படித்த இளையர்கள், கலாசாரச் சீரழிவு என்று பலவகைக் கதைகள் தற்போது வந்துகொண்டிருக்கின்றன. இவற்றுக்கான வாசகர்களும் அதிகரித்தவண்ணம் இருக்கின்றனர். இந்த வேகம் தொடர்ந்து வாழ்க்கைவேகத்துடன் போட்டிபோடும் வகையில் உள்ளன.

ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை: ஒருமேலோட்டப்பார்வை

தமிழை அதிகமாகப் புழங்கும் இலங்கையின் சிறுகதைப் படைப்புகளில் ஆரம்பத்தில் ஆங்கிலமொழிக் கல்வியின் தாக்கத்தினால் ஏற்பட்ட சமூக மாற்றம், தமிழகப்பத்திரிகைகளின் செல்வாக்கு, எழுத்தாளர்களின் தாக்கம் ஆகியன குறிப்பிடத்தக்க

இடம்பெறுகின்றன. சமூக முன்னேற்றத்திற்கு உதவிய ஆங்கிலக் கல்வி, பண்பாட்டை அடிநாகமாகக் கொண்ட வாழ்க்கை, நவீன வாழ்க்கை மாற்றத்துக்கு இடம் கொடுத்த குடும்பவாழ்வுமுறை, தொடர்ந்து தமிழ்த்தேசிய உணர்வு ஆழமாகி அதிகரித்த நிலை, தமிழ்த் தேசிய உணர்வு இன உணர்வாக ஆன நிலை, அடுத்து தனி மனித வெளிப்பாடுகளாகப் படைப்புகள் ஆன நிலை, இன உணர்வு உச்சக்கட்டத்தை அடைந்த நிலை, பெண்ணியச் சிந்தனை கள் மேலும் அதிகரித்த நிலை என்று சமுதாய நிலை அமைந் திருந்தது. இவற்றின் தாக்கங்கள் சில சிறுகதைகளில் ஆழமாகவும் சில சிறுகதைகளில் மேலோட்டமாகவும் எதிரொலித்தன. 1990கள், 2000ங்கள் ஆகியவற்றில் அயல்நாடுகளிலிருந்து இலங்கைத் தமிழ்சார் இலக்கியங்கள் வீறுணர்வுடன் படைக்கப்பட்டன.

சிங்கப்பூரில் தமிழ்ச்சிறுகதை

சிங்கப்பூரில் தமிழில் உரைநடையில் தோன்றிய சிறுகதை இலக்கியம் 1988-லிருந்து தோன்றியிருப்பதை நா கோவிந்தசாமி யின் (1990) கருத்து வாயிலாக அறியமுடிகிறது. 1965 முதல் 1999 வரை வெளிவந்த நூல்கள் என்று பார்க்கும்போது, சிறுகதை நூல்கள் கருப்பொருளில் பழையனவாக இருந்தாலும் சிறுகதை என்பதன் வடிவம் தற்போது நாம் காணும் வடிவமாகப் பதினெட் டாம் நூற்றாண்டில் தோன்றியது. தொழில்புரட்சி, இயந்திரப் புரட்சியின் காரணமாக இலக்கிய உலகில் தோன்றிய மின்னல் களில் சிறுகதை இலக்கியவகையும் ஒன்று. மலேசியாவுடன் ஒப்பிடும்போது சிங்கப்பூரில் இந்த இலக்கியவகை முன்பே தோன்றிவிட்டது. இன்றைய நிலையில் பலரையும் கவரும் இந்த வகை, வாசிப்பதற்கு ஏற்றதாகவும் வாழ்க்கையுடன் தொடர் புடையதாகவும் இருப்பதாக உள்ளது.

முதல் சிறுகதை நூல் 1967இல் தோன்றியது. மு.சு. குருசாமி என்பவர் எழுதிய இக்கதை, சமுதாயத்தில் பல சிக்கல்கள் அதாவது அரசியல், மனநிலை, பொருளாதாரம், உயிர்வாழ்வியல் எனப்பல சிக்கல்கள் நிரம்பிய குழப்பமான காலக்கட்டத்தில் தோன்றியது. இங்கு கட்டுரை இலக்கியத்தை விடக் கதை இலக்கியம் முதலில் கால்பதித்தது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூரில் ஆய்வாளருக்குக் கிடைத்தவரை அவர் தொகுத்த நூல்களின் பட்டியல் இங்கு தரப்பட்டுள்ளது.

அட்டவணை: சிறுகதைப்படைப்புகள்
(கால அடிப்படையில்)

எண்	நூலின் பெயர்	ஆசிரியர் பெயர்	வெளி வந்த ஆண்டு
1.	வாடாத மலர்	மு.சு. குருசாமி	1967
2.	நெப்போலியன் காதலிகள்	மு.சு. குருசாமி	1967
3.	வானவில்	மு.சு. குருசாமி	1968
4.	மீன் வாங்கலையோ?	சே.வெ. சண்முகம்	1968
5.	சிங்கப்பூர்க் குழந்தைகள்	சே.வெ. சண்முகம்	1969
6.	அந்திவானம்	மு.சு. குருசாமி	1969
7.	அபலைப்பெண்	மு.சு. குருசாமி	1972
8.	புதுமைப்பெண்	மு.சு. குருசாமி	1972
9.	வழிபிறந்தது	மா. இளங்கண்ணன்	1975
10.	உருவகக் கதைகள்	முகிலன்	1976
11.	காதற்கிளியும் தியாகக் குயிலும்	ந. பழநிவேலு	1977
12.	குங்குமக் கன்னத்தில்	மா. இளங்கண்ணன்	1978
13.	கோடுகள் ஓவியங்களாகின்றன	மா. இளங்கண்ணன்	1978
14.	இருபத்தைந்து ஆண்டுகள்	இரம கண்ணபிரான்	1980
15.	உமாவுக்காக	இராம கண்ணபிரான்	1980
16.	என்னதான் செய்வது?	பொன் சுந்தரராசு	1981
17.	சோழன் பொம்மை	இராம கண்ணபிரான்	1981
18.	வாடைக்காற்று	இராம கண்ணபிரான்	1981
19.	சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள்	நா.கோவிந்தசாமி, இளங்கோவன்	1981
20.	புதிய அலைகள்	பொன் சுந்தரராசு	1981, 1984(2ஆம் பதிப்பு 2006)
21.	வசந்தத்தின் வாசலிலே	ராமானுஜ்ஜம்	1984
22.	பூச்செண்டு	மு. தங்கராசன்	1985
23.	அகர ஓசை	ஏ.பி. சண்முகம்	1986
24.	அழகிய மனம்	ரெ. பாண்டியன்	1986
25.	சிந்தனைப் பூக்கள்	மு. தங்கராசன்	1988

26.	மலர்க்கொத்து	மு. தங்கராசன்	1988
27.	உறவுகள்	கண்ணம்மா	1990
28.	மரகதத் தெய்வம்	பி.பி. காந்தம்	1990
29.	தனிமரம்	பெ. சிவசாமி	1990
30.	நவமணி	லெட்சுமி தனகோபால்	1990
31.	ஒரு புல்லாங்குழல் புயலை உச்சரிக்கிறது (தொகுப்பு)	வளரும் எழுத்தாளர்கள்	1990
32.	புதியவர்களின் சிறுகதைகள்	ராஜாராம், ரத்னாவதி, பாலமலர்	1990
33.	காலம் கடந்துவிட்டது	இரா. துரைமாணிக்கம்	1990
34.	தேடி	நா. கோவிந்தசாமி	1991
35.	மலர்க்கூடை	மு. தங்கராசன்	1992
36.	புதுமைதாசன் கதைகள்	புதுமைதாசன்	1993
37.	சிங்கப்பூரன் அவன்	நாரண புதுமைப்பித்தன்	1994
38.	கற்பனை மலர்கள்	மு. தங்கராசன்	1995
39.	நோன்பு	ஜே. எம். சாலி	1996
40.	கவரிமான்	சிங்கைத் தமிழ்ச்செல்வம்	1996
41.	குறள் விளக்கக் கதைகள்	சிங்கைத் தமிழ்ச்செல்வம்	1996
42.	விடுதலை	கா. சங்கையா	1996
43.	அந்த நாள்	ஜே.எம்.சாலி	1998
44.	செண்பக மலர்கள்	எம்.எஸ். சக்கரவர்த்தி, சோமசன்மா	1996
45.	மணங்கமழும் பூக்கள்	மு. தங்கராசன்	1997
46.	கண்ணாடி நினைவுகள்	சீதாலட்சுமி	2001
47.	தூண்டில் மீன்	மா. இளங்கண்ணன்	2001
48.	சிறுகதைக் கனிகள்	தொ. ஆர். மா.	2001
49.	கதை அரும்பு	தொ.ஆர்.மா. இராஜிக்கண்ணு	2001
50.	ஆர்க்கிட் மலர்கள்	சிங்கை தமிழ்ச் செல்வம்	2002

51.	அமைதியான புயல்	தொ.ஆர். சீதா லட்சுமி	2003
52.	மெர்சிங் காட்டில் மர்மக்கொலை	எம்.எஸ். சக்கரவர்த்தி சோமசன்மா	2003
53.	விடியல் விளக்குகள்	மா. அன்பழகன்	2003
54.	வேரில் நிற்கும் விழுதுகள்	நூர்ஜஹான் சுலைமான்	2003
55.	நியாயங்கள் பொதுவானவை	ஜெயந்தி சங்கர்	2006
56.	உயிர் உருகும் சத்தம்	சுப்ரா	2006
57.	பின்சீட்	ஜெயந்தி சங்கர்	2006
58.	சிங்கை மா இளங்கண்ணன் சிறுகதைகள்-தொகுப்பு-1	மா. இளங்கண்ணன்	2006
59.	சிங்கை மா. இளங்கண்ணன் சிறுகதைகள் -தொகுப்பு-2	மா இளங்கண்ணன்	2006
60.	கலைச்சோலை	தொ. ஆர்கள். மா. இராஜிக்கண்ணு, அ. மல்லிகா	2006
61.	நான் கொலை செய்யும் பெண்கள்	லதா	2006
62.	வளர்பிறை	இரா. துரைமாணிக்கம்	2006
63.	எல்லைக்கோடு	இரா. துரைமாணிக்கம்	2006
64.	பிரகாசம்	பீரம்மாள் பீர்	2006
65.	வேறொரு மனவெளி	தொ.ஆர்.பாலு மணிமாறன்	2007
66.	மனுஷி	செயந்தி சங்கர்	2007

மேலே இடம்பெற்ற அட்டவணையின் பின்னணியில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் குறித்த இன்றியமையாச் சில நூல்களின் தொடர்புநூல் திறனாய்வு இங்கு இடம்பெற்றுள்ளது. அவற்றின் இடையிடையே ஆய்வாளரின் கருத்தும் இடம் பெறுகின்றது. சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள்- ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் கோவிந்தசாமி (1990) கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதில், படைப்பிலக்கியம் என்ற கலைவடிவம், சமகால வாழ்வுச்சிக்கல்களிலிருந்து விலகி நிற்க இயலாது என்கிறார். அது கதாசிரியன் வாழும் காலத்தில் உருவாக்கப்படுவதால் அவனது நேரடிப்பார்வையில் உருவாக்கப்படுவதால் காலங்

கடந்தும் உயிர்ப்புடன் வாழ்வதை அவர் எடுத்துக்காட்டுகிறார். அத்துடன் படைப்பிலக்கியம் மாறிவரும் சமூகத்தையும் எடுத்துக் காட்டத் தவறவில்லை என்பதையும் சிங்கப்பூர்ச் சிறுகதை இலக்கியமும் அதற்கு விதிவிலக்கல்ல என்று காட்டுகிறார்.

சிங்கப்பூர்ப் புனைகதை இலக்கியம் சிங்கப்பூர் வாழ்வையும் உலகந்தழுவிய மனித இனத் துன்பங்களையும் எப்படி அணுகியது என்றும் சமூக மாற்றத்திற்கு அது கூறிய துணிவுமிக்க தீர்வுகளையும் இலக்கிய வளர்ச்சி நிலைகளை ஒட்டிச் சுருக்கமாகத் தெரிவிக்கவிருப்பதாகத் தன் கட்டுரை பற்றி எடுத்துக்கூறுகிறார். இதிலிருந்து இங்கு தோன்றிய தமிழ்ப்புனைகதை இலக்கியம் சமூக மாற்றத்திற்குத் துணிவுமிக்க தீர்வுகளைக் கூறியதாக அவர் ஒத்துக் கொள்கிறார். சுருங்கிய இலக்கிய வரலாற்றை உடைய சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தில் சிறுகதையும் கவிதையும் வளர்ந்த அளவுக்கு நாவல் அதிகமாக வளரவில்லை. ஆனால் 2000க்குப் பிறகு அம்முயற்சிகள் ஓரளவு வளர்ந்திடத் தொடங்கியுள்ளன.

அவர் தமிழிலக்கிய வளர்ச்சி நிலைகளை இங்கு நடந்த சமூக மாற்றங்களுக்கு ஏற்ப எழு பகுதிகளாகப் பிரித்துள்ளார்.

1. தொடக்கக் காலம் (1887-1900வரை)
2. சீர்திருத்தக் காலம் (1930 முதல் 1942வரை)
3. ஜப்பானியர் காலம் (1942-1945 வரை)
4. இன எழுச்சிக்காலம் (1946-1960 வரை)
5. குழப்பமான அறுபதுகள் (1961 முதல் 1970 வரை)
6. நிலைபெற்ற எழுபதுகள் (1971-1980 வரை)
7. அங்கீகாரம் கிடைத்த எண்பதுகள் (1981-1989 வரை)

1. தொடக்கக் காலம் (1887-1900)

தொடக்கக் காலத்தில் யாழ்ப்பாணம் சதாசிவப்பண்டிதர் வெளியிட்ட சிங்கப்பூர் தீனோதயவேந்திர சாலையில் அச்சிட்டு வெளியிட்ட படைப்பான சிங்கை நகர் அந்தாதி, சித்திர கவிகள் என்ற நூல்கள் இங்கு வெளியிடப்பட்ட முதல் தமிழ் இலக்கிய நூல்களாக அமைகின்றன என்று பேசப்படுகின்றன. எனினும் தற்போது இலக்கிய நூல்களாக அமைகின்றன என்று பேசப்படு

கின்றன. எனினும் தற்போது மற்றுமொரு நூல் இவ்விரு நூல்களுக்கு முன்பாகத் தோன்றியதாகத் தேசிய நூலகம் தெரிவித்துள்ளது. (2005). 1819இல் சர் ஸ்டாம்ஃபோர்டு ராஃபிள்ஸ் நவீன சிங்கப்பூரை வடிவமைக்க ஆரம்பித்த பிறகு, இங்கு இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து வந்த குடியேறிகளால் தமிழ் இலக்கியம் வளரத் தொடங்கியது என்பது அவர் கருத்து.

குடியேறிகள் பெரும்பாலும் வாழ்க்கையில் பின்தங்கிய மக்களாகவே இருப்பர் என்ற ஒரு கருத்தை அவர் சமூகவியலார் கருத்தை ஒட்டிக் கூறினாலும் அக்காலத்தில் ஓரளவு கல்வியறிவுடன் வந்தவர்களும் நல்ல பதவிகளில் அமர்ந்தவர்களும் அக்குடியேறிகளில் இருந்தனர் என்பதையும் நாம் ஓரளவு உணரமுடிகிறது. அதிலும் வந்தவர்கள் வயிற்றைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அளவுக்கு இலக்கியம், கலை பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்கிறார். இத்தகையவர்களிலிருந்து, இங்கு வந்தவர்கள் வேறுபட்டதை நாம் உணரமுடிகிறது. அப்போது வந்தவர்கள் தமிழில் ஓரளவு பரிச்சயம் இருந்ததுடன் நல்ல பல நூல்களைப் படித்திருந்ததையும் அவர்களைத் தொடர்ந்து வந்த குடியேறிகள் பிற்காலத்தில் தமிழ்த்துறையில் நல்ல சேவையாற்றியதையும் வைத்துப் பார்க்கும்போது இங்கு வந்தவர்களில் குறிப்பிடத்தக்க விழுக்காட்டினர் தமிழ் தொடர்பான மொழி, இலக்கியத்துறையில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததை உணரமுடிகிறது. இந்தத் தொடர்ச்சி இன்று வரை நீள்வதை நாம் அறிய முடிகிறது.

முதல் தொடக்கமாக அமைந்த தொடக்கக் காலத்தில் சுமார் ஆறு தமிழ் நூல்கள் வெளியிடப்பட்டிருந்ததைக் கொண்டும் அச்சுத்தொழில், புத்தக அச்சடிப்பு, வியாபாரத் தன்முனைப்பில் தமிழர் ஈடுபட்டிருந்தது ஆகியவற்றைக் கொண்டும் பார்க்கும்போது வளமான பொருளாதாரப் பின்னணியும் நமக்குப் புலப்படுகிறது. சிங்கை நேசன் என்ற இதழ் வருவதும் அதன் ஆசிரியர் அதில் விநோத சம்பாஷனை என்ற பெயரில் சிறுகதை என்று எழுதி வந்ததையும் புனைகதை இலக்கியத்தின் தொடக்கம் என்கிறார் நா. கோவிந்தசாமி. மகுதூம் சாயபு தமிழில் 3.9.1988லும் A Novel in Singapore Tamil என்று பெயரிட்டு எழுதியதும் சிறுகதைகளாக நா. கோவிந்தசாமியால் கருதப்பட்டாலும் ந. பாஸ்கரன் (1997) ஏற்றுக் கொள்ளவில்லை. நாவல் என்பது சிறுகதையாகுமா என்ற ஒரு

வினாவை அவர் எழுப்பியுள்ளார். இப்படி ஒரு நிலை வருமென்று முன்பே தெரியுமோ என்னவோ, தமிழகத்தில் 1917இல் தோன்றிய குளத்தங்கரை அரசமரம் என்ற கதையைச் சென்னைப் பல்கலைக் கழக ஆய்வு ஒன்று முதல் தமிழ்ச்சிறுகதையாகக் கூறினாலும் சிட்டி சிவபாத சுந்தரம் படைத்த நூல், அந்தக் கதையை விட்டுவிட்டு 1917இல் வெளிவந்த மங்கையற்கரசியின் காதல், சுப்ரமணிய பாரதி யாரின் ரெயில்வே ஸ்தானம் (1920), மாதவய்யா 1924இல் எழுதிய கண்ணன் பெருந்தூது ஆகிய கதைகளையே சிறுகதைகளாகக் காட்டுகிறது.

எனினும் அத்தகைய கதைகள் எழுதப்படும் முன்பே சிங்கப்பூரில் தோன்றிய மகுதாம் சாயபுவின் படைப்பு சிறுகதை யாகக் கொள்ளப்படவேண்டியது குறித்து நா கோவிந்தசாமி கருத்தினைத் தெரிவித்துள்ளார். இங்கு, மற்றொரு கருத்தையும் நாம் ஆராய வேண்டும். தமிழகத்தில் சிறுகதை தோன்றுமுன்பே சிங்கப்பூரில் தோன்றிய படைப்புக்கு அவர் ஆங்கிலத்தில் பெற்ற புலமையும் ஒரு காரணமாக இருக்குமோ ஆங்கிலத்தில் தோன்றிய புனைகதை இலக்கியம் அல்லது அது சார்ந்த முயற்சிகளை அவர் ஆங்கிலம்வழி அறிந்திருப்பாரோ என்று நம்மை எண்ணவும் வியக்கவும் வைக்கிறது. மேலும் சிறுகதை என்ற சொற்பிரயோகம் தெரியாமலேயே பலர் அத்தகைய வடிவத்தை எழுதியிருக்கலாம் என்று சிறுகதைக்கு 1832இல் கூறப்பட்ட ஒருமை அழுத்தக் கொள்கை, 1901இல் பிராண்டர் மாத்யூஸ் என்ற திறனாய்வாளர் எழுதிய சிறுகதை என்பது குறித்த விளக்கம் ஆகியன பற்றித் தெரிவித்தது. 1933க்கு முன் சிறுகதை என்ற சொல் ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் இடம்பெறவில்லை என்பதையும் கொண்டு மகுதாம் சாயபுவின் சிறுகதையை அவர் நாவல் என்று குறிப்பிட் டிருப்பது சிறுகதை என்ற பொருளில்தான் என்று கொள்ளமுடியும் என்கிறார் நா. கோவிந்தசாமி. இந்நிலையில் 3.9.1988இல் பத்தி ரிகை உபயோகம் என்ற தமது முதல் சிறுகதை தோன்றியதையும் சாயபு எழுதிய அது ஒரு சம்பாஷணையைப்போல் இருந்ததையும் நா கோ குறிப்பிடுகிறார். அதை ஒரு புதிய கலைவடிவம் என்றும் அவர் கூறியுள்ளார். அதற்கு அவர் ஆங்கிலப்படைப்புகளை மேற் கோளாகக் காட்டித் தற்காத்துள்ளதைப் பார்க்கும்போது அவரது ஆங்கிலத் தாக்கம் நமக்குத் தெளிவாகத் தெரியவருகிறது. சிங்கப் பூரானுக்கும் இந்தியனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்

அடிப்படை யில் இடம்பெற்ற இரண்டாம் படைப்பு ஆலன் போ, பிராண்டர் மாத்யூஸ் எடுத்துக்காட்டிய சிறுகதை இலக்கணத்தை முற்றாகப் பெற்ற கதையாகக் காட்டுகிறார் கோவிந்தசாமி. இக்கதை, தமிழகத் தில் தோன்றிய சில ஆரம்பப் படைப்புகளுடன் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்யவேண்டிய அளவுக்கு இருப்பதாக அவர் குறிப் பிடுகிறார். அம்முயற்சியில் விரைவிலே எவரேனும் இறங்குவர் என எதிர்பார்ப்போம்.

2. சீர்திருத்தக் காலம் (1930 முதல் 1942வரை)

இக்காலக்கட்டத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட சமூகப் புரட்சிகள், சிங்கப்பூரில் சீர்திருத்த நோக்கில் படைப்புகள் வர வழிவகுத்தன. ஈ.வே. இராமசாமிப் பெரியார் 1920களில் தமிழகத் தில் ஏற்படுத்திய புரட்சிகள் சிங்கப்பூரிலும் எதிரொலித்தன. அவரது சுயமரியாதைக் கருத்துகள் இங்கு பரவின. கோ சாரங்க பாணி, 'முன்னேற்றம்' இதழை 1927இல் தொடங்கினார். இந்த இதழும் 'குடியரசு' இதழும் பெரியாரின் கருத்துகளை அதிகமாகப் பரப்பின. இதனால் பெரியாரும் 1929-இல் இங்கு வருகை தந்த போது அதன் தாக்கம் அதிகரித்தது. தொடர்ந்து தமிழர் சீர்திருத்தச் சங்கம் 1932இல் தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1935இல் 'தமிழ் முரசு' இதழ் தொடங்கியது. இந்நிலையில் யாழ்ப் பாணம் வல்வை வே சின்னையா, 'நவரசகதா மஞ்சரி' என்ற தனது கதைத்தொகுப்பைச் சிங்கப்பூரில் பதிப்பித்து வெளியிட்டார். இங்கு இந்நூல் 1930இல் வெளியிடப்பட்டதாக கல்வியியலாளரும் இலக்கிய ஆய்வாளருமான காாத்திகேசு தெரிவித்துள்ளார். இது குறித்துச் சரியான தகவல் தெரியவேண்டியுள்ளது. அக்கதைகள் மனிதப் பண்புகளை இந்தியப்பின்னணியில் விளக்கும் வகையில் அமைந்தன. தொடர்ந்து 1934, 1936 ஆகிய ஆண்டுகளில் சில எழுத்துப்படைப்புகள் வெளிவந்தன. இவை, மலேசியா மற்றும் யாழ்ப்பாணப் பின்னணியில் அமைந்தவை. தொடர்ந்து தமிழ் முரசு படைப்பிலக்கிய வளர்ச்சிக்கும் ஆழமாகக் காலூன்றலுக் கும் வழிவகுத்தது.

அப்போது ந. பழநிவேலு, எம் ஆறுமுகம், வை ராஜரத் தினம், சிவத்தம்பி, முகிலன், ராஜம்மாள் போன்றோர் இலக்கியப் படைப்புகளைப் படைத்தனர். இக்காலப் பகுதியில் நாவலின்

சுருக்கமே சிறுகதை என்ற நிலையில் மக்கள் எண்ணியதொரு பின்னணி அமைந்திருந்தது. சிறுகதை வடிவ அமைப்பில் உரிய முறையில் இல்லையெனினும் உள்ளடக்கத்தில் சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டும்வகையில் இருந்தது. முப்பதுகளில் படைக்கப்பட்ட படைப்புகள் சிறுகதை என்பதன் வடிவ இலக்கணத்தைக் காட்டும் வகையில் இல்லை என்கிறார் கோவிந்தசாமி. அத்துடன் குறிப்பு நுட்பத்துடன் படைக்கப்படாமல் நேரடிப் பிரசாரமாக அவை அமைந்தன என்பது கோவிந்தசாமியின் கருத்து. மேலும் இக்காலப்பகுதியில் சிங்கப்பூரில் 1880களில் வாழ்ந்தோரின் வழித்தோன்றல் அல்லர் என்றும் தமிழகத்தில் பிறந்து படித்து இங்கு பிழைப்பு நாடிக் குடியேறியவர்கள் என்கிறார். அப்படியென்றால் இது இரண்டாம் குழுக் குடியேறிகள் என்று எண்ண இடமுண்டு. இவர்களிடம் சாயபு போன்ற உள்நாட்டு வாழ்க்கை குறித்த ஆழம் இல்லாததால் இவர்கள் இன்னும் தம் தாய்நாட்டுச்சிந்தனையில் இருந்ததை உணரமுடிகிறது. அத்துடன் இங்கேயே 1819லிருந்து வந்து வாழ்ந்தவர்கள் 1930க்குப் பிறகு மறுமலர்ச்சிக்காலத்தினை எதிர்நோக்கியதாகவும் அப்போது தமிழகத்துக்கு வெளியே ஒருமாறுபட்ட கதை இலக்கியம் வளரத் தொடங்கியதாகவும் கோவிந்தசாமி தெரிவிக்கிறார்.

3. ஜப்பானியர் காலம் (1942-1945 வரை)

இக்காலக்கட்டம், ஜப்பானியர் படையெடுப்பால் பாதிக்கப்பட்டபோது இடம்பெற்ற இலக்கிய வளர்ச்சியைப் பற்றியது. இக்காலத்தில் அதாவது 15.2.42இல் சிங்கப்பூர் ஜப்பானியரிடம் வீழ்ந்த பிறகு, இலக்கியத்துக்கு ஓர் இருண்டகாலமாக அது விளங்கியது. மூன்றரை ஆண்டுக்காலம் 'ஷோனான்-தோ' வாக விளங்கிய சிங்கப்பூரில் பிற இனத்தவனைப் போல் தமிழர்களும் சொல்லவியலாத் துன்பங்களை அனுபவித்தனர். அப்போது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த தற்காலிக சுதந்திர அரசு, இந்திய தேசிய இராணுவம் ஆகியவற்றால் அவர்களது மன, சமூக நிலையில் சில மாற்றங்கள் வந்தன. இக்காலத்தில் ஜப்பானியர்களைச் சகோதரர்களாகக் கொண்டு பிரிட்டிஷாரை இந்தியாவை விட்டு விரட்டும் நோக்கில் அதனை வெளிக்காட்டும் வகையிலான படைப்புகள் அதிகமாக எழுதப்பட்டன. தற்காலிகச் சுதந்திர இந்திய அரசாங்கத்தால் இங்கிருந்து 'சுதந்திர இந்தியா', 'யுவ

பாரதம்' 'சந்தோரதயம்' ஆகிய இதழ்களில் அத்தகைய படைப்புகள் வந்தும் கதைகள் ஏதும் இடம்பெறவில்லை.

4. இன எழுச்சிக்காலம் (1946-1960 வரை)

இக்காலத்தில் அதாவது 1945இல் ஜப்பானியர் சரண் அடைந்ததும் போரினால் பாதிக்கப்பட்ட சிங்கப்பூரில் மறு சீரமைப்பு நடைபெறும் நிலை தொடர்ந்தது. பழைய அல்லது ஒரு சரியான நிலையை நாடு அடையச் சுமார் நான்காண்டுகள் பிடித் தன. இந்நிலையிலும் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் உயிர்ப்புடன் இருந்ததாக நா.கோ. தெரிவிக்கிறார். இத்தகையதொரு சூழ்நிலை யில் பக்ருதீன் சாஹிப்பை ஆசிரியராகக் கொண்டு 'பேனா முனை' என்ற இதழ் வெளிவந்தது. அதனுடன் திராவிட முரசு என்ற இதழும் 1947இல் வெளிவந்தது.

ஜப்பானியப் போரைத் தொடர்ந்து மக்களிடையே சிங்கப்பூர் என்ற நாடு, இன எழுச்சிமிக்க சமூக விழிப்புணர்வுப் போக்கு ஆகியன தோன்றியன. அப்போது இங்குவாழ்ந்த சீனர், மலாய் இனத்தவர்கள் தத்தம் பண்பாட்டு வேர்களின்வழியேயும் தாய்மொழிக்கல்வி இலக்கியத்தின் வாயிலாகவும் தம் பண்பாட்டு உறவுகளையும் இனச் சிந்தனைகளையும் மேம்படுத்தினர். அப்போது இந்தியரிடையேயும் குறிப்பாகத் தமிழரிடையே தமிழ்ப்பள்ளிகள் ஒருங்கிணைக்கப்பட்டுத் தமிழ்க் கல்விக்கழகத் தின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெறும் உணர்வு அதிக மாக இருந்ததால் இலக்கிய உலகிலும் அதன் வேகம் எதிரொலித் தது. தமிழுக்கும் இது பொருந்தியது. அதற்குச் சிறுகதை உதவிய தாகக் கூறப்பட்டது.

1950-1960க்கு இடைப்பட்ட காலம் அதிகமான படைப்பு கள் எழுதப்பட்டதுடன் படைப்பாளர்களின் படைப்புகளைப் பிரசுரிக்க வேண்டும் என்று பத்திரிகைகளும் ஆர்வம் காட்டிய காலம். கோலாலம்பூரிலிருந்து வெளிவந்த தமிழ்நேசன், கதை வகுப்பை 1950,51இல் நடத்தியது. சுப நாரயணன், பைரோஜி

நாராயணன் ஆகியோர் கதைவகுப்புகளை நடத்தினர். தமிழ் முரசு நாளிதழும் போட்டிகள், பத்து வெள்ளிப்பரிசு ஆகியவற்றைத் தந்து ஊக்குவித்தது. அப்போதும் தமிழ்நாட்டுப் பின்னணியில் கதைகள் வெளிவரவே செய்தன. பிறகு, முரசில் துணை ஆசிரியர்களாகப் பொறுப்பேற்ற வை திருநாவுக்கரசு, அ முருகையன், முருகு சுப்பிரமணியம் ஆகியோர் பல வகைகளில் இலக்கியவளர்ச்சிக்கு உதவினர். சிறுகதைத் திறனாய்வுக் கட்டுரைகள், சிறுகதை பற்றிய விவாதங்கள் ஆகியன முரசில் இடம்பெற்றன. இவை மக்களின் படைப்பிலக்கிய வாசிப்புக்கும் படைப்புக்கும் தேற்றங்களை (theories) எடுத்துக்கூறும் வகையில் அமைந்தன.

பின் தமிழ் முரசிலும் ரசனை வகுப்பு நடைபெற்றது. தொடர்ந்து 'எழுத்தாளர் பேரவை' தோன்றியது. ஏற்புடைய போட்டிகள் தோன்றின. இவ்வாறு தொடர்ந்து புதிய அணியினர் படைப்புலகில் பெயர் போடத் தொடங்கினர். சிங்கப்பூர், மலாயாவில் பிறந்து, கல்விகற்று வளர்ந்த புதுமைதாசன், ஆர். வெற்றிவேலு, எஸ்.எஸ். சர்மா, மு. தங்கராசன், உலகநாதன், எம்.கே. நாராயணன் போன்றோர் எழுதத் தொடங்கியதும் தமிழகத்தில் பிறந்து இங்கு கல்வி கற்ற இராம. கண்ணபிரான் போன்றோரும் எழுதத் தொடங்கினர். இதற்கிடையில் தமிழக்த்தில் பிறந்து வளர்ந்த பின் இங்கு குடியேறிய அ. முருகையன், சே.வெ. சண்முகம், கனகசுந்தரம், ஏ.பி. இராமன், இ.எஸ்.ஜெ. சந்திரன், போன்றோரும் எழுதத் தொடங்கினர். இதற்கு முன்பு கவிதை எழுதியவர்களும் சிறுகதை உலகிற்கு வந்தனர். சிங்கப்பூர்ப் படைப்புகளில் சிங்கப்பூர் உணர்வும் சிங்கப்பூர்த் துடிப்பும் அதிகமாக எதிரொளிக்கத் தொடங்கின. இந்த இலக்கிய அலையில் புதுமைதாசன் திருப்ப மிக்க கதைகளைப் படைத்ததாக நா. கோவிந்தசாமி கூறுகிறார். இக்காலக்கட்டத்தில் சிங்கப்பூருக்கும் தமிழகத்துக்கும் இடையே உறவுப்பாலம் அமைப்பதில் ஏற்பட்ட பிரச்சினைகள், நம்பிக்கை துரோகங்கள் ஆகியன கதைகளில் முக்கிய இடம் பெற்றன. இக்காலப்பகுதியில் நாவலின் சுருக்கமே சிறுகதை என்ற சிந்தனை மெல்ல மெல்ல மறையத் தொடங்கியதுடன் சிங்கப்பூரில் வாழ்வை உற்றுநோக்கிச் சிந்திக்கும் படைப்பாளர்தம் மனப்பாங்கும் படைப்புகளும் மேம்பட்டதாகக் கூறப்படுகிறது.

5. குழப்பமான அறுபதுகள் (1961 முதல் 1970 வரை)

இக்காலப்பகுதி இந்தப் பக்கமா அந்தப் பக்கமா என்று படைப்பாளர்களும் மக்களும் சிங்கப்பூர் மற்றும் மலேசியா குறித்துப் பலவகைகளில் சிந்தித்த, ஆழமான உணர்வுச் சுழிகள் நிறைந்த காலப்பகுதி. அரசியல் நிலையிலும் மாற்றங்கள் பல அமைந்த காலப்பகுதி. எனினும் உணர்வுச் சூழலில் வெளிப்பாடு கவிதையில் தெறித்த அளவுக்குக் கதைகளில் இல்லை. மலேசிய உதயம், இந்தோனீசிய எதிர்ப்புணர்வு, இனக்கலவரங்கள், சிங்கப் பூர் நாடு எனப் பலவகைகளில் படைப்பிலக்கியம் எதிரொலித்த காலக்கட்டத்தில் புதிய எழுத்தாளர் அணி க்களத்தில் குதித்தது. சிங்கப்பூரின் வளர்ப்புகளான எம்.எஸ். வேலு, ஜி. ஜான்சன், நா. கோவிந்தசாமி, மா. இளங்கண்ணன் ஆகியோர் சிறுகதைகள் படைக்கத் தொடங்கினர். இவர்களுடன் வழக்கம்போல தமிழகத் தின் புதுவரவுகளாக அமைந்த எஸ். முகம்மது ரபீக், மலேசிய வரவான பெரிநீல பழனிவேலன் போன்றோரும் எழுத ஆரம்பித்த னர். இப்போது எழுத்தாளர் அணி எண்ணிக்கையில் பெரிதாகி வருவதுடன் கடந்த, நிகழ்காலப் படைப்பாளர்கள் ஒன்றிணைந்து எழுதும் போக்கு தொடர்ந்து, இந்நிலையில் 1963இல் தமிழ் முரசு வேலை நிறுத்தம் காரணமாக நின்ற நிலையில் தமிழ் மலர் நாளிதழ் 1.3.94இல் தோன்றி சிறுகதைக்குக் களம் அமைத்துத் தந்தது. சிங்கப்பூரானது மலேசியாவிலிருந்து பிரிந்த நிலையிலும் புதிய நாட்டின் நிர்மாணமும் படைப்பாளர்களிடையே தாம் சிங்கப்பூரரா மலேசியரா என்ற குழப்பமிக்க சிந்தனையும் என ஒரு நிலை நிலவியது. பின் மெல்ல மெல்ல உண்மை நிலைக்கு ஏற்பத் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொண்டநிலை வந்தது.

இக்காலக்கட்டத்தில் வாழ்க்கையின் கனவுகள் நனவாகும் நேரத்தில் முதலுக்கே மோசம் வந்த நிலையினைக் காட்டும் 'புது வீடு' போன்ற கதைகள் தோன்றின. சிங்கப்பூர் வந்து வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி குருவிபோலச் சேர்த்த காசைக் கொண்டு மாளிகைகட்டி வாழவிரும்பித் தமிழகத்துக்குப் போக விரும்பி யோரின் சோகக்கதைகள் படைப்புகளில் தென்பட்டன. துக்க உணர்வை எடுத்துக்காட்டிய இக்கதைகள் ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்று வாழ்வது குறித்த ஒரு மாறுபட்ட சிந் தனையை மக்களுள் ஏற்படுத்தவே செய்தன. படைப்பாளிகளுக்கு அதிக ஊக்குவிப்பு இல்லாத இக்காலம் அரசியல் ரீதியாகக்

குழப்பமுற்றிருந்தாலும் அடுத்துவரும் நிலைப்பெற்ற காலப் பகுதிக்கு வழிவகுத்தது.

6. நிலைபெற்ற எழுபதுகள் (1971-1980 வரை)

இக்காலப்பகுதி மக்களிடையே ஒரு நிலைபெற்ற போக்கை எடுத்துக்காட்டியது. சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தவர் களுடன் வந்த இடத்தில் வாழ்வது என்று முடிவுசெய்து குடியுரிமை பெற்றவர்களையும் கொண்டு முன்னேறிய அணி அமைந்தது. பொன் சுந்தரராசு, இளங்கோவன், உதுமான் கனி போன்றோர் எழுத ஆரம்பித்தனர். இக்காலத்தில் எழுத்தாளர்கள், எழுத்துப் படைப்புகள் ஆகியன அதிகரித்தன. மலேசிய இதழும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் சிங்கப்பூர்ப் படைப்புகளைப் பிரசுரித் தன. இருநாடுகளுக்கும் இடையே எழுத்துப்பாலம் திடமாக இருந்தது.

சிங்கப்பூர் இலக்கியக்களம் என்ற திறனாய்வு அமைப்பும் 1976இல் இங்கு தோன்றியது. புகழ்பெற்ற இலக்கியத் திறனாய் வாளர்களான இரா தண்டாயுதம், மா இராமலிங்கம், சு. வேங்க ராம், தா.வே. வீராசாமி, படைப்பாளி ஆர். சூடாமணி போன்றோர் சிங்கப்பூர், மலேசியப் பத்திரிகைக் கதைகளைத் தெரிவு செய்து அடையாளம் காட்டினர். மா. இளங்கண்ணனின் 'எண்ணங்கள் நிலையானவை அல்ல' என்ற படைப்பு சிறந்த கதையாகத் தேர்வு செய்யப்பட்டது. இத்தகைய முயற்சி பின்னாளில் நூல் வடிவம் பெற்றபோது பல படைப்பாளர்களின் படைப்பு முயற்சிக்கு ஊக்குவிப்பு அதிகரித்தது.

இதற்கிடையில் இருமொழிக்கல்விக் கொள்கையின் விளைவாகப் படைப்பாளர்களில் இருமொழித் திறம்வாய்ந்தவர் களும் வாழ்க்கை, கல்வி, தொழில் ஆகியன குறித்துப் புதிய சிந்தனைகளைக் கொண்டவர்களும் இணையத் தொடங்கினர்.

7. அங்கீகாரம் கிடைத்த எண்பதுகள் (1981-1989வரை)

படைப்பிலக்கிய எழுத்துகள் தோன்றி வளர்ந்து ஒரு நிலையை அடைந்து கூடுதல் பரிமாணங்களில் தம்மை வளர்க்க முனைந்த ஒரு காலக்கட்டமாக எண்பதுகள் அமைந்தன. இந்நிலை

யிலும் வானொலி சன்மானம் தர, பத்திரிகைகள் தமிழகத்தைப் போல் சன்மானம் தருவதில் ஈடுபடாமல் தராமல் இருந்தன. இருந்தாலும் தொடர்ந்து எழுதும் போக்கு நிலவியது.

இந்நிலையில் 1982இல் தேசிய அளவுச் சிறுகதைப் போட்டிகள் அரசாங்க ஆதரவுடன் நான்கு மொழிகளுக்கும் தோன்றின. புதிய எழுத்தாளர்களை அடையாளம் காணும்வகையில் இடம்பெற்ற இப்போட்டிகளில் அனுபவமிக்க படைப்பாளர்கள் பங்கேற்றதைத் தடையாகக் கருதுகிறார், கோவிந்தசாமி. சுமார் ஆறு ஆண்டுகள் நடைபெற்ற போட்டிகளில் தரமான புது எழுத்தாளரோ சிறுகதையோ அடையாளம் காணப்படாது இருப்பது வருந்துவதற்குரிய ஒன்றே என்பது அவரது கருத்து. இதை ஓர் ஏமாற்றமாகவே எண்ணிய அவர் தொடர்ந்து படைப்புகள் படைக்கப்பட்டு வருவதை நம்பிக்கையோடு எதிர்பார்த்ததை உணர முடிகிறது.

இளங்கோவனின் கட்டுரை

வாழ்க்கைப் பிரச்சினையே பெரும் பிரச்சினையாக இருந்த காலத்தில் பல சிக்கல்களுக்கு இடையில் கதை படைப்பது என்பது பெரும் செயல். அதனை மேற்கொண்ட படைப்பாளர்களைப் பாராட்டும் இளங்கோவன், புகழும் நிலையில் அமைந்த மதிப்புரைகளைப் பற்றிக் கருத்துரைத்துள்ளார். இவர் தமது, சிங்கப்பூரில் தமிழ்ப்படைப்புகளின் (1965-1981) போக்கு என்ற கட்டுரையில், சிங்கப்பூரில் எழுதப்பட்ட தமிழ்ப் படைப்பிலக்கியம், சிங்கப்பூரியத் தமிழ்ப் படைப்பிலக்கியம் என்ற அளவுகோல்களைக் கொண்டு சில தேற்றங்களின் அடிப்படையில் ஆராய்கிறார். இன்றைய நவீன இலக்கியப்படைப்பு என்பது உணர்ப்பூர்வமாக, தான் தோன்றிய காலக்கட்டத்தின் வாழ்வுப் பின்னணியைக் கொண்டு, சமூக அமைப்பின் ஆதிக்கம் மற்றும் படைப்பாளன் ஆகிய இருவருக்கும் இடையே ஏற்படும் அக, புற முரண்பாடுகள் போன்ற பலவற்றைத் தன்னுள் கொண்டு இலங்க வேண்டும் என்று கருத்துரைக்கிறார். பல படைப்புகள் பற்றிய தம் கருத்துகளை எடுததுக்காட்டுகளுடன் தெரிவித்த இளங்கோவன், சிங்கப்பூரிய இலக்கியம் தோன்ற வேண்டும் என்றும் அது இங்கேயே வாழ்ந்து இந்நாட்டுக்காற்றைச் சுவாசித்த இந்நாட்டின்

இளையர்களால் படைக்கப்பட்ட இயலும் என்ற நோக்கில் கருத்துரைப்பது ஆழமாகச் சிந்திக்கத் தக்கது.

திண்ணப்பன், சுப. 1993

சிங்கப்பூரில் தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற நூலில் சிங்கப்பூரில் சிறுகதை எனும் தமிழ் இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, தற்போதைய நிலை ஆகிய அம்சங்கள் குறித்து விரிவான பார்வை இடம்பெற்றுள்ளது. இலக்கியப் படைப்பாளர்களுக்குத் தரப்படும் மதிப்புகள், இலக்கியம் என்பது எவ்வாறு சிங்கப்பூரில் குறிப்பிடத்தக்க இடம்பெறுகிறது என்பதுடன் இலக்கியம் இன்னும் எவ்வாறெல்லாம் வளரலாம், பயன்படலாம் என்று தம் கல்வித்துறை, இலக்கியத்துறை சார்ந்த ஆய்வியல் அனுபவத்துடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

சீதாலட்சுமி 2001

சிங்கப்பூரில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு என்ற பொருளிலான முனைவர் பட்ட ஆய்வேட்டை எழுதிய ஆய்வாளர், 1965 முதல் 1994 வரையிலான காலக்கட்டத்தில் தமிழ்முரசு நாளிதழ், தமிழ் வானொலி, தமிழ்த்தொலைக்காட்சி ஆகியன ஆற்றிய பங்களிப்பை ஆராய்ந்துள்ளார். இலக்கியத்தைப் பரப்பல், இலக்கியத்தை அனுபவிக்கவைத்தல், இலக்கியம் படைக்கவைத்தல், இலக்கியத்தை ஆய்தல் என்ற பல நிலைகளில் தமிழ் முரசு மற்ற இரு சாதனங்களையும் விடச் சிறுகதை இலக்கியத்துக்கு அதிகமாகப் பங்காற்றியதையும் வானொலி அதற்கு அடுத்த நிலையில் பங்காற்றியதையும் விரிவாகக் கூறியுள்ளார்.

பாலபாஸ்கரன் (கட்டுரையும் நூலும்)

சிங்கப்பூரின் ஏழு தமிழ்ச்சிறுகதை எழுத்தாளர்கள் (1997) என்ற கட்டுரையையும் The Malaysian Tamil Short Stories (1930-1980) A Critical Study *என்ற நூலையும் (2006) ந. பாஸ்கரன் (1997), பாலபாஸ்கரன் (2006) படைத்துள்ளார். 1960களில் நடுப்பகுதி வரை மலேசியர் என்றால் அதில் மலாயா, சிங்கப்பூர் சார்ந்த படைப்புகளும் சிந்தனைகளும் கட்டாயம் தொனிக்கும் என்று கூறும் பாலபாஸ்கரன், தமது முதுகலைப்பட்டத்தின் ஆய்வேட்டைச்*

செம்மைப்படுத்தி ஆய்வுநூலாக ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார். கருத்தாய்வு நோக்கில் படைக்கப்பட்ட இந்நூல் மலேசியத் தமிழ் இலக்கியத்தினை வெளியுலகிற்கு வெளிச்சம்போட்டுக் காட்டும் படைப்பாக அமைகிறது. 1930இல் தொடங்கிய நவரசகதா மஞ்சரியில் தொடங்கிய மலேசியச் சிறுகதை, கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகச் செய்தித்தாள்கள் மற்றும் இதழ்களின் உதவியுடன் தொடர்ந்து தன்னைத் தக்கவைத்து வருகிறது என்று கூறும் அவர், ஜப்பானிய ஆதிக்கத்தின்போது வெளிவந்த படைப்புகளைக் கொண்டுபார்த்தால் படைப்பாளர்களின் வேகமும் படைப்புந்துதலும் தெளிவாகத் தெரியும் என்கிறார். தம் படைப்பில் 1930 வரையிலான படைப்புகளைக் குறித்துக் கருத்துரைக்கும் பாஸ்கரன், சமூகத்திலும் நாட்டிலும் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் படைப்பிலக்கியங்களின் உள்ளடக்கத்தில் முக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தியதைக் குறிப்பிடுகிறார்.

பட்டத்தொழிலாளர்களாகவும் இல்லாது, வர்த்தக ரீதியான படைப்புத்தொழிலை மேற்கொள்பவர்களாகவும் இல்லாது ஒரு வித்தியாசமான நிலையிலிருக்கும் மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் தம் விருப்ப அடிப்படையில் செயல்படும் ஒரு தனித்துவக் குழுவினராகவே அமைகின்றனர். தங்களுக்காக, தங்களது சமூகத்துக்காகத் தாமறிந்த தமிழில் எந்தவித நிதிசார்ந்த எதிர்பார்ப்பும் இல்லாத நிலையில் எழுதத் தொடங்கிய படைப்பாளர்களுக்கு நாளிதழ்களிலும் வார, மாத இதழ்களிலும் பிரசுரமாவதுதான் பெரும் ஊக்கமாக அமைகிறது. அதே நேரம், பணமேதும் தராத இந்த இதழ்கள், அவர்களிடமிருந்து தரமான, சிறப்பான படைப்புகள் வேண்டும் என்று வலியுறுத்தியோ வற்புறுத்தியோ பெற இயலாது என்பது பாஸ்கரனின் கருத்து. இருந்தும் படைப்புகளில் உயிர்ப்பும் அவர்களுக்குப் புகழும் கிடைப்பதை அறிய முடிகிறது. சிறந்த வாசிப்பு மற்றும் விமரிசனம் படைப்பிலக்கியத்தை மேலும் செம்மையாக்க இயலும். மலேசியாவில் தற்போது ஆண்டொன்றுக்குச் சராசரியாக 350 சிறுகதைகள் அச்சுப்பிரசுரமாகவோ ஒலிபரப்பாகவோ வெளிவரும் சூழலில் அக்கதைகளுக்குப் பொருள் ரீதியாகப் பரிசு வழங்கச் சில போட்டிகள் அல்லது அங்கீகாரம் இல்லாவிடினும் தொடர்ந்து முன்னேற்ற நடைபோட்டு வருகிறது. அதேநேரம் இப்படைப்புகளைத் தமிழகம், இலங்கை போன்ற நாட்டுப்படைப்பு

களுடன் ஒப்பிடமுடியுமா? என்றால் இல்லை. ஒரு படைப்பாளர் எதை எழுதுகிறார், எப்படி எழுதுகிறார் என்று பார்க்க வேண்டும். அதாவது உள்ளடக்கம் மற்றும் வடிவம் படைப்பில் இன்றியமை யாதன என்கிறார் அவர். அதனால் அதற்கு ஒவ்வொரு களத்தின் தனித்துவத்தையும் அவ்வக்களத்துடன் நெருங்கி நின்று அறிந்து, பின் அவற்றின் பொதுத்தன்மை அடிப்படையில் கருத்தாய்வு நிலையில் ஆய்வுகள் இன்னும் ஆழமாக நடைபெறவேண்டும். அதற்கு முயற்சிகள் ஆழமாக மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே நமது கருத்தாக அமையும்.

இங்கு பாஸ்கரனின் கருத்துப்படி, மலேசியாவில் பல இதழ்கள் சிறப்பாகச் செயல்பட விரும்பினாலும் தொழில் முனைப்புத் திறத்துடன் செயல்பட இயலவில்லை. இது சரிதான். பல படைப்பாளர்கள் படைப்புகளைப் படைத்து நூல்களாக்க விரும்பினாலும், அத்தகைய நூல்களை வெளியிட நல்ல பதிப் பகங்கள் இல்லை. வளர்ந்த சிங்கப்பூரில் தமிழ் இலக்கியத்திற்கு இது வருத்தமான ஒரு நிலை. அதற்கு ஒரே காரணம், வர்த்தக ரீதியில் இலாபம் அதிகம் கிடைக்காது என்ற வர்த்தகர்களின் சிந்தனையே. அது மட்டுமின்றி, நூலாக வெளியிடாத பலர் இன்னும் நம்மிடையே இருக்கிறார்கள். சிலர், இணையத்தில் பதித்து வருகிறார்கள். வாழ்க்கைத்தொழில் காரணமாகப் போதிய நேரமில்லாதவர்களும் நூல் வெளியீட்டில் அக்கறை செலுத்த இயலாது தவிக்கின்றனர். நூலாக வெளியிட்டவர்களும் நூல் வெளியீட்டில் விற்பதுடன் விற்பனை முடிந்துவிடுகிறது. எனவே, பதிப்புத்தொழிலில் படைப்பிலக்கியத்தின் உயிர்வாழ்வு இன்னும் வீரியமாக அமையவேண்டும்.

ரெ. கார்த்திகேசு, 2004

கல்வியாளரும் மக்கள் தொடர்புத்துறையியலாளரும் படைப்பிலக்கியவாதியான ரெ. கார்த்திகேசு, சிறுகதை என்ற தலைப்பில் மலேசியத் தமிழ்ச் சிறுகதை இலக்கியம் குறித்துக் கட்டுரை படைத்துள்ளார். 1965-இல் குடியரசாகுமுன்புவரை சிங்கப்பூர் மலாயாவுடன் இணைந்திருந்த நிலையில் அவர் கூறும் பல செய்திகள் சிங்கப்பூர்ச் சிறுகதை இலக்கியத்துக்கும் பொருந்தி வரும். 1930இல் சிங்கப்பூரில் பதிப்பிக்கப்பட்ட நவரசகதா மஞ்சரி மலேசியாவின் முதல் சிறுகதை இலக்கியத்தின் தொடக்கமாகக்

கொள்ளப்பட வேண்டும் என்கிறார். மலேசியாவின் மறுவுயிர்ப்புக் காலமாக 1946ஐச் சுட்டும் இவர், மலேசியச் சிறுகதைகளின் பலவகைக் காலப்பகுதிகள், பாடுபொருள்கள், தற்போதைய நிலை ஆகியவற்றைப்பற்றி விரிவாகக் கருத்தாய்வு நோக்கில் குறிப்பிட்டுள்ளார். மூத்த எழுத்தாளர்கள் அருமையாகப் பாடுபட்டு வளர்த்த இலக்கியத்தை இளைய தலைமுறையினர் தொடர்ந்து பயன்படுத்திப் பண்படுத்துவது இன்றியமையாதது என்றும் அதற்கு இளையர்கள் முன்வந்து வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் தம் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். இதுகுறித்து மா. இராமையா குறிப்பிடும்போது, 'மலேசியாவில் தமிழ் இலக்கியம் கிட்டத்தட்ட 110 ஆண்டுகளை எட்டிப்பிடித்திருக்கிறது. இந்த நாட்டில் குடியேறிகளாகக் கொண்டுவரப்பட்ட காலத்திலேயே தங்களுடைய மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறிய சிலர்தங்கள் இலக்கிய உணர்ச்சிகளையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு வந்தார்கள் எனத் தெரிகிறது.'' என்கிறார் ரெ. கார்த்திகேசு (மா. இராமையா, 3)

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் தொடர்பாக மேலும் சில நூல்கள் வந்திருந்தாலும் அவை பரவலான செய்திகளைத் தரும் தொகுப்புகளாக அமைந்திருப்பதாலும் அரிதின் முயன்று சில நூல்கள் கிடைக்காததாலும் அவை குறித்த செய்திகள் இங்கு இடம்பெறவில்லை.

கடந்த சுமார் இருபது ஆண்டுகள்

சிங்கப்பூர்த் தமிழ்ச்சிறுகதை இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை, நா. கோவிந்தசாமி குறிப்பிட்ட ஏழு காலக்கட்டங்களுடன் கடந்த இருபது ஆண்டுகளைச் சேர்த்துப் பார்க்கும்போது இன்னும் இரண்டு காலப்பகுதிகளை இணைக்கலாம். அவை வருமாறு:-

1. புதிய வரவுகள் நிறைந்த தொண்ணூறுகள் (1990-2000 வரை)

2. புதிய அலையை எதிர்நோக்கும் 21 நூற்றாண்டு (2001-2010வரை)

புதிய வரவுகள் நிறைந்த தொண்ணூறுகள் (1990-2000 வரை)

1990 சிங்கப்பூரில் 25வது ஆண்டு விழா என்பதால் 25 நூல்கள் வெளியிடப்பட்டன. அவற்றில் சிறுகதையும் முக்கிய இடம்பெற்றது. இது விழிப்புணர்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்திய ஒரு காலக்கட்டமாகும். இந்நிலையில் தமது பொருளாதார வசதி, குடும்பத்தினரின் ஒருமித்த ஆதரவு, வளர்ந்த குழந்தைகளின் ஊக்குவிப்பு என்று படைப்பாளர்கள் பலரும் தம் புத்தகங்களை வெளியிடத் தொடங்கினர். இவர்களுக்குச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் போன்ற அமைப்புகளும் உதவின. செல்வமும் நல்மனமும் படைத்த வர்த்தகர்கள் புத்தக விழாக்களுக்குப் பேராதரவு அளித்தனர். புத்தகப்படைப்புகள், புதிய எழுத்தாளர்கள், புதிய சிந்தனைக்கு வழிதரும் படைப்புகள், புதிய வரவுகள் ஆகியவை இடம்பெறும்வகையில் கல்வி கற்ற பட்டத்தொழிலர்கள் பலர் தமிழகத்திலிருந்து இங்கு வர வழி வகுத்தது இக்காலப்பகுதி. ஆசிரியர்கள், பொறியியலாளர்கள், அறிவியல் துறை பட்டத்தொழிலர்கள் என்று இந்தியக்குடிமக்கள் சிங்கப்பூரில் கல்வி கற்ற குடியேறிகளாக வருகைதந்ததுடன் சிங்கப்பூரை மணக்கும் வகையில் கல்வி கற்ற பட்டதாரிகள் பலரும் இங்கு வருகை தர ஆரம்பித்தனர். இத்தகைய புதிய வரவு களால் எழுத்துத்துறையில் புதிய அலையும் வீசத்தொடங்கியது. 1995இல் தங்கமுனைப் பேனா விருதுக்கான போட்டியில் இக்கட் டுரையின் ஆய்வாளர் பரிசு பெற்றார். தொடர்ந்து ஓ.கே. மகேஸ் வரி, சுந்தர வைதேகி என்று பட்டியல் தொடர ஆரம்பித்தது. ஆனால் இவர்களது வாழ்க்கைத்தொழில், அது சார்ந்த எதிர்ப் பார்ப்புகள் அதிகரித்தமை, குடும்பப் பொறுப்புகள் ஆகியன காரணமாக எதிர்பார்த்த அளவுக்குச் சிறுகதைப் படைப்பு அமைய வில்லை. எனினும் பல போட்டிகளில் பரிசு பெற்ற ஜெயந்தி சங்கர் போன்றோர் படைப்பில் ஆர்வம் காட்டினர். அதற்கு அவர்களது வாழ்க்கைப்பின்னணியும் உதவியாக அமைந்தது என்று எண்ணத் தோன்றுகிறது. படைப்பாளர்கள் தென்கிழக்காசிய இலக்கிய விருது, தமிழவேள் விருது என்று பல பரிசுகளைப் பெறும் நிலை வேகமாக வளர்ந்தது. மூத்த படைப்பாளர்கள் தங்களுக்கு அங்கீ காரம் கிடைத்தது என்பதுடன் தாமே தமக்கு அங்கீகாரம் தந்து கொள்ளும் நிலையும் அமைந்தது. இக்காலக் கட்டத்தில் படைப்

பிலக்கியங்கள் குறித்த இளங்கலை, முனைவர் பட்டக் கல்வியில் ஆய்வுகளும் சிங்கப்பூரிடையே தொடர்ந்தன. இதுவும் படைப் பிலக்கிய மற்றும் சிறுகதைப் படைப்பாளர்களிடையே வளர்ச்சி யையும் மனமகிழ்ச்சியையும் உருவாக்கியது எனில் மிகை யில்லை. தொலைக்காட்சியில் சில சிறுகதைகள் தெரிவுசெய்யப் பட்ட நாடகங்களாக ஒளியேற்றம் பெற்றன. தமிழகத்துக்கு அவ் வப்போது சென்றுவரும் விமானங்கள், மக்கள், புதிய குடியேறி களால் உலகமெங்கும் தமிழ்மொழி, இலக்கியம் பரவிடும் நிலை, கணினியின் வேகமான பரவல், மின்னஞ்சல், இணை இதழ்கள் ஆகியவற்றின் இருவகைப் போக்குவரவு, கணினியில் தமிழ் இடம்பெற்ற நிலை ஆகியன படைப்பிலக்கிய உலகில் அதிகப் பரிவர்த்தனைகள் நிகழவும் சிறுகதையின் மேம்பட்ட நிலை பற்றித் தெரிந்துகொள்ளவும் வழிவகுத்தன.

புதிய அலையை எதிர்நோக்கும் 21ஆம் நூற்றாண்டு (2001-2010வரை)

இருபத்தோராம் நூற்றாண்டில் உலகக் கிராமத்தில் எல்லோரும் உறுப்பினர்கள் என்ற நிலையில் ஒவ்வொருவரும் தாம், தம் குடும்பம், தம் மொழி, இனம், தம் நாடு ஆகிய அடை யாளங்களைத் தம்முள் கொண்டு படிப்படியே தம்மை ஒவ்வொரு வட்டத்திலும் பொருத்தமாகப் பயன்படுத்தி அறிவுப்பூர்வமாக உலகுடன் போட்டியிடும் காலக்கட்டமாக உள்ளூரைக் கொண்ட உலக இலக்கியக் காலமாக இன்றைய காலப்பகுதி அமைகிறது. இது இலக்கியத்திலும் பல புதிய பரிமாணங்களைக் கொண்டு வந்துள்ளது. எனினும் தமிழில் புதிய இளம் படைப்பாளர்கள் தோன்றாதது அதாவது நாடளாவிய நிலையில் சொல்லும் வகையில் இல்லை என்ற ஏக்கம் படைப்பாளர்கள், சமூகத் தலைவர்கள், கல்வியாளர்கள் என அனைவரிடமும் ஆழமாக உள்ளது. ஏனெனில் இலக்கியவாகனத்தை அடுத்த தலைமுறை யின் கரங்களின் செயல்பாட்டில் அமைவது சமூகத்தின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும். அதே நேரம், ஆங்கிலத்தில் ஓர் இளைஞர் இலக்கியம் படைக்கும்போது எவ்வளவு விரைவாக அவரது எழுத்துக்கு விமர்சனங்கள், பாராட்டுகள், ஊக்குவிப்புகள் கிடைக்கின்றனவோ அதேபோல் எதுவும் பின்தங்கிக் கிடைக் கிறதே என்று வருத்தம் உண்டாகாது.

சிறுகதை எனும்போது அது எளிமை கொண்ட ஆழமான ஒரு படைப்பு. அது, ஒரு சிறிய தெளிவான பயனை விளைவிக்க முயல்கிறது. தொடக்கத்திலேயே வாசிப்பவரின் கவனத்தை ஈர்க்கும் தன்மைமிக்கது என்கிறார் ஹெச் ஜி வெல்ஸ். ஆசிரியரின் எண்ணத்திற்கு ஏற்பச்சிறுகதை எவ்வாறு வேண்டுமாயினும் இருக்கலாம் என்பது ஹெச் இ பேட்ஸின் கருத்து. சிறுகதை அளவு முக்கியம் என்பர் சிலர். அது தேவையில்லை என்பர் சிலர். அரை மணி நேரம் முதல் இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடித்து விடக்கூடியதாக அமையவேண்டும் என்பது எட்கர் ஆலன் போவின் கருத்து (பாலச்சந்திரன், சு., 1981) கதையைத் தொடங்கும் போது வாசகர்க்குப் போடப்பட்ட முடிச்சு கதை முடியும்போது அவிழ்த்துவிடப் பட்டிருக்கவேண்டும் என்பது கதையின் அமைப்பு மற்றும் ஓட்டத்தை எடுத்துக்கூறும்வகையில் உள்ளது.

பாடுபொருள்

சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் பாடுபொருள் என்பது வடிவம் என்பதை ஒப்பிடும்போது முக்கிய இடம்பெறுவதைப் படைப்பு கள் வழி அறியலாம். இங்கு எந்த வரிசை முறையும் இல்லாமல் குறிப்பிட்ட சில படைப்பாளர்களின் ஒட்டுமொத்தப் படைப்பு களில் தென்பட்ட சில இன்றியமையாப் பாடுபொருள்கள் குறித் துக் கருத்துகள் இடம்பெறுகின்றன.

இராம கண்ணபிரானின் கதைகள் சமூக, உளவியல் சிந்தனைகளுடன் வாழ்வியல் உண்மைகள், ஆசிரியப்பணியின் அற்புதப் பகிர்வு, சுய அனுபவங்கள் ஆகியவற்றின் பின்னணியில் சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தை அதிலும் குறிப்பாக மனித மனங் களின் ஆழ, அகலங்களைக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. அவரது 'நாடோடிகள்' சற்று நீண்ட கதையாக இருந்தாலும் இன்றைய நிகழ்வை அன்றே எடுத்துக்காட்டும் கதையாக இருப் பதும் தம் மீது தமக்கு மதிப்பில்லா மக்களைப் பற்றியதாக இருப் பதுடன் நெஞ்சைவிட்டு அகலாத ஒரு கதையாக அமைகிறது. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் தொடர்பாகப் பலருக்கும் பல அரிய செய்திகளை வழங்கும் கருவூலமாகவும் இவர் அமைகிறார்.

தாம் எண்ணியத்தைத் தயங்காமல் எடுத்துரைப்பதிலும் சிங்கப்பூரின் பல்லின வாழ்க்கையைக் கதையில் பதிப்பதிலும்

பிறநாட்டுப் படைப்புகளின் தாக்கத்தை உணர்ந்தநிலையில் படைப்புகளைப் படைப்பதில் புதுமைசாதனை அவரது படைப்புகள் வழிப் பார்க்கலாம். இவரது படைப்புகள் மக்கள் தொடர்புச் சாதனங்களில் பல நிலைகளில் சிங்கப்பூர்களுக்கு இலக்கியத்தீனியை வழங்கியுள்ளன.

மக்கள் தொடர்புச்சாதனங்களில் அதிகத் தொடர்பும் பணி நிமித்தம் படைப்பிலும் ஈடுபட்ட ந பழநிவேலு அவரது காலத் திலே பல புதிய சமூகச்சீர்திருத்தக் கருத்துகளைப் படைப்புகளில் இடம்பெறச் செய்துள்ளார். அவரைப்போல் பழுத்த தொடர்புச் சாதன அனுபவம் கொண்ட ஜே எம் சாலி தம் படைப்புகளை இந்திய முஸ்லிம் சமூகத்தின் பல அரிய மரபுகளையும் பாரம் பரியப் பழக்கவழக்கங்களையும் எடுத்துக்காட்டுவதுடன் சிங்கப்பூர், தமிழ்ச் சமூகத்தின் பலதரப்பட்ட மக்களையும் தம் படைப்புகளில் கொண்டுவந்து அறிமுகப்படுத்துவார். வாழ்க்கை நீதிகளுடன் சார்ந்த முறையில் குடும்பம் எனும் அமைப்பின் சிறப்பை அதிகரிக்கும் வண்ணம் பெரும்பாலான அவரது படைப்புகள் அமைந்திருக்கும்.

மு. தங்கராாசனின் பல படைப்புகளில் சிறுகதைகளும் கணிசமான எண்ணிக்கையில் வந்துள்ளன. அவரது படைப்புகளில் சிங்கப்பூரின் பல்லின வாழ்க்கை, தமிழர்களின் வாழ்க்கை முறை, பிற இனத்தவருடனான உறவு, உறவுகளின் உண்மை முகங்கள் ஆகியன பற்றி அறியும்வகையில் கதைகள் உள்ளன.

சே.வெ. சண்முகம் தமிழ் முரசிலும் வானொலியிலும் எண்ணற்ற படைப்புகளைப் படைத்துள்ளார். அவரது படைப்பில் பெண்கள் முக்கிய இடம் பெறுவர். புரட்சிகரமான சில முடிவு களை எடுக்கும்போக்கும் அவரது பெண் கதாபாத்திரங்களிடம் தென்படும். விதவைக்கோலத்தைத் தவிர்த்து வாழும் பெண், தமிழகத்திலிருந்து வந்து அவதியுற்ற பெண் தன் மகளுக்குத் தந்த பொக்கிஷம் ஆகியன இடம்பெறும் கதைகள் குறிப்பிடத்தக்கவை.

மா. இளங்கண்ணனின் சிறுகதைகள் தொகுப்பு 1,2 ஆகியன கலாசார விருதுத் திட்டத்தின் கீழ் அமைந்த நிதியுதவி யோடு பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர் முன்பு படைத்த சிறுகதைத்

தொகுப்புகள் வழி பிறந்தது (1979), குங்குமக்கன்னத்தில் (1977), கோடுகள் ஓவியங்கள் ஆகின்றன. (1978), தூண்டில் மீன் (2001) ஆகியனவாகும். இவரது படைப்பில் உள்ள கதைகள் பல அரிய செய்திகளைக் கூறும் தன்மையன.

தமிழகத்தில் 1970களிலும் 1980களிலும் எவர்சில்வர் பாத்திரங்களை வாங்கி பெண்களுக்குச் சீர்வரிசை அனுப்ப சேமிக்கும் அன்னையர், புடவைகளை மாதத்தவணைகளுக்கு எடுத்து சேர்த்து வைக்கும் பழக்கமும் சீட்டுகட்டி பெரும் தொகையைச் சேமித்துத் தம் பிள்ளைகளுக்கு நகைகள், படிப்புச் செலவு என்று செலவிட்ட அன்னையர் மற்றும் அவர்களுடன் இணைந்து ஒத்துழைத்த கணவர் ஆகியோரை இங்கும் கதைகளில் பார்க்கமுடிகிறது. குறிப்பாக மா. இளங்கண்ணனின் கதைகளில் அவற்றைப் பார்க்கமுடியும். அதே போல 'சேட்'டிடம் கடன் வாங்கித் தொலைக்காட்சிப் பெட்டி, சோபா போன்றவற்றை வாங்கியபின் காசு கேட்கவரும்போது கணவரை ஒளிக்கும் மனைவியரையும் கடன் வாங்கியதால் மானம் போன குடும்பத்தினரையும் வீட்டில் பெரும் நாசத்தை எதிர்நோக்கிய குடும்பத்தையும் நாம் பார்க்க முடியும்.

அதுபோல் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இவரது கதைகள் சமூக, வரலாற்று நிகழ்வுகளைக் கண்ணாடியாக எடுத்துக்காட்டும் பாங்கு, ஜப்பானியரிடம் வேலை செய்யும் பாங்கு, அவர்களைப் பயன்படுத்தி மோசடி செய்த குடும்பத்தினர், விரும்பிய பெண்ணை மீண்டும் அதே வீட்டுப் பகுதியில் வந்து பார்த்தபோது சண்டை காரணமாக இடம்மாறிய நிலை, இதனால் மணமாகாது பல ஜோடிகள் வாழ்ந்து வயதான பிறகு இணைந்த நிலை ஆகியவற்றை நம் பக்கத்தில் உட்கார்ந்து கதை கூறுவதுபோல எடுத்துக்கூறுவதையும் நாம் அவரது கதைகளில் பார்க்கலாம்.

தமிழகத்திலிருந்து மனைவியின் பிரசவத்துக்காகத் தமிழகம் செல்ல விரும்பிய ஏழை வணிகருக்கு உதவிய சின்னத் தாத்தா, பணத்தை மற்றவரிடம் கொடுத்துவிட்டு திரும்பக் கேட்டபோது அவதிப்பட்ட நல்லவர். அக்கம்பக்கத்தில் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழ்ந்த குடித்தன வாழ்க்கை, கம்போங்

வாழ்க்கை ஆகியவற்றை இக்கதைகளில் பார்க்கமுடியும். அதே நேரம் தற்போது நல்ல வசதியுடன் இருந்தும் அணுக்கமான உறவை அதிகம் பார்க்கமுடியாத நிலை, பணி ரீதியான காழ்ப் புணர்வு கொண்ட நிலையும், தன் இனத்தின் மீது அடையாள உணர்வை அதிகப்படுத்திச் சிங்கப்பூரில் தமிழவேள் கண்ட கனவை நிலைநிறுத்துவதில் சமுதாயம் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று விரும்பும் விருப்பம் ஆகியவை, கணவரின் தவறான ஆசைக்கு முட்டுக்கட்டை போடாமல் அவர் விரும்பி யவளையே மணமுடிக்கும் பாங்கு, பெண்ணாகப் பிறந்தும் பெண்மைக்கான வளர்ச்சியைப் பெறாதவள் ஆணாக அறுவை சிகிச்சை மூலம் மாறிய பாங்கு, இன்று விற்பதுபோல் மாத்திரையை வாங்கி வாலிபத்தை நாடிய வயோதிகர்கள், காத லித்தது ஒருவனை கைப்பிடித்தது ஒருவனை என்று சமூகக் கட்டுப்பாடுகளுக்குப் பயந்து வாழ்ந்து பெயர்போட்ட பெண்கள், பணக்கார வீட்டில் முதலாளியின் மனைவியிடம் தவறான உறவு கொண்டு, தன் பிள்ளையை மற்றவர் பிள்ளையாகப் பார்க்கும் தீ மனம் கொண்ட பணியாளர், மணத்துக்காக இறந்த உறவை மறந்த பிள்ளைகள், காலம் போனாலும் வசதி போனாலும் தன் உறவை யும் ஹாங் பாவையும் மறக்காத தமிழர்-சீனர் உறவுமுறைகள், சிங்கப்பூரில் பிறந்தாலும் சொந்தக் கிராமத்தில் மூத்த மகளை மணம் செய்துகொடுத்து அங்குள்ள தன் உடன்பிறப்பை நல்லவ ராக எண்ணி முடிவில் பெரும் வேதனையை அனுபவித்த தமிழ்ப் பெண்கள், மலாய் மற்றும் சீனப்பெண்கள், நேதாஜியின் சுதந்திரப் படையில் சேர்ந்து நாட்டுக்குச் சேவையாற்றியது, முதலாளியின் ஆவியும் தொழிலாளியின் ஆவியும் பேசுதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவை போன்று இன்னும் பல கதைகள் சமுதாயத்தை எடுத்துக்கூறும் சான்றுகளாக உள்ளன. இவையாவும் வெறும் கதையல்ல. சமுதாயத்தில் நடைபெற்ற, கண்ணால் பார்க்கப்பட்ட பல உண்மைச் செய்திகளின் கற்பனைக் கூறுகள் கலந்த கதைவடிவங்கள் எனலாம்.

லதாவின் கதைத்தொகுப்பில், உண்மை வாழ்வு தொடர் பான கருக்கள், சூழல்கள், பாலியல் சார்ந்த சிக்கல்கள், பாத்தி ரங்களைக் கொண்டுள்ளது. கதைக் கட்டமைப்பு பாராட்டக்கூடிய நிலையில் உள்ளது. இலக்கிய உலகில் எதிர்பார்க்கக் கூடிய பல

புதிய முயற்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன. வாசகரிடையே தாக்கத்தை உண்டாக்கக்கூடிய சக்தி இந்நூலின் படைப்புகளுக்கு உள்ளன என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உயிர் உருகும் சப்தம் என்ற படைப்பில் சுப்ரா எழுதிய கதைகள் மிகக் கொடிய அல்லது மிக நல்ல பாத்திரங்கள் பலவற்றைக் கொண்டுள்ளன. சிங்கப்பூர்ப் பின்னணியில் கதைகள் அமைந்திருக்கின்றன. சில கதைகளில் இப்படியும் நடக்குமா என்று எண்ணும் பாத்திரங்கள், ஏன் இந்தப் பாத்திரம் இப்படிக் கரு அழியும் வகையில் நடந்துகொண்டது என்று துடிக்கும் பாத்திரங்கள் எனப் பலவற்றைக் கூறலாம். எனினும் மிகவும் உணர்வு வயப்பட்ட பாத்திரங்கள் பல இருப்பதையும் நிஜவாழ் வில் எண்ணிப் பார்க்க இயலாதனவாக உள்ள பாத்திரங்களையும் இவரது படைப்பு கொண்டுள்ளது.

கண்ணம்மாவின் படைப்புகளில் பெண் படைப்பாளரின் பின்னணியிலிருந்து படைக்கப்பட்ட பாங்கு பளிச்சிடுகிறது. அவரது முதல் சிறுகதைத் தொகுதி 1990ஆம் ஆண்டு சிங்கப்பூரின் 25வது ஆண்டை ஒட்டி வெளியிடப்பட்டது. கணவருடன் சிங்கப் பூருக்கு வெளியில் சென்று வேலை நிமித்தம் தங்கும் மனைவி பல படைப்புகளில் முக்கியத்துவம் பெறுதல், தங்கும் உணவு விடுதிகளில் வேலை, பெண் சொந்தக்காலில் நிற்றல் அவசியம், வயதானாலும் தன்மானத்துடன் வாழும் மனிதர்கள் எனப் பண்பாட்டுவழி வாழ்க்கைமுறைகளைக் கொண்ட படைப்பு களைப் படைத்துள்ளார். இவருடைய படைப்பிலும் நூர்ஜஹான் சுலைமானின் படைப்பிலும் இந்திய முஸ்லிம் சமூகத்தினரின் வாழ்க்கைமுறை, பாரம்பரியப் பழக்கவழக்கங்கள் குறித்த தகவல்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகளிர் என்று நோக்கும்போது கமலாதுரை, கமலாதேவி அரவிந்தன், சங்கரி, லெட்சுமி, முத்துலட்சுமி கருப்பையா, ரத்னா வதி போன்றோர் இதழிலும் வானொலியிலும் படைப்புகளை நெடுங்காலமாகப் படைத்தவர்கள். இவர்களுடன் தற்போது பலர் படைத்த சிறுகதைகளின் தொகுப்பைத் தங்கமீன் பதிப்பகம் வேறொரு மனவெளி என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. அது

மூன்று தலைமுறைப் பெண் எழுத்தாளர்களையும் அவர்களது குடும்பம், பெண்கள், அயல்நாட்டு ஊழியர், இளையர் ஆகியோர் பற்றிய சிந்தனைகளையும் அடையாளம் காட்டுகிறது.

சிங்கை தமிழ்ச் செல்வத்தின் 15 கதைகளைக் கொண்ட ஆர்க்கிட் மலர்கள் சிங்கப்பூர் பற்றிய படைப்புகளாகத் திகழ்கின்றன. அவற்றைப் பற்றித் தமிழகக் கல்வியாளர் ஒருவர் அணிந்துரை வழங்கியுள்ளார்.

இரா. துரைமாணிக்கம் தமது வளர்பிறைக் கதைகள், எல்லைக்கோடு ஆகியவற்றில் சிங்கப்பூர் சார்ந்த உள்ளடக்கத்தினைப் பிரதிபலித்துள்ளார். குடும்பம், மாமியார்-மருமகள் உறவு, குடும்பத்துக்காக உழைக்கும் மகள், குழந்தைகள், சம்பளப் பணத்தின் அருமை, அயல்நாடுகளுக்குச் செல்லல் என்று பலதரப்பட்ட சிங்கப்பூரர்களைக் காட்டியுள்ளார்.

அக்காலத்தில் ஆண்பிள்ளை பிறந்தால் மதிப்பு என்று அவன் தங்களை வயதான காலத்தில் காப்பான் என்று எண்ணிய பெற்றோர் மகளும் அவ்வாறு காப்பாள் என்று எண்ணும் வகையிலும், நன்றி அல்லது கைம்மாறு என்பதற்காக ஒரு பெண் தன் வாழ்க்கையையே அடகுவைக்கத் துணியும் நிலையிலும், பணத்துக்காகச் சொந்த மகளுக்குக் காலாகாலத்தில் செய்ய வேண்டிய திருமணத்தைத் தள்ளிப்போட்ட தந்தையும் மனம் மாறும்நிலையிலும் இவரது கதைகள் அமைந்துள்ளன. வாழ்க்கையில் நல்லது செய்தவர்கள் நல்லதே பெறுவர். கெட்டது செய்தவர் தனக்கு மட்டுமின்றி தன் அடுத்த தலைமுறைக்கும் அவதிப்படுவார் என்று கூறுவர். ஆனால் நல்ல பெண் இவரது கதையொன்றில் பாதிக்கப்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால், அக்கதையில் தந்தையின் பாவபுத்தியினால் வந்த பாவம், மகளை அப்படியாக்கி விட்டதோ என்றும் எண்ணத்தோன்றுகிறது. மாற்றாந்தாய்க் கொடுமைக்குப் பயந்து வீட்டைவிட்டு ஓடிவந்தவள் ரயில் விபத்தினால் ஒரு குழந்தைக்குத் தாயாகவும் ஒரு குடும்பத்திற்கு மருமகளாகவும் ஆகும் வாய்ப்பு வருவது வியப்பைத் தருகிறது.

பொன்சுந்தரராசு தமது கதைகளை மீண்டும் பதிப்பித்துள்ளார். அவரது கதைகள் குறித்து முன்பே அகிலன் வழங்கிய

அணிந்துரையும் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. அவரது கதைகள், சமூகத்தின் பல தரப்பிலுள்ள மக்களைப் பற்றிய பார்வையை வழங்குகின்றன. வாழ்வில் பிழைப்பு, பிரபலமாதல், மற்றவரைப் போல வாழ நினைத்தல் போன்ற அத்தியாவசிய மற்றும் ஆடம்பர ஆசைகள் பலவற்றால் தமிழர்களில் சிலர் ஏழையாக இருக்கும் நிலையிலும் படித்தவராக இருக்கும் நிலையிலும் சமூகத்தில் நல்ல பெயரைப்பெற்றவராக இருக்கும் நிலையிலும், தம்மை மறந்து பல செயல்களில் ஈடுபடுகின்றனர். குறுகிய கால நன்மைக்காக நேர்மை தவறியும் சிலர் பல பாவச் செயல்களைச் செய்வதில் விருப்பம் கொள்கிறார்கள். இன்றைய படைப்புகளில் இடம்பெறுவோரில் இத்தகையவர்களும் இருக் கிறார்கள் என்பதை நாம் காண முடிகிறது. அதே நேரம், எத்தகைய நிலையிலும் ஏழைகளாக இருப்பவர்களும் கல்வியறிவு பெற்ற வர்களும் பணம் படைத்தவர்களும் தமது நேரிய வாழ்வு வாழும் கொள்கையிலிருந்து மாறாமலும் இருக்கிறார்கள். அத்தகையவர் களையும் நமது படைப்புகள் எடுத்துக்காட்டத் தவறவில்லை. இத்தகைய இரு சாராரையும் அய்யாவு, விஜயன், மஞ்சுளா, தமிழ் மணி, பாண்டியன், மேலிங், பத்மா போன்றோர், இவர்களை அடையாளம் காட்டுவதிலும் அன்றைய சிங்கப்பூரின் (1968-1972) புவியியலையும் மக்களின் சமூக உளவியலையும் எடுத்துக்காட் டும் கதைகளாகவும் சில உள்ளன.

மா. அன்பழகனின் விடியல் விளக்குகள் ஆங்காங்கே படங்களுடன் இடம்பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பாகும். இதில் இடம்பெற்றுள்ள கதைகள் மனித வாழ்க்கை, அதன் பலவீனங்கள், மனிதனின் பலவகை முகங்கள், பொருந்தாக்காதல் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகின்றன. கதையின் களம் சிங்கப்பூரா, இந்தியாவா என்று சிந்திக்கும்வகையிலும் வேறு பட்ட கதைகளின் பின்னணியில் படைப்புகள் அமைந்துள்ளன.

நா. கோவிந்தசாமியின் தேடி, 1976-லும் 1991க்கு இடை யிலும் எழுதப்பட்ட படைப்புகள் (46இல் பிறந்த அவரது 30 முதல் 45 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட படைப்புகள்). இதில் 6 கதைகள் 1 நாவல் ஆகியன உள்ளன. ''மனிதனை முன் வைக்காமல் இலட்சியங்களையும் கொள்கைகளையும் முன் வைத்து நாம் காரியங்களை ஆற்றியிருந்தால் ஒரு தலைவனைத்

தேட வேண்டிய அவலநிலை இன்று நமக்கு ஏற்பட்டிருக்காது'' (2004) என்ற கருத்துக்கான பின்னணியை, காரணத்தை எதிர்கால முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் படைப்புகள் இந்நூலில் உள்ளன. இவர், பல நல்லவர்களின் முகமூடிகளைக் கிழிக்கும் வகையிலும் சமூகத்தில் புகழ்மிக்கவர்களாக, சிறந்தவர்களாக, பெரியவர்களாக நடைபோடுபவர்களை அடையாளம் காட்டும் மற்றும் அடையாளம் காண உதவும் படைப்புகளாக அவரது படைப்புகள் அமைந்துள்ளதை நாம் அறியலாம். இத்தகைய நிலை பல படைப்பாளர்களின் குறிப்பிட்ட சில படைப்புகளில் இருப் பதை ஆய்வாளர் குறிப்பிட்டாக வேண்டும். இத்தகைய நிலையும் தொடர்வது நல்லது. கருத்தாய்வு நோக்கில் விமர்சிப்பது அவசியம் என்பது அந்நோக்கில் படைப்பது புதிய தலைமுறையின் சிந்தையை வலுபடுத்தும் தன்மை மிக்கது.

சில படைப்பாளர்கள் நேரடியாக எதையும் கூறுவர், சாடுவர். சமூகத்தைப் புரட்டிட எண்ணுவர். சிலர் மனத்துக்குள் புழுங்கி வெளியே சொல்லாமல் பொறுமையாக இருப்பர். வேறு சிலர் கிண்டல், நக்கல், எள்ளல் என்று சொல்லவந்ததைச் சூசக மாகச் சொல்லிவிடுவர். அவ்வகையில் புதுமைதாசன் எனப்படும் பி கிருஷ்ணனும் ஒருவர். 10 கதைகளைத் தன்னுள் கொண்டுள்ள இவரது நூலில் பலரையும் மிகவும் பாதித்த கதை, வாழமுடியா தவள். அக்காலச் சமூகத்தில் கலப்புமணத்தினாலும் கலப்பின மணத்தினாலும் பெண்கள் பாதிக்கப்பட்ட நிலையை வாசிப்பவர் நினைந்து நினைந்து நெஞ்சம் புழுங்குவர், வருந்துவர். ''நான் செய்த முடிவு மனிதத் தன்மையற்றது என்று கூறுவது போலிருக் கிறதே. எங்களுக்கிருந்த ஒரே ஆதரவும் போய்விட்டது என்று மல்லிகா எழுதியிருக்கிறாளே அப்படியென்றால் அவளுக்குத் திருமணம் நடக்கவில்லையா?'' (மனசாட்சியுடன் பேசுவதுபோல் வரும் பகுதி- மனச்சான்று, புதுமைதாசன் கதைகள் ப.85) என்ற கூற்றும் இடம்பெறும் கதையும் குறிப்பிடத்தக்க ஒரு கதையாகும். இவர் தம் சொந்த முயற்சியால் தொடர்ந்து பல இலக்கியப் பணிகளைச் சத்தமின்றி அமைதியாகச் செய்துவருகிறார்.

'பின்சிட்' படைப்பில் 16 கதைகளும் 'மனுஷி' படைப்பில் 11 கதைகளும் 'நியாயங்கள் பொதுவானவை' படைப்பில் 27 கதை

களும் என படைத்துள்ள ஜெயந்தி சங்கர் அண்மைக்காலத்தில் தொடர்ந்து இலக்கியத்துறையில் தம் தொடர்ச்சியைக் காட்டி வருகிறார். சிங்கப்பூர் வந்தபிறகு வாசித்த இலக்கியங்கள் அவரை இலக்கியம் படைக்க வழிசெய்திருப்பது வரவேற்கத் தக்கது. ஆண்டுக்குக் குறைந்தது மூன்று அல்லது நான்கு படைப்புகளைக் கடந்த சில ஆண்டுகளாக இவர் வெளியிட்டு வருவதும் அதற் கேற்பப் பதிப்பகங்கள் அவரது நூல்களை வெளியிடுவதும் இன்னும் தொடர்ந்தால் அடுத்த ஐந்தாண்டுகளில் அவர் அதிகமான படைப்புகளைப் படைத்திடும் படைப்பாளியாக ஆகலாம். ஜெயந்தி சங்கரின் படைப்புகளில் கல்வித்தகுதிகளுடன் புலம் பெயரும் இக்கால இந்தியக்குடிமக்களை அதிலும் தமிழ்க்குடி களைப் பற்றிய செய்திகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்க அம்சம். இந்தியப்பட்டத் தொழிலாளர்களின் பணி நோக்கிய புலம்பெயர்பு, சிங்கப்பூரிலும் மேலை உலகிலும் குடிபெயர்ந் தவர்கள் உள்ளூர்ச் சமூகத்தின் நடப்புகளை எவ்வாறு பார்க் கிறார்கள். அவற்றுக்கு எவ்வாறு ஓர் இடம் தருகிறார்கள் என்று இவரது படைப்புகள் கூறுகின்றன. தமிழகத்துக்கு வெளியே குடிபெயர்வதால் தமிழ்க் குடும்பங்களில் ஏற்படும் சில மண, கல்வியியல் சிக்கல்கள் தொடர்பாகவும் இவரது படைப்புகள் பேசுகின்றன. இன்றைய நாகரிக உலகில் இத்தகு சிக்கல்கள் தவிர்க்கமுடியாதன என்றாலும் அவை இடம்பெறும் களங்கள் மாறுபட்டவை.

ஜெயந்தி சங்கர் படைப்புகளில் சிங்கப்பூர், சிங்கப்பூரின் பல்லினவாழ்க்கை, பல்லின மாந்தர்கள், சிங்கப்பூரின் யதார்த்த வாழ்வுமுறையும் போன்ஸாய், தொடக்கநிலை ஆறு தேர்வு, நான்கிலக்கம், பேஜர், சீனர்களின் வழிபாட்டு முறைகள் எனச் சிங்கப்பூர் சார்ந்த அம்சங்களும் அதிகம் இடம்பெற்றுள்ளன. அவர் பல போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்றுப் பெறும் பரிசுகள் அவரது கதைகளுக்குக் கிடைக்கும் மதிப்பு என்றாலும் அவரது படைப்புகள் குறித்த சிறந்த விமரிசனங்கள், அவரை ஊக்குவிக்கும் வகையில் அமையும் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியன அவரது படைப்புகளில் செம்மையைக் கூட்டும் எனலாம். அவரைப் போல் இன்னும் பலர் முழுநேரப்படைப்பாளிகளாக வருவது சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும்.

நூல் வெளியீடுகள்

1970களில் மக்கள் தொடர்புச் சாதனங்களில் வந்த படைப்புகள் நூல்வடிவம் பெறும் நிலை தோன்றியது. 1960களில் மு.சு. குருசாமி நூல்களை அதிகமாக வெளியிடுகிறார். 1970களில் மா. இளங்கண்ணன் நூல்கள் வெளிவருகின்றன. 1980களில் கண்ண பிரான், பொன்சுந்தரராசு, மு. தங்கராசன், நா. கோவிந்தசாமி, இளங்கோவன், சே வே சண்முகம், சங்கரி ராமானுஜம், ஏ.பி. சண்முகம், ரெ. பாண்டியன் போன்றோர் நூல்களை வெளியிடு கின்றனர். 1990இல் சிங்கப்பூரில் 25 ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி அதிகமான நூல்கள் விழாக்கொண்டாட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளன. பிறகு, 2000இல் ஜெயந்தி சங்கர் அதிக மான நூல்களை வெளியிட்டவராக விளங்குகிறார். தவிர, சீதா லட்சுமி, நூர்ஜஹான் சுலைமான், பீரம்மாள் பீர்முகம்மது, அன்பழகன் ஆகியோர் தனித்தொகுப்புகளாக அல்லது மற்றோர் இலக்கியவகையுடன் இணைத்து வெளியிட்டுள்ளனர். பொன் சுந்தரராசு, துரை. மாணிக்கம், மா. இளங்கண்ணன் ஆகியோர் படைப்புகளை மறுபதிப்பு அல்லது மாற்றம் செய்யப்பட்ட நூல்வடிவப் பதிப்புகளாக வெளியிட்டனர். தொகுப்புநூல்களாக, சீதாலட்சுமி, பாலுமணிமாறன், மா இராஜிக்கண்ணு, மல்லிகா ஆகியோர் நூல்களை வெளியிட்டுள்ளனர். புதிய படைப்பாளர் களும் வருகின்றனர். இவர்களுடன் நூல்களே வெளியிடாத படைப்பாளர்களும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நூல்களாக வெளியிடாமல் தொடர்புச் சாதனங்களிலும் செய்தித் தாள்களிலும் படைப்புகளை வெளியிடுபவர்களாக சீதாலட்சுமி, ஜோசபின் ஜோசப், ஓ.கே. மகேஸ்வரி, ராமராஜன், கா. சங்கையா, பி இராஜாராம், லதா போன்றோர் உள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது (முனைவர் கா. சிவத்தம்பி, முனைவர் இராம. குருநாதன், 2005:264). இந்தத் தகவல் வருமுன்பே நூல் வெளியீடு செய்தவரும் தற்போது நூல் வெளியீடு செய்தவரும் இப்பட்டிய லில் உள்ளனர்.

மாணவ ஆசிரியர்களின்/மாணவர்களின் படைப்புகள் நூல்களாகும் நிலை

தேசியக் கல்விக்கழகத்தின் சிறப்புப் பயிற்சித் திட்டம் அவ்வப்போது தனது மாணவர்களின் படைப்புகளை நான்கு மொழித் தொகுப்பாக வெளியிடுவது அதன் சிறப்பு. அவ்வகையில் 2004இல் மா. ராஜிக்கண்ணு, அ. மல்லிகா ஆகிய இருவரும் வெளியிட்ட இளங்கதிர் தொகுப்பில் லோகேஸ்வரியின் கூண்டு, சுபாஷினியின் பெண்ணிலா ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன. 2005இல் வந்த வேற்றுமையில் ஒற்றுமை என்ற Unity in Deversity என்ற புத்தகத்திலும் தமிழில் இரண்டு கதைகள் இடம்பெற்றுள் ளன. புஷ்பஜாமேனன், லோகேஸ்வரி என்ற இரு பெண் ஆசிரியர் களின் கதைகள்தாம் இவை. இளம்படைப்பாளர்களின் அரும்பும் மொட்டுக்கதைகளாக அமைகின்றன என்றாலும் சிங்கப்பூரின் படைப்புகள் இவற்றில் இடம்பெற்றுள்ளன. ஒரு கதை, ஊனமான ஒரு சிறுவனின் காற்பந்து விளையாடும் அசையாப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர் வழியே நிறைவேற்றிய அப்பாவின் கதை. பெரிய போட்டி ஒன்றின் நடுவில் விளையாட்டு வீரர் ஒருவரிடம் மகனின் ஆசையைக் கூறி அவனை அவருடனும் அவரது குழுவின ருடனும் ஆட வைத்துப் பார்த்த அப்பா இங்கு வேறுபட்டு விளங்கு கிறார்.

மற்றொரு கதையில் இளவயதிலேயே விதவையான பெண் அக்கம்பக்க வீடுகளில் பாத்திரம் தேய்த்துக் குழந்தை பார்த்து இரு மகள்களைப் பட்டதாரியாக்கி அவர்கள் வெளிநாடு களில் வாழும் வகையில் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார். ஆனால் எண்பதுக்கும் மேற்பட்ட வயதில் அவர் இரத்தப்புற்றுநோயால் அவதிப்படுவதாக மருத்துவர் கூறியதும் அவரை அருகே வாழும் ஒரு பெண் கூட்டி வந்து தன்வீட்டில் வைத்திருக்கிறார். மகள்கள் வந்ததும் அம்மாவைப் பார்த்து மகிழ்ச்சியாகப் பேசாமல் அவரைத் தம்முடன் அழைத்துச் செல்லப் பெரும் போராட்டம் நடத்து கிறார்கள். அதைப் பார்த்த அந்தப் பெண், மகள்களைத் திட்டி அனுப்பிவிட்டுத் தன் வீட்டில் வைத்துக்கொள்ள முன் வருகிறார். ஆனால் மறுநாள் அவர் இறந்துவிடுகிறார். இறப்பின் மூலம் அவர் இதுவரை வாழ்ந்த நரகத்தை விட்டுச் சொர்க்கத்துக்குப் போனதாக அப்பெண் நினைக்கிறாள். இங்கு இக்கதைகளில் கருக்கள் நன்றாக

இருப்பினும் இரண்டாவது கதை, வாசிப்பவரைத் தன்வசப்படுத்தும் தன்மையுடன் திகழ்கிறது. இதுபோன்று அமைதியான புயல் என்ற நூல் மாணவ ஆசிரியர்களின் கதைகளைச் சிறுகதைப் போட்டியின் வாயிலாகத் தெரிவு செய்து பிரசுரிக்கப்பட்ட தொகுப்பாகும். பதின்மவயது இளையர் தொடர்பான கருக்களைக் கொண்ட கதைகளை எதிர்பார்த்த அப்போட்டிக்கு வந்தவற்றில் பிரசுரமான படைப்புகள் பெரும்பாலும், தாய் என்ற உறவு அதன் புனிதத்தன்மை, அதற்கு உள்ள மதிப்பு ஆகியவை பற்றி நெஞ்சை நெகிழவைக்கும் வகையில் எழுதியிருப்பது வியப்புக்குரியதாக அமைந்தது.

கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவும் உயர்நிலைப்பள்ளி தமிழ் மாணவர்களுக்கு 1988 இல் கதைப்போட்டிகளை நடத்தியது. அது சிறந்த கதைகளை ஒரு புல்லாங்குழல் புயலை உச்சரிக்கிறது என்ற பெயரில் நிலவு புத்தக நூல் நிலையம் வழியாக நூல் வெளியிட்டது. இக்கதைகள் மாணவர்களுக்கு விருப்பமான கதைகளாக அமைகின்றன என்பதுடன் பலரை எழுத ஊக்குவிக்கும் தூண்டுகோல்களாகவும் அமைகின்றன.

விருதுகள்

சிறுகதை உட்பட இலக்கியம் படைக்கும் படைப்பாளர்களுக்குப் பல விருதுகளும் பாராட்டுகளும் தொடர்ந்து கிடைத்தவண்ணம் உள்ளன. அவ்வகையில் இலக்கிய விருது தங்கமுனைப் பேனா விருது, சிங்கப்பூர்த் தேசிய புத்தகமேம்பாட்டு மன்றத்தின் சிங்கப்பூர் இலக்கிய விருது, தென்கிழக்காசிய விருது, மோண்ட் பிளாங்க் விருது, சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் சங்கம் வழங்கிவரும் தமிழவேள் விருது, அவ்வப்போது நாடளாவிய நிலையில் தனி அமைப்புகளால் நடத்தப்பட்டுவரும் சிறுகதைப் போட்டிகளில் வழங்கப்படும் பரிசுகள், சிறுகதைப் படைப்பாளர்களுக்கும் அது உட்படப் பிற படைப்புகளுக்காக வழங்கப்படும் சாதனை விருதுகள் ஆகியவற்றையும் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டுக்கு, கவிமாலையின் இலக்கியக் கணையாழி விருதைக் குறிப்பிடலாம். இவையாவும் ஒல்லும்வகையெல்லாம் தமிழ்ப் படைப்பாளர்களை ஊக்குவித்து மேலும் படைப்புகளைப் படைக்கவைக்கும் ஒப்பற்ற விருதுகளாகும். வெளிநாடுகளில் நிகழும் சிறந்த படைப்பிலக்கிய விழாக்களுக்குப் படைப்பாளர்

கள் அனுப்பப்படுவதும் இலக்கியவாதிக்குத் தரப்படும் ஒப்பிலா மதிப்பாகவே கருதப்படுகிறது. அவ்வகையில் கண்ணபிரான் அமெரிக்காவின் அயோவாவுக்குச் சிறப்புப் பயணம் மேற்கொண்டார். தற்போது தங்கமுனைப்பேனா விருதுடன் வழங்கப்படும் செறிவுநிதியைப் பயன்படுத்திப் படைப்பாளர்கள் இவ்வாறு வெளிநாடு சென்று தம் இலக்கிய ஆற்றலை மேம்படுத்தி வர இயலும் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே.

சிங்கப்பூர் இலக்கியக்களம் 1977இன் மலேசிய சிங்கப்பூர்ச் சிறுகதைகளைத் தமிழகப் பேராசிரியர்களைக் கொண்டு திறனாய்வு செய்து 1981இல் நூலாக வெளியிட்டுள்ளது. அத்தகைய இரு நாட்டு இலக்கியத் தொடர்பு இன்றும் தொடர்ந்து வருகிறது. சிங்கப்பூர்த் தேசியப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற உலக அரங்கில் தமிழ் என்ற மாநாடு, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மலாயாப் பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் பிரிவு, சிங்கப்பூர்த் தேசியக் கல்விக்கழகத்தமிழ் துறை ஆகியன இணைந்து நடத்திய மலேசிய-சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய மாநாடு 2005 நடைபெற்றது. தற்போது இரு சாராரும் இணைந்து தமிழகத்தில் இம்மாநாட்டை நடத்துகின்றனர். தமிழ் இலக்கியத்தை ஆராயும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இருக்கை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரவை, சிங்கப்பூர் எழுத்தாளர் கழகம், சிங்கப்பூர் இலக்கியவளம் ஆகிய அமைப்புகள் தொடர்ந்து இலக்கியம் குறித்த பங்கை ஆற்றி வருகின்றன என்பதுடன் சிறுகதையும் அங்கு குறிப்பிடத்தக்க இடம்பெறுவதை நாம் மறுக்க முடியாது. பன்மொழித் தொகுப்புகள் அரசாங்க அமைப்புகளால் வெளியிடப்படுகின்றன. மேலும், சிறுகதை நூல்களின் வெளியீடு தொடர்ந்து கவிதை நூல்களுடன் போட்டியிட்ட வகையில் தோன்றி வருகின்றன. எனினும் இவற்றுக்கு எப்போதும் போன்று மூத்த படைப்பாளர்களின் ஆதரவு இருப்பதுபோல் இளைய மாணவர்களும் வருகை தரவேண்டும் என்பது என்னைப் போன்று பலரது அவா.

சிங்கப்பூரில் இலக்கியப்படைப்பு என்பது சுய விருப்பத்தின் கீழ் நடைபெறத் தொடங்கி தற்போது நாடளாவிய ஆதரவுடன்

நடைபெறுகிறது. எனினும் எதிர்பார்த்த அளவுக்கு அதில் வெற்றி கிடைக்கவில்லை என்று கூறலாம். இதற்கு இது தொடர்பாக யாரேனும் தொடர்ந்து பணியாற்றுவதுடன் புதிய இலக்கிய முனைப்புகளையும் போக்குகளையும் இளம் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களை வளர்க்க வேண்டும். மலேசியாவில் தற்போது தமிழில் எழுதும் படைப்பாளர்கள் தாங்கள் பெற்ற ஆங்கிலக்கல்வியினால் ஆங்கிலத்திலும் தேசிய மொழியான மலாய் மொழியிலும் எழுதுகிறார்கள். அதேபோல் மலாய் இனத்தவர்கள், மலாய் மற்றும் ஆங்கில மொழியில் எழுதுகிறார்கள். சீன இளையர்களோ தற்போது தம் மொழியிலும் மலாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் எழுதுகிறார்கள். இவர்கள் படைப்பிலக்கியங்களைப் படைப்பதிலும் அதிக அளவில் ஈடுபட்டுவருகிறார்கள். இத்தகு நிலை இங்கும் இருமொழிப் படைப்பில் வரலாம். எனினும் தமிழில் சிறந்த ஆர்வமும் தேர்ச்சியும் உடைய மாணவர்களின் மொழித்திறமையைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் அவர்கள் இங்கு சிறந்த சிங்கப்பூர்ப் படைப்பாளர்களாக உருவாக வழிசெய்யலாம். இது நாம் இலக்கிய வளர்ச்சிக்குச் செய்யும் ஈடிலாத் தொண்டாக அமையும்.

மக்கள் தொடர்புச் சாதனங்களில் சிறுகதை

சிங்கப்பூரில் தமிழர் சீர்திருத்தச் சங்கத்தின் சார்பில் 'சீர்திருத்தம்' இதழ் வெளிவந்தது. அதன் ஆசிரியராக இருந்த தமிழவேள் சாரங்கபாணி, அதில் இலக்கியப் படைப்புகளை வெளியிட்டார். அவற்றில் ந. பழனிவேலுவின் கள்ளரும் கணபதியும், ஏற்றுமதி, ஹனுமார் மேடு ஆகிய கதைகள் 1939இல் வெளிவந்ததைக் குறிப்பிடலாம். தமிழகத்தின் சிறந்த சிறுகதைப் படைப்புகளைத் தமிழ் முரசில் வெளியிட்டு சிறுகதை இலக்கியம் வளரப் பெரும் பங்காற்றினார் சாரங்கபாணி. அவற்றில் சா குருசாமியின் கதைகள் குறிப்பிடத்தக்கன. மேலும் அவர் 1951-இல் தமிழ் எழுத்தாளர்கள் எப்படிக் கதைப்படைப்புகளை எழுத வேண்டும் என்று தலையங்கம் ஒன்றை எழுதியுள்ளார். தவிர, 1955-இல் 'குடும்பச்சிக்கல் புதிர்க்கதைப்போட்டி' என்ற போட்டியைத் தமிழ் முரசுவழி நடத்தினார். இப்போட்டி சமூகத்தில் படைப்பாளர்களிடையேயும் வாசகர்களிடையேயும் பெறும் வரவேற்பைப் பெற்றது. தமிழகம் மொழி தோன்றிய நாடாகவும் தமிழர்களின் ஆதியாகவும் இருந்தாலும் தமிழர்கள் புலம்பெயர்ந்த

நாடுகளில் தங்கள் சொந்தக்காலில் நிற்பது எதிர்பார்க்கப்படுவது போல இலக்கியப் படைப்பிலும் தன்னைத்தானே நம்பி இருப்பது எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப, உள்ளூரிலேயே அடுத்த தலைமுறைப் படைப்பாளர்களையும் உருவாக்க வேண்டும் என்ற முனைப்பில் 2.5.1952இல் மாணவர் மணிமன்றத்தை ஆரம்பித்தார். அக்காலத்தில் அம்மன்றத்தில் உறுப்பினர்களாகவும் பலர் ஆவதை அவர் ஊக்குவித்ததுடன் அவர்களுக்கு 'பேட்ஜ்' எனப்படும் அடையாளச்சின்னம் தரப்பட்டது. அதில் எழுத ஆரம்பித்தவர் களில் பலர் இன்று சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் படைப்பாளர் களாக உலாவருகிறார்கள். மலேசியாவில் இவர்களது மன்றங்கள் இன்றும் தொடர்ந்து செயல்பட்டு வருவதை 2000-இல் பாங்கியில் இடம்பெற்ற பல்கலைக் கழக மாநாட்டில் நான் நேரடியாகப் பார்த்தேன். அந்த அளவுக்கு அவர்கள் உற்சாகத்துடனும் பெருமை யுடனும் அம்மன்றத்தில் செயல்படுகிறார்கள். சிங்கப்பூரில் இத்தகையதோர் ஊக்குவிப்பு வருவதும் படைப்பாளர்களின் தொடர்ச்சி தொடர்வதும் நம் அனைவரின் கையிலும் உள்ளது என்பது உண்மை.

தமிழ் முரசில் படைப்புகளை எழுதுவதுடன் வளரும் மற் றும் வளர்ந்த படைப்பாளர்களுக்கிடையே கட்டமைப்பு உருவாக வேண்டும் என்ற அடிப்படையில் 5.7.1952இல் வை. திருநாவுக்கரசு எழுத்தாளர் உருவாக்கினார். இதன் உறுப்பினர்கள் தொடர்ந்து ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் வகையில் முறையான செயல்முறைகள் உருவாக்கப்பட்டன. இப்பேரவையில் உள்ளோ ருக்கு முறையான இலக்கியப் பாடமும், இலக்கியப் படைப்பு களை வாசித்துக் கருத்துகளைக் கூறும் வாய்ப்புகளும் தரப்பட்டன. மேலும் இப்பேரவை உறுப்பினர்கள் மலாயா தொடர்பான அம்சங்கள் குறித்துப் படைப்புகளைப் படைக்க வேண்டும் என்று கூறப்பட்டது. இதிலிருந்து வாழும் சூழல் மற்றும் நாடு சார்ந்த படைப்புகளுக்கும் அப்படைப்புகளால் குறிப்பிட்ட சூழலிலும் நாடும் அங்கு வாழும் சமூகமும் உயர வேண்டும் என்ற சிந்தனை யும் தமிழவேளுக்கு இருந்ததையும் அதனை வை. திருநாவுக்கரசு வழி நிறைவேற்றியதையும் நாம் உணர முடிகிறது. சமுதாயத்தில் கூலித் தொழிலாளர்களாகவும் ஓரளவு படித்தவர்களாகவும் இங்கு வந்து பொருள் தேடுவதிலும் வாழ்க்கையை நல்லபடி உயர்த்து வதிலும் முழுமூச்சாக ஈடுபட்டவர்களிடையே இலக்கியம்

படைக்கும் ஆர்வத்தை வளர்க்கமுடியுமா என்று பலரும் எண்ணிய காலத்திலேயே அதைச்சாதித்துக் காட்டிடும் வகையில் தலையங்கம் எழுதியதுடன் தமது நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டிய தமிழவேளின் பணி பாராட்டுக்குரியது.

தமிழவேள் சாரங்கபாணி, கதை இலக்கியத்துறைமீது அதிக விருப்பம் கொண்டவர் என்றும் அத்துறை மேம்படப் பல வகையிலும் உதவினார் என்றும் கூறப்படுகிறது. அவரும் அவரது ஆசிரியர் குழுவினரும் சிறுகதைப்படைப்பில் அதிக அக்கறை காட்டியதை தமிழ் முரசின் ஆரம்பகாலப் படைப்புகளும் இடைக் காலப் படைப்புகளும் எடுத்துக்காட்டுகின்றன. ஆரம்பத்தில் தமிழகப் படைப்பாளிகளின் படைப்புகளை அதிகமாக வெளியிட்ட முரசு பின்பு உள்ளூர்ப் படைப்பாளர்களின் கதைகளை அதிகமாக இடம்பெறச் செய்துள்ளது.

1930களில் பிரசுரமான சிறுகதைகளில், சமூக மறுமலர்ச்சி, பெண்ணுரிமைப் படைப்புகள் வெளிவந்தன. சாதிபேதம் பாராது மணத்தல், விதவைமணம் புரிதல், கணவன் கொடுமை, பெண் தவறான பாதையைச் சூழல் காரணமாகத் தேர்வு செய்தல், கள்ளக்காதல், சாதியைப் பிறரிடம் மறைத்து மணம் செய்தல், பேய்பிசாசு போன்றவற்றுக்கு அஞ்சுதல் குறித்த படைப்புகள், காதல் மணத்தை எதிர்த்த பெற்றோர், அதனால் உயிர்விட்ட இளையர்கள், சொத்துக்காக சொத்து அபகரிப்புக்காக விஷம் வைத்து உயிரை எடுக்கும் பாங்கு, பிரச்சினையைத் தீர்க்க வன்முறையை ஆயுதமாகக் கையாளுதல், காலம் கடந்து மனைவியின் சிறப்பை உணர்தல், கடன் வாங்கிக் கடன் முதலைகளிடம் அவதியுறல் போன்ற கருத்துகளைக் கொண்ட படைப்புகள் இடம் பெற்றுள்ளன. ந. பழநிவேலு, சுப. நாராயணன் போன்றோர் முக்கிய இடம்பெறுகின்றார்கள். 1940களில், சாதிப்பிரச்சனையால் காதலர்கள் தற்கொலை, குடும்பவறுமை காரணமாகக் குழந்தைகளிடம் கொடூரமாக நடக்கும் பெற்றோர், வறுமையைப் போக்கும்போது தவறினைச் செய்த மாட்டிக்கொள்ளுதல், முறைப்பெண்ணை மணப்பதற்காகப் பெரும்பாடு படல், ஏழையான தொழிலாளியைப் பிரச்சினையில் மாட்டவைத்துச் சிறைக்குத்தள்ளிய முதலாளி, குழந்தை மணத்தினால் பாதிக்கப்பட்ட வாழ்க்கை, உறவினை இழந்து மனநோயால் பாதிக்கப்பட்ட

வாழ்க்கை, இளம் விதவையின் காதல்மணம், கீழ்சாதியில் பிறந்ததால் பிள்ளைகள் படும் பாடு, உயர்சாதியுடன் தொடர்பு கொள்ள விரும்பும் நிலை, உயர்ந்த படிப்பு இருக்கும் நிலையிலும் குணம் நிறைந்த தொழிலாளியை விரும்பும் பெண், நேர்மைக்கு மதிப்பளித்து வாழ்தல், கடன்வாங்கியதால், கிடைக்கும் பரிசுப் பொருளை உணவை விரும்பாத நிலை, ஜாதகப் பொருத்தத்தால் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலை, திருமணமான நிலையிலும் மற்றொருவருடன் தொடர்புகொள்ளும் பெண், நகைக்காகக் குழந்தையைக் கொல்ல முயலும் பணிப்பெண் போன்ற படைப்புகள் வெளிவந்துள்ளன. பெரும்பாலும் மு.சு. குருசாமி, சுப. நாராயணன் போன்றோர் இக்காலப்பகுதியில் முக்கிய இடம் பெறுகிறார்கள்.

1950களில், தன்னிடம் வேலைசெய்யும் தொழிலாளிக்குத் தேவையான நேரத்தில் பணம் தராத முதலாளி, அதனால் திருடிப் பின் சிறை செல்லும் தொழிலாளி, முடிவில் குடும்பத்தை இழந்த தொழிலாளி, தான் பிறந்த நேரத்தில் தந்தை மாண்டதால் தன்னைத் தாய் பழிக்கும் இழிநிலையைப் பெற்ற குழந்தை, ஆடம்பரச் செலவு செய்து மணம் நடத்துவது வீண் என்று எண்ணுவது, லட்சியக்காதல் மணம் வெற்றிபெறல், பணக்கார முதலாளிகள் ஏழைத் தொழிலாளிகளின் வயிற்றில் அடித்தல், படித்தும் பணம் இல்லாததால் பணக்காரர் வீட்டில் எளிய வேலை செய்யும் இளையர், குழந்தைகளின் திறமைகளை மதிக்காத தந்தையர், பெண்களைக் கிள்ளுக்கீரையாக எண்ணும் ஆடவர்கள், தவறான வழி செல்லும் பெண்கள், கணவனைத் திருத்தமுடியாத பெண் உண்மையை எழுதிவைத்துவிட்டு உயிர்விடல், நாகரிக வாழ்க்கையினால் கீழ்நிலைக்குச் செல்லும் பெண்கள், பணக்காரர்களுக்கு உதவியதால் திருட்டுப்பட்டம் பெற்ற இளையர், வேற்றினப் பெண்ணை மணந்து ஊருக்குச் சென்றவனது தாய் படுத்திய பாட்டால் தற்கொலை செய்த மணப்பெண், பெற்றோரிடம் அனுமதி பெற்ற வேற்றுசாதிப்பெண்ணை மணந்த மணமகன், ஓடிப்போன கணவனை நீண்டகாலம் கழித்துப் பார்க்கும் மனைவி, காலணி தைக்கும் தொழிலாளியின் திடீர் சபலபுத்தி பிறகு மாறும் போக்கு, பெண்கள் மீது திடீரென ஏற்படும் மையல் நிரந்தரமற்றது என்று உணரும் தொழிலாளி, வெண்படை போன்ற நோய்களால் அவமானப்படும் நிலை, மனைவியை விட்டு வேறு

பெண்ணை விரும்பும்/மணக்கும் நிலை, பணத்தின் மீது திடீர் ஆசை போன்ற பாடுபொருள்களைக் கொண்ட படைப்புகள் பிரசுரமாயின.

புதுமைதாசன், ரெ. கார்த்திகேசு, முருகு. சுப்பிரமணியன், அ.கி. அறிவானந்தன், மு.சு. குருசாமி, பி.பி. காந்தம் போன்றோர் தம் படைப்புகள் குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றன. இக்காலக் கட்டம் அதிகமான கதைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. 1940, 1950களில் தமிழகப் படைப்பாளர் வல்லிக்கண்ணன் குறிப்பிடத் தக்க அளவுக்குப் பங்காற்றியிருக்கிறார்.

ஐம்பதுகளின் ஆரம்பத்திலும் இறுதிப்பகுதியிலும் புயல், தாயும் மகளும், அறிமுக அவஸ்தை, விளையாட்டுப் பொம்மை, இருண்ட வீடு, விபரீத ஆசை, போன்ற தலைப்புகளைக் கொடுத்து மாதந்தோறும் சிறுகதைப் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர் களுக்கு பணப்பரிசுகளைக் கொடுத்துள்ளது. இந்நிலை அறுபது களிலும் தொடர்ந்தது. முரசு இதற்கிடையில் புதுமைப்பித்தன் இலக்கியச் சர்ச்சை, கப்பளாபத்தாஸ் ந. வரதராசன் எழுதிய 'யார் குற்றம்?' என்ற கதை பற்றிய விவாதம் போன்றன சிங்கப்பூரில் கதை இலக்கிய வளர்ச்சிக்கு வழிகாட்டின. தேசிய நாள் கொண் டாட்டத்தின் போதும் இத்தகைய கதைப்போட்டிகளும் சிறப் பிதழ்களும் வெளிவந்தன. தமிழர்கள் 'நெல்லிக்காய் மூட்டை களாகச் சிதறியிராமல்' ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற முயற்சியில் தமிழர்களை ஒன்றுபடுத்தும் விழாவாகத் தமிழர் திருநாள் விழா அமைந்தது. அத்திருவிழாவின் போது மக்கள் சிறந்த உரைகளைக் கேட்டுத் தம்மையும் தம் பாரம்பரியத்தையும் பெருமையுடன் நினைவுகூர்ந்து முன்னேற மட்டுமின்றிப் பல இலக்கியப் போட்டிகளும் மொழிப் போட்டிகளும் நடத்தப்பட் டன. அத்தகைய போட்டிகளில் சிறுகதைப் போட்டிகளும் குறிப் பிடத்தக்கவை.

1960களில் பெற்றோர் அனுமதிக்காதபோது காதலர்கள் தாமே மணம் செய்து கொள்ளுதல், உடன் பிறந்தவனின் அன்பை மதிக்காது தவறிழைத்து இறுதியில் உயிர்போகும்போது திருந்தும் சகோதரன், முதலாளியின் அன்பைத் தவறாகப் புரிந்து கொண்டு அவரது மகளைச் சீரழிக்கும் பணியாள், ஆசைவார்த்தை கூறி

மோசம்செய்த பெண்ணிடம் ஏமாந்தவர்கள் தங்கள் சோகக் கதையைத் தங்களுக்குள் பரிமாறும் போக்கு, காதலை நேரடியாக வெளியிடாத நிலையினால் எல்லாம் தலைமாறும் நிலை, உரிய காலத்தில் பருவமகளுக்கு மணம்செய்யாததால் அவன்மகள் பொருத்தமில்லாதவனை மணக்கும் நிலை, நம்பியவரை ஏமாற்றும் நயவஞ்சகர், சோதிடத்தை நம்பிப் பெருங்குற்றம் செய்யும் பெற்றோர், மனைவியில் தவறான போக்கினால் மானப் பிரச்சினையால் உயிர் துறக்கும் கணவன் என்று கதைகள் உள்ளடக் கத்தில் நீள்கின்றன. இக்காலப் பகுதியில் பூ. அருணாசலம், அப்துல் லத்தீப் போன்றோரின் படைப்புகள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன.

கண்ணபிரான் (2009) கூற்றுப்படி, சிங்கப்பூர், மலேசியப் படைப்பாளர்களின் படைப்புக் கனவுகளுக்கு முரசு வடிகாலாகத் திகழ்ந்ததை அறியமுடிகிறது. மலாயாச்சிறுகதைப் படைப்பாளர் களான உ.உ. நாயர், வயி. சரஸ்வதிதேவி, மு. அப்துல் லதீப், கே. முகம்மது யூசுப், மு. பக்ருதீன், ஜி.பி. லாசரஸ், அ.கி. அறிவா னந்தன், மெ. அறிவானந்தன், சி. கோன், தே. நவமணி, சி. கமல நாதன், விச முத்தையா, சி. காவேரிநாதன், சி. வடிவேல், செ. குண சேகர், என். துரைராஜ், ந. வரதராசன், மா. செ மாயதேவன், கா. பிச்சைமுத்து, ப. சந்திரகாந்தம், ரெ. கார்த்திகேசு, மா. இராமையா, ஆர். சண்முகம், பூ. அருணாசலம், பெ.மு. இளம்வழுதி, நாராயண திருவிடச் செல்வன், முரு.சொ. நாச்சியப்பன் போன்றோரும் சிங்கப்பூர்ச் சிறுகதை எழுத்தாளர்களாக ந. பழநிவேலு, எம்.கே. பக்ருதீன் சாஹிப், முகிலன், சே வெ சண்முகம் மு. சு குருசாமி, பாக்கியசிற்பியன், மா. செகதீசன், சிங்கை நிமலன், பி.பி. காந்தன், புதுமைதாசன், ரா நாகையன், எம் கே. நாராயணன், ஐ உலகநாதன், அ. ரெசுவப்பா, மு. தங்கராசன், இராம. கண்ணபிரான் முதலி யோரும் தமிழ் முரசின் இலக்கியப் பாசறையில் வளர்க்கப்பட்ட வர்கள் என்பதுடன் சிங்கப்பூரின் தொடக்கக் கால இலக்கிய வர லாற்றில் முக்கிய இடம்பிடித்தவர்கள் எனலாம். (கண்ணபிரான், 2009:5,6)

தமிழ் முரசு வெளியிட்ட ஆண்டு மலர்களும் சிறுகதை இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்தன. 1940இல் அத்தகைய ஆண்டுமலர் முதலாமாண்டு மலராக வெளிவந்தது.

இத்தகைய மலர்களில் சிங்கப்பூர், மலேசியா தொடர்பான இலக்கியப் படைப்புகள் வெளிவந்தன. தமிழர் தலைவராக இலங்கிய தமிழவேள், பல இலக்கியப் படைப்புகள் உருவாகக் கருப்பொருளாகவும் இருந்ததைப் படைப்பாளர்களின் படைப்புகள்வழியே அறியலாம். அவ்வகையில் சிறுகதை உருவாகவும் அவர் கருவாக அமைந்துள்ளார்.

தமிழ் முரசு நாளிதழில் தமிழவேள் கொண்ட இலக்கை நிறைவேற்றுவதில் அவருடன் உழைத்தவர்கள் எனும்போது முருகு சுப்ரமணியன், அ முருகையன், வை திருநாவுக்கரசு, தி. செல்வகணபதி, மெ. சிதம்பரம், ஜே.எம். சாலி முதலியோர் முக்கியப் பங்காற்றினர்.

தமிழ் முரசு நடத்திய தமிழவேளைப் போல் அவரிடம் பயிற்சிபெற்ற செல்வகணபதி தமிழ் மலர் நாளிதழ்வழித் தமிழ் இலக்கியத்துக்குச் சேவையாற்றினார். தமிழ் முரசில் ஞாயிற்றுக் கிழமை மற்றும் விழாக்கால, முக்கிய விடுமுறைநாள்களில் வெளிவரும் மலர்கள் ஆகியவற்றில் சிறுகதை குறிப்பிடத்தக்க இடம்பெறும் இலக்கியமாக அமைகிறது. தமிழ் முரசு நாளிதழ், சிறுகதைகளுக்கு அதிக அளவில் பங்காற்றியதுடன் எதிர்காலத் தலைமுறையை இலக்கியத்துய்ப்பிலும் படைப்பிலும் ஈடுபடுத்தும் வகையில் பல போட்டிகளை ஏற்பாடு செய்துவந்துள்ளது. தமிழ் முரசு நாளிதழில் வந்த கதைகளில் பலவும் இல்லறம், காதல், குடும்பப் பிரச்சினை, வருமானம் போதாமை, உரிய முடிவுகளை உரிய நேரத்தில் கூறாத நிலை, அவசர முடிவினால் வந்த பிரச்சினைகள், பெரும்பாலும் வன்முறையில் பிரச்சினையைத் தீர்த்தல் என்று அமைந்துள்ளன. இதற்குச் சமூகத்தின் மேம்படவேண்டிய நிலை, கல்வியறிவின் சிறப்பு அதிகமாக வெளிப்படுத்தப்படாத நிலை, மனிதப்பண்புகளுக்கு அதிலும் நம்பிக்கை இல்லா நிலை, சமூகத்தின் குழப்பமான பின்னணி என்று பல காரணங்களைக் கூறலாம். இருந்தும் நல்ல பண்புகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தவர்களையும் வாழ்வில் எதையும் தீர ஆராய்ந்து முடிவெடுக்கும் பாங்கு, வாழ்வின் இறுதிவரை போராடும் தன்மை ஆகியவற்றைக் கொண்ட நல்லவர்களையும் நம்மால் பார்க்க முடியாமலில்லை.

சிறுகதைகளில் பாடுபொருள்களாகப் பார்க்கும்போது, அப்போது இங்கு வாழ்ந்த சிங்கப்பூரர்கள், அவர்களது 'கம்போங்' வாழ்க்கை முறை, தமிழர்களின் தொழில்வாழ்க்கைமுறை, சிங்கப்பூரில் ஏற்பட்ட குடியிருப்பிட மாறுதல்கள், எழுத்தாளரின் வாழ்க்கைப் போராட்டம், தமிழர், தமிழர் திருநாள், தமிழர் வாழ்வில் முன்னோடியாக விளங்கிய தமிழவேள் கோ. சாரங்க பாணி பற்றி எழுதுதல், மரபுக் கூறுகளைப் பேணுதல், அதை இளையர்களிடம் ஆழப்பதிய வைக்கும் முயற்சியில் ஈடுபடல் மற்றும் முற்போக்குச் சிந்தனைகள் எனப்பல கருப்பொருள்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. பல இலக்கியங்கள் நல்ல படிப்பினைகளைத் தரும் மூல நோக்கில் படைக்கப்பட்டுள்ளன. மேலும் கவிதையுடன் ஒப்பிடும்போது சிங்கப்பூரின் வாழ்க்கை முறை, மற்றும் பல அம்சங்கள் குறித்து சிறுகதை நன்கு பிரதி பலிக்கிறது. சிறுகதைகளில் பெண்ணுரிமை, பொருந்தாமணம், கைம்பெண்மணம், விருப்பமில்லா மணம், சொத்துரிமை ஆகி யவை பற்றி படைப்புகள் பேசுகின்றன. எனினும் ஒரு பெண்ணாக எவ்வாறு செயல்படவேண்டுமோ அத்தகைய பாரம்பரிய எதிர் பார்ப்பும் சமூகத்தில் ஆண்களிடத்தில் இருப்பதைக் கதைகள் எடுத் துக்காட்டவே செய்கின்றன. தற்போதைய காலக்கட்டத்துக்கு ஏற்பக் கதைகளிலும் பல மாற்றங்கள் தென்படுகின்றன. சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள் சாரங்கபாணியின் காலத்திலிருந்து இடம் பெற்று வருகின்றன.

தமிழ் வானொலியில் சிறுகதை மற்ற இலக்கியவகையான நாடகத்துடன் இணைத்து அதிகமாக ஒலிபரப்பப்பட்டுள்ளது. 1951இல் தினமும் இடம்பெற்ற இரண்டே முக்கால் மணிநேர ஒலிபரப்பில் இவ்விரண்டும் முக்கிய இடம்பெற்றமை, அவற்றின் சிறப்பையும் மக்களின் ஆதரவையும் எடுத்துக்காட்டுகின்றது. வானொலி, அவ்வப்போது நாட்டில் நடைபெறும் பல போட்டி கள், இலக்கிய நிகழ்வுகள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தொடர்ந்து ஒலிபரப்பி வந்துள்ளது. இதற்கு அந்த ஊடகங்களில் பணியாற்றிய தமிழ் ஆர்வமிக்க அதிகாரிகள் முக்கியக் காரண மாவர். வானொலி வாயிலாக இலக்கியப் பணியைத் தொடர்ந்து செய்தவர்களில் குறிப்பிடத்தக்க சிலராக ந பழநிவேலு, பி கிருஷ்ணன் (புதுமைதாசன்), வி கலைச்செல்வன், எம் கே நாராயணன், செ.ப. பன்னீர்செல்வம் போன்றோர் இவ்வரிசை

இன்னும் நீளும் எனலாம். இத்தகையோருடன் பிற படைப் பாளர்களின் சிறுகதைகளை மக்கள் அதிகமாகக் கேட்டு ரசிப்பதற்கு ஏதுவாக, அப்போது இன்றுபோல் மின்னியல் சார்ந்த பொழுதுபோக்குகள் அதிகம் இல்லாத கம்போங் வாழ்க்கை முறையும் இதற்குக் காரணம் எனலாம். இப்போது வானொலி தற்போதைய புதிய வசதிகளுக்கு ஏற்ப இணையத்தின்வழியே பல புதுமைகளை மேற்கொள்ளலாம்.

வானொலியில் சிறுகதை வாசித்தல் அதிகமாக இடம் பெறும். புகழ்பெற்ற சிறுகதைகளுடன் பிற மொழிகளில்வந்த கதைகள் மொழிபெயர்க்கப்பட்டும் வாசிக்கப்படும். சமூகத்தில் நிகழும் நடப்புகள் பல சிறுகதைகள் வாயிலாக வெளியிடப்பட்டு, மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்த வானொலி உதவியது.

வானொலியில் சிறுகதை என்பது வாரந்தோறும் ஒன்றோ இரண்டோ என்ற நிலையில் இடம்பெற்றுவந்தது. பி கிருஷ்ணன் வழங்கிய தென்னிந்தியப் பழங்கதைகள், விக்கிரமாதித்தன் கதை கள் ஆகியன ஆய்வுக்குட்பட்ட காலத்தில் பரவலாக இடம் பெற்றன. புனைகதைகளாக, பி கிருஷ்ணனின் காலக் கணக்கு, சே.வெ. சண்முகத்தின் மறுபிறப்பு, கே எஸ் கிருஷ்ணனின் தலைமுறை மாறும்போது.... ஈ.எஸ். ஜே சந்திரனின் யார் குற்றம்? போன்ற சில கதைகள் பலரின் பாராட்டைப் பெற்றன. இவை உரிய மொழிநடையில் வாசிக்கப்பட்டமை நேயர்களைக் கவர்ந்தன. இந்நிலை, 1990-களில் இடைப்பகுதியில் முழுமையாக இல்லை என்ற நிலை உண்டாகி 2000இல் மீண்டும் தன் வரவைக் காட்டி யுள்ளது. எனினும், சிறுகதை எனும் இலக்கியப்படைப்பை ஊக்குவிப்பதில், வானொலி தனது பங்கை ஓரளவு ஆற்றியுள்ளது. இங்குச் சிறுகதை, தென்னிந்தியப்பழங்கதைகள், கதை நேரம் ஆகிய நிகழ்ச்சிகள் கணக்கிடப்பட்டுள்ளன. விடுதலைக்குப் பிந்திய சிங்கப்பூரில் வானொலியில் 1965-1974 வரையிலான பகுதியில் 832 கதைகளும் அதற்கடுத்த பத்தாண்டுகளில் (1975-1984) 936 கதைகளும் தொடரும் பத்தாண்டுகளில் 1902 கதைகளும் இடம்பெற்றுள்ளன. அதற்குப் பிறகு படைப்புகளிலும் அவற்றின் எண்ணிக்கையிலும் மாற்றம் உண்டானது. ஆழமாக நோக்கும் போது 1980 மற்றும் 1990கள் சிறுகதைப் படைப்பிலக்கியத்தில்

வளமான காலப்பகுதியாக விளங்குகிறது. ஏனெனில், சிறுகதை தோன்றி, வளம்பெற்று, பொருளாதார ரீதியிலும் கல்வி மற்றும் சமூகவாழ்வில் ஏற்பட்ட மறுமலர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் கால மாகவும் நூல்களைத் தாமே வெளியிடும் ஒரு முனைப்பிலும் பார்க் கும்போது இக்காலக் கட்டம் வளமான காலமாக விளங்குகிறது. அதிலும் 1980களில் பிற்பகுதியும் 1990களின் முற்பகுதியும் இத்தகைய ஒரு சிறப்பை வழங்கியுள்ளன எனலாம். ஆனால் இதற்கு ஆரம்பமாக விடுதலைக்குப் பிந்திய பத்தாண்டுகளைக் குறிப்பிடலாம்.

சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் பற்றிய விமர்சனங்களும் தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளன. இவை குறித்த இலக்கிய ஆய்வாளர்களும் தம் கருத்துகளைத் தொடர்ந்துஎழுதி வருகின்ற னர். அவை குறித்த மாறுபட்ட கருத்துகளும் படைப்புலகில் எதிரொலிக்கப்படுவதும் இடம்பெறுகிறது. தவிர, சிங்கா இதழ், தேசிய நூலகம் வெளியிடும் 'பிபிலோயோ ஏசியா' ஆய்விதழ் ஆகியவற்றிலும் இத்தகைய படைப்புகள் தொடர்ந்து இடம் பெறும் என்பது திண்ணம்.

இலக்கியம் படைக்கத் தூண்டல்

இலக்கியம் என்றால் அது அருந்தப்படுவதுடன் படைக்கப்படுவதும் அவசியம். அவ்வகையில் தமிழ் முரசு நாளிதழ் தான் தோன்றிய காலமுதல், சிறுகதை உட்பட பல இலக்கியவகைகளின் வளர்ச்சிக்கும் படைப்புக்கும் ஆய்வுக்கும் குறிப்பிடத்தக்க பங்காற்றியிருப்பதுடன், அத்துறைகளில் எதிர்காலத் தலைமுறை தொடர்ந்து நடைபோட உதவியாகப் பல போட்டிகளை நடத்தி வந்துள்ளது. தான் மட்டுமன்றி, பிற அமைப்புகள் தமிழ்மொழி, இலக்கியம் தொடர்பாக ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளையும் வெளியிட்டு, இலக்கியச் சேவை புரிந்துள்ளது. இலக்கியத்தை மட்டுமன்றி, கலாசாரத்தையும் வளர்க்கும் வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் அவ்வப்போது நாளேடுகள் போட்டிகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும் (தமிழ் முரசு, 16-4-1990) என்று தெரிவித்ததுபோலத் தன் சேவைகளை ஆற்றி வந்துள்ளது எனலாம். தமிழ் முரசு பற்றிக் குறிப்பிடும்போது, 1990-களில் இலக்கிய வளர்ச்சி என்பது குறைந் துள்ளது. அதற்குக் காரணம் அதிக அளவில் இலக்கியப்

படைப்பாளர்கள் இல்லாத நிலை, இலக்கியம் படைப்பவர்களும் தம் பணி, வாழ்க்கைப்பொறுப்புகள் காரணமாக தம் இலக்கிய ஆர்வத்தை முறையாகத் தொடர்ந்து வெளிப்படுத்தாத நிலை, பக்கங்கள் அதிகரிக்காத நிலை, அதிகமானோர் தமிழ் முரசை வாங்கி ஆதரவு தெரிவிக்காத போக்கு, அதிகமான இலக்கிய ஆர்வ மிக்க ஆசிரியர்களை வேலைக்கமர்த்த இயலாத நிலை, படைப்பாளர்களுக்குச் சன்மானம் தரப்படாத நிலை ஆகியன முக்கியக்காரணங்களாக அமைகின்றன. அத்துடன் வானொலி யுடன் ஒப்பிடும்போது, தமிழ் முரசின் பரப்பும், அச்சில் கொண்டு வரும் தயாரிப்பு முயற்சிகளும், நேரமும் அது தன் இலக்கியச் சேவையைச் செம்மையாக ஆற்ற இயலாமல் தடுக்கும் சில எல்லைக்கோடுகளாக அமைந்துள்ளன எனலாம். நிலையத்தில் உள்ள படைப்பாளர்கள் மட்டும் படைப்பில் ஈடுபடுவது போதாது எனலாம் என்ற நிலையில் நேயர்களையும் படைப்பாளராக்கப் பல முயற்சிகள் மேற்கொண்டனர். இலக்கியம் படைக்கத் தூண்டல் என்ற வகையில், வானொலியில் சுமார் இருவாரங்களுக்கு எழுத்தாளர் பட்டறை (1984) என்ற நிகழ்ச்சி இடம்பெற்றது. இதில், படைப்பாளர்களை உருவாக்கும் வகையில் பயிற்சிகள் இடம் பெற்றன. தொடர்ந்து பலர்தம் படைப்புகள் வானொலியில் இடம் பெற ஊக்கமும் அளிக்கப்பட்டன. தான் தனியாகவும் இருமுறை எம்.கே நாராயணன், மூர்த்தி ஆகியோருடன் இணைந்து பட்டறையை நடத்தியதாகக் கூறிய பி. கிருஷ்ணன், அது வெற்றி கரமாக நடைபெற்றதாகக் கூறினார். பல எழுத்தாளர்களை அடை யாளம் காண நடைபெற்ற அம்முயற்சி எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. அப்பட்டறையின் முடிவில் அதிக அளவில் எழுத்தாளர்கள் உருவாகவில்லை (நாராயணன், எம்கே., 1997) என்பது குறிப்பிடத்தக்கது.

படைப்புகளை அனுப்பும் படைப்பாளர்களின் படைப்பு களில் உரிய இடங்களில் திருத்தம் செய்து மீண்டும் அவர்களுக்கு அனுப்பி, அவர்கள் அதைச் செம்மைப்படுத்தி நிலையத்துக்கு அனுப்பியதும் அவற்றை ஒலிபரப்பும் முயற்சியில் பெரும் வெற்றி கிடைத்ததாகத் தயாரிப்பாளர்கள் (இராமையா,கே., 1998, நாராயணன், எம்.கே., 1997, பன்னீர்செல்வம், செ.ப. 1998) தெரிவித்தனர். இதில் குறிப்பாக, சிங்கப்பூர் வானொலி மலேசிய எழுத்தாளர்களையும் நன்கு வளர்த்துள்ளது. ஏனெனில் அக்காலத்

தில் சிங்கப்பூர் எழுத்தாளர்களை விட மலேசிய எழுத்தாளர்கள் அதிகம் எழுதி அனுப்பினர். வானொலியில் சிறுகதைப் படைப்புகளுக்கு வெகுமதி வழங்கப்பட்டுவந்தமை என்பது குறிப்பிடத் தக்கது. கிடைக்கும் சன்மானம் 10 அல்லது 15 வெள்ளியாக இருந்தாலும் வருமான வரி கழித்துச் சற்றுக் குறைவாகத் தான் பணம் தரப்படும் (கலைச்செல்வன், V., 1999) என்ற கருத்திலிருந்து சன்மானத்துக்கு முக்கியத்துவம் தராது, தம் பெயர், படைப்பு வரவேண்டும் என்ற ஆர்வம் கொழுந்துவிட்டு எரிந்தது என்றால் அத்தகைய இலக்கிய வளர்ச்சியை வானொலி செய்தது என்று கூறலாம். வானொலியில் எதிர்காலத் தலைமுறையைத் தயார் செய்யும் படிநிலையும் இடம்பெற்றது. இலக்கியக் கதைகளான பெருங்கதை, சூளாமணி ஆகியன சிறு சிறு பாகங்களாகத் தொடர்ந்து கதை வடிவில் இடம்பெற்றன. வானொலியில், 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில், சில ஆண்டுகள் நிறுத்தி வைக்கப்பட்ட சிறுகதை உட்படச் சில இலக்கியப் படைப்புகள் குறித்து 2000-இல் புதிய அறிவிப்பு வந்தது. அதாவது, சிறுகதை எழுத விரும்பும் படைப்பாளர்களுக்கு விடுத்த அறிவிப்பில் சிறுகதைகளை வரவேற்பதாக மற்றோர் அறிவிப்பாளரும் தயாரிப்பாளரும் அறிவிப்பு விடுத்தனர் (15.5.2000). அது முதல் வானொலியில் சிறுகதை மீண்டும் இடம்பெறுகின்றன.

இலக்கிய வளர்ச்சி என்று நோக்கும்போது, வானொலி குறிப்பிடத்தக்க அளவுக்குச் சேவையாற்றியுள்ளது. சிறுகதைகளை நாடகமாக்கி, சிறுகதைகளைப் பற்றிய கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளத் தொலைக்காட்சி உதவியது. ஆனால் இது நாளிதழைப் போலவே அதற்கு அடுத்த நிலையிலிருந்து வானொலி போலவோ வேலையாற்றவில்லை. இனி, தொலைக்காட்சி இத்தகு சேவையை எந்த அளவுக்கு ஆற்றியுள்ளது என நோக்குவோம்.

தொலைக்காட்சி

தொலைக்காட்சி என்ற ஊடகம் முன்பு மக்களுக்குச் சேவை வழங்கிய நேரம் தினந்தோறும் மிகக்குறைவான மணி நேரமே. அந்தக் குறைந்த நேரத்திற்குள் சிறுவர் முதல் பெரியவர் வரையிலான பலதரப்பட்ட வயதினர்க்கும் விருப்பமான பல்சுவை, கல்வி, கலை, செய்திகள் என்று பலதுறை தொடர்பான நிகழ்ச்சிகளை வழங்கும் பணியில் அது ஈடுபட்டிருந்தது. அதன்

நேரம் காரணமாக, அது மற்ற இரு சாதனங்களைப்போல இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்ற இயலவில்லை. நாடகம் என்ற இலக்கிய வகை ஒளிபரப்பப்பட்டது. எனினும், சில வாரங்கள் நாடகங்கள் மறு ஒளிபரப்பாக இடம்பெற்றன. இலக்கிய வளர்ச்சி எனும்போது, புதிய எழுத்தாளர் உருவாதல், அவ்வாறு உருவானவர்கள் நூல் படைத்தல் ஆகியவற்றைக் கூறலாம். இத்தகைய வளர்ச்சியைச் செய்த சாதனம் அதற்குச் சிறந்த பங்காற்றியதாகக் கூறலாம் என்று கூறும் V. கலைச்செல்வன் (1990), தொலைக்காட்சி இத்தகு பங்கை அதிகமாக ஆற்றவில்லை என்றார். தொலைக்காட்சியைப் பொறுத்தவரை இருக்கின்ற கலைஞர்களை, படைப்பாளரைப் பயன்படுத்தி இலக்கியம் என்ற பெருந்தலைப்பில் படைப்புகளைப் படைத்ததாக V. கலைச் செல்வன் (1999) கூறும்போது, தொலைக்காட்சி புதிய இலக்கிய வாதியை அடையாளம் கண்டு உருவாக்கும் பணியில் அதிகம் ஈடுபடவில்லை எனலாம். அண்மைக்காலத்தில் அத்தகைய இலக்கியமுயற்சி இப்போது ஏதோ செய்யவேண்டும் என்ற நிலையில் செய்யப்படுவதாகவும், முன்பு மாதிரி அதிக ஈடுபாடு இல்லை என்றும் பல ஆண்டுகள் அங்குப் பணிபுரிந்த தயாரிப் பாளர் V. கலைச்செல்வன் (1999) கூறுவது சிந்திக்கத் தக்கது.

கலைச்செல்வன் (1999) கூறுவதை, ஆய்வாளர் ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டாலும், அவரது பார்வையில் மற்றொரு கருத்தும் தோன்றுகிறது. அதாவது முன்பு இருந்த மக்கள் போல் தற் போதுள்ள மக்கள் இல்லை. காலத்திற்குக்காலம் மக்களின் ரசனையும் ஈடுபாடும் மாறிவிட்டன. அறுபது எழுபதுகளில் ஓர் இலக்கிய நாடகம், இலக்கிய உரை நிகழ்ச்சியை உள்ளம் குளிரக் கவனமாக ரசித்துப் பார்த்த, கேட்ட மக்கள் இன்று அதிகமாக இல்லை. மேற்கத்தியத் தாக்கம் மக்களின் வாழ்வில் இடம்பெற்று விட்டது போல் பொழுதுபோக்குகளிலும் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், எல்லா வயதினரையும் ஈர்க்கும் வகையில் சற்றுக் கனம் குறைந்த நிகழ்ச்சிகளே இடம்பெறுகின்றன என்று கூறலாம். இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு எல்லாத்தரப்பு மக்களிடமிருந்தும் ஒருமித்த ஆதரவு கிடைப்பது எளிது. அது மட்டுமின்றி, தனியாக ஓர் இலக்கிய நாடகத்தை, இலக்கிய நிகழ்ச்சியை ஒளிபரப்பு வதற்கு மிகவும் விலைமிக்க சாதனமாக தொலைக்காட்சியில் நேரமும் செலவும் இடம்கொடுக்காது என்ற செய்தியை,

V. கலைச்செல்வன் (1999) கூறியதிலிருந்து அறிய முடிகிறது. ஆம், வானொலி, செய்தித்தாளுடன் ஒப்பிடும்போது தொலைக்காட்சி மிக விலையுயர்ந்த ஓர் ஊடகம் எனலாம். எனினும் சிறுகதைப் படைப்பாளரின் சிறுகதை வாசிப்பு, சிறுகதைகள் கூறும் சிறந்த கருத்துகள் என்று புதிய நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தால் இவை மக்களுக்கும் மாணவர்களுக்கும் இலக்கிய ரசனையை மட்டுமின்றி மொழி அறிவையும் மேம்படுத்தும், தற்போது தனி ஒளிவழியாகத் திகழும் வசந்தம் தொலைக்காட்சியில் இத்தகைய புதிய முயற்சிகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தற்போது என்று நோக்கும்போது, தமிழ் முரசு தொடர்ந்து தனது பங்கை ஓரளவு ஆற்றி வருகிறது. வானொலி இலக்கிய வளர்ச்சிக்கு மிகக் குறைவாகவே பங்காற்றி வருகிறது. தொலைக் காட்சி அதிக அளவில் இறக்குமதி நாடகங்களை ஒளிபரப்பு வதுடன் ஓரளவு உள்ளூர் நாடகங்களைப் படைக்கும் முயற்சி யிலும் கவிதைகளை அறிமுகப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறது. எனினும் அண்மைக்காலத்தில் அதில் அதிக அளவில் சிறுகதைகள் இடம்பெறுவதில்லை. முரசு, தொடர்ந்து அதிக அளவில் உள்ளூர்க் கதைகளையும் சிறப்பாக அமைந்த வெளியூர்ப் படைப்புகளையும் அவ்வப்போது பிரசுரித்துவந்தால் வாசகர் களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

மக்கள் தொடர்புச் சாதனங்கள் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு என்று நோக்கும்போது, தமிழ் முரசும், வானொலி யும் குறிப்பிடத்தக்க அளவில் சேவையாற்றியுள்ளன. தமிழ் முரசு ஆரம்பக்காலக் கட்டத்தில் அதிகப்பக்கங்கள், வாரத்திற்கு இரண்டு நாள் சிறப்புப் பகுதிகள் என்ற நிலையில் சிறந்த சேவையை ஆற்றியுள்ளது. வானொலியும் ஒரு நாளில் பெரும்பகுதி நேரத்தை ஒலிபரப்புக்குச் செலவிடும் வாய்ப்பைப் பெற்ற நிலையில், அதிகமான இலக்கிய வளர்ச்சிக்குச் செலவிட்டது. இவை இரண்டிலும் கோ சாரங்கபாணி, அ. முருகையன், மெ. சிதம்பரம், ஜே.எம். சாலி போன்ற இலக்கிய ஆர்வம் நிறைந்த பல ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள் பணிபுரிந்த நிலையும் இந்த வளர்ச்சிக்கு ஒரு முக்கியக்காரணம் எனத் துணியலாம். அப்போ திருந்த மக்களும் அவர்களது கொழுந்துவிட்டெரிந்த தமிழ் ஆர்வமும் (திருநாவுக்கரசு, வை., 1999) தமிழன்றி வேறு மொழி

தெரியாத நிலையில் தமிழர் பலர் இருந்த நிலையும், அதிக அளவில் குடியமர்த்துதல் நிகழ்ந்ததும், வேறு பொழுதுபோக்குகள் இல்லாத நிலையும், கம்போங் வாழ்க்கைமுறையும் தொடரும் காரணங்களாக அமைந்தன. அடுத்து வந்த இடைக்காலக்கட்டம் இலக்கிய வளர்ச்சியில் ஓரளவு தன் பங்கை ஆற்றினாலும் வானொலி இதில் சிறப்பாக விளங்கியது. இதற்கு, அங்கிருந்த தமிழ்ப்பற்று மிகுந்த படைப்பாளர்கள், மக்களிடத்தில் இருந்த ஆர்வம், கூடுதல் நேர ஒலிபரப்பு ஆகியன முக்கியக் காரணங்களாக அமைந்தன. பிறகு, தொண்ணூறுகளில் வானொலியிலும் ஒரு விதத் தொய்வு தென்பட்டதற்குப் புதிய, இளம் நிகழ்ச்சிப் படைப்பாளர்கள் பலரது வருகை, அவர்களது ஆங்கிலப்பாணியிலான Deejaying அறிவிப்புப்பாணி புகழ்பெற்ற நிலை ஆகியன முக்கியக் காரணங்களாக அமைந்தன. புதிய படைப்பாளர்களுடன் முன் பிருந்த் நிகழ்ச்சிப் படைப்பாளர்களும், இளையர்களை அதிக மாகக் கவரும் வகையில் அவர்களைத் தமிழில் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டனர். திரைப்படப் பாடல்கள், தொலைபேசி நேயர் விருப்பம், பலவிதச் சேவைகள் குறித்த விளம்பரதாரர் நிகழ்ச்சிகள் அதிகரித்தமை, இலக்கியப் படைப்பு களுக்கு ஆதரவாளர் ஆதரவு குறைந்தநிலை, இதனால் எழுத் தாளர்களுக்கு வெகுமதி வழங்குதல் குறைந்த நிலை, மக்க ளிடையே அதிகரித்துவிட்ட ஆங்கிலமொழிப்புழக்கம், பிற தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஆர்வம், பலவிதப் புதிய பொழுதுபோக்குகள் இருக்கின்றமை ஆகியன காரணங்களாக அமைகின்றன.

தற்போதைய உலகில், இலக்கியத்தில் அதிகக் கவனத்தை மக்கள் செலுத்த இயலாமைக்கு, மாறிவரும் மக்களது விருப்பு வெறுப்புகள், கல்வி, வாழ்க்கைத் தொழில் பொறுப்புகள், தினமும் அறிமுகமாகும் அறிவுப்பூர்வமான மின்னியல் சாதனங் கள், கம்பிவடத் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஆகியனவும் காரணம். இவற்றிலிருந்து மக்களைத் தம் பக்கம் ஈர்க்க, மக்கள் தொடர்புசாதனங்கள் சில ஆழமான இலக்கிய முயற்சிகளை, புரட்சிகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். 1950களில் தமிழ் முரசு ஆண்டு மலர் வெளியிட்டதைப் போன்று, சிறந்த படைப்புகளைத் தொகுத்தல், மலர்கள் வெளியிடல் என அச்சில் இலக்கியங்களைக் கொண்டுவரும் பணியில் ஈடுபடுவது

அவசியம். இவற்றைச் செம்மையாகச் செயல்படுத்துவது பல புதிய படைப்பாளர்களை, சிறந்த இலக்கிய ஆர்வலர்களை உருவாக்க வழிகாட்டும். ஆக, எழுத்தாளர், விமர்சகர், வாசிப்போர் என்ற மூவகையான மக்களைச் சார்ந்தே இலக்கியங்கள் வளர்ச்சி காண இயலும் என்ற எழுத்தாளர் எட்வின் தம்புவின் (தமிழ் முரசு, 20.6.1983) கருத்துப்படி நோக்குகையில், இலக்கிய வளர்ச்சிக்கு அனைவரது ஆதரவும் தேவை என்பதுடன் இது மொழியையும் மேம்படுத்தும் என்று உணரலாம்.

அறிவித்தல், அறிவூட்டல், அகமகிழ்வித்தல் ஆகிய மூன்று கோட்பாடுகளை நோக்கிச் செயல்படும் மக்கள் தொடர்புச் சாதனங்கள் இம்மூன்றில் எதற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். காலத்துடன் ஒத்துச் செல்வதையும் மறவாது நிகழ்ச்சிகளைப் படைக்க வேண்டும். அகமகிழ்வித்தல் தேவைதான் எனினும் இன்று அதன் பங்கு மற்றவற்றினின்றும் மிக அதிகமாக இருப்பதை உணர முடிகிறது. அகமகிழ்விக்கும்போது அதன் உள்ளீடாகச் சிறந்த இலக்கியங்களை, இலக்கியக் கருத்துகளை இணைத்துச் சொல்லலாம். எடுத்துக்காட்டுக்கு, நட்பு தொடர்பான செய்தித்தாள் விமர்சனத்தில் சிறந்த இலக்கிய நட்புகளைப் பற்றி எடுத்துரைக்கலாம். இதை, இளையர்க்கு வழங்கும் வானொலி, தொலைக்காட்சியில் இடம்பெறும் இடைவேளை நேரத்தை இலக்கியக் கதைகளை, அவை சார்ந்த செய்திகளை எடுத்துக்கூறப் பயன்படுத்தலாம். இத்தகு ஆக்ககரமான சில முயற்சிகளில் ஈடுபடுவது சிறந்த இலக்கிய உணர்வை மக்களிடத்தில் ஊட்டி அவர்களை உயர்த்தும். இதை மக்கள் தொடர்புச் சாதனங்களும் உணர்ந்து ஊக்கத்துடன் செயல்பட்டால் சிங்கப்பூரில் தமிழ் இலக்கியம் என்பது ஒரு தொடர்ந்த வளர்ச்சிக்கூறாக அமையும் என்பது உறுதி.

படைப்புகளில் பேச்சுத்தமிழ்

கடந்த 2005-இல் இடம்பெற்ற தமிழ் மொழிப் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியவியல் குறித்த மறு ஆய்வுக்குழு (கல்வி அமைச்சு, 2005) தனது அறிக்கையில் சிங்கப்பூரில் பேச்சுத் தமிழ் வகுப்பறையில் முக்கிய இடம்பெறுவது குறித்துப் பரிந்துரைத்திருந்தது. சிங்கப்பூரில் தமிழ் மொழி தொடர்ந்து வாழும் மொழியாகத் திகழவும் குழு எதிர்பார்க்கும் எதிர்காலச் சிங்கப்பூரர்

ஆங்கிலத்துடன் தமிழிலும் திறமை பெற்றுத் திகழும் வகையில் பேச்சுத்தமிழுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுவருகிறது. அத்தகைய பேச்சுத்தமிழ் பெரும்பாலும் சிறுகதைகளில் நேரடிக்கூற்றுகளாக வரும் பகுதிகளில் இடம்பெறுவதைக் காண முடிகிறது. தமிழகத்தில் இத்தகைய நிலை நிலவுவதைப் பலகாலமாக நாம் பார்த்திருக்கிறோம்.

எடுத்துக்காட்டு-1

''எனக்கு நீதான் மணப்பெண் என்று தெரியாதே''

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' நீங்கதான் மணப் பெண்ணைப் பார்க்க விரும்பவில்லையே?''

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''உங்க அம்மாதான் சொன்னாங்க. ஒரு நாள் உங்க அம்மா உங்களைப் பற்றிய விவரங்களை என் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாங்க. நான் இத்திருமணத்திற்கு ஒத்துக்கொள்ள இன்னொரு காரணமுண்டு''

''என்னது'' (இறைவன் கொடுத்த வரம், வளர்பிறை: 139)

எடுத்துக்காட்டு-2

''பார்த்தா சின்ன பையன் அப்பாவி மாதிரி இருக்கான், இந்தப் பையன் இங்க 'கோர்டுல' என்ன பண்றான்!''

''இந்தக் காலத்துல யாரையும் நம்ம முடியலப்பா, பார்த்தா இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு தோனும், உற்றுப் பார்த்தாதான் வண்டவாளமெல்லாம் தெரியும்! (யார் குற்றவாளி? சிறுகதைக் கனிகள்:95)

எடுத்துக்காட்டு-3

அமுதா மகளிர் ஆண்டை ஆதரித்து நான் எழுதியது கூட, நீ அதைப் பாராட்டுவாய் என்கிற ஒரு சுயநல நோக்கத்திற்காகத் தான். ஆனால் அதை நீ இப்படி ஒரு கோணத்திலிருந்து

பார்ப்பாய்னு நான் கொஞ்சமும் நினைக்கல. மூணு வருஷம் உன்னோடு ஒன்னா வாழ்ந்தும் உன் மனதைச் சரியாப் புரிந்து கொள்ளாமல் அதை எழுதிவிட்டேன். ஐ யம் சோ சாரி'' (அமைப்பு, தேடி: 82)

எடுத்துக்காட்டு-4

''பாலா நில்லு பாலா, நான் சொல்றதைக் கேளு பாலா''

''ச்சே ஜென்மத்துக்கும் உன் முகத்திலே முழிக்கக் கூடாதுன்னு இருக்கேன். ஏன் வந்து தொல்ல செய்யுற. போ. கண்காணாமப் போ'' (கொடுங்கோல் அன்னை, அமைதியான புயல்:65)

எடுத்துக்காட்டு 5

''உனக்கு நிஜமாவே பைத்தியந்தான் பிடிச்சிருக்கு. வேற ஏதாவது பேசினே... இப்பவே வீட்டுக்குப் போயிடுவேன். எனக்கு இந்த வயசிலே இப்படியொரு தலைவிதியா வந்து வாய்க்கணும். அதோ... வக்கீல் வர்ராரு.... என்ன விவரம்னு கேட்போம்! (அகதி)

இத்தகைய பேச்சுத்தமிழ் இடம்பெறும் படைப்புகள் தமிழ் மொழிப் பாடத்தில் பாடம் நடத்தவும், கதைகளின் பகுதிகள் மாணவர்களின் வாய்மொழித் தேர்ச்சியை அதிகரிக்கவும் வழி செய்யும். எழுத்துநடையில் அமைந்த பொருத்தமான கதைகளின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் கருத்தறிதல் பயிற்சிக்கும் உதவியாக அமையும்.

இன்றைய தமிழ் உலகில் நுகர்வோனே அரசன் என்று வானதி பதிப்பகநூல் கூறுவதுபோல அவர்களே மன்னர்கள். அவர்களுக்கு ஏற்ப எழுதுவது படைப்பாகிறது. இலாபமாகிறது. அதற்குப் படைப்பாளர்களின் புதிய சோதனைப் படைப்புகளும் பெண்ணியம் சார்ந்த படைப்புகளும் மனிதவாழ்வின் உண்மை நிலையைக் காட்டும் படைப்புகளையும் தொடர்ந்து வெளிப் படுத்த வேண்டும். உள்நோக்கிய பார்வையுடன் உலகம் நோக்கிய வெளிநோக்குப் பார்வையும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாக அமையும். சிங்கப்பூரின் படைப்புகள் வெளிநாடுகளில்

பரவலாகப் பேசப்படுவதுடன் நல்ல சிங்கப்பூரின் படைப்புகள் வெளிநாடுகளில் பரவலாகப் பேசப்படுவதுடன் நல்ல மதிப்பை ஈட்டித்தரும்வகையில் உரிய விளம்பரங்கள் நடைபெறவேண்டும். இப்போது இணையம், மின்னஞ்சல், இணையத்தளம், துரிதமாக வளர்ந்துவரும் அச்சுத்தொழில் எனப் பல வசதிகள் இருக்கும் பொன்னான வாய்ப்புகளைப் பயன்படுத்தி மூத்த எழுத்தாளர்கள் இளைய எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கவேண்டும். பள்ளிகளில் 'இலக்கிய நேரம்' நிகழ்ச்சிவழி இலக்கியப் படைப் பாளிகளை அடையாளம் காணும்வகையில் இணை நடவடிக்கை யாகத் திட்டமிட்டு அமைய வழித்தேடலாம். கல்வி நிலைய மொழிவிழாக்களில் இளையர்களே இன்றைய இலக்கியங்களை ஆராயும் தன்மையைத் தொடர் நடவடிக்கைகளாக மேற்கொள்ள லாம். இவையாவும் இடைவெளியில்லா எழுத்தாளர் வரிசையை உருவாக்கும்.

மனித வாழ்வு எவ்வளவுதான் நாகரிகமானாலும் பண்பாட்டிலும் மகிழ்ச்சி, சாதனை, இழப்பு, தவிப்பு, தனிமை, வெறுப்பு, உக்கிரம், புழுக்கம் ஆகியன இருக்கத்தான் செய்கின் றன. வாழ்க்கையில் கல்வி, தொழில், பதவி, பெருமை ஆகியவை அவசியம்தான் என்றாலும் அவை ஒருவகையில் அலங்காரங்களாக ஒரு காலத்தில் 'வந்துசெல்பவையாக' அமைகின்றன. அடிப்படை யில் உலகம் முழுவதும் எல்லா மனிதர்களும் உணர்வு, உயரிய வதை, செயலின் சம்பளம், நோயில் தவித்தல், பாசத்தன் ஊசிவலி, உறவின் மகத்துவ்மகிழ்ச்சி ஆகியவற்றில் ஒன்றாகவே அமை கிறார்கள். அவர்கள் அனைவரும் சராசரியாக வாழும் மனிதர் கள்தாம். இயற்கை மனிதனக்குத் தரும் பரிசுகளும் ஒன்றுதானே. இங்க அவன் எப்படி வேறுபடுகிறான்? அவனது செயல்களாலும் அவற்றுக்குக் கட்டளைக் கல்லாக விளங்கும் பலன்களாலும் தொடரும் நல்ல தலைமுறைகளாலும்தான் சிறந்தவனாக மகாத்மாவாக விளங்குகிறான். அத்தகைய நல்ல மனிதர்களை உருவாக்க இலக்கியம் சிறந்த பொழுதுபோக்குக்கருவியாகவும் அறிவூக்கக் கருவியாகவும் திகழ்கிறது. அதிலும் வாசிக்க எளிய சிறுகதை இலக்கியம் கூடுதல் பயன்களைத் தரும் தன்மை வாய்ந்தது. இத்தகு இலக்கியம் பல பாதைகளைக் கடந்து தற்போது அடுத்த தலைமுறையைச் சந்திக்கும் நிலையில் உள்ளது. இது தொடர்ந்து முன்னேறும் வழிவகைகளும் வாய்ப்புகளும்

நன்றாகவே உள்ளன. ஆனால் செயல்படுத்துவதில் நாம் வேகமாக ஈடுபட வேண்டும்.

சிங்கப்பூர் எழுத்து என்பது இந்த மண்ணிலிருந்து வரவேண்டும். சிங்கப்பூர் எழுத்தாளர்கள் தமிழ்ப் பாரம்பரியம், தமிழ் வாழ்க்கை, வாழ்வியல் உண்மைகள் போன்றவற்றை அறிய தமிழகத்துப் படைப்புகளைப் படிக்கலாம். ஆனால் நமது சமுதாயத்தின் பின்னணியை, நடப்பை நாம் வெளிக்கொணர நம் நாட்டில் இடம்பெற்றுள்ள படைப்புகளை அதாவது தமிழில் மட்டுமின்றி சீனம், மலாய், ஆங்கிலப் படைப்புகளைப் படிக்க வேண்டும். அப்போது நமது உண்மைத்தன்மையை நாம் உணர முடியும் என்ற கருத்தில் தமிழ் முரசில் 23.10.1994இல் வெளிவந்த நா. கோவிந்தசாமியின் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஏனெனில் நாம் என்னதான் தமிழர்கள் என்றாலும் நமது நாட்டின் பின்னணியில் வாழும் நாமும் நமது எதிர்காலத் தலைமுறை யினரும் பலவகைகளில் தனித்துவம் பெற்றவர்கள். எனவே நாம் நம் நாடு சார்ந்த படைப்புகளைப் படித்து, அனுபவித்து, நம் வாழ் வினையும் நம் சகசிங்கப்பூரர்கள் வாழ்வினையும் உற்றுநோக்கி, கற்பனை செய்து புதிய படைப்புகளை உருவாக்கும்போது அவை நம் உள்ளத்தில் நீங்கா இடம்பெறும் தன்மையுடன் திகழும். நம் எதிர்காலத் தலைமுறையினருக்கும் ஓர் உரிமைத்தன்மை தோன் றும். அதே நேரம் இம்மண்ணின் வார்ப்புகளை கல்வித்துறையில் பயன்படுத்தவேண்டும், பாடநூலாக அல்லது வாசிப்புப்படைப்பு களாக அனுமதி தந்து அங்கீகரிக்க வேண்டும். இன்று ஆங்கிலத்தில் இலக்கியத்தில் தற்கால இலக்கியத்தைப் படிக்கிறார்கள். அத் தகைய போக்கும் நம் மாணவர்கள் வாழும் காலத்துப்படைப்பு களைப் படிக்கும் போக்கு இடம்பெறுவது சிறந்த அறிவுப் புரட்சியை உருவாக்கும். அவ்வகையில் சில பரிந்துரைகள் வருமாறு.

பரிந்துரைகள்

சிங்கப்பூரிலுள்ள சிறந்த பிறமொழிப்படைப்புகள் தமிழில் தக்கவர் உதவியுடன் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ் உலகிற்கு அதிகமாக அறிமுகமாக வேண்டும். நான்கு மொழிப் படைப்புகளும் தெரிவுசெய்யப்பட்டு ஆங்கிலம் உட்படப் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்படுதல் நன்று. இத்தகு

முயற்சியில் பல அரசாங்க அமைப்புகள் ஈடுபட்டு வந்துள்ளன; வருகின்றன.

ஆங்கிலத்தில் அதிக நேரத்தைச் செலவிடும் இளையர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கும் மூத்த படைப்பாளர்களும் இத்தகைய புதிய இருசாரரும் பயனடைய வாய்ப்புகள் அதிகம்.

ஆங்கிலத்தில் சுவாரசியமிக்க இன்று உலகில் அதிகமாக விற்பனையாகும் படைப்புகளை ஆசிரியர்கள் வகுப்பில் இணைத்து இலக்கியப் பாடம் கற்பிப்பதுபோல, தமிழிலும் அண்மையப் படைப்புகள் பாடநூல்களாகத் தொடர்ந்து வருவது நன்று.

சிங்கப்பூர்ப் படைப்பிலக்கியம் அதிலும் இளையர்க்குப் பொருத்தமான படைப்பிலக்கியம் பாடமாக அமையவேண்டும்.

சிங்கப்பூரில், தமிழில் இளையவர்களுக்கு ஏற்ற இளையர் இலக்கியவகைகள் (Young Adult Literaturc) தோன்ற வேண்டும். அல்லாவிடில் படைப்புகளில் வரும் செய்திகளும் மாந்தர்களும் உலகளாவிய நிலையில் போட்டியிடும் தன்மைபெற வேண்டிய நம் தமிழ் மாணவர்களுக்குக் குறிப்பாக இளையர்களுக்குப் பொருந்தாமல் போய்விடும்.

முடிவுரை

கதை என்பது பழையது. சிறுகதை என்ற வடிவம் புதியது. இன்று வெறும் ஒரு வாக்கியம் முதல் சில வாக்கியங்களில் அமையும் கதைகளும் ஒன்று அல்லது இரண்டு நிமிடங்களில் படித்து முடித்து முழுமையான மகிழ்ச்சியை அடையும் வகையிலான கதைகளும் உள்ளன. இன்று பெரும்பாலும் பத்திரிகைகள், இதழ்கள் ஆகியன காட்டும் படைப்புகளையே நாம் சிறுகதைகளாகக் கொள்ளும் நிலை தென்படுகிறது. எல்லாரும் படைப்பாளரின் புத்தகங்களை வாங்கியோ இரவல் பெற்றோ படிக்கும் நிலை பரவலாகப் பரவாத நிலையில் சிறுகதை இலக்கணம் அமைக்கும் பணியில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தாமே ஈடுபடுகின்றனவோ என்று எண்ணத் தோன்றும். வாழ்க்கையில்

நிகழும் ஒன்றை, ஒரு நிகழ்வை மட்டும் மையமாக வைத்துப் படைப்புகள் அமைய வேண்டும். இந்த அம்சம் இன்றைய சிங்கப்பூர்ச் சிறுகதைகளில் உள்ளனவா என்று பார்த்தால் இல்லை என்று கூறும்வகையிலும் படைப்புகள் உள்ளன எனலாம். சிங்கப்பூர்ச் சிறுகதைகள் பெரும்பாலும் உள்ளடக்கத்தில் அதாவது சமூகத்தின் நடப்புகளைப் பதியவைக்க வேண்டும் என்பதில் தீர்க்கமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் வடிவம் என்பதில் அத்தகு ஆழமான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம், அது தொடர்பான புதிய அம்சங்கள், மேலைநாட்டுச் சிறுகதை எழுத்துப்போக்குகள் தமிழில் அறிமுகமாவது இடம்பெறும்போது அத்தகைய மாற்றங்களை நாம் எதிர்பாக்கலாம். அதற்கு நம் இளையர்களை நாம் தயார்படுத்துவோம். நமது அனுபவங்களையும் அவர்களது சிங்கப்பூர் வாழ் அனுபவம், உலகளாவிய பார்வை, மாறுபட்ட அறிவுச்சிந்தனைகள், கருத்தாய்வு நோக்கில் எதையும் அலசிப்பார்க்கும் அவர்களது வாழ்க்கை அனுபவங்கள் ஆகியன அதற்கு உதவியாக அமையும்.

அமெரிக்காவில் வாஷிங்டன் இர்விங் என்பர் 1819, 1820ஆம் ஆண்டுகளில் படைத்த குறியீடு ஒன்று சிறுகதை என்பதன் ஆரம்பமாகவும் அதில் இடம்பெற்ற மூன்று கதைகளில் ஒன்றான ரிப் வான் விங்கிள் என்பது முதல் அமெரிக்கச் சிறுகதையாகவும் கருதப்பட்டதை நாம் அறிவோம். ஏறத்தாழச் சிங்கப்பூரிலும் அத்தகைய காலக்கட்டத்தில் சிறுகதை என்ற ஓர் இலக்கியம் பற்றிய சிந்தனை எழுந்துள்ளது. அத்தகைய இலக்கியம் தொடர்ந்து தன்னைச் செம்மைப்படுத்தவும் வாய்ப்புகள் தரப்பட்டு வருகின்றன. அரசாங்க அளவில் சிறிய எண்ணிக்கையிலான தமிழ்ச் சமூகத்துக்குப் பெரிய அளவிலான பரிசுகளும் பாராட்டுகளும் வாய்ப்புகளும் வழங்கப்படும்போது அதனை நம் சமூகம் குறிப்பாக வருங்காலச் சமூகம் தொடர்ந்து பயன்படுத்தவும் தன்னை மேம்படுத்தவும் நாம் வழிவகைகள் செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது. தமிழ்ச் சமூகத்தில் மதிக்கத் தக்க ஒரு சக்தியாக எழுத்தாளர் உருவாகி வரவேண்டும். அத்தகைய எழுத்தாளருக்கென்ற ஒரு பார்வையும் குரலும் இருக்க வேண்டும் என்று சுந்தர ராமசாமி கூறுவதுபோல, சமூகத்தின் எதார்த்தத்தைத் துணிவுடன் பதிவு செய்தல், தனது குரலை ஆழமாகப் பதித்தல், சிந்தனை விமர்சனம் ஆகியவை சீரிய நோக்குடன் வரும்போது அதை

ஏற்றுக்கொள்ளுதல் என்ற நிலையில் படைப்பாளன் தன்னை உயர்த்திக் கொண்டு, புதிய சமுதாயத்திற்குத் தன் சேவையைத் தொடர்ந்து வழங்குவது பெரும்பயனை வழங்கும்.

உதவிய/மேற்கோள் நூல்கள்

அரசு, வீ., அக்டோபசும் கறிக்கோழிகளும், இளவழகன் பதிப்பகம், சிங்கப்பூர்.

இராமையா, கா., சிவகுமாரன், A RA. சீதாலட்சுமி, செகதீசன் ச., (ஆசிரியர்கள்), சாரங்கபாணியின் தமிழ்த் தொண்டு-ஓர் ஆய்வு, இராமையா, சிங்கப்பூர்.

இராமையா, மா,இ மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.

இலியாஸ், எம்., 1977. தமிழவேள் சாரங்கபாணி, சிங்கப்பூர்.

இளங்கோவன், கா. சிங்கப்பூரில் தமிழ்ப்படைப்புகளின் (1965-1981)) போக்கு. கையெழுத்தில் அமைந்த தமிழ்க் கட்டுரை (ஆண்டு குறிப்பிடவில்லை) சிங்கப்பூர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (2005). உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி. 1851-கி.பி. 2000), முனைவர் கா. சிவத்தம்பி, ச. சிவகாமி, இராம குருநாதன், (தொகுப்பாசிரியர்கள்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2005.

கண்ணபிரான், இராம (2009). சீதாலட்சுமி (தொ.ஆர்), சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள், கவிதைகள், ஓர் அடைவு (1936-1960), தேசிய நூலக வாரியம், சிங்கப்பூர். ப.5-8.

கல்வி அமைச்சு (2005). தமிழ் மொழிப் பாடத்திட்டம் மற்றும் ஆசிரியவியல் குறித்த மறுஆய்வு அறிக்கை, கல்வி அமைச்சு, சிங்கப்பூர்.

கார்த்திகேசு ரெ (2004). சிறுகதை, மலேசியத் தமிழ் இலக்கியம்: ஓர் அறிமுகம்,

ரெ. கார்த்திகேசு (தொ.ஆர்)., மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மலேசியா ப.ப.27-45)

கோவிந்தசாமி நா (1990) சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகள்-ஓர் அறிமுகம். The Fiction of Singapore Anthology of ASEAN Literature, The ASEAN Committee of Culture and Information. Singapore. p. 187-211

கோவிந்தசாமி நா (2004). தேடி., தமிழ்நெட்வொர்க் பப்ளிஷிங் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சிங்கப்பூர். (இரண்டாம் பதிப்பு 2004) முதல் பதிப்பு 1991.

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம். 1997 ஆய்வரங்கம். சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் ஒரு நூற்றாண்டு சிங்கப்பூர்.

சிவகுமாரன் ஏ ஆர்.ஏ., திண்ணப்பன், சுப., சீதாலட்சுமி, 2001. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம்: சாதனைகளும் எதிர்காலத்திட்டங்களும். சிங்கப்பூர்.

சீதா லட்சுமி, (2001). சிங்கப்பூர் மக்கள் தொடர்புச் சாதனங்கள் தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு. தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் (அச்சில் வராத முனைவர் பட்ட ஆய்வேடு).

சீதாலட்சுமி (தொ.ஆர்), 2009. சிங்கப்பூர் தமிழ்ச் சிறுகதை கள், கவிதைகள் ஓர் அடைவு (1936-1960), தேசிய நூலக வாரியம் சிங்கப்பூர்.

சுந்தரி பாலா, யசோதாதேவி நடராஜன் (தொகுப்பாசிரியர் கள்), 2008. லீ கொஞ்சியான் நூலகத்தின் சீரிய தமிழ்த்தொகுப்பு, தேசிய நூலகம்.

சுரேஷ் எம் ஜி. (2004). பின் நவீனத்துவம் என்றால் என்ன? புதுப்புனல், இந்தியா.

செல்வராஜ் வீ (தொ.ஆர்). (1997). மலேசியத் தமிழ் இலக்கியம் 1995-1996, மலேசியா.

செல்வராஜா என். (2007) மலேசிய-சிங்கப்பூர் நூல் தேட்டம். அயோத்தி நூலகச்சேவைகள், ஐக்கிய இராச்சியம்.

தவராஜா வெ (2005), ஈழத்துச் சிறுகதைவளர்ச்சி, தமிழ் இனி 2000, ப. ஆர்கள் மதிவாணன் பா. சேரன் உ., காலச்சுவடு அறக்கட்டளை, இந்தியா ப.192-197.

தேவகௌரி மகாலிங்கசிவம் (2005), தமிழ் இனி 2000, ப. ஆர்கள் மதிவாணன், பா, சேரன் உ., காலச்சுவடு அறக்கட்டளை, இந்தியா ப.198-206.

திண்ணப்பன், சுப. 1993. சிங்கப்பூரில் தமிழ் மொழியும் இலக்கியமும். தேன்வள்ளியம்மை பதிப்பகம், இந்தியா.

தேசிய நூலக வாரியம் (2005), தமிழகச்சிறுகதை (1950-2000). தமிழ் இனி 2000, ப. ஆர்கள் மதிவாணன் பா, சேரன் உ., காலச்சுவடு அறக்கட்டளை, இந்தியா ப.184-191.

பாச்சந்திரன், சு., (1981-3ஆம் பதிப்பு), இலக்கியத் திறனாய்வு, அணியகம், இந்தியா.

பாஸ்கரன், நா., சிங்கப்பூரின் ஏழு தமிழ்ச்சிறுகதை எழுத்தாளர்கள். சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம். 1997 ஆய்வரங்கம்: சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம்-ஒரு நூற்றாண்டு. சிங்கப்பூர் பப. 141-158.

பிரபஞ்சன் (2005), தமிழகச் சிறுகதை முன்னோடிகள் (1900-1950), தமிழ் இனி 2000, ப. ஆர்கள் மதிவாணன் பா, சேரன் உ., காலச்சுவடு அறக்கட்டளை, இந்தியா ப.ப. 133-140.

பூவண்ணன், (1992-11ஆம் பதிப்பு) தமிழ் இலக்கிய வரலாறு, வர்த்தமாணன் பதிப்பகம், இந்தியா.

ராஜ் கௌதமன் (2005), தமிழகச்சிறுகதைப் போக்குகள் (1900-1950), தமிழ்இனி 2000, ப. ஆர்கள்: மதிவாணன் பா, சேரன் உ., காலச்சுவடு அறக்கட்டளை, இந்தியா. ப.144-162.

ராமகிருஷ்ணன் எஸ். (2005). தமிழகச்சிறுகதைகள் (1950-2000), தமிழ் இனி 2000, ப. ஆர்கள் மதிவாணன் பா, சேரன் உ., காலச்சுவடு அறக்கட்டளை, இந்தியா ப.164-183.

Bala Baskaran, (2006). The Malaysian Tamil Short Stories 1930-1960: A Critical Study, Bala Baskaran, Singapore.

Mohammed Pitchay Gani Bin Mohamed Abdul Aziz(compiler), Unity in Diversity: Anthology of peoms, Short Stories and Essays, Special Training Programmes (MT), National Institute of Education singapore. p.111-121.

இந்தியக் கட்டுரையில் மக்கள் தொடர்புச் சாதனங்களில் சிறுகதை தொடர்பான பகுதிகள் சீதாலட்சுமியின் (2001) ஆய்வேட்டிலிருந்து பெறப்பட்டவை.

மலேசியாவில் தொடக்ககால மேடை நாடகங்கள்

- பா. சந்திரகாந்தம்
மலேசியா

1800களில் கரும்பு, காப்பித் தோட்டங்களிலும், தென்னந் தோப்புகளிலும் பின்னர் இரப்பர் தோட்டங்களிலும் வேலை பார்க்க நூற்றுக்கணக்கான தென்னிந்தியர்கள் அப்போது பிரிட்டிஷ் காலனியாகத் திகழ்ந்த மலேயாவுக்கு வருகைபுரிந்தனர். 1890இல் உலகச் சந்தையில் இரப்பருக்குப் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்ட வுடன், பெருகிவந்த இரப்பர் தோட்டங்களில் பணியாற்ற அந்தக் காலக்கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தென்னிந்தியர்கள் அழைத்து வரப்பட்டனர்.

தோட்டங்களில் வேலைபார்த்த தொழிலாளர்களுக்கு உற்சாகமூட்ட, பொழுது இனிமையாகக் கழிய அப்போதெல்லாம் வாய்ப்பில்லாத காலக்கட்டம். தமிழ்நாட்டில் தெருக்கூத்து, கரகாட்டம் போன்ற கிராமியக் கலைகளில் பங்கேற்ற சிலரும் தொழிலாளர்களாக மலேயாவுக்கு அப்போது வந்திருந்ததால், அவர்கள் மூலமாகக் கிராமியக் கலை பரவத் தொடங்கியது.

வாழ்க்கை நெருக்கடிகளிலிருந்தும் மன இறுக்கத்திலிருந் தும் தங்களை விடுவித்துக்கொள்ள மனிதனுக்குப் பாடலும் ஆடலும் தேவைப்படுகின்றன. இசையிலும் நடனத்திலும் ஒன்றி விடும்போது மன அமைதியையும் மன மகிழ்வையும் பெற முடிகிறது. தொடக்கக் காலத்தில் கூத்துக்கலைதான் முக்கிய பொழுதுபோக்காகத் திகழ்ந்திருக்கிறது.

தமிழகக் கிராமங்களில் தெருக்கூத்துக்களைப் பார்த்து ரசித்துப் பரவசப்பட்ட அந்தத் தொழிலாளர்களில் சிலர் தங்களுக்குத் தெரிந்தவரை அரைகுறையாகப் பாடி, நடித்து தெருக் கூத்துக் கலைக்கு உயிரூட்டத் தொடங்கினர்.

அறுநூறு ஆண்டுகளாகத் தமிழகக் கிராமங்களிலும் நகரங்களிலும் நடைபெற்றுவரும் தெருக்கூத்துகள் அளவில் குறையத் தொடங்கினாலும் அது முற்றாக அழிந்துவிடவில்லை. கூத்துப்பட்டறை எனத் தற்போது தமிழகத்தில் தெருவோரங்களில் மேடையில்லாமல் இசை, அபிநய வடிவில் நடத்தப்படும் அவை தெருக்கூத்தின் ஒரு வடிவம்தான். தமிழர்களின் கலாச்சார அடையாளமாக அந்தப் புராதனக் கலை திகழ்கிறது.

தெருக்கூத்து, கரகம், கும்மியாட்டம் போன்ற தமிழகத்திலுள்ள நூற்றுக்கணக்கான நாட்டுப்புறக்கலைகளும் தமிழர்களின் கலாச்சார அடையாளங்கள்தான் என ஆய்வாளர்கள் அறிவிக்கின்றனர். மாலையில் தொடங்கி விடியற்காலை வரை தொடர்ந்து நடைபெறும் தெருக்கூத்துக் கலையைக் கிராம மக்கள் விடிய விடிய விழித்திருந்து ரசித்து மகிழ்வார்கள். தெய்வத்துடனும் வழிபாட்டுச் சடங்குகளுடனும் சம்பந்தப்பட்டதாகத் தெருக் கூத்துக் கலையைக் கருதி வந்ததால், அதனைப் பக்தி உணர்வோடு பார்த்துப் பரவசமடைந்திருக்கின்றனர்.

ஆண்டுதோறும் கோயில் திருவிழாக்களில் இடம்பெற்று வந்த தெருக்கூத்துக்கலை தடையின்றி தொடர்ந்து விழாக் காலங்களில் நடைபெற்று வரும் வகையில் நம் முன்னோர்கள் பார்த்துக் கொண்டனர். அல்லி அரசியின் கதை, நல்லதங்காள் கதை, கட்டபொம்மன் கதை, தேசிங்குராஜன் கதை, அரிச்சந்திரன் கதை, பவளக்கொடி, வள்ளித் திருமணம் போன்றவை புகழ்பெற்ற தெருக்கூத்துகள். இராமாயணக் கதையை ஏழு காண்டமாகப் பிரித்தும், மகாபாரதத்தைப் பதினெட்டுக் காண்டமாகப் பிரித்தும், ஒவ்வொரு நாளும் ஒரு காண்டமாகத் தொடர்ந்து தெருக்கூத்து நடைபெற்று வந்திருக்கிறது. பாடல்களும் அபிநயங்களும் கொண்ட தெருக்கூத்து மற்றொரு வடிவம் கண்டது. பாடல் அபிநயத்தோடு உரையாடல்களையும் இணைத்துக் கொள்ளும் பாணிதான் அது.

பின்னர் புராண நாடகம் தலைதூக்கத் தொடங்கியது. இரசிகர்களின் ரசனை புராண நாடகங்கள் பக்கம் திரும்பியது. காலத்திற்கேற்ப மாறிவரும் இரசிகர்களின் ரசனைக்கேற்ப தெருக்கூத்து நாடகங்கள் சீர்திருத்தப்பட்டு உரைநடையோடும், சிறந்த உணர்ச்சிமயமான நடிப்போடும் இனிய பாடல்களோடும் புராண நாடகங்கள் பவனி வரத்தொடங்கின. மேடை நாடக ஆசான் எனப் போற்றப்பட்ட சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய புராண நாடகங்கள்தாம் அந்தக் காலக்கட்டதில் மேடைதோறும் அரங்கேற்றப்பட்டன. அரிச்சந்திரன், வள்ளித் திருமணம், பவளக் கொடி, பாதுகா பட்டாபிஷேகம் போன்ற சங்கரதாஸ் சுவாமிகளின் புராண நாடகங்கள் அந்தக் காலக்கட்டக் கலைஞர்களுக்குப் பெரும் பொக்கிஷம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் முதல் நாடக வாத்தியார் சங்கரதாஸ் சுவாமிகள்தான். நாற்பதுக்கும் மேற்பட்ட மேடை நாடகங்களைப் படைத்த சங்கரதாஸ் சுவாமிகள் 55ஆவது வயதில் 1922ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் நாள் மறைந்தார்.

சங்கரதாஸ் சுவாமிகள் நாடக உலக மாமேதை, கலங்கரை விளக்கம், நாடக உலகின் இமயமலை என்று கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனும், சுவாமிகளின் நாடகங்கள்தாம் தமிழ் நாடகக்கலை வளர்ச்சிக்கே அடிப்படைச் செல்வங்கள் என்று டி.கே. சண்முகமும் முன்பு குறிப்பிட்டிருந்தனர். நாடகத்தந்தை என அழைக்கப்படும் பம்மல் சம்பந்த முதலியாரும். தொடக்கக் கால மேடை நாடகத்துறைக்கு உயிரூட்டியவர்களில் ஒருவர். மனோகரா, வேதாள உலகம், சபாபதி, தாசிப்பெண், இரண்டு நண்பர்கள் உட்பட சுமார் 100 மேடை நாடகங்களை இவர் உருவாக்கியுள்ளார். அவற்றில் சில திரைப்படங்களாகவும் தயாரிக்கப்பட்டன.

வழக்கறிஞராகவும் பின்னர் நீதிபதியாகவும் பணியாற்றிக் கொண்டே கலை ஆர்வத்தினால் சுகுணா விலாஸ் சபை எனும் அமைப்பை நிறுவி அதன்மூலம் இவர் நாடகங்கள் நடத்திய போது, அப்போதைய தமிழக காங்கிரஸ் தலைவர் எஸ். சத்திய மூர்த்தி, சர்.சி.பி. இராமசாமி ஐயர், ஆர்.கே. சண்முகம் செட்டியார் ஆகிய பிரமுகர்களும் இவர் நாடகங்களில் நடித்துள்ளனர்.

சங்கரதாஸ் சுவாமிகள் மற்றும் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய நாடகங்கள் தொடக்கக் காலத்தில் மலேசியாவில் 1920களிலும் 1930களிலும் அரங்கேறியிருக்கின்றன.

மலேசியாவில் 1910இல் அரங்கேறிய நாடகங்கள்

மலேசியாவில் நாடகம் நடத்த வந்த முதல் கலைக்குழுவான இந்து விநாயக சபா, 1910இல் பினாங்குக்குக் கப்பலில் வந்து பினாங்கிலும் கெடாவிலும் புராண நாடகங்களை நடத்தியிருக்கிறது என வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அந்த நாடகக்குழுவில் இடம்பெற்றிருந்த வாத்தியார் கலியபெருமாள் தேவர் புக்கிட் மெர்தாஜம் எனும் பகுதியிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். அங்கிருந்தவாறு சங்கரதாஸ் சுவாமிகளின் புராண நாடகங்களைத் தொடர்ந்து அரங்கேற்றி வந்தார். ஆர்வமுள்ள பலருக்குப் பயிற்சி கொடுத்து மேடைக் கலைஞர்களாக உருவாக்கினார்.

மலேசியாவில் மேடை நாடகங்களைத் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தியவர் வாத்தியார் கலியபெருமாள்தேவர் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். 1914 முதல் 1918 வரையில் முதலாவது உலக யுத்தம் நடைபெற்ற காரணத்தால் தென்கிழக்காசிய பகுதியிலும் அதன் பதற்றம் உணரப்பட்டது. 1920க்குப் பின்னரே தமிழக நாடகக் குழுவினர் பினாங்கை நோக்கிக் கப்பலில் பயணம் மேற்கொண்டனர். 1920இல் பரமேஸ்வர ஆசாரியார் நவநீத நாடகக் குழுவும், தொடர்ந்து அதே ஆண்டில் வித்வான் வைத்தியலிங்கம் செட்டியார் நாடகக்குழுவும், முத்தையா பிள்ளை நாடகக்குழுவும் புராண நாடகங்கள் நடத்த வந்தன. 1927ஆம் ஆண்டில் மலாயாவில் புராண நாடகங்கள் நடத்த டி.எம். மொய்தீன் சாயபு என்பவரின் நாடகக்குழு வந்தது. அந்தக் குழுவில் அரங்கசாமி நாயுடு எனும் நாடகக் கலைஞரும் இடம் பெற்றிருந்தார். மறு ஆண்டான 1928இல் அரங்கசாமி நாயுடு தலைமையில் நாடகக்குழு மலாயாவுக்கு வருகைபுரிந்து புராண நாடகங்களை நடத்தத் தொடங்கியது.

ஓராண்டிற்குப் பின்னர், அக்குழுவைச் சேர்ந்த பல கலைஞர்கள் தாயகம் திரும்பிவிட்டிருந்தனர். ஆனால், அரங்கசாமி

நாயுடு மலாயாவிலேயே தொடர்ந்து 25 வருடங்கள் தங்கி, இங்குள்ள கலைஞர்களுக்குப் பயிற்சி தந்து நாடகங்களை நடத்தி வந்திருக்கிறார். பல நடிகையரும் அக்குழுவில் இடம்பெற்றிருந் தனர். மலாயாவில் நடந்த புராண நாடகங்களில் பங்கேற்க வந்திருந்த டி.பி. ராஜலட்சுமி பின்னர் திரையுலகில் பெரும்புகழ் பெற்றுத் திகழ்ந்தார்.

1936ஆம் ஆண்டில் வெளிவந்த மிஸ் கமலா எனும் தமிழ்ப் படத்திற்குக் கதை, வசனம், பாடல்கள், டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை ஏற்று சாதனை புரிந்திருக்கிறார் டி.பி. ராஜ லட்சுமி. பெண்களே நிர்வாகப் பொறுப்பேற்று அன்றைய மலா யாவுக்கு நாடகக்குழுக்களைக் கொண்டு வந்து, தோட்டங்களில் புராண நாடகங்களை வெற்றிகரமாக நடத்தித் திரும்பியுள்ளார். தனவள்ளி யம்மாள் நாடகக் கம்பெனி, ஜீவரத்னம்மாள் நாடகக் கம்பெனி போன்றவை குறிப்பிடத்தக்கவை.

ஜீவரத்னம்மாள் முதலில் தனவள்ளியம்மாள் நாடகக் குழுவோடு மலாயாவுக்கு வந்திருந்தார். தமிழ்நாட்டில் புகழ் பெற்ற மெயின் பார்ட் நடிகையான இவர் மலாயாவிலேயே தங்கி நாடகத்துறை வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றினார். ஆர்மோனியம் மாஸ்டராகத் தமிழகத்திலிருந்து நாடகக் கம்பெனியோடு வந்திருந்த ஜெகநாத நாயுடு, மேடை நாடக நடிகையை மணந்து மலாயாவிலேயே தங்கியும் விட்டார். அந்த நாடகக் கலைஞர் களுக்கு மேடையிலேயே பிறந்த மாயா எனும் குழந்தை, மூன்று வயது முதல் மேடை நாடகங்களில் ஆடிப்பாடி நடித்து தன் பதினைந்தாவது வயதில் நாயகி நடிகையாகத் திகழ்ந்தார். அப்போதைய அந்த அழகு நட்சத்திரத்துக்கு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பு இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வட மலாயாவில் தோட்டப்புறங்களிலும் சிறுநகர் களிலும் தொடர்ந்து நடந்துவந்த புராண, இதிகாச, சமூக நாடகங் கள், நாடகக்கலைக்கு உயிரூட்டிக்கொண்டிருந்தன. அதன் தாக்கம் தென் மலாயாவிலும் படரத் தொடங்கியது. கலை ஆர்வம் மிகுந்த பெரியவர்களும் இளைஞர்களும் கோலாலம்பூரிலும் இதர முக்கிய நகரங்களிலும் மேடை நாடகங்கள் படைக்கத் தொடங்கினர்.

கோலாலம்பூரில் கலை, இசை, நடனம், நாடகம் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தோடு 1923ஆம் ஆண்டு ஜூன் 20இல் அமைக்கப்பட்ட சங்கீத அபிவிருத்தி சபா, 1927ஆம் ஆண்டில் பாதுகா பட்டாபிஷேகம் எனும் மேடை நாடகத்தை அரங்கேற்றி நாடகக் கலைக்குப் பெருமை சேர்த்திருக்கிறது. தொடர்ந்து லங்காதகனம், கிருஷ்ணன் தூது, சந்திரகாசன், ராஜம்மாள், கருங்குயில்குன்றம், அவனாவதி, அரிச்சந்திரன் ஆகிய நாடகங்களையும் சங்கீத அபிவிருத்தி சபா அந்தக் காலக்கட்டத்தில் அரங்கேற்றி சரித்திரம் படைத்தது. மலாயன் சுகுண விலாஸ் சமாஜ் எனும் நாடகக் குழுவினர் பம்மல் சம்பந்த முதலியார் எழுதியிருந்த ரத்னாவளி, இரண்டு நண்பர்கள் ஆகிய நாடகங்களை 1931இல் அரங்கேற்றினர். பம்மல் சம்பந்த முதலியார் எழுதி, தமிழக மேடைகளில் அரங்கேறிய மனோகரா, ராஜபக்தி, வசந்தசேனா ஆகிய நாடகங்களும் அரங்கேற்றம் கண்டன.

1930இல் ஜீவரத்னம் நாடகக்குழுவினர் ஈப்போவில் சண்டி ராணி, அல்லி அரசாணி, மந்திரிகுமாரி, கோவலன் போன்ற நாடகங்களை அரங்கேற்றியுள்ளனர். இரண்டாவது உலகப்போர் 1940 -1945 வரையில் நிகழ்ந்தபோது, தமிழகத்திலிருந்து தொடர்ந்து வந்துகொண்டிருந்த நாடகக்குழுவினரின் வருகைக்குப் பாதிப்பு ஏற்பட்டது. உள்ளூர் நாடகக் கலைஞர்கள் குழுக்களை அமைத்துக் கொண்டு அதேபாணியில் நாடகங்கள் நடத்தத் தொடங்கினர். 1950இல் ஆர்.பி.எஸ். மணியம், தைப்பிங் நகரில் குடியேறி, கலைமகள் ஆர்ட்ஸ் எனும் நாடகக் கம்பெனியைத் தொடங்கி, பேரா, கெடா, பினாங்கு போன்ற வடமாநிலங்களில் நாடகங்கள் நடத்தி வந்தார். 60க்கும் மேற்பட்ட மேடைக் கலைஞர்களை இவர் உருவாக்கியுள்ளார்.

நிபோங்திபாலில் இயங்கிவந்த ஆறுமுகம் நாடகக் குழுவும், தைப்பிங்கில் இயங்கி வந்த கிருஷ்ணா நாடகக் குழுவும், ஆர்.பி.எஸ். மணியத்தின் கலைமகள் ஆர்ட்ஸ் குழுவும் முழுநேர நாடகக்குழுக்களாக அப்போது செயல்பட்டு வந்தன. மலேசிய மேடை நாடக வரலாற்றில் கலைஞர் டி.என். வைத்தியநாதன் முக்கிய இடம் வகிக்கிறார். 1937இல் தன் 16ஆவது வயதில் டி.என். வைத்தியநாதன் மலாயாவுக்கு வந்து, கோயில் அர்ச்சகராக வேலை பார்க்கத் தொடங்கினார். கலை ஆர்வத்தால் முன் அனுபவத்தோடு

ஆர்மோனியப் பெட்டியைக் கையிலெடுத்து மேடைகளில் பாடத் தொடங்கி நாடகங்களில் நடிக்கவும் தொடங்கினார். பாட ஆரம்பித்து நாயக நடிகராகத் திகழ்ந்த டி.என். வைத்தியநாதன் பல நாடகக் குழுக்களில் பங்கேற்று தன் திறனை வெளிப்படுத்தியிருக் கிறார். நாடக வாழ்க்கையில் போதிய வருமானம் கிடைக்காத தாலும் வரவேற்பு குறைந்ததாலும் கலை உலக வாழ்க்கையைத் துறந்துவிட்டு, மீண்டும் கோயில் அர்ச்சகராகிவிட்டதாக அப்போது சொல்லப்பட்டது.

ஏ.ஆர். ஐயப்பன் - ஸ்டான்லி

புகழ்பெற்ற நகைச்சுவைக் கலைஞர்களான ஏ.ஆர். ஐயப்பன் - வி.ஐ. ஸ்டான்லியை அறிமுகப்படுத்திய அசோகன் நாடக மன்றம் 1950களில் சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் சேகர், இதயதாபம், சிரிக்காதே ஆகிய நாடகங்களை அரங்கேற்றியது.

1954இல் நட்பு

1954இல் தலைநகர் நகர மண்டபத்தில் நட்பு எனும் மேடை நாடகத்தையும், 1962இல் சிங்கோவன் எனும் இயற்பெயர் கொண்ட சிகோன் எழுதியிருந்த வள்ளி எனும் நாடகத்தையும், அதே நகர மண்டபத்தில் அரங்கேற்றி கலைத்தொண்டு புரிந்த (டத்தோஸ்ரீ) சாமிவேலு, (டத்தோ) வீ. கோவிந்தராஜ், சிகோன், காளி சுப்பையா போன்றோரின் கலைப்பணி மறக்க முடியாத தாகும்.

1957ஆம் ஆண்டில் மலாயா சுதந்திரம் பெற்றதை முன்னிட்டு, தலைநகர் பூமலையில் நடைபெற்ற மாபெரும் பெஸ்தா கலை விழாவில் தமிழ் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந் தன. அதில் ஓர் அங்கமாக ஒரு மணிநேர இலக்கிய நாடகமும் இடம் பெற்றிருந்தது. சீதா கல்யாணம் எனும் அந்த மேடை நாடகத் தில் தசரத மன்னனாக (டத்தோஸ்ரீ) சாமிவேலுவும் அவர் மைந்தன் ராமனாக (டத்தோ) கோவிந்தராஜுவும், சீதையாக கல்யாணி என்பவரும் நடித்திருந்தனர்.

பூச்சோங் சுத்த சமாஜ உதவி நிதிக்காக 1964இல் தலைநகர் நகர மண்டபத்தில் தந்தையின் குரல் எனும் வரலாற்று நாடகத்தை

மேடையேற்றியிருந்தனர். குழந்தைவேலு எனும் கலைஞர் இயக்கிய அந்நாடகத்தில் மன்னன் மகேந்திரன் பாத்திரத்தில் (டத்தோஸ்ரீ) சாமிவேலு நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நாடகக்கலைக்கு அணி சேர்க்க பிரேம் கமால், வீ. கோவிந்தராஜ், குழந்தைவேலு, நடராஜன் உள்பட பல ஆர்வமிக்க நண்பர்களை இணைத்து, வளரும் கலைஞர்கள் எனும் அமைப்பை நிறுவி அதன் தலைமைப் பொறுப்பையும் ஏற்று, 1966ஆம் ஆண்டில் தொடர்ந்து மூன்று நாட்களுக்குத் தலைநகர் நகர மண்டபத்திலும், பின்னர் ஈப்போவிலும் 1941 எனும் நாடகத்தை அரங்கேற்றித் தொடர்ந்து பல இளைஞர்கள் அத்துறையில் ஈடுபட மேடை நாடகத் துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்களில் டத்தோஸ்ரீ சாமிவேலுவும் குறிப்பிடத்தக்கவர்.

ரிடிப்பியூஷன் வி. ரோச்

கோலாலம்பூர் ரிடிப்பியூஷன் புகழ் வி. ரோச் தலைமையில் இயங்கிய ஈஸ்டர்ன் ஆர்ட் சொசைட்டி என்னும் கலை நிறுவனம், 1960இல் 'கவியின் கனவு' எனும் இலக்கிய நாடகத்தையும், தொடர்ந்து குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு ஆகிய நாட்டிய நாடகங்களையும், எதுவாழ்வு? எனும் சமூக நாடகத்தையும் அரங்கேற்றியிருந்தது. (டத்தோஸ்ரீ) சாமிவேலு, பைரோஜி நாராயணன், சி. கோன் உட்பட பலர் அதில் நடித்திருந்தனர்.

மலேசியாவில் 40 வருடங்களுக்கு முன்னர் வரலாறு படைத்த மற்றொரு மேடை நாடகம் மசூரி. லங்காவித் தீவில் மசூரி எனும் மலாய்க்கார மங்கைக்கு நடந்த கொடுமையைச் சித்திரித்து நாட்டின் முதல் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் மலாய் மொழியில் எழுதியிருந்த மசூரியை, மலாய் மொழியிலும், தமிழ் மொழியிலும் அடுத்தடுத்து இரு நாட்களிலும் தலைநகரில் மேடையேற்றி சரித்திரம் படைத்திருந்தனர் மலாயா தமிழர் சங்கத்தினர். சௌ.ஆ. சுப்பையா என்பவரின் பொறுப்பில் அரங்கேற்றம் கண்ட அந்த வரலாற்று நாடகத்தில் பத்மராணி வேலுசாமி மசூரியாகத் தோன்றி நடித்து பலரின் பாராட்டை அப்பொழுது பெற்றிருந்தார்.

ஆழி அருள்தாசன்

கோலாலம்பூரில் 1960இல் அரங்கேறிய வெண்ணிலா நாடகத்தில் சாந்தி எனும் பெயரில் நாயகியாகத் தோன்றி நடித்த பைசோன் நாற்பதாண்டுகளுக்கு முன்னர் ஜொலிக்கும் மேடை நட்சத்திரமாகத் திகழ்ந்தவர்.

வெண்ணிலா நாடகத்தை எழுதி இயக்கியிருந்த ஆழி. அருள்தாசனையே பின்னர் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொண்ட பைசோன், தன் கணவரோடு இணைந்து பல மேடை நாடகங்கள் உருவாக உறுதுணையாக இருந்திருக்கிறார். பல பெண்கள் மேடை நாடகங்களில் பங்கேற்க பக்கபலமாகவும் ஆதரவாகவும் திகழ்ந்தவர் இவர்.

மலாயா கூட்டரசு கலைமன்றம் எனும் அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த ஆழி. அருள்தாசன், 1960 களிலும், 1970களிலும் ஆண்டுதோறும் ஒரு மேடை நாடகத்தை அந்த அமைப்பின் மூலம் அரங்கேற்றி வந்தார். ஆர்வமிக்க பல இளைஞர்களையும் யுவதிகளையும் மேடை நாடகத் துறையில் ஈடுபடச் செய்த முக்கியமான சிலரில் ஆழி. அருள்தாசனும் பைசோனும் குறிப்பிடத்தக்கவர்கள்.

கோலாலம்பூர் தமிழாசிரியர் கலைக்குழுவினர் அப்பர் தமிழ்ப்பள்ளி கட்டட நிதிக்காக 1958இல் தலைநகரில் ஜீவஜோதி எனும் மேடை நாடகத்தை அரங்கேற்றியிருந்தனர். அதன் கதை, உரையாடல்களை எழுதி இயக்கியிருந்தவர் ஆழி. அருள்தாசன். 1957ஆம் ஆண்டில் குரு சந்தானம் இயக்கத்தில் உருவாகிய பீஜப்பூர் வீழ்ச்சி எனும் வரலாற்று நாடகமும் ஒரு வெற்றிப்படைப்பே!

மாயா

கோலாலம்பூரில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பிரபலமாகத் திகழ்ந்த தொழிற்கட்சி பிரமுகரும் சிலாங்கூர் மாநில சட்டமன்றத்தின் எதிர்க்கட்சி வேட்பாளராக 1969இல் போட்டியிட்டு வென்றிருந்தவருமான திருமதி கங்கா நாயர், 1963ஆம் ஆண்டில் கோலாலம்பூர் நகர மண்டபத்தில் மாயா எனும் மேடை நாடகத்தைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு அரங்கேற்றி இருந்தார்.

அந்த மாயா நாடகத்தின் கதை, வசனம், டைரக்ஷன், இசை, அமைப்பு ஆகிய அனைத்தையும் திருமதி கங்கா நாயரே மேற்கொண்டிருந்தார். அப்போதே நாற்பது வயதைத் தாண்டியிருந்த சற்று தடித்த சரீரத்தைக் கொண்டிருந்த அந்தக் குடும்ப மாது, துணிச்சலுடன் அந்த மாயா நாடகத்தில் நாயகி வேடம் தரித்து ஆடிப்பாடி நடித்திருந்தது கண்கொள்ளாக் காட்சி. அதில் புகழ் பெற்ற எழுத்தாளரும் கலைஞருமான சி. கோன் நாயகனாக நடித்திருந்தார். முக்கிய பாத்திரத்தில் சமூகக் கலைமணி சா.ஆ. அன்பானந்தன் நடித்திருந்தார். மேடை நாடகங்களில் தொடர்ந்து பங்கேற்க பல தமிழ்ப் பெண்களுக்கு ஆர்வமேற்பட தூண்டு கோலாகத் திகழ்ந்த அந்தத் தொடக்கக்கால கலைஞர்களின் கலைப் பணி பாராட்டத்தக்கது

இரண்டாம் கட்டத் தமிழக நாடகக் குழுக்கள்

வட மலாயாவில் தோட்டப்புறங்களில் புராண நாடகங் கள் நடத்த வந்திருந்த நாடகக்குழுக்கள் நாடக ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தன.

1956ஆம் ஆண்டில் புகழ்பெற்ற திரைப்பட நாயக நடிகர் கே.ஆர். இராமசாமியின் கே.ஆர்.ஆர். நாடகக்குழு மலேசியாவின் முக்கிய நகர்களில் வேலைக்காரி, சந்திரோதயம், துளிவிஷம், ஓர் இரவு, சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம் ஆகிய நாடகங்களை நடத்தியது. அதில் தாம்பரம் லலிதா, சந்திரகாந்தா ஆகிய நடிகையர் நடித்திருந்தனர்.

1957இல் மேடை நாடக உலகில் கொடி கட்டிப்பறந்த டி.கே.எஸ். சகோதரர்கள் மலேசியாவில் தங்களின் புகழ்பெற்ற ராஜராஜசோழன், ஔவையார், இன்ஸ்பெக்டர், ரத்தபாசம், எது வாழ்வு? போன்ற நாடகங்களை நடத்தி அமோக வரவேற்பைப் பெற்றிருந்தனர். மேடை நாடக உத்திகளை, டி.கே.எஸ். சகோதரர் கள் படைத்த அந்த அற்புதமான மேடை நாடகங்கள் மூலம், மலேசியாவிலுள்ள நாடகக் கலைஞர்கள் தெரிந்து கொள்ளவும் பின்பற்றவும் வாய்ப்பேற்பட்டிருந்தது. 1959ஆம் ஆண்டில் புகழ் பெற்ற நாடக நடிகையும் திரைப்படத் தாரகையுமான எம்.எஸ். திரௌபதி, தன் நாடகக் குழுவோடு மலேசியாவுக்கு வருகை

புரிந்து பைத்தியங்கள் பலவிதம், திலகம் போன்ற சமூக நாடகங் களை நடத்தித் திரும்பியிருக்கிறார்.

1960இல் டி.கே. இராமச்சந்திரன் நாடகக்குழு மலேசியா வில் கீர்த்தி சிங்கன் எனும் மேடை நாடகத்தைப் படைத்தது. பத்து ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் மேலும் பல நாடகக் குழுக்கள் வருகை புரிந்தன. அவற்றில் மனோகர் நாடகக்குழு படைத்த புராண வரலாற்று நாடகங்கள் பெரும் வெற்றி பெற்றன. நடிகவேள் எம்.ஆர். ராதா, வி. கோபாலகிருஷ்ணன், டி.ஆர். மகாலிங்கம் உட்பட மேலும் பல திரைக்கலைஞர்களின் நாடகங் களும் அரங்கேறின. மலேசியாவில் உள்ள கலை ஆர்வமிக்க பலருக்குத் தமிழகத்திலிருந்து வந்த மேடை நாடக நடிகையர் வழிகாட்டிகளாக, உந்துசக்தியாகத் திகழ்ந்திருக்கின்றனர்.

வாழையடி வாழை என்று சொல்வதுபோல் மேடைக் கலைஞர்கள் குலத்தொழில்போல் தங்கள் பெற்றோரைப் பின்பற்றி நாடகத்துறையில் பால்ய பருவம் முதல், தொடர்ந்து ஈடுபட்டு வந்திருப்பதைக் காண முடிகிறது. குறிப்பிட்ட அந்தக் குடும்பத்தினர் மலேசியாவில் நாடகக்கலை வளர அப்போது பெரும் துணையாக இருந்திருக்கின்றனர்.

தற்போது மறைந்துவரும் மேடை நாடகக்கலை மீண்டும் புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும்பெற வேண்டும். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அரங்கேற்றம் கண்ட தரமான முழுமை யான மேடை நாடகங்கள் போல் மீண்டும் நல்ல நாடகங்கள் பவனி வரவேண்டும் என்பது பலரின் அவா.

மலேசியத் தமிழ் இலக்கிய வரலாறு

பெ. இராசேந்திரன்
தலைவர்
மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு நூறாண்டுக்கும் மேற்பட்ட வரலாறு இருக்கிறது. இந்தக் காலத்தில் இலக்கியம் வளர்வதற்கு உழைத்தவர் பலர். வாழ்வு நாடிவந்த நாட்டில் தங்களது வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார வளத்தைத் தேடியதோடு மொழி, கலை, இலக்கியத்தையும் காத்திட முன்னோர்கள் இடைவிடாத இலக்கியப் பணிகளாற்றியுள்ளனர்.

தொடக்க நிலை

மலேசியாவில், பினாங்கில் 1876இல் ''தங்கை நேசன்'' என்னும் பத்திரிகை அச்சிடப்பட்டு வெளிவந்துள்ள செய்தி மலேசிய இலக்கிய வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்பட்டுள்ளது (மா. இராமையா : 'மலேசியத் தமிழ் வரலாற்றுக் களஞ்சியம்'). சிங்கப்பூரில் 1887இல் சி.ந. சதாசிவப் பண்டிதரின் ''வண்ணையந் தாதி'' முதலிய நூல்கள் தொடக்கமாக அமைந்தன (ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன் : ''சிங்கப்பூர் மரபுக்கவிதைகள்'').

இந்தத் தொடக்கங்களிலிருந்து மலேசிய இலக்கிய வரலாறு எழுச்சியும் தளர்ச்சியும் கண்டு தொடர்ந்து வளர்ந்திருக் கிறது. அச்சு வசதியும் ஊடக வளர்ச்சியும் மிக அரிதாக இருந்த ஒரு மங்கிய தொடக்கக்காலத்தில் உண்மையான தமிழ்மொழி பண்பாட்டு அர்ப்பணிப்பு உணர்வுடன் இந்த இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்ட வித்தகர்களான முன்னோடிகளை மானசீகமாகப் போற்றி வணங்குதல் வேண்டும்.

மலேசியாவில் நவீன தமிழ் இலக்கியத்தின் மறுவுயிர்ப்புக் காலமாக 1946ஆம் ஆண்டை ஓர் எல்லைக்கோடாகக் காட்டுகிறார் மா. இராமையா. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் மத்தியில் சிக்கிச் சீரழிந்த மலேசியாவில் அன்றாட வாழ்க்கையின் அவலங்களுக்கிடையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இலக்கியங்கள் ஏதும் தோன்றவில்லை. 1946க்குப் பிந்திய இலக்கிய வரலாறு சி.வீ. குப்புசாமி எழுதிய ''ஜப்பானியர் லாக்கப்பில் ஏழு நாட்கள்'', ''யுத்தத்தால் வந்த யுத்தம்'', (இரண்டும் 1946) என்ற நூல்களுடன் தொடங்குவதும் பொருத்தம். சி.வீ. குப்புசாமி இவற்றைத் தொடர்ந்து மலேசியத் தமிழ் இலக்கியத்தின் கிரியா ஊக்கியாகவும், எழுத்தாளர் இயக்கங்களின் நடத்துநராகவும் (மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைமைப் பதவி உட்பட) நெடுநாட்கள் இருந்து மறைந்தார்.

1946க்குப் பிறகு இந்த நாட்டுத் தமிழ்ப் புத்திலக்கியத் துறையில் இடம்பெற்ற மிக முக்கியமான நிகழ்வு அக்காலத்து முன்னோடி எழுத்தாளர்களாகவும் விமர்சகர்களாகவும் இருந்த சுப. நாராயணனும் பைரோஜி நாராயணனும் ''தமிழ்நேசன்'' நாளேட்டில் 1950இல் நடத்திய ''கதை வகுப்பு'' ஆகும். ''இரண்டு நாராயணன்களும் கூடி நடத்திய கதை வகுப்பு, கதை எழுதுவோருக்கு மட்டுமின்றி கவிதை, உரைநடை, நாடகம் ஆகியன எழுதுவோருக்கும் தக்க வழிகாட்டியாக அமைந்தது. இந்நாட்டில் எழுத்தாளர்களை உருவாக்க முடியாது என்று சொல்பவர்களுக்கு இஃதோர் சவாலாகவும் அமைந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.''

1952இல் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் இன்னொரு முயற்சியாக சிங்கப்பூர் ''தமிழ் முரசு'' எழுத்தாளர் பேரவை என்ற அமைப்பை ஏற்படுத்தியது. இதில் எழுத்தாளர்கள் உறுப்பியம் பெற்றனர். முதலாவதாகப் பேர் பதிந்துகொண்டவர் மா.செ. மாயத்தேவன். எழுத்தாளர் பேரவையின் விதிமுறைகளில் ஒன்று உறுப்பினராகும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு படையலை உருவாக்க வேண்டும் என்பது. மற்றொன்று படைப்பிலக்கியம் எழுதும் எவரும் பேரவையின் வேறு இரண்டு உறுப்பினர்களுக்கு அதனை அனுப்பித் திருத்திய பின்னரே அதனை அச்சில் ஏற்ற வேண்டும் என்பது.

1946க்குப் பிந்திய இலக்கிய இதழ்களில் முந்தியது முதலில் கா. இராமநாதனையும், பின்னர் தி.சு. சண்முகத்தையும் ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த ''சோலை'' திங்களிதழ் ஆகும். 1952 ஜனவரி தொடங்கி எட்டு மாதங்கள் மட்டுமே வெளிவந்திருந் தாலும் முன்னோடி எழுத்தாளர்களான சி. அன்பரசன், கா. அண்ணாமலை, கா. பிச்சைமுத்து, க.ப. சாமி, இராவணேசப் புலவர் (ஈப்போ), கிருஷ்ணதாசன், மா.செ. மாயத்தேவன், மா. இராமையா, அ. இராமநாதன் ஆகியோர் இதில் எழுதினர்.

1953இல் ''தமிழ் முரசு'' நாளிதழ் ''மாணவர் மணிமன்ற மலர்'' என்ற வார இணைப்பு ஒன்றினைத் தொடங்கி தமிழ்ப் பள்ளி மாணவர்களும் சிறுவர்களும் இலக்கிய அறிமுகம்பெற வழியேற் படுத்திக் கொடுத்தது. பல பின்னாள் எழுத்தாளர்களுக்கு இதுவே பயிற்சிக் களமாகவும் அமைந்தது.

1950களின் பிற்பகுதியில் ''தமிழ் முரசு'' நாளிதழ் மலேசிய எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியை நடத்தியது. அப்போது அதன் துணையாசிரியராக இருந்த வை. திருநாவுக்கரசு அவர்களே இந்தப் புதிய முயற்சியை ஊக்குவித்து நடத்தினார்.

1953இல் தமிழ் முரசு ''ரசனை வகுப்பு'' தொடங்கிற்று. ''கதை வகுப்பு'' நடத்தியவர்களில் ஒருவரான கந்தசாமி வாத்தி யாரே ரசனை வகுப்பையும் நடத்தினார். ரசனை வகுப்பு இதழ் களை மட்டுமின்றி வானொலித் தமிழ் நிகழ்ச்சிகளையும் தீவிரமாக விமர்சனம் செய்தது. எதிலும் புரட்சி செய்ய வேண்டும் என்ற தீவிர எண்ணம் கொண்டவரான கந்தசாமி வாத்தியார் ''அண்ணா அறிஞரா?'' என்ற ஒரு கட்டுரையை எழுதி நீண்ட விவாதத்தையும் தொடங்கி வைத்தார்.

1955இல் நடந்த இந்தக் கூட்டத்துக்குப் பிறகு தமிழ் எழுத்தாளர்களுக்கான சங்கம் ஒன்று அமைக்கும் எண்ணம் ஓங்கி வந்தது. 05.07.1958இல் சி. வேலுசாமி அவர்களின் முயற்சியால் மலாயா தமிழ் எழுத்தாளர் சங்க அமைப்புக்கூட்டம் குவாலலும்பூர் பங்சார் தமிழ்ப்பள்ளியில் நடந்தது.

அந்தச் சங்கம் செயலிழந்து மீண்டும் சி. வேலுசுவாமியின்

முயற்சியில் ஓர் அமைப்புக் கூட்டம் 1962இல் கூட்டப்பட்டு பதிவுக்கான மறுமுயற்சிகள் செய்யப்பட்டன. 26.03.1963இல் சங்கம் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்ற புதிய பெயரில் பதிவு பெற்றது. புதிய சங்கத்தின் நிர்வாகிகள் பின்வருமாறு:- தலைவர் முருகு. சுப்பிரமணியம்; துணைத்தலைவர் : சி. வேலுசுவாமி; செயலாளர்: சு. கணபதி; பொருளாளர் : கு. ஏழுமலை; செயற்குழுவினர் சி.வீ. குப்புசாமி, இர.ந. வீரப்பன், க. கிருஷ்ணசாமி முதலியோர். இந்தச் சங்கத்தின் தொடர்ச்சியே இன்று பெ. ராஜேந்திரனின் தலைமையில் இயங்கி வருவதாகும்.

1952இல்தான் புத்திலக்கியப் படைப்பு நூலாக மா. இராமையா, மா.செ. மாயத்தேவன் இருவரும் இணைந்து எழுதிய சிறுகதைத் தொகுப்பான ''இரத்ததானம்'' வந்தது. இந்த நூல் குறித்து எழுத்தாளர் பேரவை ''பேரவைக்குப் பூரிப்பு; மலாயாத் தமிழ்ப் பெருமக்களுக்குப் பெருமை'' என எழுதியது.

மலாயா சுதந்திரம் பெற்ற 1957இலிருந்து இங்கு எழுதப்படும் படைப்பிலக்கியங்கள் பெருகின. பல நூல்களும் வெளியாயின. வார, மாத இதழ்கள் பலவும் தோன்றி படைப்பாளர்களுக்கு உள்ள வாய்ப்புக்களை விரிவாக்கின. மலாயா (பின்னர் மலேசியா) தமிழ் எழுத்தாளர் இயக்கமும் படைப்பிலக்கியத்துக்குத் தொடர்ந்து உயிரும் உணர்ச்சியும் ஊட்டி வந்தது.

மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம் தனது சமூகப் பணிகளுக்கிடையே ஆற்றி வந்த இலக்கியப் பணியின் ஓர் உச்சமாக மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு ஒன்றினைக் கொண்டு வந்தது. 1968இல் வெளிவந்த ''மணிக் கதைகள்'' என்னும் தொகுப்பு அக்காலக்கட்டத்தில் மலேசிய இலக்கியம் அடைந்துள்ள வளர்ச்சியை நன்கு பிரதிபலிப்பதாக அமைந்தது. ''தீபம்'' நா. பார்த்தசாரதியின் முன்னுரையுடனும், டாக்டர் இராம. சுப்பையாவின் அணிந்துரையுடனும், இலங்கை இரசிகமணி கனக. செந்தில்நாதனின் ஆய்வுரையுடனும், மன்றத் தலைவர் க. கிருஷ்ணசாமியின் முகமனுடனும் வெளியான இந் நூலில் சா.ஆ. அன்பானந்தன், க. கிருஷ்ணசாமி, சாமி. மூர்த்தி, ரெ. கார்த்திகேசு, எம். குமாரன், சை. பீர்முகம்மது, பரிதா மணாளன், பாதாசன், மு.க.மா. முத்தமிழ்ச்செல்வன், சோ. பரஞ்

சோதி ஆகியோரின் கதைகள் இடம்பெற்றிருந்தன.

சிறுகதைத் துறைக்கு முருகு. சுப்பிரமணியனை ஆசிரியராகக் கொண்ட ''தமிழ்நேசன்'' 1972இல் தொடங்கிய பவுன் பரிசுத் திட்டம் ஒரு பெரும் புத்துணர்ச்சியைத் தந்தது. இதில் நடுவர்களாக இருந்து கதைகளைத் தேர்ந்தெடுக்க நல்ல இலக்கியவாதிகளையும் முருகு தன்னுடன் துணைக்கு அழைத்துக்கொண்டார். அவர்களுள் டாக்டர் ஆர். தண்டாயுதம், புலவர் சேதுராமன், எஸ்.ஆர்.எம். பழனியப்பன், ரெ. கார்த்திகேசு, டாக்டர் பிரமீளா கணேசன் ஆகியோரும் அடங்குவர்.

சி. அன்பானந்தம், அரு.சு. ஜீவானந்தன், இராம. வீரசிங்கம், மு. அன்புச்செல்வன், எம்.ஏ. இளஞ்செல்வன், இராம. கண்ணபிரான், ஆர். சண்முகம், இ. தெய்வானை, சாமி. மூர்த்தி, சீ. முத்துசாமி, பாவை, சி. வடிவேல், ந. மகேசுவரி, மா. இராமையா ஆகியோர் பவுன் பரிசு பெற்றோர் பட்டியலில் அடங்குவார்கள். முதல் ஆண்டில் பரிசு பெற்றவர்களைக் கூட்டித் தமிழ்நேசன் ஓர் உபசரிப்பு விருந்து நடத்தி அனைவருக்கும் பரிசு வழங்கியதுடன் முதல் பனிரெண்டு கதைகளை ''பவுன் பரிசுக் கதைகள்'' என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பாகவும் கொண்டு வந்தது.

இதன்பின்னர் தொடங்கப்பட்ட கவிதைக்கான பவுன் பரிசுப் போட்டியில் வே. மகேந்திரன், கரு. வேலுசாமி, ஆதம் குமார், எல்லோன், கன்னல் கவி கரீம், வீரமான், காரைக்கிழார், சோம சன்மா, கரு. திருவரசு, எஸ்.கே. வடிவேலு, சங்கு சண்முகம் முதலியோர் பரிசு பெற்றனர்.

தமிழ்நேசன் வழியாக எழுத்தாளர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டி வந்த முருக, அதேநேரத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்று சில ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார். அவற்றுள் முக்கியமானது சிறுகதைக்கான மாதாந்திரக் கருத்தரங்கங்களைக் கூட்டி ஒவ்வொரு மாதத்திற்கும் சிறந்த ஒரு கதைக்கு 50 ரிங்கிட் பரிசு வழங்கி வந்ததாகும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் முதல்

தொகுதி 1974இல் ''பரிசு'' என்னும் தலைப்பில் வெளியானது. 14 கதைகள் இதில் இடம்பெற்றன. இவற்றை எழுதிய எழுத்தாளர்கள் : மீனா நடராஜா, ரெ. கார்த்திகேசு, ஆ. சாரதா, சாமி மூர்த்தி, சுமதி தங்கராஜ், த.ப. இலட்சுமணன், சக்கரவர்த்தி சுப்பிரமணியன், ஐ. இளவழகு, சி. வடிவேல், மா. சுப்பிரமணியம், மா. இராமையா, இரா.ச. இளமுருகு, துளசி.

நாடோடி

ஒருசில ஆண்டுகள் விடுபட்டிருந்த மாதாந்திரத் தங்கப் பதக்க விருதளிப்பு ஆதிகுமணன் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குத் தலைவராக வந்தபிறகு உயிர்ப்பிக்கப் பட்டுத் தொடர்ந்து இன்றும் நடைபெற்று வருகிறது. இதனை அடியொற்றி கவிதைக்கும் இப்போது காலவாரியாகக் கருத்தரங்குகள் நடை பெற்று வருகின்றன. கருத்தரங்கில் தேர்வு செய்யப்படும் கவிதை களும் கருத்தரங்கு நிகழ்வுகளும் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

1970களில் இரா. தண்டாயுதம் மலாயாப் பல்கலைக்கழக இந்திய இயல் துறையில் புத்திலக்கிய விரிவுரையாளராக வந்து சேர்ந்தார். மலேசியப் படைப்பிலக்கியத்துக்கு அவர் ஆற்றிய சேவைகள் அதிகம். அவருடைய ஆலோசனையின்கீழ் மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் முயற்சியில் தொடங்கப் பட்ட ஆண்டுச் சிறுகதைப் போட்டி இந்த நாட்டின் சிறுகதை வரலாற்றில் ஒரு மைல்கல்லாக ஆகியுள்ளது. 1986 முதல் இதில் பரிசு பெற்ற கதைகள் நூல் உருவில் வந்துகொண்டுள்ளன.

வளர்ச்சி நிலை

இரா. தண்டாயுதம் பதவிக்காலம் முடிந்து தமிழகம் திரும்பி அங்கே அகால மரணமடைந்த பிறகு அவருடைய நினைவாக ''டாக்டர் தண்டாயுதம் நினைவிலக்கியப் பேரவை'' தொடங்கப்பட்டது. அதனை முன்னின்று நடத்தியவர் அவருடைய நெருங்கிய நண்பரும் எழுத்தாளருமான வீ. செல்வ ராஜ் ஆவார். பேரவை மூலம் வீ. செல்வராஜ் ஆற்றிய முக்கிய பணி, ஆண்டுதோறும் ''மலேசியத் தமிழ் இலக்கியம்'' என்ற தலைப்பில் சிறுகதைகள், கவிதைகள், ஒரு குறுநாவல் ஆகியவற்றைக் கொண்ட ஒரு தொகுப்பை வெளியிட்டதாகும். இந்தத் தொகுப்

புக்களைக் குறிப்பாக வெளிநாட்டுத் தமிழர்களிடையே மலேசிய இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் கருவியாக செல்வராஜ் கருதி அப்படியே செயல்படுத்தினார். 1988 - 1994 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில் ஆறு தொகுப்புகள் வெளியாகின.

1950களிலிருந்தே இந்த நாட்டின் எழுத்தாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கிடையில் புத்தகப் பதிப்புக்களை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். கட்டுரைத் தொகுப்புகள், ஆய்வு நூல்கள், கவிதைத் தொகுப்புகள், காவியங்கள், சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள், புதுக்கவிதைத் தொகுப்புகள் ஆகியவை காலந்தோறும் பதிப்பிக்கப்பட்டு மலேசியத் தமிழ் இலக்கியத்திற்குச் செழுமை சேர்த்துள்ளன.

1995இல் இலங்கை எழுத்தாளரான மாத்தளை சோமு, மலேசியச் சிறுகதைகள் சிலவற்றைத் தொகுத்து ''மலேசியத் தமிழ் உலகச் சிறுகதைகள்'' என்னும் தலைப்பில் தமிழ்நாட்டில் பதிப்பித்தார். இந்தத் தொகுப்பு பின்னர் மலேசிய இடைநிலைப் பள்ளிகளில் பாடப்புத்தகமாகவும் வைக்கப்பட்டது.

1998இல் ''மலேசிய நண்பன்'' நாளிதழ் சிறந்த எழுத்தாளர் கள் பதின்மூவரை அழைத்து சிறுகதைகள் எழுதச் சொல்லி அவர்களுக்கு ஆளுக்கொரு உயர்ந்த ரகக் கடிகாரத்தையும் பரிசாக அளித்தது. ''கடிகாரக் கதைகள்'' என்ற தொடரில் வெளியான இக்கதைகளைப் பின்னர் ''சமுதாயக் கதைகள்'' (1999) என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பாக வெளியிட்டு அதற்குப் பெரும் வெளியீட்டு விழாவையும் நடத்தியது.

2003ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பழம்பெரும் இதழான ''கலைமகள்'' ஆசிரியர் கீழாம்பூர் அவர்களின் முயற்சியில் 32 மலேசியச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புகள் ''மலேசியச் சிறுகதைகள்'' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டன.

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1998 முதல் காலஞ் சென்ற அமைச்சர் டான் ஸ்ரீமாணிக்கவாசகம் அவர்கள் நினைவாக ஆண்டின் ஒரு சிறந்த நூலுக்கு ''டான் ஸ்ரீ மாணிக்கவாசகம் புத்தகப் பரிசு'' என்ற பெயரில் சான்றிதழும், 5000 ரிங்கிட் ரொக்கமும்

அளித்துக் கௌரவித்து வந்தது. 2004லிலிருந்து இந்தத் தொகை 7000 ரிங்கிட்டாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தப் பரிசை இதுவரை வென்றவர்கள்: ''மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'' என்னும் நூலுக்காக முரசு நெடுமாறன் (1998); ''அந்திம காலம்'' நாவலுக்காக ரெ. கார்த்திகேசு (1999); ''சமுதாயச் சீர்கேட்டுக்கு வித்திடும் காதல், மணவாழ்க்கை, குழந்தை வளர்ப்பு: சிக்கலும் தீர்வும்'' என்னும் ஆய்வுக் கட்டுரை நூலுக்காக கே.எம். குணா (2000); ''அமாவாசை நிலவு'' நாவலுக்காக மா. இராமையா (2001); ''ஆர். சண்முகம் கதைகள்'' சிறுகதைத் தொகுப்புக்காக ஆர். சண்முகம் (2002); ''செய்கு கனான் காவியம்'' நூலுக்காக ப.மு. அன்வர் (2003); ''மனமே சுகமே'' கட்டுரை நூலுக்காகச் சுவாமி பிரம்மானந்த சரஸ்வதி (2004); ''ஊசி இலை மரம்'' சிறுகதைத் தொகுப்புக்காக ரெ. கார்த்திகேசு (2005); ''அமுத சுரபிகள்'' நாவலுக்காக ப. சந்திரகாந்தம் (2006); ''புயலில் மலர்ந்த பூக்கள்'' கவிதை நூலுக்காக கரு. வேலுசாமி (2007); ''மலேசியாவில் புதுக் கவிதைகள் : தோற்றமும் வளர்ச்சியும்'' கட்டுரை நூலுக்காக இராஜம் இராஜேந்திரன் (2008); ''பயாஸ்கோப்காரனும் வான்கோழிகளும்'' என்னும் சிறுகதைத் தொகுதிக்காக சை. பீர் முகமது (2009).

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1983 தொடங்கி எழுத்தாளர்களுக்கும் எழுத்துத் துறைக்குப் பணிபுரிந்தவர் களுக்கும் ஆண்டுதோறும் தங்கப் பதக்கங்கள் வழங்கிப் பெருமைப்படுத்தி வருகிறது. இவை மலேசியாவில் தமிழுக்குத் தொண்டாற்றி மறைந்த பெரியவர்கள் பெயர்களில் வழங்கப்படு கின்றன; மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் தலைவராகப் பணியாற்றிய தமிழறிஞர் பேராசிரியர் தனிநாயக அடிகளார், தமிழர் திருநாளின் தந்தை தமிழவேள் கோ. சாரங்க பாணி, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அடிநாள் தலைவரும் பத்திரிகையாசிரியருமான திரு சி.வீ. குப்புசாமி, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பத்திரிகையாசிரியரும் இலக்கியவாதியுமான முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன், தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் தலைவரும் கலைஞரும் எழுத்தாளருமான சமூகக் கலைமாமணி சா.ஆ. அன்பானந்தன், இளம் பத்திரிகையாளராகத் தொடங்கி தொழிலதிபராகவும் சமுதாயத் தலைவராகவும் வளர்ந்த

தமிழவேள் ஆதி. குமணன் ஆகியோரின் நினைவாக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. இதுவரை சுமார் 100 பேருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

மறைந்த பத்திரிகாசிரியரும் அரசியல்வாதியும் அமைச்சருமான டான்ஸ்ரீ ஆதிநாகப்பன் பெயரிலும் அவருடைய குடும்பத்தாரின் ஆதரவுடன் ஆண்டுதோறும் விருதுகளும் நிதியும் அளித்து வருகிறது.

கதை, கட்டுரை, கவிதை, நாடகம் ஆகிய நான்கு துறைகளைச் சேர்ந்த சிறந்த எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு ரொக்கப்பரிசு அளிக்கப்படுகிறது.

மலேசிய பாரதிதாசன் இலக்கிய அமைப்பும் ஆண்டு தோறும் பெரிய அளவில் ''எழுத்தாளர் தினம்'' ஒன்றினை நடத்தி எழுத்தாளர்களுக்கு விருதுகள் அளித்துக் கௌரவித்து வருகிறது. இவற்றுள் சிறந்ததாக சங்கிலிமுத்து - அங்கம்மாள் விருது ஒவ்வொரு ஆண்டும் 5000 ரிங்கிட் பணத்துடன் அளிக்கப்பட்டு வருகிறது. இவற்றோடு மலேசியப் படைப்பாளர்கள் சங்கம் வழங்கும் டத்தோ பத்மநாதன் விருதும், மலேசியத் தமிழ் எழுத் தாளர் சங்கங்களின் பேரவை தனது ஆண்டுக் கூட்டத்தின்போது வழங்கும் விருதுகளும் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து முயற்சி களுக்குப் பெரும் தூண்டுகோல்களாக விளங்கி வருகின்றன.

மலேசியாவில் சிறுகதைக்கு முன்னோடிகளாக இருந்த வர்கள் மா.செ. மாயத்தேவன், மா. இராமையா போன்றவர்கள். ஆனால், அதற்கு வடிவமற்றும் உத்திச் செழுமைகளை அளித்த வர்கள் சி. வடிவேலு, எம்.ஏ. இளஞ்செல்வன் போன்றவர்களே. ஆனால், மலேசியத் தமிழ்ச் சிறுகதை இன்று இவர்களை யெல்லாம் கடந்து வந்திருக்கிறது எனலாம்.

மலேசிய இலக்கியத்தைத் திட்டமிட்டு வளர்ப்பதற்கு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என்றுமே பாடுபட்டு வந்துள்ளது. தமிழ் இலக்கியத்தில் ஈடுபட விரும்பும் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இந்த வடிவம் ஒரு நல்ல எளிதான நுழை வாயிலாக இருப்பதால் இதனைத் தங்கள் விருப்ப எழுத்து முயற்சி

யாக ஆக்கிக்கொள்ள ஊக்கம் கொடுப்பதில் சங்கம் முனைப்பாக இருந்துள்ளது. இதனால்தான் மிக ஆரம்ப காலத்திலிருந்தே சிறுகதைப்போட்டிகள், மாதாந்திரத் திறனாய்வுகள், கருத்தரங்கங் கள் ஆகியவற்றை நடத்தி அதன் விளைவுகளை அச்சில் தொகுப்புக் களாகவும் அது கொண்டுவந்துள்ளது.

சிறுகதைத் தொகுப்புகளைப் பற்றிப் பேசும்பொழுது, 50களில் தொடங்கி பல தனிப்பட்ட எழுத்தாளர்கள் இந்த முயற்சி யில் ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள். பூ. அருணாசலம், பொன்னி தியாகராசன் போன்றோர் ஆரம்பகாலத்திலேயே தொகுப்புகள் வெளியிட்டுள்ளார்கள். ஆனால், இந்த வரிசையில் 1968இல் மலேசியத் தமிழ் இளைஞர் மணிமன்றம் வெளியிட்ட ''மணிக் கதைகள்'' தொகுப்பே ஒரு முக்கியமான தொகுப்பாக அமைந் துள்ளது. அப்போதைய அதன் தலைவர் க. கிருஷ்ணசாமியின் முயற்சி இலங்கை விமர்சகர் கனக. செந்தில்நாதன் அவர்களின் ஆய்வுரையுடனும் ''தீபம்'' நா. பார்த்தசாரதியின் முன்னுரையுட னும், டாக்டர் இராம. சுப்பையா அவர்களின் அணிந்துரையுடனும் வந்திருக்கும் இந்தத் தொகுப்பில் இடம்பெற்ற பலர் பின்னர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க எழுத்தாளர்களாக வளர்ந்துள்ளனர்.

இதையடுத்து 1972இல் கெடா மாநில எழுத்தாளர்களின் கதைகளைக்கொண்ட ''பட்டினிக்குருவி'' என்னும் தொகுப்பு வந்தது. ஒரு மாநில எழுத்தாளர் இயக்கம் வெளியிட்ட முதல் தொகுப்பு இது என்பதுடன் இன்றைக்குப் புகழ்பெற்றிருக்கும் சில எழுத்தாளர்களை இது அன்றே அடையாளம் காட்டியது.

இன்றைய நிலை

சிறுகதைத் துறைக்கு முருகு. சுப்பிரமணியனை ஆசிரியராகக் கொண்ட ''தமிழ்நேசன்'' 1972இல் தொடங்கிய பவுன் பரிசுத் திட்டம் ஒரு பெரும் புத்துணர்ச்சியைத் தந்தது. இதில் நடுவர்களாக இருந்து கதைகளைத் தேர்ந்தெடுக்க நல்ல இலக்கிய வாதிகளையும் முருகு தன்னுடன் துணைக்கு அழைத்துக் கொண் டார். அவர்களுள் தமிழகத்திலிருந்து பணி நிமித்தமாக அப்போது மலேசியாவில் இருந்த டாக்டர் ஆர். தண்டாயுதம் மற்றும் புலவர் சேதுராமன், எஸ்.ஆர்.எம். பழனியப்பன், ரெ. கார்த்திகேசு, டாக்டர் பிரமீளா கணேசன் ஆகியோரும் அடங்குவர்.

சி. அன்பானந்தம், அரு.சு. ஜீவானந்தன், இராம. வீரசிங்கம், மு. அன்புச்செல்வன், எம்.ஏ. இளஞ்செல்வன், இராம. கண்ணபிரான் (சிங்கப்பூர்), ஆர். சண்முகம், இ. தெய்வானை, சாமி மூர்த்தி, சீ. முத்துசாமி, பாவை, சி. வடிவேல், ந. மகேசுவரி, மா. இராமையா ஆகியோர் பவுன் பரிசு பெற்றோர் பட்டியலில் அடங்குவார்கள். முதல் ஆண்டில் பரிசு பெற்றவர்களைக் கூட்டித் தமிழ்நேசன் ஓர் உபசரிப்பு விருந்து நடத்தி அனைவருக்கும் பரிசு வழங்கியதுடன் முதல் பனிரெண்டு கதைகளை "பவுன் பரிசுக் கதைகள்" (1974) என்னும் தலைப்பில் ஒரு தொகுப்பாகவும் கொண்டு வந்தது.

தமிழ்நேசன் வழியாக எழுத்தாளர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டிவந்த முருகு, அதேநேரத்தில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்று சில ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார். அவற்றுள் முக்கியமானது சிறுகதைக்கான மாதாந்திரக் கருத்தரங்கங்களைக் கூட்டி ஒவ்வொரு மாதத்திற்கும் சிறந்த ஒரு கதைக்கு 50 ரிங்கிட் பரிசு வழங்கி வந்ததாகும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளின் முதல் தொகுதி 1974இல் "பரிசு" என்னும் தலைப்பில் வெளியானது. 14 கதைகள் இதில் இடம்பெற்றன. இவற்றை எழுதிய எழுத்தாளர் கள்: மீனா நடராஜா, ரெ. கார்த்திகேசு, ஆ. சாரதா, சாமி மூர்த்தி, சுமதி தங்கராஜ், த.ப. இலட்சுமணன், சக்கரவர்த்தி சுப்பிரமணி யன், ஐ. இளவழகு, சி. வடிவேல், மா. சுப்பிரமணியம், மா. இராமையா, இரா.ச. இளமுருகு, துளசி, நாடோடி.

அந்தத் தொடர் முயற்சிகளில் ஒன்றாக 2008இல் மலேசியா வின் முக்கிய இதழ்களில் வெளிவந்த எல்லாக் கதைகளையும் ஒவ்வொரு மாதமும் ஒரு எழுத்தாளர் / திறனாய்வாளர் பரிசீலித்து அவர் கருத்தில் சிறந்ததாகப் படும் ஒரு சிறுகதையினைத் தேர்ந் தெடுக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சி தமிழ்நாட்டில் இலக்கியச் சிந்தனை பல ஆண்டுகளாகச் செய்து வரும் முறையை முன்மாதிரியாகக் கொண்டது. இத்திட்டத்தின் கீழ் 12 சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை : கே. பால

முருகனின் 'அலமாரி', சி. வடிவேலுவின் 'குப்பைகள்', இர.சா. இளமுருகுவின் 'வேலைக்காரி', பா.அ. சிவத்தின், 'ரொம்ப நல்லவர் கடவுள்', ஏ. தேவராஜனின், 'ஒரு நாள் பொழுது', கௌரி சர்வேசனின் 'மனப்போராட்டம்', நிர்மலா ராகவனின் 'மாதா, பிதா, குரு', கே. பாலமுருகனின் 'ஐயப்பநாதர் இறப்பதற்கு ஒரு மணி நேரம் இருந்தது', வாணி ஜெயத்தின் 'நபிலாவின் டைரி', கே.எஸ். செண்பகவள்ளியின் 'தியாகத் தீபாவளி', ந. மகேஸ்வரி யின் 'இலையுதிர் காலம்', எஸ்.எம். ஆறுமுகத்தின் 'மரம் கொடுத்த சீதனம்.'

கதைகள் ஒவ்வொன்றுக்கும் 200 ரிங்கிட் பரிசினை எழுத்தாளரும் தொழிலதிபருமான எல். முத்து வழங்கியிருந்தார்.

இக்கதைகள் அனைத்தும் தமிழகப் புத்திலக்கியத் திறனாய்வாளரான பேராசிரியர் இரா. மோகன், மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம், அவர்களிடம் ஆய்வுக்கு அனுப்பப்பட்டன. அவரால் தலைசிறந்த கதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, ந. மகேஸ்வரியின் 'இலையுதிர்காலம்' கதையாகும். இக்கதைக்கு 1,000 ரிங்கிட் சிறப்புப் பரிசு அளிக்கப்பட்டது. இந்தச் சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு 'இலையுதிர்காலம்' என்னும் தலைப்பில் 2009இல் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

2009, ஏப்பிரல் 4, 5ஆம் தேதிகளில், இந்தத் தேர்வில் பரிசு பெற்ற எழுத்தாளர்களையும் பிற எழுத்தாளர்களையும் ஒன்று கூட்டிக் கருத்தரங்கம் ஒன்று நடத்தப்பட்டு அதில் பேராசிரியர் இரா. மோகனின் ஆய்வுரையும் கலந்துரையாடலும் இடம் பெற்றன. எழுத்தாளர்களுக்கான பரிசுகளும், சிறந்த சிறுகதைக்கான சிறப்புப் பரிசும் வழங்கப்பட்டன.

2009ஆம் ஆண்டில் ஆண்டின் சிறந்த சிறுகதைகளைத் தேர்ந்தெடுக்கும் திட்டம் சற்று மாற்றப்பட்டது. இவ்வாண்டில் மாதம் ஒரு கதை என்றில்லாமல், காலாண்டுக்கு ஐந்து கதைகள் என்ற அடிப்படையில் சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது கதைகள் வருமாறு:-

'தாய்மண்' - சி. வடிவேலு; 'மலரே மலரே' - கி. விஜய லெட்சுமி; 'அரிதாரம் கலைந்தவன்' - ஏ. தேவராஜன், 'பிடிவாதம்' - பத்மினி ராஜமாணிக்கம், 'முன் எப்போதோ வாழ்ந்திருந்த அரச மரங்களும் ந(க)ரமாகிப்போன மண்ணும்' - கோ. முனியாண்டி; 'தொங்கும் வேதாளங்கள்' - நா. கல்யாணி மணியம், 'முதல் தேர்வு' - கௌரி சர்வேசன், 'நான் பாடிய பாட்டு' - முனிஸ்வரன் குமார், 'துரைசாமியும் தொலைக்காட்சி அலைவரிசையும்' - பாவை; 'மதகுகளின் முதுகில் உறங்கிய மீன்கள்' - கோ. முனியாண்டி, 'ஆதிக்கம்' - நிலாவண்ணன், 'புறா' - ராஜம் ரஞ்சனி; 'அஃறிணை வாரிசு' - சி. வடிவேலு, 'திரும்பி வந்த என் தாத்தா' - இர.சா. இளமுருரு, 'நிலந்தழுவிய வேர்கள்' - தே.வி. பூபதிராஜன்; 'சில நேரங்களில் சில ஏவாள்கள்' - மார்கெரெட் செல்லதுரை; 'அமிர்தவர்சினி' - சி. சொக்கலிங்கம், 'என் தேசம் என் வீடு' - ஆதிலட்சுமி, 'வெளியேற்றம்' - சை. பீர்முகமது, 'துணைவி' - இர.சா. இளமுருகு.

மலேசியாவில் நாவல் இலக்கியத்தை வளர்க்கும் முயற்சியில் காலந்தோறும் செய்யப்பட்டே வந்துள்ளன. 1969இல் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் நடத்தப்பட்ட குறுநாவல் எழுதும் போட்டி மலேசியப் பின்னணி கொண்ட நாவல்களுக்கு ஒரு தூண்டுகோலாய் அமைந்தது. அப்போட்டியில் முதல் பரிசு பெற்ற 'செம்மண்ணும் நீலமலர்களும்' (எம். குமரன்) தோட்டப் புறப் பாட்டாளிகளின் அன்றைய முக்கிய பிரச்சினையான தோட்டத் துண்டாடலைக் கருப்பொருளாக வைத்து கலையழகு டன் அமைந்திருந்தது.

1973ஆம் ஆண்டில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் இணைந்து நாவல் போட்டி ஒன்றினை நடத்தின. அதில் முதல் பரிசு பெற்ற ஐ. இள வழகுவின் 'இலட்சியப் பயணம்' தோட்டப்புற வாழ்வினைச் சொல்லுகின்ற அரிய நாவலாக அமைந்தது.

1981/82ஆம் ஆண்டுகளில் அமரர் ஆதி.குமணனை ஆசிரியராகக் கொண்ட 'வானம்பாடி' வார இதழ், மாதம் ஒரு நாவல் என்ற திட்டத்தைத் தொடங்கி மலிவு விலையில் நாவல் களை தன் வாசகர்களிடம் விநியோகித்தது. அதன்கீழ் பதினொரு

குறுநாவல்கள் வந்தன. அவை : 'தூரத்து நிலவு' (ஆதி. குமணன்), 'நேரம் வந்துவிட்டது' (எம். துரைராஜ்), 'தெருக்கூத்து' (துறவி), 'மோகங்கள்' (எம்.ஏ. இளஞ்செல்வன்), 'புதிய வாரிசு' (ந. மகேசுவரி), 'விதைகள் பாலைவனத்தில் முளைப்பதில்லை' (எல். முத்து), 'இதயங்கள்' (எஸ். வேலுமதி), 'பட்டுப் புழுக்கள்' (அக்கினி), 'ராத்திரிப் பூக்கள்' (ராஜகுமாரன்), 'சங்கமம்' (மெ. அறிவானந்தன்.

இந்தக் காலப்பகுதியில் அன்பானந்தன் அறவாரியம் நடத்திய ஒரு போட்டியில் மலேசிய வரலாற்றினைக் கொண்டு புனையப்பட்ட இரு நாவல்கள் பதிப்பு கண்டன. முதல் பரிசு பெற்ற நாவல் சு. கமலாவின் 'தீமலர்' (1986); மற்றொன்று ப. சந்திர காந்தம் எழுதிய 'ஆடும் மஞ்சள் ஊஞ்சல்' (1985). இரண்டு நாவல்களுமே மலேசிய வரலாற்றில் மலாக்கா சுல்தான்களின் வாழ்வைப் (1403 - 1511) பின்னணியாகக் கொண்டவை.

மலேசிய வரலாற்றில் மிகப்பெரிய பரிசுத் தொகை யுடனும் முதன்முறையாக தொலைக்காட்சி நிறுவனத்துடன் இணைந்து நாவல் போட்டியை நடத்த மலேசியத் தமிழ் எழுத் தாளர் சங்கத் தலைமைத்துவம் முடிவு செய்தது.

2005ஆம் ஆண்டில், மலேசியாவின் துணைக்கோளத் தமிழ்த் தொலைக்காட்சியான அஸ்ட்ரோ வானவில் நிலையத் துடனும் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்துடனும் இணைந்து நாவல் போட்டி ஒன்றை நடத்திற்று. மலேசியாவில் நல்ல நாவல்கள் அதிகம் தோன்றாத குறையைக் கருத்தில் கொண் டும், எழுதத் திறமையுள்ள முதிர்ந்த எழுத்தாளர்களும் ஆர்வ முள்ள இளைய எழுத்தாளர்களும் போதிய ஊக்குவிப்பின்றி இருப்பதைக் கருத்தில் கொண்டும் இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. அஸ்ட்ரோ வானவில் தொலைக்காட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ராஜாமணி, தமிழ் இலக்கியத்தின்பால் நாட்டமுள்ளவர். ஆகவே, இந்தப் போட்டியின் விளம்பரப் பொறுப்பையும் அதன் நிர்வாகச் செலவுகளையும் அந்த நிறுவனம் ஏற்க வழி செய்து கொடுத்தார்.

2004இல் இப்போட்டி அதிகாரபூர்வமாகக் கவியரசு வைரமுத்து அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. போட்டிக்கு மூன்று கட்டங்களில் நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டார்கள். பிரதிகளைக் களைந்தெடுக்கும் முதல் கட்டத்தில் பத்திரிக்கையாளரும் முதுபெரும் எழுத்தாளருமான ப. சந்திரகாந்தம், ஒலிபரப்பாளர் திருமதி சந்திரசூரியா, நாவலாசிரியர் டாக்டர் சொக்கலிங்கம், பழம்பெரும் பத்திரிக்கையாளரும் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான எம். துரைராஜ் ஆகியோர் இருந்தனர். போட்டிக்கு வந்திருந்த 34 நாவல்களிலிருந்து 16 நாவல்களை இவர்கள் தேர்ந்தெடுத்துக் கொடுத்தனர்.

இரண்டாம் கட்டத்தில் பேராசிரியர் ரெ. கார்த்திகேசு, டாக்டர் சண்முக சிவா, இணைப்பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணன் மணியம், இணைப்பேராசிரியர் டாக்டர் முல்லை இராமையா ஆகியோர் இருந்து தகுதி பெற்றிருந்த 16 நாவல்களைக் கதையின் கரு, கருப்பின்னல், நடை, உத்திகள் என்று பிரித்து மதிப்பு எண்கள் போட்டுப் பின்னர் வரிசைப்படுத்தினார்கள்.

இந்த வரிசையில் முதல் நான்கு இடங்களைப் பிடித்த நாவல்கள் மூன்றாம் கட்ட நீதிபதிகளுக்கு அனுப்பப்பட்டன. மூன்றாம் கட்டத்தில் தமிழக எழுத்தாளர்களான பிரபஞ்சன், சிவசங்கரி, திலீப்குமார் ஆகியோரும் மலேசியாவைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் டாக்டர் வே. சபாபதியும் நீதிபதிகளாக இருந்தார்கள். இவர்கள் அனைவரும் குவாலலும்பூருக்கு வரவழைக்கப்பட்டு தங்கள் கருத்துக்களை ரகசியக் கூட்டம் ஒன்றில் பரிமாறிக் கொண்டு இணக்க அடிப்படையில் இவற்றைத் தரவரிசைப் படுத்திக் கொடுத்தார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு நாவல்கள் வருமாறு :-

முதன்மைப் பரிசு : டாக்டர் பி.பி. நாராயணன் விருது - 'லங்காட் நதிக்கரையில்', எழுதியவர் அ. ரெங்கசாமி (மலேசிய ரிங்கிட் 10,000). பழுத்த எழுத்தாளரான ரெங்கசாமி இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் மலேசியாவின் இந்தியர் வாழ்வை கம்யூனிச பயங்கரவாதப் பின்னணியில் எழுதியிருந்தார்.

முதல்பரிசு, 'மண்புழுக்கள்', எழுதியவர் சீ. முத்துசாமி (மலேசிய ரிங்கிட் 2,500). மலேசியத் தோட்டப்புற வாழ்க்கையைக் கொஞ்சம் கட்டுடைப்புப் பாணியில் சொல்லும் நாவல். இவரும் நாடறிந்த மூத்த எழுத்தாளர்.

இரண்டாம் பரிசு : 'ஞானத்தின் வாசலிலே', எழுதியவர் நவீன் (மலேசிய ரிங்கிட் 1,500). புதிய இளம் எழுத்தாளர். ஓர் இளைஞனின் மன உணர்வுகளைச் சொல்லும் முயற்சி.

மூன்றாம் பரிசு : 'நொய்வப் பூக்கள்' - எழுதியவர் கோ. புண்ணியவான் (மலேசிய ரிங்கிட் 1,000). நாடறிந்த எழுத்தாளர். மலேசியத் தோட்டப்புற வாழ்க்கை பற்றிய கதை. (நொய்வம் = ரப்பர்)

மற்ற 12 நாவல்களும் ஆறுதல் பரிசாக 800 ரிங்கிட் மதிப்புடைய பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்தப் போட்டியில் பரிசுபெற்ற அ. ரெங்கசாமியின் 'லங்காட் நதிக்கரை' நாவலையும், சீ. முத்துசாமியின் 'மண் புழுக்கள்' நாவலையும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 2006ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளது.

அஸ்ட்ரோ - வானவில் துணைக்கோளத் தொலைக்காட்சி யுடன் இணைந்து நடத்தப்படும் இந்த நாவல் போட்டி இரண்டாம் முறையாக 2007இல் நடத்தப்பட்டது. இந்த இரண்டாம் நாவல் போட்டிக்கு மறைந்த பத்திரிக்கையாளரும், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான ஆதி குமணன் பேரில் விருது வழங்கப்பட்டது. இந்த விருதுக்கான பரிசுத் தொகை யையும் பிற பரிசுகளின் தொகையையும் பிரபல தொழில் அதிபர் ஓம்ஸ் தியாகராஜன் வழங்கியிருந்தார். அதற்குமேல் முதன்மைப் பரிசு பெற்றவர்களுக்கு எஸ்.ஜி. பயண நிறுவனத் தினர் சென்னை சென்று வரும் விமானச் சீட்டும் வழங்கினார்கள்.

இந்த இரண்டாம் நாவல் போட்டிக்கு 21 நாவல்கள் வந்திருந்தன. இந்த நாவல்களை மூன்று உள்ளூர் நீதிபதிகளான

டாக்டர் ரெ. கார்த்திகேசு, முனைவர் வே. சபாபதி, முனைவர் திலகவதி ஆகியோர் பரிசீலித்தனர்.

இந்த வரிசையில் முதல் நான்கு இடங்களைப் பிடித்த நாவல்கள் தமிழக நீதிபதிகளின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன. தமிழக பிரபல இலக்கியவாதிகளான திரு மாலன், திருமதி வாசந்தி, இருவரும் நீதிபதிகளாக இருந்தார்கள். இவர்கள் நான்கு நாவல்களையும் தரவரிசைப்படுத்திக் கொடுத்தார்கள். அதன்படியான இறுதி முடிவுகள் வருமாறு :

முதன்மைப் பரிசு : ஆதி குமணன் விருது (மலேசிய ரிங்கிட் 10,000), 'மல்லிகைகள் நிறம் மாறுவதில்லை' - எழுதியவர் திருமதி மங்களகௌரி. அதிகம் அறியப்படாத இளம் எழுத்தாளர். முதிர்ந்த எழுத்தாளர்கள் பலரின் படைப்புக்களைப் பின்னுக்குத் தள்ளி மேல்வந்த இது அவரின் முதல் நாவலும்கூட. ஒரு தனித்து வாழும் தாய் மல்லிகைத் தோட்டம் போட்டுத் தன் வாழ்வோடு போராடுகின்ற கதையை அழகிய பின்னலாகக் கொடுத்திருந்தார்.

முதல் பரிசு : 'நகர்ந்து கொண்டிருக்கும் வாசல்கள்', எழுதியவர் கே. பாலமுருகன். (மலேசிய ரிங்கிட் 5,000). மலேசியத் தமிழ்க் குடும்பம் ஒன்றின் சிதைவைக் கொஞ்சம் இருண்மைப் பாணியில் சொல்லுகின்ற நாவல். அண்மையில் அதிகமாகச் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதி வரும் இளைஞரான பாலமுருகனின் முதல் நாவல் இது.

இரண்டாம் பரிசு : 'பிரிவு நிரந்தரமில்லை' - எழுதியவர் கே. சுப்பிரமணியம். (மலேசிய ரிங்கிட் 3,000). மலேசியாவில் அறியப்பட்ட எழுத்தாளர். மலேசியாவின் கம்யூனிச கீழறுப்புப் போர் நடந்த 50களில் அந்தச் சித்தாந்தத்தினால் கவரப்பட்ட ஓர் இளைஞனின் வாழ்க்கையைச் சொல்லும் கதை.

மூன்றாம் பரிசு : 'அரிக்கேன் விளக்கு' - எழுதியவர் ப. சந்திரகாந்தம் (மலேசிய ரிங்கிட் 2,000). நாடறிந்த நாவலாசிரியர், பத்திரிக்கையாளர். காலனித்துவ காலத்தில் மலாயாவுக்குப் புலம் பெயர்ந்தவர்களின் மிகச் சுவையான கதை.

மற்ற 17 நாவல்களுக்கும் ஆறுதல் பரிசாக தலா 500 ரிங்கிட் வழங்கப்பட்டது.

பரிசளிப்பு விழா தலைநகரில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதி யான ஹோட்டல் இஸ்தானாவில் பிரமுகர்கள் முன்னிலையில் நடைபெற்றது. முன்னாள் துணையமைச்சர் டத்தோ சி. சுப்பிர மணியம் பரிசுகளை எடுத்து வழங்கினார். எழுத்தாளர் சங்கத் தலைவர் பெ. இராஜேந்திரனும் அஸ்ட்ரோ இந்திய நிகழ்ச்சிகள் பிரிவின் தலைவர் முனைவர் செ. இராஜாமணியும் உரையாற்றி னார்கள். தமிழக நடுவர்களில் ஒருவரான மாலன் சிறப்புரை ஆற்றினார்.

2000க்குப்பின் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நடந்த முக்கிய நிகழ்வுகளில் மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் மேற்கொண்ட தமிழ்நாட்டுப் பயணங்கள் குறிப்பிடத்தக்கவை. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக நடந்த இப்பயணங்கள் மலேசியத் தமிழ் இலக்கிய மும் தமிழ் இலக்கியத் திறனாய்வும் வளரத் துணை புரிந்தன.

2008, 2009ஆம் ஆண்டுகளில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையில் நடந்த செம்மொழித் தமிழ்ப்பயிற்சி வகுப்புகள் மலேசியத் தமிழாசிரியர்களுக்குப் புத்தொளியைத் தந்து தமிழ் வளர்ச்சியில் புதிய வேகத்தோடு அவர்கள் ஈடுபாடு கொள்ளத் தூண்டின.

புதிய நூற்றாண்டில் நிகழ்ந்து வரும் இத்தகைய புதிய நிகழ்வுகள் மலேசியத் தமிழ் இலக்கியத்தை மேலும் செழுமைப்படுத்தும் எனும் நம்பிக்கையை விதைத்து வருகின்றன.



TA030222 AK3 Rs. 90.00
www.newbooklands.com
No: 52C, North Usman Road,
T.Nagar, Chennai - 600017
Ph.: 044-28158171 / 28156006